1406. தேசாதிபதி
தெலுங்கர்களின்
விளக்கம்.

சிவமயம்.

ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் துணை.

பிருதிவீச்சுர வம்ஸம்,

யாககூஷத்திரிய குலம் 24கு, மனையார்களாகிய

தேசாதிபதி தெலுங்கர்களின்

விளக்கம்.

இஃது

சென்னை இராயபுரம் கல்மண்டபம் மார்க்கட்டு சந்திலிருக்கும்
யாக க்ஷத்திரியகுலம் வாசவரிஷி வாஜ்ஜவார்கோத்திரம்
ம-ா-ா-ஸ்ரீ தாசரி - பெருமாள் செட்டியார் அவர்கள்
கேட்டுக்கொண்டபடி,

சென்னை இராயபுரம் வித்வான் ஸ்ரீமான் வெ கி நாராயணசாமி
பிள்ளை அவர்களின் மாணவரும்,

இராயபுரம் கல்மண்டபம் யாஹ க்ஷத்திரியகுலம் சோமகுலரிஷி
சொப்பியவார் கோத்திரம், நாட்டாண்மை

ம-ா-ா-ஸ்ரீ, காரும்பசுவு, அளகிரி செட்டியார் அவர்கள்
குமாரர், நாட்டாண்மை தலநலப்பிரியர்,

காரும்பசுவு - அ. இராகவலு செட்டியார்

அவர்களாலி யற்றப்பட்டு

சென்னை வணிகதூதன் பத்திராதிபரும்
தமிழ்ப் பண்டிதருமாகிய

ஸ்ரீமான் கோ. அ. திருஞானசம்பந்த செட்டியார் அவர்களால்
பரிசோதிக்கப்பட்டு

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை, அமெரிக்கன் டைமண்டு
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூபா 1-4-0]   1937.   [பிரைஸ் ரூபா 1-4-0

[COPY-RIGHT REGISTERED.]

ஆக்கியோன் கருத்து.

நேரிசை வெண்பா.

என்னுரையைக் கேளாம லின்னூலை யச்சிலிட
இன்னொருவர் யாராகில் எண்ணுவரோ—சொன்னேன்கேள்
மாத்தான் சுதனாகில் வன்மையுட னச்சிடுவென்
வேற்றொருவர்க் கேனோ விதி

காா. அ. இராகவலு செட்டியார் தெரிவிக்கும்,

ரிஜீஸ்டர் அறிவிப்பு என்னவென்றால்,

இந்த யாக க்ஷத்திரிய குல 24கு மனையார்களாகிய தேசாதிபதி தெலுங்கர்களின் விளக்கம் என்னுமின்நூல் பல ஆதரவுகளைக் கொண்டு அச்சிட்டு காபிரைட் ரிஜிஸ்டர் செய்திருக்கின்ற படியால் எனதும், என் மகன் K. A. R. பரமசிவன் செட்டியினதும் அனுமதியின்றி யாரும் பெயர் மாற்றியாவது, முன்பின் சங்கதிகளைப் புரட்டியாவது, திருத்தியாவது, அச்சிடுவாராயின் 1887ம் வருஷத்திய 25-வது ஆகடின் 20-வது பிரிவின் 6-வது விதிப்படி நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் உத்திரவாதிகளாய்பினல் கோர்ட்டாரவர்கள் சட்டத்திற்கு உள்ளாவார்களென்றறிக.

காரும்பசுவு - அ. இராகவலு செட்டியார்.

ரிஜிஸ்தர் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்குந் தெரியப் படுத்துவது யாதெனில்:— பிரிதிவீச்சுர வம்சம் யாகக்ஷத்திரிய குலம், 24-மனையார்களாகிய தேசாதிபதி தெலுங்கர்களின் விளக்கம் எனும் பெயரிய இச்சமூக வரலாற்று நூலை, காராம்பசு அ. இராகவலு செட்டியார் (இதன் எதிரில் கண்டவாறு) ரிஜிஸ்தர் காபிரைட் செய்து அனுபவித்து வந்தனர். ஷை நூலினது சகல உரிமைகளையும் அடியிற் கையொப்ப மிட்டுள்ள யான் மேற்கண்டவரிடம் கிரையத்திற்குப் பெற்றுளேன். ஆகையால் எனது அனுமதி யின்றி எவரும் இதனை அச்சிடக் கூடாதென்று தெரியப்படுத்துகிறேன்.

இங்ஙனம்:
M. S. முத்துகிருஷ்ணன் செட்டியார்
6, அழகம்மாள் தெரு,
வண்ணாரப்பேட்டை

சென்னை,
1-11-'41

காரும்பசவு அளகிரி செட்டியார் குமாரர்
கா. அ. ராகவலு செட்டியார்.
(1874௵) பவ௵ கார்த்திகை௴ 13௳
சுக்கிரவாரம் ஜனனம்.

கா அ. ராகவலு செட்டியார் குமாரன்
கா. அ. ரா. பரமசிவம் செட்டியார்.
(1900௵) விகாரி௵ மார்கழி௴ 1௳
சுக்கிரவாரம் ஜனனம்.

முகவுரை.

அன்பர்களே! கல்விமான்களே! நாகரீகவுலகத்தில் நானாவித பாஷைகளிற் றேர்ந்த வல்லவர்களே!

அலைகடல் சூழ்ந்த நிலவுலகமாகிய பரதகண்டத்தைச் சார்ந்த நமது இந்தியா தேசத்தில் பழைய காலந்தொட்டு ஜாதிப் பிரிவினைகளை யேற்படுத்தி அந்தந்த ஜாதியாருக்குரிய தருமங்களிவ் வகைத்தென்று பலநூல்கள் கூறியிருப்பது யாவருமறிந்ததே. இடையில் நம் நாடு அடைந்த பலதுன்பங்களினால் ஒவ்வொரு ஜாதியினரும் தத்தம் வருணாச்சிரம தருமங்களினின்றும் நழுவினர்கள். தற்போது அமைதியையூட்டி, காருண்யத்தை வளர்க்கின்ற, ஆங்கில துரைத்தனமுள்ள இக்காலத்தில் நம் நாட்டினரும், அந்நிய நாட்டு மேதாவிகளும், நமது பூர்வீக சாஸ்திரங்களாகிய வேதாகம புராணாதி காசங்களின் பிரமாணங்களைக்கொண்டும், செப்பேடு சிலாசாசனங்களின் ஆதாரவுகளைக்கொண்டும், தேச சரித்திரங்களும், இன்னும் தங்கள் தங்கள் ஜாதிகளுக்குரிய பல நூல்களுமெழுதி வெளியிட் டிருக்கின்றார்கள்.

யாஹ க்ஷத்திரியகுல விளக்கமென்னு மிந்நூல், யாஹ, க்ஷத்திரியர் என்பவைகளின் தாத்பரியங்களும், தேசாதிபதி, இருபத்திநான்கு மனையார் தெலுங்கு செட்டி, என்னுஞ் சொற்களின் பிரயோகங்களும், அதன் பூர்வோத்திரங்களுங் கூறுகின்றது.

> "திணை நிலஞ்சாதி குடியே யுடைமை
> குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரொ
> டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே"

என்னும் நன்னூல் பொதுவியல் 393-வது சூத்திரத்தை யனுசரித்து குணம், குடி, ஜாதி, தொழில் ஆகியவைகளைக் குறிப்பாற் குறிக்குமென்க. யாஹஃ வென்பது வட மொழித்திரிபால் யாகம் எனக்கூறப்பட்டு மகம், எக்கியம், வேள்வி முதலியவைகளைக் குறிக்கும்.

இஃது

> "எழா முயிரிய்யு மிருவுமை வருக்கத்
> திடையின் மூன்று மவ்வம் முதலும்
> எட்டே யவ்வு முப்பது சதவும்
> மேலொன்று சடவு மிரண்டு சதவும்
> மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
> ஆவீ றையு மீமிறி காமும்" என்னும்

வடமொழி யாக்கம் 147-வது சூத்திரம் விளக்கிக் காட்டும். க்ஷத்திரியர் என்னும் பதம் வடமொழித் திரிபால் க்ஷாத்திரத்தை யுடையவர் அரசர் என்பது பொருள்பட நிற்கும். இது தொழிலால் வருபெயராய் ஜாதியைக் குறிக்கும்.

> " அவற்றுள், கிளையெண் குழூஉமுதற் பல்பொரு டிணைதேம்
> ஊர்வானகம் புறமுதல நிலன் யாண்
> டிருது மதி நாளாதிக் காலந்
> தோள்குழன் மார்பு கண்காது முதலுறுப்
> பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
> சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
> ஓதலீத லாதிப் பல்வினை
> இவை யடை சுட்டுவினைப் பிறமற்றே
> றெற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
> விடலை கோவேள் குரிசி றோன்றல்
> இன்ன னவாண் பெயராகு மென்ப"

என்னுஞ் சூத்திரத்திற்கிசைய சிறப்புப் பெயராய் விளக்கிக் காட்டுகின்றது.

ஆதியில் சிவபெருமானுடைய ஆக்ஞைப்படி கங்காநதிக்கரையில் பிரமதேவனது பிரம யாகத்தில் பிரதி பிம்பித்த பிரதிவீச்சுரனுடைய வரலாறுகளும், பிரம யாகத்திலவதரித்த சுனைபையின் வரலாறும், வாரணாசி யென்னுங் காசி க்ஷேத்திரத்தினுடைய சிறப்புகளும், தொண்டை நாட்டுக்குத்தலைநகரமாயுள்ள காஞ்சிபுரத்தின் பெருமைகளும், அத்தலத்துக்குக் காரணகர்த்தாவாக விளங்கும் ஸ்ரீகாமாக்ஷியம்மனின் திருவருளைப் பெற்ற சிறப்புகளும், கலைக்கோட்டு மகரிஷியால் புத்திர காமேஷ்டியாகஞ் செய்யப்பட்டு இருபத்திநான்கு புத்திரர்களுற் பத்தியான விஷயங்களும் இருபத்திநான்கு கோத்திரங்களளித்த விபரங்களும், காந்தருவர்கள் தங்கள் புத்திரிகளைத் தந்து திருமணஞ் செய்த விருத்தாந்தங்களும், அபூர்வ வஸ்துக்களைத் தருவித்து வியாபாரஞ்செய்த பிரபாவங்களும், சோழ தேசத்தில் பல்லவராயனை ஜெயித்த விஸ்தாரங்களும், சேரனுடன் போர்புரிந்து மாது சிரோன்மணிக்கு முடிசூட்டிய பிரபாவங்களும், மும்முடிராஜன் சோழனுக்குப் பொற்பாவையை பெண்ணாகக் கொடுத்த விபரங்களும், மும்முடிராஜன் பாண்டிய தேசத்துக் கள்ளர்களுக்கு அபயாஸ்தங் கொடுத்து ஆதரித்ததை முன்னிட்டு பாண்டியனுக்கு தன் மகளாகிய விரத வீரியனின் சிரங்கொடுத்த சிறப்புகளும், கூர்ஜ்ஜா தேசத்தரசனுடன் யுத்தஞ் செய்யும்போது இருபத்திநான்கு மனையார்களின் சந்ததியிற்றோன்றியவர்களின் பத்தினிமார்கள் அக்கினிப் பிரவேசமான விபரங்களும், பிறகு ஸ்ரீ காமாக்ஷியம்மனருளாலுயிர்பெற்று வந்த விஷயங்களும், காலகதியால் சிதறுண்டு பல விடங்களிற் பரவி ஆங்காங்கு அரசு புரிந்தும், வியாபார முதலியவைகள் செய்துமுள்ள விஷயங்களும் இதிகாச புராணங்களின் மேற்கோள்க

நூடனும், செப்பேடு சிலா சாசனங்களைக்கொண்டும், இன்னும் பல நூல்களின் ஆதாரங்களைக்கொண்டும், இனிய தமிழ் நடையில் தமது குலத்தார் யாவரு மெளிதிலுணரும்படி, பல ஆண்டுகளாக தமது குலத்துக்கே யுழைத்தவரும், உழைப்பவரும், சென்னை, இராயபுரம், கல்மண்டபம், மார்க்கட்டு சந்து 6-வது எண்ணுள்ள கிருகத்தில் வாசஞ்செய்யும், சோமகுலரிஷி, சொப்பியவார் கோத்திரம், நாட்டாண்மை, காராம்பசுவு - அளகிரி செட்டியார் குமாரருமாகிய ம-ா-ா-ஸ்ரீ கா. அ. இராகவலு செட்டியார் அவர்கள் தங்குலத்தாரின் நன்மையைக்கருதி சிரமங்களையும் பொருளையுங் கவனியாது வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இவ்விதமான பரோபகாரத்திற்கும், ஊக்கத்திற்கும் பெரிதும் அகமகிழ்கின்றேன்.

யாஹ க்ஷத்திரிய குலத்திலுதித்த ஒவ்வொருவரிடமு மிப்புத்தகம் இருத்தல் வேண்டுவது அவசியத்திலு மவசியமாகும். அக்குலத்தவர்கள் ஊக்கத்துடனுதவி புரிந்து இவரை ஆதரிப்பார்கள் என்று பெரிதும் நம்புகின்றேன்.

இங்ஙனம்:

கோ. அ. திருஞான சம்பந்த செட்டியார்,

பத்திராதிபர், வணிகதூதன்

A

பொதுப் பாயிரம்.

"ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப்படும்"
"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்"

எனச் சென்னாப் புலவர் கூறியதை யுற்றுநோக்கு மிடத்து உயர்ந்தோர்க்கும் இழிந்தோர்க்கும் சமமாகச் சிறப்பினைத்தருதலால் விழுப்பந்தரலாலெனப் பொதுப்படக்கூறி, ஒழுக்கத்திலிருந்து தவறுதல் இழிந்த பிறப்பாய்விடுமென்பதும் கொள்ளப்படும் எனச்சாற்றியது நன்கு விளங்கும். ஒவ்வொரு குலத்தவர்களும் தங்கள் தங்கள் குலத்துக்குத் தக்கவாறு ஆசார வொழுக்கங்களை விதித்திருப்பது சுருதிஸ்மிருதி மூலமாக வறிகின்றோம். இப்பரத கண்டத்தைப்பல நூற்றாண்டுகளுக்கு முன் சக்ரவர்த்திகள் அரசர்கள் பலர் அரசு புரிந்து வந்ததை நூல்களாலும் ஆலயங்களிலுள்ள சிலைகளாலும், சாஸனங்களாலும், சித்திரங்களாலுமறிகிறோம். ஆனாலிடையில் பல சமயத்தார்களாலும் ஆச்சாரியர்களாலும், அரசாங்கத்தார்களாலும் மறைக்கப்பட்டு பல நூதன சமயங்களால் ஒழுக்கம் ஆசாரம் முதலியவை குன்றிதாழ்ந்த நிலைமையையடைந்தது அனுபவத்தாலறிகிறோம். நமது காருண்ணிய ஆங்கில வரசாக்ஷியில் நாம் அடைந்திருக்கும் உன்னத பதவிகளும் ஆசாரசீர்திருத்தங்களும் பல நன்மைகளுமிவ்வளவென்று கூறுவதற்கியலாது. இது அவரவர்களின் அனுபவத்திலேயே தெரிந்துக்கொள்ளுவார்கள்.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்வயற் றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து—

எனக்கூறியபடி அக்நிகுல க்ஷத்திரியர் யானைகளாற் சிறப்புற்ற சேரமண்டலத்தையும், சூரியகுல க்ஷத்திரியர் நெற்பயிராற் சிறப்புற்ற சோழமண்டலத்தையும், சந்திரகுல க்ஷத்திரியர் முத்தினாற் சிறப்புற்ற பாண்டிய மண்டலத்தையும் யாக க்ஷத்திரியர் அறிவுடைய மேதாவிகளாகிய சான்றோர்களாற் சிறப்புற்ற தொண்டை மண்டலத்தையுமாண்டு வந்தார்களென்றுந் தெரிகிறது. கங்கா தீரத்திலிருந்து தன்னிற் பிரகாசிக்கும் தன்மையுள்ளதும், அடியவர் தியானித்தபடி சிவமூர்த்தி காக்ஷி தந்து சித்தியளிப்பதும், சர்வ சங்கார காலத்தில் சிவமூர்த்தியின் சூலத்தலையிலிருந்து அழிவடையாததும், உயிர்நீங்கும் ஆத்துமாக்களுக்குப் பார்வதி பிராட்டியார் சிரம பரிகாரஞ்செய்யச் சிவமூர்த்தி தாரக

மந்திர முபதேசித்து முத்திபீவதாலும், வேதியன் எடுத்த பிடி மணலில் தோன்றிய சிவலிங்கமிருத்தலாலும். அவிமுக்தம் ஆன்மாக்களுக்குச் சிவானந்தமளித்தலால் ஆனந்த கானம், சர்வ சங்கார காலத்தில் பூதங்கள் ஒடுங்குமிடமாதலால் மாமயானம், சிவ மூர்த்தி சோதியுருவாய் எழுந்தருளி யிருத்தலால் காசி, உயிருக்குத் தருமம் அளித்தலால் தருமவனம், தன்னை யடைந்தவரது பாபத்தை அறுத்தலால் வரணை, நீரிற் படிந்தோர் பாபத்தை யறுத்தலால் அசி, (வரணை அசி) என்னுமிரண்டு நதிகள் தெற்கு வடக்காய்ச் சூழ்ந்திருத்தலால் வாரணசி, முதலிய பல காரணச் சிறப்புப் பெயர்களுடன் கூடிய காசி என்னும் அரிய பதியை பிரமதேவனது யாகத்திலுதித்து, அந்தகாசுரனை அடக்கியாட் கொண்ட பிரதிவீச்சுரனும், அவர் சந்ததியாகிய வைடங்கன் முதலியவர்கள் அரசாட்சி செய்து, தங்கள் வம்ஸாபி விருத்திக்காக ரிஷிகளி னுபதேசப்படி தொண்டை நாட்டை படைந்தார்கள். பிறகு சிவமூர்த்தியாற் றரப்பட்ட அக்ஷய பாண்டம், இருநாழி நெல்லையுங்கொண்டு கம்பாநதிக்கரையில் பிரிதிவி லிங்கம் ஸ்தாபித்து மரத்தின் கீழ் உமாபிராட்டியாராகிய ஸ்ரீசாது காமாக்ஷியம்மன் முப்பத்திரண்டு தருமங்களையுங் கிரமமாக வளர்த்த காஞ்சிமாநகரத்தை தலைநகரமாகக்கொண்டு, அம்மனைப் பூசித்து வரப்பிரசாத மடைந்து கலைக்கோட்டாரின் உதவியினுற் புத்திரகாமேஷ்டி யாகத்தைச்செய்து, அதனின்றுந் தோன்றிய அவிற்பாகத்திலுதித்த இருபத்திரான்கு மனையார்களாகிய புத்திரர்கள் அம்பிகையின் கிருபா கடாக்ஷத்தினுற் பல வீரதீர வெற்றிகளை யடைந்து அரசு செலுத்தி வந்தார்கள். காலபேதத்தினுல் அரசாக்ஷி முதலியவைகளை யிழந்து பலவிடங்களுக்குச் சிதறிப்போய் குடியேறி நானுவித வியாபாரங்களைப் புரிந்து ஜீவித்துக்கொண்டு வருவது அனுபவமாகும்.

தேசங்கடோறும் பாஷைகள் வேறுயென்றுற் போல, அவ்வப் பாஷைகளையும் நடையுடை பாவனைகளையுங் கையாண்டு வேறுபட்டிருப்பது யாவருக்குந் தெரிந்ததே. இவர்களை இருபத்திரான்கு மனையார்களென்றும், தேசாதிபதி தெலுங்கர்களென்றும் சாது குலத்தவரென்றும் யாகக்ஷத்திரியரென்றும், மஹா மஹ க்ஷத்திரியரென்றும், ராஜுகாரு என்றும், ராயரென்றும் ஆந்திரரென்றும், ருத்திரரென்றும் செட்டியா ரென்றும் பலவாருகிய பட்டங்களாலழைக்கப்பட்டு வந்தாலும் பிரிதிவிச்சுர வம்ஸத்தார்களாகிய யாகக்ஷத்திரியரைக் குறிக்குமேயல்லது வேறில்லை. இஃதெங்ஙனமெனில் மரத்தினுற் செய்யப்பட்ட பொம்மை, யானை நாற்காலி, மேஜை முதலியவைகள் மரத்தை மறைத்ததாக விருந்த போதிலுமந்த மரத்தையே குறிக்குமதுபோலும், ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தின் வேர் பலவிடங்களிற் றொடர்ந்து பரவிப்பல பெயர்களைப் பெற்றபோதிலும் கடைசியில் அந்த விருக்ஷத்தையே குறிக்கும்.

மரத்தைநோக்கின் மதகரியுமறைந்து விளங்குமதை நோக்கின்
மரத்தைமறைத்துத்தான் விளங்குமாறுபோலச் சகமுழுதும்
பரத்தைநோக்கினதின் மறைந்து பரமாய்விளங்குஞ் சகநோக்கில்
பரத்தைமறைத்துத்தான் விளங்கும் பரமேயனைத்து மாதலினால்

என்பதுபோல் எங்கெந்த பட்டங்கள் வேறுபட்டிருப்பினு மாதி புருஷனாகிய பிரிதிவீச்சுர வம்ஸத்தையே குறிக்கும்.

இருபத்திநான்கு மனையார், யாகக்ஷத்திரியர் என்பவைகள் வைடங்கன் முதலியவர்களின் புத்திரகா மேடிஷ்யாகத்திலு தித்தவர்களையும் யாகத்தையும் குறிக்கும். தேசாதிபதிகள் என்பது அ, ஆவின் முன் அ, ஆ, வரில் ஈ று முதலுங்கெட ஆ ஒன்று தோன்றுமென்னு மிலக்கணத்தை யனுசரித்து தேச அதிபதி தேசத்துக்கு அதிபதி யென்னும் பொருளுடன் தீர்க்க சந்தியாய் தேசாதிபதியென்று அவர்களையே குறிக்கும். தெலுங்கர், ஆந்திரர், ராஜுவாரு, ராயர் என்பவைகள் விஜயநகரம், ராஜமகேந்திரம், தக்காணம் முதலிய ஆந்திர தேசங்களையும், தமிழ் தேசங்களையும் அரசாண்டவரும், அரசிழந்து வேறுபட்டு பல வர்த்தகங்களைச் செய்துகொண்டு வாழும்படியானவர்களும் இவ்வகுப்பினர்களே யென்பது இன்னூலிற் கூறப்பட்டிருக்கின்றது பிரபோதயராஜன், மக்கடவரர்ஜன் அரசாண்ட காலத்தில் வியாபாரஞ்செய்து வந்த அனுபோகத்தினால் அரசாக்ஷி முதலியவைகளை யிழந்த பிறகுகால வர்த்தமானத்தால் வேறுபட்டு சிக்கன வியாபாரஞ் செய்ததினால் செட்டு, செட்டி, செட்டியாரென்னும் பட்டத்தை வகித்துக்கொண் டழைக்கப்பட நேர்ந்தது. (இது மநுஸ்மிருதியின் நீதிக்குகந்ததாகும்) பிராமணன் காலவர்த்தமானத்தை யனுசரித்து ஆபத்து விருத்தியாக க்ஷத்திரியர் தொழிலையும், க்ஷத்திரியர், வைசியர் தொழிலையும் நடத்தலாம். இத்தகைய பெருமைகளைப்பெற்ற 24-க்கு மனையார்களுக்கு முக்கியமாய் வேண்டியது கல்வியேயாகும். கல்வி புருஷார்த்தங்களாகிய இம்மைக்கும், மறுமைக்கும் ஆதாரமாயிருக்கும். அறத்தையும் அவ்வறத்தைப் புரிவதற்குரிய பொருளையும், அப்பொருளைக் கையாண்டு அதனாலடையும் இன்பத்தையும், புகழையும், பிறகு மோக்ஷமாகிய பேரின்ப வீட்டையும் கொடுக்கும். நாம் எத்தனையோ மேதாவிக ளுயர்நிலை யடைந்திருப்பதைப் பார்க்கின்றோம். அவ்வித உன்னத பதவியடைந்த தன் காரணம் கல்வி பயின்றதனாலல்லவா. கல்வியால் உயர்நிலையாகிய உத்தியோகமும், பொருள் சேர்மானமும், பெரும் புகழ்களுமுண்டாகும். ஒவ்வொரு உயிர்களுக்கு முற்றதுணை கல்வியே யல்லது வேறில்லை. இக்கல்வியை ஆண்பாலர்களுக்கும், பெண்பாலர்களுக்கு வேறுபடுத்திக் கூறினார்களில்லை. இருதிறத்தார்களுக்கும் கல்வி சமமே. இதன் விரிவு இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது.

ஆகவே கல்வியானது பொதுப்பட ஒழுக்கத்தை ஒவ்வொரு ஆன்மாக்களுக்கு மூட்டும். கல்விகல்லாதவன் கசடன் என்றும் புறக்கணித் திருக்கின்றார்கள். நமது குலத்திலும் கல்வியைப் புறக் கணித் திருப்பது யாவருக்குந் தெரியும். அவ்விதம் புறக்கணித் திருப்பதினல் தாழ்ந்த தொழில்களையும், அற்ப சிநேகிதங்களையும் பெற்று உயர் பதவிக்கு வாராமல் தாழ்ந்த நிலைமையி லிருக்கின்றோம். அம்மாதிரியாக இராமல் ஆண்பாலர்களும், பெண்பாலர்களும் உயர் தாக் கல்வியிற் பயின்று உயர்ந்தபதவி யடைவார்க ளென்பது நம் முடைய நிலேத்த நோக்கம்.

மற்ற குலத்தவர்கள் தங்கள் தங்கள் குலத்தவர்கள் மேன்மை யடைந்து ஒளிர்வதற்குக் காரண மிக்கல்வியும், கல்வி சம்பந்தமாக ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களும், சமாஜங்களுமே யாகும். இவ்வித மாகிய வழிகாட்டிகளை நாம் பின்பற்றி நடந்து உயர்பதவியடைவோ மென எல்லாம் வல்ல இறைவனையும் நம் குலத்தாயாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மை யாரையும் மனமார துதிக்கின்றேன்.

பிருதி வீச்சுர வம்ஸ யாக க்ஷத்திரிய குலம்,

க. இராமஞ் செட்டியார்.

வணிக வைசியர் ஆயிரவர்களி லொருவரும் வணிக தூதன்
பத்திராதிபருமாகிய தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் கோ. அ. திருஞானசம்பந்த செட்டியார் அவர்களாலியற்றிய

சிறப்புப்பாயிரம்.

நிலமண்டல வாசிரியப்பா.

நீள்கடல் சூழ்ந்த நிலவுல கதனுள்
வேள்போ லொளிரும் விசும்பிடை நிறைந்த
ஞாயிறு திங்கள் நலமுடன் விளங்கி
மாயிரு ஞாலத் தமர்ந்து பரவும்
இந்தியா வென்னு மியல்புறு தேசம்
தந்திடு மாட்சி பலருள் மிக்க
தயைகா ருண்யந் தகுவா யுற்று
இயங்கு மாங்கில ராஜ்ஜிய மதனுள்
பாண்டியன் சோழன் பகர்ந்திடுஞ் சேரன்
காண்டகு தொண்டை கனிவுறு நாடென
என்னுட் டவரு மேற்றுநன் ஞடு
தொன்னு டாகுந் தொல்பசும் நாட்டில்

நான்முகன் வேள்வியில் நலமுட னுதித்த
பான்மைத் தான பிருதிவீச்சுரனின்
ஆட்சியாங் காசி யமர்பதி தம்முள்

சாட்சியாய் நிற்குஞ் சத்திகா மாக்ஷி
அன்பர்க் கிரங்கி யாதரித் தென்றும்
மன்பதைக் காத்து மகிழ்வை யூட்டும்

காஞ்சிமா நகரைக் கைக்கொண் டிலங்கும்
வாஞ்சைய ரான விடங்கன் முதலோர்

கலைக்கோட் டாருடன் புத்ரகா மேட்டி
நிலைத்த யாகம் நேர்மையாய்ச் செய்து

மூவெண் புதல்வரை முறையாய்க் கொண்டும்
மூவெண் கோத்திரம் முனிவரார் பெற்றும்

மும்முடி யரசன் முடிபுனைந் தாக்ஷி
தம்முட் புரிந்து தாமுறு மந்நாள்

வாணிப மதனை வகையாய்ச் செய்ய
பேணிய தமது மக்களை யேவியும்

சோழநா டடைந்து *வீரனைக் கொன்றும்
வேழ முதலிய பரிசுகள் பெற்றும்

மலைநாட் டரசனை மண்மேல் வீழ்த்தியும்
கலையிற் றேர்ந்த சிரோன்மணி தனக்கு

திருமுடி சூட்டித் திணைத்த பெருமையும்
சொன்னசொல் நிலைக்கப் பொற்பாவை தந்தும்

தென்னனுக் காக மகன்முடி தந்தும்
குருவிந் தனையுங் குப்புர சாய்த்தும்

பெருமக்கள் யாவரும் நோன்பு நூற்றதும்
பெண்டுகள் கூடி சந்நிதி யடைந்து

விண்ணவர் போற்ற வக்னியிற் குதித்தும்
மனையார் கொண்ட தீர வார்த்தையைக்

கனிவாய்க் கேட்ட சொர்ன காமாக்ஷி
தனிவுட னெழுப்பித் தந்த விபரமும்

நுணிய பொருளாம் கல்வி ஒழுக்கம்
முதலிய யாவு மினிய முறையில்

நிதமுங் குலத்தின் நீடிய மேன்மையை
யெப்போ தகத்து மியல்பாய்க் கொண்ட

செப்பார் சிறந்த சென்னையம் பதியின்
மிக்கார் சூழ்ந்த மிகுராய புரத்தின்

---

* வீரன் என்றது யுத்தத்தீரனுகிய பல்லவ ராயன்.

தக்கார் நிலவும் தனிகல் மண்டபம்
தப்பிலா காறும் பசுவு அளகிரி
செட்டியார் நோற்ற தவமெலாந் திரண்டு
கட்டிய குமரன் காசினி யோர்க்குக்
கண்ணு யொளிரும் கவிபெறு ராகவனு
திண்ணிய புலவன் திகழு மனுமுதல்
செப்பேடு சாஸனம் தேர்பௌ டீகம்
ஒப்பில் காந்த முயர்பிரம் மாண்டம்
பதினென் புராணம் பகவத் கீதை
புதிதாம் சரித்திரம் பொற்புறு பன்னூற்
றெளிவா யோர்ந்து திறமுடன் யாவரு
மெளிதி லுணர வியம்பினன் மாதோ.

உ

சிவமயம்.

ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் துணை.

சாற்றுக் கவிகள்.

பையலூர் அமுர்தகவி பிரம்மஸ்ரீ - கிருஷ்ண ஐயர் அவர்களாலியற்றிய

அறுசீராசிரிய விருத்தம்.

உலகநூல் கலகல வென்றேது வதிலென்ன பயனென் றூற்றுபோ
விலகியதம் மினப்பனு வலே பயிலஃதீனு ளுளுமெனக் கல்வி
நிலவுயாக க்ஷத்ரியரின் குலப்புகழை நவின்றிடவே நெடுநீர் வைப்பி
லுலவுயாக க்ஷத்ரியகுல தெலுங்கர்களின் விளக்கநூ லுரைத்தா னம்மா.

ஸ்ரீலஸ்ரீ சரபகவி - உடுமலைப்பேட்டை, அ. முத்துசாமி கவிராயர்
மாணவர் சென்னை, ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்க கவிராயர்
அவர்களாலியற்றியது.

விருத்தம்.

காருலவு சென்னைமா நகரிரா யபுரம்
கல்மண்டபத்தில் வாழும்
பேருலவு மிருபத்து நான்குமனை தெலுங்கர்புகழ்
பேசும் ப்ரபல பண்டிதன்
தாருலவு ராகவக் கவிராய விற்பன்ன
தன்குலந் தழைத் தோங்கிடும்
சீருலவு யாகக்ஷத்ரிய குலதெலுங்கர் விளக்கநூல்
செய்து புகழ் பெற்றனரோ.

சென்னை, முத்தியாலுப்பேட்டை, மகா வித்வான்
ஸ்ரீலஸ்ரீ கோவளம் அப்பாசாமி செட்டியார் அவர்கள் குமாரரும்,
பரிசோதகரின் சகோதரரும் பிரசங்கராஜ சேகரருமாகிய, புராணிகர்
ஸ்ரீமான் கோ. அ. சிவசங்கர செட்டியார்
அவர்களாலியற்றியவை

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

நான்முகன்றன் மகமதனிற் சங்கரனு ரோர்காலம் நன்மைக் காகத்
தான்முகனுய் சிறந்திட்ட வுத்தமப்ரு தீச்சுரனின் தகமை வாய்ந்த
வான்புகழும் வம்ஸத்தி லுதித்தவரு மெண்மூன்று மனையா ராகும்
தேன்கமழுந் தெலுங்கர்களின் விரிவான சரிதமதை தெளிவாய்ச் சேர்த்து

சீர்பூத்த பெரும்பதியாம் சென்னையெனும் நன்னுட்டை சிறக்கச் செய்த
பார்பூத்த ராயபுரம் கல்மண்ட பந்தன்னில் படர்ந்து வாழும்
ஏர்பூத்த சொப்பியவார் கோத்திரங்கா ராம்பசுவு மெழின்மை வாய்ந்த
தார்பூத்த வளகிரியார் சற்புத்ரன் ராகவலு செட்டி மாதோ

கன்னல்மொழி யிலக்கியமு மிலக்கணமுந் தருக்கமுதற் கற்றுத் தேர்ந்து
சொன்னலத்தைத் தூய்மையுடன் நிலைநாட்டி யொருமனத்தாய் தொகுத்தும்
(க்ஷ நூ.
நன்னலஞ்சேர் நிறையாக க்ஷத்ர்யகுல தெலுங்கர்நூல் நவின்றுன்யாரும்
இன்பமுறக் கற்றறிந்து தமதுகுலம் மேன்மையுற்று விளங்கு மாறே.

இந்நூலாசிரியருக் காசிரியரும், மதுரைத் தமிழ் சங்கத்து
வித்துவானும், தமிழ் சாஸ்திர நிபுணருமாகிய பாண்டிமண்டலம்,
செவ்வெல்மா நகரம் ஸ்ரீமான் - M. A. நைனுமுகம்மது பாவலர்
அவர்களாலியற்றிய

நேரிசை வெண்பா.

க்ஷத்ரியவி ளக்கமெனத் தந்தா னொருநூலை
இத்தரையிற் றன்குலத்தார் யேவருமே—எற்றுய்ய
முத்திரம்போல் வந்தவள ராகவலு மூத்தானும்
வித்வஜன சேகரனும் வேந்து

தமிழை வடித்துத் தனதுகுல நூலை
யமிழ்தமென வாக்கியரு ளிற்றன்—உமிழொளிவான்
சூரியசந்த் ராதிவரை சொல்ரா கவச்செட்டி
வாரிதிகர் நம்வித்து வான்.

இதுவுமது

விருத்தம்.

அருட்பிரகா சத்தினியல் ஞானமழை யதுபோல வடங்காச் சீர்த்தி
யொருவழியே சார்ந்திலக மரபு நூல்தனைக்கூறி யுவமைக் கெட்டாத்
திருமணிபோ லிருபத்து நான்குமனே தெலுங்கரது திவ்ய சரித்திரம்
தருவிளக்கந் தனையுலகி லெடுத்தெழுதி வெளிப்படுத்தித் தந்தான் மாதோ.

அன்னவனே யீண்டெடுத்துக் கூறுதுங்கேள் புலவீ ரல் லித் தேனுண்
டன்னங்கண் டுயில்தடக்குஞ் சென்னைநகர் மீதிலங்கு மருமை வித்வான்
என்னரிய நன்மித்ரன் காராம் பசுவுபட்ட மிலங்க வந்தோன்
தென்மலைவா ழகத்தியனே யிராகவலு செட்டியெனச் சிறந்தார் மன்னே.

இலக்கணமுமிலக்கியமு மொருசேர வுள்ளுரைத்தோன் யிகம்பிர காச
சொலக்கணமாங் கற்கண்டு சொற்றேனிளபாகு தொடுக்கும் வித்வான்
மலக்கணங்கள் கிஞ்சமின்றி வர்த்தகஞ்செய் வாய்சுத்தன் வைய மெலாம்
கலைக்கியான வாணிமகன் யிவன்ராக வச்செட்டி கவீஸ் பரனே.

கீழ்நீர்குன்றம் பாலகவி

ஸ்ரீமான் M. குப்புசாமி நாயகரவர்களாலியற்றிய

எழுசீராசிரிய விருத்தம்.

தேமலர் சோலைசூழ் சென்னை நல்மண்டபம் தெலுங்கு தேசாதிபதி களெனுங்
கோமக னாளிரிசெட்டிக் குமரனி ராகவக் கவிஞன் தானு மிந்த
பாமருந் தமிழிற் சொன்ன மாயாக க்ஷத்ரியகுல விளக்க மெனுநூல்
நாமணந் தினிது கேட்டு மஞ்சையும் நன்றென வின்பமெய் திமோல்

இஃது

முத்தியாலுப்பேட்டை சித்திரக்கவி

ஸ்ரீமான் C. A. C. முனுசாமி பிள்ளை யவர்களாலியற்றிய

எண்சீராசிரிய விருத்தம்.

பெருமை பெருமிவர்களது சிறப்பைப் பேசில்
பெற்றியுரு கங்கைமுதற் பிறங்கு மாபோல்
அருமையொடு யெண்ணிலாச் சீர்த்தி யாற
வருணனைநேர் சென்னையள கர்செட்டி வேந்தன்
வருமையற யீன்றசுத னிராகவச் செம்மல்
வல்லதங் குலமோங்க வரியசெர் தமிழினால்
ஒருமை யொடு சீர்யாக க்ஷத்திரிய குலவிளக்க
மொன்றியற் றினுலக மெலாம் புகழத்தானே.

இஃது

பிரசங்கதிபசாகரம், முத்தமிழ் சங்கீதக்கவி மாயவரம்
ஸ்ரீமத் ஆத்ம ராமசாமி சுவாமிகள் அவர்களாலியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பூங்கரும்பின் ரசம்போல புத்தமிர்தத் தேன்போல புவியின் கண்ணே
தேங்கமழும் யாகக்ஷத்ரிய குலவிளக்க மெனுநூலை செய்த வித்தான்
வாங்கரும்பின் நவரசசெஞ் சொல்மதுர கவிராயன் வையம் போற்றும்
பாங்கர்புக ழிராகவலு செட்டியெனுந் தமிழ்தேர்ந்த பாவல் லோனே.

இஃது

செவ்வல்மா நகரத்து பாவலரின் சிடராகிய, சென்னை,
திருவல்லிக்கேணி ஸ்ரீமான் M. S. அப்துல் மறக்காயர் B.A., B.L.,
அட்வோகேட் அவர்களாலியற்றிய

நேரிசை வெண்பா.

வெண்டா மரைமகளின் மேற்றமிழைச் சேர்த்துமிக
உண்டெழுந்த ராகவலு வுத்தமனைக் - கண்டாலும்
ஆசுகவி வானம் அடங்கலுக்கும் போதுமையா
பாசுரங்கள் என்சொல்வேன் பார்.

ஈதுயாக க்ஷத்ரியருக் கேற்றவி ளக்கமெனும்
ஓது மலங்கார வோர் நூலை — காதுகொளுஞ்
ஜாதிவழி நூலாய்ந்த சற்புத்ர ராகவலு
மேதினியிற் தந்தான் விழைந்து.

இஃது

திருமூலர் மரபு.
வேதாந்தவித்வ யாகக்ஷத்திரிய குலம் கொரகவார் கோத்திரம்
ஸ்ரீமான் தி. வேதாசலம் செட்டியார் அவர்களாலியற்றிய

இரட்டை யாசிரிய விருத்தம்.

சாதுமகத் தோங்குபுகழ் சமயநெறி மாறாத சற்குண சாந்த கவிஞன்
சகலகலை யாய்ந்துமே சாதித்து மறைநான்கின் சங்கையைத் தவிர்த்து ஞால
நீதுக ளகற்றிதமிழ் திருமொழி பொழிந்தான் திசைபரந்த நூல நிந்து
தேன்பெருக்கு மிலக்கண மிலக்கியத் தாரணை திக்குபுகழ் தொல் காப்பியம்

மீதுஉயர் உபநிடதம் மிகுசிவ புராணமும் மேன்மையுட னுலக மேவ
வீறுற்ற வந்தகன் மாபெருஞ் செருக்கையும் வீழ்த்திட்ட யாக மன்னன்
ஓதுப்ரதி வீச்சுரன் திவ்யகுல சரிதையை வோதினன் குறைவின் றியே
யொளிவீசும் ஆத்மநெறி யுண்மைநிலை யோர்ந்தபெரு ராகவச்செட்டி மாதோ.

உ

ஓம் நமோ நாராயண நமஹ

விநாயகர் துதி.

வெண்பா.

ஓங்காரமாய் விளங்கு மொள்ளொளிசேர் சங்கரனை
நீங்காது வீற்றிருக்கும் நீள்கரத்தோய்—பாங்கான
க்ஷத்ரியவி ளக்கமெனுஞ் சார்நூலைச் செப்புதற்கு
உத்தமனே தோத்தரித்தே னேர்ந்து

தன்னை வணங்கினவர்களது விக்கினத்தை நீக்குவோரும் அவ்வகை வணங்காதார்க்கு விக்கினத்தைத் தருபவருமான விநாயகக் கடவுளை, இந்நூல் குறைவின்றி இனிது முடியுமாறு துதிக்கின்றேன்.

சுப்பிரமணியர் துதி.

கொந்தாரு மலர்சோலை கைலைமலை கோபுரத்தின் குமரவேளை
வந்தாரை வாழ்விக்க வடவீதி தனிலுறையு மயிலி னூனைக்
கந்தாருங் கடக்களிற்று மகவாற்குத் தருநிழலுங் கனக நாடுந்
தந்தானை யலர்கடப்பந் தாரானைப் பணிபவர்தா டலைமேற் கொள்வாம்.

முற்றறிவு, அளவிலின்பம், வரம்பிலாற்றலுடைமை, தன்வயமுடைமை, பேரருளுடைமை, இயற்கை அறிவு என்னு மறுகுணங்களுமாறுமுகங்களாய், தன்னை வந்திப்போர்களுக் கனுக்கிரகம் பாலிப்பவராய், சூர பத்மாதியர்களைச் சங்கரித்து தேவர்களை ரக்ஷித்தவராய் ஒப்பிலா முருகனுய் விளங்கி வள்ளி தெய்வானை சமேதராய் நின்று பக்தர்களை ஆதரித்து ரக்ஷிக்கும் கலியுக வரதனும் சுப்பிரமணியக் கடவுளை இந்நூல் குறைவின்றி இனிது முடியுமாறு துதிக்கின்றேன்.

பரப்பிரம ஸ்துதி.

உறவோடு பகையறு மொருமுத லவனெவ
னிருதியி லுலகரு ளிறையவ னவனெவன்
மறைமுடி வினிநடனம் வளர்பவ னவனெவ
னறிவினி லறிபவ னடியினை தொழுதனம்.

"ஞானநந்த மயந்தேவம் நின்மலஸ்படி காக்ருதம்"
என்றபடி ஞானரூபியாயும், நிர்க்குணராயும், நிராமயராயும், நிரஞ்சனராயும், நிர்விகாரராயும், நித்தியமாயும், நிட்களமாயும், நின்மலமாயும், புராதனராயும், அசஞ்சலராயும், பூரணர்ராயும், புனிதராயும், சராசரராயும், சாக்கிபூதராயும், சத்தியராயும், சித்துருவராயும், பராபரராயும், வெறு வெளியராயும், விளங்கி சகுணமாய்க்காட்ட விரும்பி ஆகாயம் சிரசாயும், பூமி பாதமாயும், அஷ்ட திக்குகள் அஷ்ட புஜங்களாயும், நடுவிடங்கர்ப்பமாயும், சூரிய சந்திரர் கண்களாயும், தன்னுடைய வல்லமையே சக்தியாயும், பிண்டாண்ட பிரமாண்ட ரூபத்திலெழும் ஓங்கார சப்தத்தை சங்கத்வனியாயும், காட்டி காலாதீத,

தேசாதீத, வஸ்துவா தீதமாயும், ஆகாசமே வடிவமாயும், விளங்கி லீலாவிநோதமாய் அன்பர்களது பூசைகளைப்பெற்று, அவரவர் மனோபீஷ்டங்களை நிறைவேற்றும் சுத்த சத்குணராகிய பரப்பிரமபதியை இந்நூல் குறைவின்றி இனிது முடியுமாறு துதிக்கின்றேன்.

பிரம்மாஸ் துதி.

விருத்தம்.

திருமாலி னுந்தியினிற் றோன்றியசீர் நான்முகங்கள் திகழப் பெற்று
பெருமான மறைமுழுது மோர்ந்துமிகப் பேர்பெற்ற புனிதமான
வருகங்கைக் கரையிற்பரு தீச்சுரனை மகமதனிற் சிருட்டி செய்து
ஒருமாவை நாவிருத்திப் படைப்பானுஞ் சதுர்முகனை யுறுதி கொள்வாம்.

ஸ்ரீமகா விஷ்ணுவின் உந்திக் கமலத்திலுதித்தவராய் சத்திய லோக மாகிய பிரம்மலோகத்தில் சரஸ்வதியை நாவிலிருத்தி, உலகத்தை யீடேறச் செய்த வரும், அரதகாசுரனை ஹதஞ்செய்ய பரமசிவனுடைய கட்டளைப்படி கங்கைக் கரையில் மகஞ்செய்து பிருதி வீச்சுரனை உற்பத்தி செய்த வருமான பெருந்தகையாளராகிய பிரம தேவனை, இந்நூல் குறைவின்றி இனிது முடியுமாறு துதிக்கின்றேன்.

ஸ்ரீமகாவிஷ்ணு துதி.

திருவாய்மொழி.

நன்றாய் ஞாலங் கடந்துபோய் நல்விந்திரிய மெல்லா மீர்த்
தொன்றாய்க் கிடந்தவரும் பெரும்பா ழுலப்பில்' தனையுணர்ந் துணர்ந்து
சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றா
லன்றேயப் போதே வீடு அதுவே வீடுவீ டாமே.

அகண்டபூரணராய் அனந்தகல்யாண குணமுடையராய், ஆதியாய், நீலவர்ணமுடையராய் சங்கு, சக்ர, கதா, கோதண்ட நாந்தக தாரியாய், இலக்ஷ்மி சமேதராய், சங்கர்ஷண, பிரத்தியும்ந அநிருத்த வியூகங்களுடன் ஸ்ரீ வைகுண்டத்தில் பாகவதர்களும், நித்திய சூரிகளும் ரிஷிகளுஞ் சேவித்து சதா துதிக்கப்பெற்ற வரும் திருப்பாற் கடலில் ஆதிசேடன்மீது சதாயோக நித்திரை புரிந்து வருபவரும், மக்கள், தேவர், நரகர் முதலிய யாவர்களும் உய்ந்து மோக்ஷத்தை யடையும் பொருட்டு, அநுக்கிரகிக்கப் பலதிரு விளையாடல்களைப் புரிந்த மேக வர்ண ரூபியாகும் சாக்ஷாத் மகாவிஷ்ணுவாகிய பரம் பொருளை இந்நூல் குறைவின்றி இனிது முடியுமாறு துதிக்கின்றேன்.

இலக்குமி துதி.

திருமாலின் பார்பதனைத் தேரிடமாய்க் கொண்ட
திருமகளை யேத்திடுவேன் தேர்ந்து—சிறுமொழியா
லோதுயாக க்ஷத்ரியரின் உண்மைகளைக் கூறுதற்கு
பாதுகையைத் தந்தருள்வாய் பார்த்து.

ஸ்ரீமகாவிஷ்ணுவின் மார்பில் சதா வீற்றிருப்பவரும் ஆன்மாக்களுக்கு அஷ்ட ஐஸ்வரியங்களையுந் தந்து ரக்ஷிப்பவருமாள ஸ்ரீ இலக்குமி தேவியை இந்நூல் குறைவின்றி இனிது முடியுமாறு துதிக்கின்றேன்.

சிவபெருமான் துதி.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வும கித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

சர்வகர்த்தாவராயும் சர்வஞ்ஞராயும், சர்வ சக்தி யுக்தராயும், அசலராயும், ஒப்பிலியாயும், ஸூக்ஷ்மராயும், ஸ்தூலரூபியாயும், ஞானக்கிரியா சத்தி சரீரியாயும், நிஷ்களராயும் தமருகம், அக்நி மழு, சூலம், மான் கையிற்பிடித்து வலியடைக்கியும், வெண்டலையை யணிந்தும், முயலகனை பாதத்திலழுத்தியும், சோம, சூரிய, அக்நி, ஆகிய முக்கண்ணுடையராய், ஈசானம, தத்புருடம், அகோரம், வாமதேயம், சத்யோசாதம், ஆகிய ஐந்து திருமுகங்களுடையவராய், தமது வல்லமையே சக்தியாய் இடது பாகத்தமர்த்தி, ஆயிரந் திருநாம முடையவராய், திரிபுரதகனஞ் செய்து திரிபுராந்தகன் என்னுங் காரணச்சிறப்புப் பெயருடையவராய் அந்தகனை ஹதஞ் செய்ய பிரமதேவனை மகஞ்செய்யும்படி யேவி அதில் பிரதி பிம்பிப் போம் என்று கூறி பிரதிபிம்பித்தவருமாகிய ஸ்ரீ சிவபெருமானை, இந்நூல் முட்டின்றி இனிது முடியுமாறு வந்திக்கின்றேன்.

பார்வதி துதி.

காரொழுகுங் குழலாளை கருணைவழிந் தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலின நிலவொழுகப் புழுகொழுக வழகொழுகு முகத்தி னாளை
காரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித் தெரியாத மருங் குலாளை
சீரொழுகும் பதத்தாளை சிவனணிந் தாளைச் சிந்தை செய்வாம்.

பிராமி, மகேஸ்வரீ, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி முதலியவர்களாய் ஆன்மாக்களுய்யும் பொருட்டு சகளீகரித்து பல திருவற்புதங்கள் புரிந்த சிற்சக்தியை இந்நூல் முட்டின்றி இனிது முடியுமாறு வந்திக்கின்றேன்.

ஸ்ரீகாமாக்ஷியம்மன் துதி.

கருக்காமக் கோட்டிமிர வினையனைத்து மொருங்கெய்திக் கலகஞ் செய்யுர்
தருக்காம கோட்டியெலா மறவெறிந்தா மினியென்றந் தகைசா லன்பு
சுருக்காமக் கோட்டினைச் சேயரைகரங் கொண்டார்க்குமுலைச் சுவகேல்குர்
திருக்காமக் கோட்டியம்மை சேவடிப்போ தெப்போதுஞ் சிந்திப் பாமால்.

சத்தி பீடங்களில் ஒன்றாகியும் எங்கள் குலத்துக்கு ஆதிதெய்வமாகிய மிருந்து யாக க்ஷத்திரிய குலம் இருபத்திநான்குமனை தெலுங்கர்களை சதா காத்தருளத் திருக்காஞ்சியில் எழுந்தருளிய ஸ்ரீ சொர்ன காமாக்ஷியம்மனை இந்நூல் முட்டின்றி இனிது முடியுமாறு சிந்திக்கின்றேன்.

சரஸ்வதி துதி.

நான்முகனும் வேதாவின் நாவதனில் வீற்றிருக்கும்
வான்போற்றும் நாமகளை வாழ்த்துவேன்—கான்பரவும்
க்ஷத்ரியரின் வன்புகழை நூலாகச் சாற்றுதற்கு
பத்தியுடன் முளதனைப் பாடு.

வெண்ணிறமாய் வெள்ளைவஸ்திரந்தரித்து கைகளில் ஜெபமாலை புத்தகம், வீணை, எழுத்தாணி தரித்து பிரமதேவனது நாவில் சதா வீற்றிருப்பவரும் தன்னை வணங்குபவர்களுக்கு எழுத்து சொல் பொருள் யாப்பு அணி முதலியவைகளைத் தந்து ரக்ஷித்தருளுபவருமாகிய ஸ்ரீ சரஸ்வதிதேவியை இந்நூல் முட்டின்றி இனிது முடியுமாறு வந்திக்கின்றேன்.

ஆஞ்சநேயர் துதி.

ஸ்ரீமன் ஆஞ்சனி, கெர்பசம்போதர் சர்பீமசாருத்ர, கௌபீன்ன, தாரேக, பிந்த்ருஜெச்சா சத்குண்டலாகர்ண, மவுன்ஜீவி, தாராதிவ்ய, யக்ஞேப விதாய, ஸ்ரீராமபாதாரா, பிந்தார, ஈசித்த, புங்காய, பானுஸ்து, ஜலகுண்டலே, அந்தரங்கேஸ, சந்தான, நீலாங்கதா, ஜாம்பமந்தா, சுசேனகை, ஓர்ச்சா, நளா, வானராதீசா, சமசிப்பமான, கிரந்தாதிபாளிமைபாடண, சாகரோபந்தன, லங்கனீமர்த்தன, ராமகாரியோகா, நிர்வாகா, ஒன்னப்பிரபா, மண்டலரச்சோடா, மார்த்தண்டா, கண்டஸ்சுவராஜியா, ஆர்த்தண்டா, மகாசுரா, அனுமந்தா, மச்சமந்தா, மந்துண்டுநீ, மம்மு, ரக்ஷிஞ்சுரு, வாய்வுபுத்ரா, திரிலோகாதி, சஞ்சாரி, சாத்ரு, நீரமந்தார, காருண்யா, காம்பிரியா, முத்தா, வளீம்பூஷண, லங்கா, தான்தீவகாலா, நலஜ்ஜுவாலா, நீலா, ஜலத்துவாரா; பௌரிவிக்ரமா, அர்ச்சனீச்சோடா, நானுவியோகா, மனோவேகா, நாசிமுக்யாமருள், நின்னுவர்ணிப்பமாசக்யமா, ஆஞ்சநேயா நின்னுசொலிசிதன்னெனு கொம்மி. நீகிருபனீசூசிரம்மி, மனோஎக்ஷக்ஷனனேக்ஷக்ஷண, பிராணசவரக்ஷண, ஆதார, ஓங்கார, ஜேங்கார, ஜனுஜனுக்காரிஎன், தீனிலடன், பட்டிசிக்ஷத்தின்பவே, வால்முனிசுட்டவே, நேலபைகொட்டவே, ராவணக்கும்பகருணதிலன், பூல்சவா, பேல்சவா, ஓம், ஹரும், ஹரீம், இரீம், உரீம், பக்ஷசுவாகா.

அவையடக்கம்.

தேருகின்றபலகலையுந் தெளிந்தசுவை யிருநான்குந் திகழும்பாடல்
கூறுகின்றபுலவர் முன்னேதமியேனுஞ் சிலபுகல சொற்சுருதித்தவாறு
வீருகின்றமறைவிருஞ்ச னேரிவரு மனத்தின் முன்னும் விரிஞ்சன்தாதை
யேருகின்றகருடன் முன்னுமொருமசகம் பறவையெனத்திரிதல்போலும்.

நீரிருக்குதெனப் பழித்து விடுவரோவது பாவினிகழுமானல்
நாரிருக்குதெனக்கழித்து விடுவரோ வதுமலரி னண்ணுமாண
லாரிருக்குஞ்சடை முடியார் விடமிருக்கும் கைலாதர்
பேரிருக்குந்தகமையின லெனதுரையை யிகழுவாரோ பெருமையோரே.

உ

யாகக்ஷத்திரிய குலவிளக்க வினு விடை.

வினு:—நண்பரே! சென்னை, இராயபுரம் கல்மண்டபம் காரும்பசுவு, இராகவலு செட்டியார் என்பவர் யார் என்று தங்களுக்குத் தெரியுமா?

விடை:—ஆம். எனக்குத் தெரியும். அவர் நமது குலத்திலுதித்தவரே.

வினு:—அவர் யாக க்ஷத்திரிய குலவிளக்கம் என்னும் ஒரு நூல் இயற்றி வெளிப்படுத்தி யிருக்கின்ருரே அதைப்பார்த்தீரா?

விடை:—இவர் அச்சிடுவதற்கு முன் பார்த்திருக்கின்றேன். அச்சிட்டபின் பார்க்கவில்லை. இப்புத்தகம் நமது குலத்தி லுதித்த வொவ்வொருவர்களிடமு மிருத்தல் வேண்டியது முக்கியமாகும்.

வினு:—ஆனுல் இதில் என்ன அவ்வளவு முக்கியமான விஷயங்க ளிருக்கின்றன. யாக க்ஷத்திரிய குலத்தார் என்பவர் யார்?

விடை:— நண்பரே! இதில் இருப்பது நமது பூர்வீக விருத்தாந்தங் களும், கோத்திர முதலியவைகளும், கல்வி, ஆசாரம் முதலிய வைகளுமேயாம். யாக க்ஷத்திரிய குலத்தார் என்பவர் நாமே. யாகம், எக்கியம் மகம், என்பது ஓர் பொருட்கிளவியாகும். யாஹ: என்பது வடமொழி. அந்த யாகத்தை எருக்கு, பலாசு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அறுகு தர்ப்பை முதலியவைகளைக்கொண்டு அக்கி மந்திரத்தினுல், அவி சொரிந்து வேட்டல். அக்காலத்தில் அக்கி பகவான் தமது ஏழுநாக்குகளையுங் காட்டிப் பிரகாசிப்பன். இந்தயாகம், பிரமயாகம், தெய்வயாகம், பூதயாகம், பிதுர்யாகம், மனுஷயாகம், முதலியவைகளாகும். இவற்றுள் வேதம் ஓதல் பிரமயாகம் ஓமம் வளர்த்தல் தெய்வயாகம், பலிஈதல் பூதயாகம், தர்ப்ப ணஞ் செய்தல் பிதுர்யாகம், இரப்போர்க்களித்தல் மனுஷ யாகம். இவை அக்கி காரியங்களாகும். இவற்றின் குண்ட மண்டல மந்திர திகிரியைகள் காலவித்தியாசத்தினுற் குறைந்திருக்கின்றது. சிவாக்ஞைப்படி பிரம தேவனுலியற் றப்பட்ட பிரமயாகத்தில் நமது குலத்தின் ஆதிபுருஷன் உற்பவித்தார். இந்த ஆதி புருஷனுகிய மகா பல சாலிக்கு சிவ பெருமான் பிரிதிவீச்சுரன் என்னுந் திருநாமந்தந்து, அநேக வரங்களை யீந்து தன்னுடைய பிரதி பிம்ப அம்ஸமே நீ யெனக்கூறி அந்தகனை அடக்குவித்து பிறகு யாகத்தில் சுனுபை யென்னு மொருமங்கையை உற்பத்தி செய்து தெய்வ லோகத்தில் தேவர்கள், கின்னயர்

கிம்புருடர் ரிஷிகள், தபோதனர்கள் புடைசூழத் திருமண முடித்து, க்ஷேத்திரங்களில் முதன்மை பெற்று விளங்கும் விசாலாவதி, காசி யென்னு முத்திநகரை தேவ சிற்பியாற் புதுக்கி திருமதிற் சூட்டிய பிராகாரம் அரசு புரிந்த க்ஷத்திரியர் எனப் பொருள்படும். அவர்கள் வேறு யாருங்கிடையாது. நாமே அக்குலத்திலுத்தவர்கள். நமது முன்னோர்களே அவர்களாவார்.

வினா:—ஐயா! யாக க்ஷத்திரியர்கள் நாம் என்கிறீர்களே, சாது குலத்தார், தேசாதிபதி, தெலுங்கர், செட்டியார், 24 மனையார்கள் முதலியவர்களும் யாக க்ஷத்திரியர்களென்று கூறுகின்றார்களே அது எப்படி?

விடை:—நண்பரே! சத் என்னுஞ் சொல்லிலிருந்து சாது என்னுஞ் சொல் பிறந்தது. சத் என்பதற்கு தோஷ மின்மை, குற்ற மின்மை யென்றும், சத்துள்ள வஸ்துவாகிய பரம பதியை சதா தியானித்திருப்பது என்று முறை கொள்வார்கள். சத்துவம், இராசதம் தாமதமாகிய முக்குணத்துள் முதன்மையாக நின்று ஞானத்தை யூட்டி வளர்க்குஞ் சாத்மீகர் எனப் பலர் பால் விகுதியை யேந்தி குணத்தாலும் அக்குணத்தை யனுசரித்த சிறப்பாலும் வழங்கும். ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, ஐம்பொறியடக்கல் முதலியவைகளே சத்துவகுணம். ஒருவனைப்பார்த்து இவன் பரம சாது யொன்றாற் போலாகும். இதற்கு ஆதாரம் ஒழுக்கம். இஃதைச் சதாசாரமெனக் கூறுவர். சப்தரிஷிகளும் சதாசாரத்தை யனுசரித்தவர் களாகும். எல்லாம் வல்ல கடவுளுக்கும் நிவர்த்தி சாதுः என வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீ காமாக்ஷியம்மையாருக்கும் (1000) சகஸ்திர நாமங்களில் ஸாதுநேமः யென்றுங் கூறப்பட்டுள்ளது. இதை யனுசரித்தே நம் குலத்திலுதித்தவர்கள் சாது குலத்தவர்கள் என்று கூறுகின்றார்கள். தேசம் + அதிபதி தேசத்துக்கு அதிபதி யென்னும் பொருளுடன் மகர மெய்கெட்டு தீர்க்க சந்தியாய் தேசாதிபதி என்று நமது குலத்தவர்களையே குறிக்கும். இவர்கள் ஆந்திர தேசங்களிற்றங்கி அரசு, ஜமீன், மிராசு, முதலியவைகளைத் தாங்கி தெலுங்கு பாஷையையும், நடை நொடி பாவனைகளையு மனுபவத்திற்கொணர்ந்து நின்றமையால் ஆங்குள்ள நம் குலத்தவர்களுக்கு தெலுங்கர் என வழங்கப்படுகிறது. காலவித்தியாசத்தினால் நம்மவர்கள் அரசு முதலியவைகளை இழந்து வியாபாரத்தை (செட்டு) சிக்கனமாகப் புரிந்து ஜீவித்து வந்தமையினால் செட்டிகள் என வழங்கப்படுகிறது. 24-மனையார்கள் எனவழங்குவது நமது குலத்தின் இருபத்தினன்கு கோத்திரங்களைப் பெற்றவர் எனப்பொருள் கொண்டு

நம்மையே குறிக்கும். இன்னும் நமக்கு ராயர் ருத்திரர் ராஜுகாரு முதலிய பட்டங்களுமுண்டு.

வினா:—ஐயா! யான் தங்களால் இந்நூலின் முழு விபரங்களும் நாம் இன்னார் என்பது மறிந்தேன். இவ்வளவு தெளிவாக எனக்கு தெரிவித்ததற்கு எனது மனமார்ந்தவந்தன மளிக்கின்றேன் யானுமிந்நூலில் ஒன்றைக் கட்டாயம் வாங்கிக் கொள்ள வேண்டுமோ?

விடை:—உலகத்திற் பிறந்த ஒவ்வொரு வருக்கும் தேசாபிமானம், பாஷாபிமானம், ஜாதியாபிமானம் முதலிய வைகளிருத்தல் வேண்டும். நமது குலத்திலுதித்த யாவருமிந்நூலைப்பெற்று முழுதும் வாசித்து கையாண்டு வந்தால் நாம் கட்டாயம் பண்டைய நிலைமையை யடைவோமென்பது நிச்சயம். இந்நூலில் நமது குலத்தவர்களின் உற்பத்தி விபரங்களும் அந்தகாசுரனை யடக்கி யாட்கொண்ட விபரங்களும், விசாலாவதியை ஆண்ட விபரங்களும், புத்திரப் பேறடைந்ததும், காஞ்சிமா நகரில் கலைக்கோட்டார் முன்னிலையில் புத்திர காமேட்டியாகஞ்செய்து அவிற்பாகம் பெற்றதும், வியாபாரஞ் செய்ததும், சோழனுக்குப் பொற்பாவை யீந்ததும், மதுக்குடம் பாற்குடமானதும் மான்தலை மாத்தலையானதும் பாண்டியனுக்கு சிரங்கொடுத்ததும், சேரனை சங்கரித்து சிரோன்மணிக்கு முடி சூட்டியதும், கூர்ஜஜர தேசத்தரசனை சம்ஹரித்து, போஜகன் சந்ததியில் வந்த மாளவ போஜ ராஜனுக்கு முடிசூட்டியதும், 24-மனையார்களின் புத்திரர்கள் கானகஞ்சென்று கேதாரீஸ்வரர் விரத மனுஷ்டித்த விபரங்களும் 24-மனையார்களின் மனைவியார்கள் அக்நிப்பிரவேசமானதும், ஸ்ரீசாது சொர்ன காமாக்ஷியம்மனனுக் கிரகத்தாலுயிர் பெற்றதும், பிறகு வேறுபாட்டினால் அரசாக்ஷியிழந்து பல பாகங்களிற் புக்கு வியாபாரம் முதலியவைகளைக் கையாண்டு வருவதும், விஜயநகரம், மகதம், விதர்ப்பம், இராஜமஹேந்திரம், ஓரங்கல் முதலிய வரசர்களின் வம்ஸங்களும் மற்றும்பல ஆசார ஒழுக்கங்களும், தெளிவாகவும் விபரமாகவும் எழுதப் பட்டிருக்கின்றது.

வினா:—அப்படியானல் நமது நூலாசிரியராகிய இராகவலு செட்டியார் மிகுந்த கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்திருப்பதாகத் தெரிகிறது.

விடை:—ஆம். இவர் சுமார் 20-வருஷங்களாகப் பாடுபட்டு அநேக நூல்களைக்கொண்டும் செப்பேடு, சிலா, சாஸனங்களைக் கொண்டும் சுருதி யுக்தி யனுபவங்களால் ஆராய்ச்சி

செய்து உடல் பொருள் ஆவியைத் தியாகஞ்செய்து நமது குலத்துக்கே மிகவும் உழைத்தார். நம் பொருட்டேயல்லது தம் பொருட்டன்று.

வினா:—ஆகவே நாமுமிவருடனிருந்து உழைத்து இந்த நூல் நமது குலத்தாரிடம் பரவச்செய்தல் வேண்டும். இந்நூலாசிரியர் நீடூழி வாழ்கவென, நம் குலத்தாயை யனுதினமும்பிராத்திப் போமாக.

சுபம்! சுபம்! சுபம்!!!

யாக க்ஷத்திரிய குலவிளக்கத்தில் வரும் மேற்கோள் நூல்களின் பெயர்கள்.

அனுபவானந்த தீபிகை
அரிச்சந்திரபுராணம்
அருணாசல புராணம்
அபிதான சிந்தாமணி
அரப்பளீசர் சதகம்
ஆன்றூர் வாக்கியம்
ஆதித்யமகாபுராணம்
இந்துதேசசரித்திரம்
இந்துதேச சரித்திரக்கதை
இரத்தினச் சுருக்கம்
இருக்குவேதம்
இலிங்கபுராணம்
ஏகாதசிவிரதம்
ஏலாதி
ஒப்பிலா மணிப்புலவர்
கந்தபுராணம்
கம்பராமாயணம்
கல்லாடம்
காசிகாண்டம்
காஞ்சிபுராணம்
காஞ்சிக்ஷேத்திர மஞ்சரி
காளமேகப்புலவர்
காமிகம்
குவலயானந்தம்
கூர்ம புராணம்
கேதாரீஸ்வர மான்மியம்
கோவிந்தசதகம்
சங்கரசம்ஹிதை
சாகித்தியரத்னாகரம்
ஜாதிசங்கிரகசாரம்
சிவஞான சித்தியார்
சிவமகா புராணம்
சிவராத்திரி மான்மியம்
சிவவாக்கியர் பாடல்
சிங்கிசர்கல்யாண நாடகம்
சிலப்பதிகாரம்
சிலைஎழுபது
சிலாசாஸனங்கள்
சீவகசிந்தாமணி
சுப்ரபேதம்
சூதசங்கிதை
செப்பேடு
சென்னைநகர் புஸ்தகம்
சென்னைஜயவாணி
திருவிளையாடற் புராணம்
திருக்குறள்
திருக்கைவளம்
திருக்கழுக்குன்ற புராணம்
திருமந்திரம்
திருப்புகழ்
தேசாதிபதிநாடகம்
தேசிங்குராஜன் சரித்திரம்
தேவாரம்
தொண்டமண்டல சதகம்
தொல்காப்பியம்
நன்னூல்
நமதுதேச சரித்திரம்
நாய்க்கராஜ வம்ஸ சரித்திரச் சுருக்கம்
நீதிநூல்
நீதிநெறிவிளக்கம்
நீதிவாக்கியம்
நெஞ்சறிவிளக்கம்
நெல்சன் துரை எழுதியமதுரை சரித்திரம்
பக்தவிஜயம்
பஸ்மஜாபால உபநிடதம்
பட்டினத்தார் புராணம்
பட்டயங்கள்
பகவத்கீதை
பன்னிருபாட்டியல்
பராசரஸ்மிருதி
பஃறொடை வெண்பா
பரமானந்த தீபம்
பாகவதம்
பாலர்இந்துசரித்திரம்
பாலர் ஸ்தலசரித்திரக்கதை
பிரமாண்ட புராணம்
பிரமோத்திரகாண்டம்
பிரகஸ்பதிஸ்மிருதி
புலவர்புராணம்
புருஷசூக்தம்
பூகோள சாஸ்திரம்
பேரூர் புராணம்
போஜசரித்திரம்
பௌடிக புராணம்

மகாமகக்ஷத்திரியகுல புராணம்
மச்ச புராணம்
மகாபாரதம்
மணிமேகலை
மனுதர்ம சாஸ்திரம்
யஜுர்வேதம்
யாகக்ஷத்திரியக்குலப் பிரகாசிகை
ருக்மணிபரணியம்
வாதுளாகமம்
வாலைக்கும்மி
வினாயக புராணம்
விஸ்வ கர்ம நூல்
வில்லிபாரதம்
வியாசபாரதம்
விஜயவிலாசகாவியம்
விஜயநகர்மான்யூல்
விவேகசிந்தாமணி
வீரசிங்காதனப் புராணம்
வீரமணி பிரபாவம்
வீரநாராயண விஜயம்
வீரப்பிரதாபம்
வீரபிரமையங்காரு காலக்கியானமு
வைசியபுராணம்

உ

சிவமயம்.

ஓம்பிரதிவீச்சுராயநம:

ஸ்ரீ சொர்ன காமாக்ஷியம்மன் துணை.

24மனையார்களாகிய யாக க்ஷத்திரிய குல தெலுங்கர்களின்
குலதெய்வமாகிய ஸ்ரீ சொர்ன காமாக்ஷியம்மன் திருவருள் புரிதல்.

ஸ்ரீ யாக க்ஷத்திரிய குல விளக்கம்.

விநாயகர் துதி.

நெஞ்சி னினைப்பர் வாழ்வர் வினையகன்றுப்
பஞ்சக் கரத்தன் பதம்.

இது வழிபடு தெய்வவணக்கமாகும். "வழிபடுதெய்வ வணக்கங்கூறில் மங்கலமொழி முதல் வகுத்தெடுத்துக்கொண்ட இலக்கிய விலக்கண மிடுக்கணின்றி இனிது முடியுமென்பனர் புலவர்" என்னுங் குவலயானந்த சூத்திரத்திற்கிணங்க எடுத்துக்கொண்ட நூல் முட்டின்றி இனிது முடியுமாறு நமது வழிபடு கடவுளை வந்திக்கப்படுகிறது.

நூல்.

நைமிசாரண்யம்.

அலைகடல் சூழ்ந்த பூவுலகின்கண் ஐம்புலனடக்குமுபாய முணர்ந்த இருடிகள் தாங்கள் தவமியற்றுதற்கு வசதியான நல்ல இடம் அருளுக வெனப்பிரமதேவனை வேண்டப், பிரமதேவர் ஆராய்ந்து தருப்பையொன்றை யெடுத்து நேமி (சக்கரம்) போற்செய்து அதனை உருட்டி இதன்பின் செல்லுக, இது எவ்விடம் நிற்குமோ அவ்விடமுங்களுக்குத் தவமியற்ற வசதியான நல்ல இடமாகும் என்றனர். அவ்வகைச் சென்ற நேமி நின்ற விடத்துக்கு நேமிசாரண்யம் என வழங்குவர். இது லக்னோ (lucknow) ஸ்டேஷனிலிருந்து (Sandilla) சண்டிலா ஸ்டேஷனுக்கு (20) மைலிலிருக்கிறது. இதைக்கேட்ட இருடிகள் ஆனந்த பரவசராய் அந்தநைமிசாரண்யத்தில் தங்கள் ஜெபதபங்களை யெல்லாஞ்செய்து முடித்துக்கொண்டிருக்குஞ்சமயத்தில், உரோமமுனிவர் அவ்விடம் வருவதைப்பார்த்து யாவருமெழுந்து அஞ்சலித்து சுவாமி! தாங்களிவ்விடம்வர யாங்கள் செய்த பாக்கியமே பாக்கியம் எனத்துதித்து நாற்கால் பீடமிட்ட புலித்தோலாசனத்திலமரச் செய்து தபோ வல்லவரே! தங்களை இங்குகாண என்ன மாதவமுடையோ மென்று தோத்தரித்து, உலக சிருட்டியின் விபரங்களை அடியேங்களுக்கு இனிது போதித்தல் வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசனத்திலமர்ந்தார்கள். இதைக் கேட்ட உரோம முனிவர் சிவபெருமானைத் துதித்து ஆசமனஞ்செய்து சொல்ல வாரம்பித்தனர். தவத்திற்சிறந்த புண்ணிய சீலர்களே ஈங்கு விஜயஞ்செய்திருக்கும் மார்க்கண்டேயர் மகா உத்தமர். இவர் மிருகண்டு முநிவருக்கு மருத்துவதியிடம் பிறந்த குமரர். இவரது தாய்தந்தையர் தமக்குப் பதினறுவது வயது ஆயுளின் கால அளவெனக்கூறக் கேட்டுச் சிவமூர்த்தியை யெண்ணிப்பூசித்து வருகையில் ஆயுளின் முடிவில் யமன்வந்து சிவபூசை செய்திருக்குக் காலையில் பாசம்வீச இவர் சிவபூசையினின்று நிலைதவறுதவராயிருந்தார். சிவமூர்த்தி சிவலிங்கத்தினிடமாக உக்கிர மூர்த்தியாய் யமனுக்குத் தோன்றி யமனைவிழ உதைத்து இவருக்குச் சிரஞ்சீவி இவ்வயதுடன் இருக்க அருளிச்செய்து, பூமிதேவி வேண்ட யமனையெழுப்பி அநுக்கிரகித்து அனுப்பினர். பாண்டவருக்குத் தருமங்கூறினவர் பலஜலப் பிரளயங்களைக் கண்டவர். இந்திரத்துய்ம்மனைச் சந்தித்து ஆயுளின் அளவைக்கேட்டவர். கண்ணனைச் சிவபூசைக்குக் காரணம் வினவி அவரால் முதற்பொருள் அறிந்தவர். விஷ்ணுமூர்த்தியின் தேகத்துட் புகுந்து பிரபஞ்சங்களைக் கண்டவர். ஆகையினலிப்பேர்ப்பட்ட மகா புண்ணிய சொரூபியே இவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி யாவருக்கும் போதிப்பாரெனக் கூறியதைக்கேட்ட மார்க்கண்டேயர், உரோம

முனிவரை வணங்கி, சுவாமி தங்களுடைய வனுக்கிரகத்தினல் யானுய்ந்தேன். தாங்கள் புசுண்ட மாமுனிவரின் குமாரர். மூன்றரைக்கோடி பிரம்மாக்களிறந்தால் தங்களின் ஆயுள்கால முடிவாகும். ஆகவே எல்லாமுணர்ந்த தாங்கள் எங்கள் யாவர்களுக்குமினிது விளக்கினல் யாங்கள் செவிவாயாக உண்டு ஆனந்தமடைவோமெனக் கூறினர். இதைக்கேட்ட முனிவர் கூறுவாராயினர். தபோ தனர்களே கேளுங்கள்.

உலக சிருஷ்டி.

இந்த உலகம் ஆதியில் ஜலமாகவிருந்தது. இதில் சிருட்டிகர்த்தா வாயுவாகி அசைந்து ஆடிக்கொண்டிருந்தார். அவர் இந்தப்பூமியை வராக உருக்கொண்டு தாங்கிக்கொண்டிருந்தார். பின் பிரபஞ்சசிற்பியாகிய விஸ்வகர்மன் இந்தப்பூமியை உருவப்படுத்தினர். அது பிருதுவியாயிற்று. சிருஷ்டிகர்த்தா பூமியைக்குறித்து ஆழிய சிந்தையாய் தியானித்துப் பார்த்து தேவர்களேயும், வசுக்களேயும் ஆதித்தர்களேயும் சிருஷ்டித்தார். அந்தத் தேவர்கள் சிருஷ்டிகர்த்தாவை நோக்கி ஜீவகோடிகளை நாங்கள் எவ்வாறு சிருஷ்டிப்போம் என்றனர். தியானத்தால் சிருஷ்டிக்க என்று வேதாக்கினியைக் கொடுத்துத் தேவபக்தியையு முடியுங்கள் என்றூர்.

புருஷ சூக்தம்.

ப்ராம்மணோஸ் யமுகமாஸீத் பாஹு ராஜன்ய க்ருத:
ஊருததஸ்ய யத்வைஸ்ய: பத்மியாம் சூத்ரோ அஜயத: எனவும்,

மதுமடை யுடைக்குஞ் செந்தாமரை மலர்ப்பீடமேலோன்
விதிமுகத்தினின் முன்றோன்ற விளங்குவாசனே யான்முன்னோர்
கதுமெனமடவா ரோடுமுதித்தனர் கவின்செய் தோளின்
வதுவைசெய் மடவாரோடு மன்னவருதித் தாரன்றே.

எனவும் போந்த சூதசங்கிதை ஜாதி வரலாறுரைத்த வத்தியாயப் பிரமாணப்படி, அப்பிரமதேவனுடைய முகத்தில் பிராமணர்களும் புஜத்தில் க்ஷத்திரியர்களும் தொடையில் வைசியர்களாகிய வணிகர்களும் பாதத்தில் சூத்திரர்களும் தோன்றியது மல்லாமல் அண்டசம் சராயுசம், உற்பீஜம், சுவேதசம் ஆகிய நால்வகைத் தோற்றங்களேயும், தேவர், மக்கள் விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவாரம் ஆகிய எழுவகைப்பிறப்புக்களேயும், தேவர் பதினன்குநூறுயிரம், மக்கள் ஒன்பதுநூறுயிரம், விலங்கு பத்துநூறுயிரம், புள் பத்துநூறுயிரம் ஊர்வன பதினொருநூறுயிரம், நீர்வாழ்வன பத்துநூறுயிரம், தாவரம் இருபதுநூறுயிரம், ஆக எண்பத்திநான்கு நூறுயிரயோனி பேதங்களேயு முண்டு பண்ணினர்.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

அண்டசஞ்சுவேதங்களுற் பிச்சஞ் சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்கு நூறாயிரத்தா
யுண்டுபல்யோநி யெல்லாமொழித்து மானுடத் துதித்தல்
கண்டிடிற் கடலைக்கையானீந்தினன் காரியங்காண். எனக்

கூறியது சான்றாகும். பிரமதேவனது வலத்தோளில் வந்த சுவாயம்பு மனுவின் மகனாகிய அன்புடை விரதன் என்பவன் உலக முழுவதுந் தனிச் செங்கோல் நடாற்றியரசாண்டான். அவன் புத்திரர்களாகிய அங்கிதீரன், மேதாதி, வபுட்டி, சோதிட்டு, துதிமான் அவ்வியன், நேமிக்கவசன், என்னுமெழுவரும் தங்கள் தந்தை யரசாண்டுவந்த உலகமுழுவதையும், நாவலந்தீவு, இரலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, புட்கரத்தீவு, தெங்குத்தீவு, கமுகரந்தீவு, என சப்தத்தீவுகளாகப்பிரித்துக் கொண்டார்கள். அத்தீவுகளில் சம்புத்தீவு என்று சொல்லப்படும் நாவலந்தீவை யரசாண்ட வங்கிதீரனென்பவனுக்கு, பாரதன், கிம்புருஷன், அரி, கேதுமாலன், பத்திராசுவன், இளாவிருதன், இரமியன், ஏமன், குரு, என்னுமொன்பது பிள்ளைகளுண்டு. அவர்கள் தங்கள் பேராலேயே சம்புத்தீவை நவகண்டங்களாகப் பிரித்துத் தனித்தனியே யாண்டுவந்தார்கள்.

கந்தபுராணம்.

முன்னுடை மூலமான முண்டகத்த விசின்மேய
வள்ளறன் வலதுமொய்ம்பான் வந்தசாயம் புமைந்த
னள்ளிலை வேற்கை நம்பி யன்புடைவிரதன்ஞால
முள்ளதோ ரெல்லைமுற்று மொருதனிக் குடையில்வைத்தான்.

அங்கவன்றனது மைந்தராங்கி தீரன் மேதாதி
துங்கமாம் வபுட்டி னொடு சோதிட்டுத் துதிமான்றொல்சீர்
தங்குமவ்வியனே மிக்கசவனனு மெழுவர் தாமும்
பங்குகொண்டேழு தீவும் பாதுகாத்தரசு செய்தார்.

சீரியசம்புத்தீபம் புரந்தவங்கி தீரனென்போன்றானருளுஞ் சிறுவராயோர்
பாரதன் கிம்புருடன ரிகேதுமாலன் பத்திராசுவனி ளாவிருதனென்போன்
னேருடையவிரமியனல்லே மப்பேரோனியற் குருவாமொன்பதின் மரிவர்
[கள்பேரா
லோரொருவர்க் கொவ்வொன்றா நாவற்றீவையொன்பது கண்டம
[தாக்கி யுதவினனால்.

இனி நவகண்டங்களின் அளவைக்கூறுகின்றேன் செவி சாய்த்து கேட்பீர்களாக.

நவகண்டங்கள்.

வடகடல் முதலாகச் சிருங்ககிரி வரையில் குருவருஷம். சிருங்ககிரிமுதலாக சுவேதம் வரையில் இரண்யவருஷம் சுவேதத்துக்கும் நீலமலைக்கும் நடுவே இரமியவருஷம் மேருமலையைச் சூழ்ந்த வருஷம்

இளாவிருதவருஷம் கந்தமாதன மலைமுதல் மேற்கடலுக்கு மத்தியிலுள்ளது கேதுமாலவருஷம் மாலியவான் மலைமுதல் கிழக்குக் கடல் வரையிலுள்ளது பத்திரவருஷம் நிசதமுதல் எமகூடம் வரையில் அரிவருஷம் ஏமகூடமுதல் இமயமலை வரையிலுள்ளது கிம்புருஷ வருஷம். தென்கடற்கும் இமயகிரிக்கும் நடுவேயுள்ளது பாரதவருஷம். குருவருஷத்தில் வசிப்பவர்கள் தெய்வத் தருக்களளிக்குங் காய் கனிகளைப்புசித்து பச்சைநிறமாய் பதின்மூவாயிர வருஷமிருப்பார்கள். அதற்கு வடபாகத்தில் முனிவர்களும் சாரணர் சித்தர்களும் படிக நிறத்துடன் பதின்மூவாயிர வருஷம் ஜீவித்திருப்பார்கள். பத்திராசு வருஷத்திலிருப்பவர்கள் காய்கனிகளைப் புசித்து பதின்மூவாயிர வருஷம் ஜீவித்திருப்பார்கள். இரமிய வருஷத்திலுள்ளவர்கள் பழவர்க்கம் புசித்து சந்திர நிறத்துடனிரண்டாயிரத்தைந்நூறு வருஷம் வசிப்பார்கள். இரணிய வருஷத்திலிருப்போர் ஆலங்கனிகளைப் புசித்து குவளைப்பூவிநிறமுடன் பன்னீராயிர வருஷமிருப்பார்கள். இளாவிருத வருஷத்திலிருப்பவர்கள் கருப்பஞ்சாற்றைப் புசித்து வெண்ணிறத்துடன் பன்னீராயிரம் யுகஞ்ஜீவிப்பார்கள். கேதுமால வருஷத்திலிருப்பவர்கள் கண்டகியின் பழத்தைப்புசித்து பசுங்குவளைப் பூவிநிறத்துடன் பன்னீராயிர வருஷம் ஜீவிப்பார்கள். அரி வருஷத்திலிருப்பவர்கள் காய்கனிகளைப்புசித்து சந்திரனைப் போன்ற நிறத்துடன் பதினுயிர வருஷஞ் ஜீவிப்பார்கள். கிம்புருஷ வருஷத்திலிருப்பவர்கள் இரலியின் பழத்தைப் புசித்து பொன்னிறத்துடன் பதினுயிரவருஷம் வாழ்வார்கள். ஏமகூடமலைக்குத் தெற்கில் இமயகிரிக்கு வடக்கில் பெருமை பொருந்திய திருகைலைமலை இருக்கின்றது. அதில் சிகண்ட பரமசிவனுர் வீற்றிருப்பர். அம்மலை எக்காலத்திலு மழிவுறுது. மேற்கூறிய எட்டு கண்டங்களில் வசிப்பவர்கள் துன்பம் பிணி, நரை, திரை, மூப்புகளைச் சிறிதேனுமடையார்கள். அவர்கள் கிருதயுதம் போலவே மற்ற யுகங்களிலும் வலிமைகுன்றுது தேக பலம் முதலியவற்றைப் பெற்றிருப்பார்கள். அவர்கள் பாரதத்தில் வந்து பிறந்து தாம்செய்த நல்வினைப்பயன்களை எட்டு கண்டங்களிலு மனுபவிப்பார்கள். பாரத விருஷத்தில் வசிப்பவர்கள் பூமியிற் பிறந்து பலதொழிலுஞ் செய்து, அறம் பாவமென்னுமிரண்டையுஞ் செய்து ஆதிதெய்வீகம், ஆதிபௌதிகம், ஆதி யாத்மிகமென்னு மூன்றினலாய பயனையடைவார்கள். அவர்களுக்கும் பெருமை, வலிமை, ஆயுள், உருவம், உணவு, செய்கைகள் முதலியவை யுகங்கடோறும் பேதப் பட்டிருக்கும். அவ்விடத்தில் தொவரை முதலிய பலதானியங்களு முண்டாகும். பரிசுத்தமான காய்கனிகளையும் புசிப்பார்கள். இப்பாரத மொழிந்த மற்ற கண்டங்களிலிருப்பவர்களாகிய தேவர்களும் நரக வாசிகளும், அவ்விடத்திற் பொருந்திய நல்வினைத் தீவினைகளைச் செய்து அவற்றின்பயனை யனுபவிப்பார்க ளென்றுலிவைகளுக்கு மூலகாரணமாயுள்ளது அப்பாரத வருஷமேயாகும். தேவர்களும்

முனிவர்களும் தங்கள் தவமும் பூசையுமிப்பாரத கண்டத்தில் வந்து செய்தேமுற்றுப் பெறுவார்கள். புலவர்கள் புகழும் பரதனும், இந்திரன், கசேருகன், தாமிரபன்னன், கபத்தி, நாகன், சருமியன், கந்தருவன், வருணன், என்னும் பெண்ணையும் பெற்று அவர்களால் நவ கண்டங்களாக்கப்பட்டது. இப்பாரத வருஷத்தில கங்கை, கௌதமி, யமுனை, கௌரி, சரஸ்வதி, காவிரி, நருமதை, பாலி, கம்பை, பம்பை, துங்கபத்திரை, குசை, கோமதி, பாஞ்சாலி, முதலிய புண்ணிய நதிகளிருக்கின்றன. மகேந்திரம், மலயம், கையம், சத்திமானிருடம், பாரியாத்திரம் விந்தமென்னும் ஏழுகிரிகளும், காஞ்சி, காசி, அயோத்தி, மதுரை, மாயை, அவந்தி, துவாரகை என்னுஞ் சப்த புரிகளும், இவையல்லாமல் 1008 சிவாலயங்களும், 108 திருப்பதிகளும், அந்தணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், முதலியோர் வசிக்கும் பல தேசங்களுமிருக்கின்றன. இதுதான் மெய்ந்நெறிக்கு இருப்பிடமாயிருப்பது. இதைக்குமரி கண்டமென்றுஞ் சொல்லுவார்கள்.

பனிரெண்டாவது நிகண்டு 69-வது பாசுரம்.

இவர்தரு நாவலோடே யிரலியேகுசை கிரவுஞ்சம்
புவிபுனை கமுகுதெங்கு புட்கரந் தீவேழின்பேர்
உயர்கரும் பின்சாறூடே யொன்பது நெய் சிறந்த
நவமதாந் தயிர்பாலப்பு நாட்டியகட லேழின்பேர்.

வீரசிங்காதன புராணம்.

செம்பொன்மால் வரைத் தக்கின நாவலந்தீவி
லும்பர்போற் றிடுமுயர் பதிபல பலவுளவா
நம்புவோர்க்கு வல்வினை யெலாநவையற வொழிக்கும்
வம்பதன்று பல்லூழிநாட் டெல்லையின் மருவும்.

என்பதனல் நன்கு விளங்கும். வைகுண்ட வாசனுகிய ஸ்ரீமகா விஷ்ணு வானவர் தேவர்களின் துன்பங்களை நீக்கி இரக்ஷிப்பதற்காக தசாவதாரங்களெடுத்தனர். இது விஷயங்களை ஒருவாறு கூறுகின்றேன் கேளுங்கள்.

ஸ்ரீமகாவிஷ்ணு மூர்த்தியின் பத்து அவதாரங்கள்.

மச்சக் கூர்ம வராகஸ்யஃ
நாரசிம் ஹஸ்யஃ வாமன
ராமோ ராமஸ்ய ராமஸ்ய
பௌத்வ கலிகி ரேவசஃ.

என்னுஞ் சுலோக தாத்பரியத்தை யனுசரித்து சாக்ஷாத் பரமபதியாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் தேவர்களும், ரிஷிகளும், தபோதனர்களும், மாந்தர்களும் உய்யும் பொருட்டு மச்சாவதாரம்,

கூர்மாவதாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரம், வாமனவதாரம், இராமவதாரம், கிருஷ்ணவதாரம், பரசிராமாவதாரம், பௌத்தாவதாரம், கலிக்காவதாரம் ஆகிய தசாவதாரங்களையு மெடுத்தனர்.

சுருதியைத் திருடிப்போன சோமுகவசுரன் றன்னைத்
திரைகடற் குள்ளேமீனாய்ச் சென்றுகொன் றவனே சேமி
காமுடை கமலக்கண்ணா கர்த்தனாகிய கார்வண்ணா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா.

ஒரு கற்பத்தில் *நைமித்திகப் பிரளய முண்டாயிற்று. அது சமயம் பிரமன் உறங்கினான். உறக்க மறிந்த அயக்கிரீவன் என்னு மசுரன் வேதங்களைத் திருடிக்கொண்டு கடலி லொளித்தான். இதை யறிந்த விஷ்ணுமூர்த்தி மச்சாவ தாரங்கொண்டு கடலி லொளித்த அயக்கிரீவனை சங்கரித்து பிரமனுக்கு உதவினர். இந்த அசுரனை சோமுகாசுரன் எனவுங் கூறுவர். இது மச்சாவதார மெடுத்ததன் காரணமாகும்.

சுரர்கடல் கடையும் போது தூயகச் சபமாய் நீமந்
தரமலை யினையாழாமற் றாங்கினதய வேதையா
முரஹரி யெழிலார்மெய்யா மூடன்மேன் முனிவேன் றய்யா
தெருள் செக நாத தேவா சீக்கிரங் காக்கவாவா.

திருப்பாற் கடலைக் கடைகையில் மந்தரமசைய, அது அசையாதிருக்கும் பொருட்டுத் தேவர்கள் வேண்டுகோளால் விஷ்ணுமூர்த்தி கூர்மாவதாரங் கொண்டு தாங்கி உதவினர். இது கூர்மாவதார மெடுத்த காரணமாகும்.

தரைதனைச் சுருட்டி யாழ்ந்த சமுத்திரத் தொளித் திருந்த
இரணியாக் கனைவராக வெழிலுரு வெடுத்துக் கொன்ற
பரமனே பதும நாபா பரஞ் சோதி யானதீபா
தெருள் செக நாத தேவா சீக்கிரங் காக்கவாவா.

மற்றோர் காலத்தில் காசிபருக்கும் திதிக்கும் பிறந்த இரணியாக்ஷன், இரணியகசிபு என்னுமிருவரில் இரணியாக்ஷன் பார்மகளைப் பாயாகச் சுருட்டி பாதாளத்திற் சென்றனன். இதையறிந்த விஷ்ணுமூர்த்தி வராகவுருக்கொண்டு வெளிப்பட்டு அவனைக் கொன்று பிரமனிடந் தந்து நிறுத்தினர். இதுவே வராகாவ தாரத்தின் காரணம்.

* நைமித்திகப் பிரளயம் என்பது பிரமன் முடிவில் சூரியன் 100 வருஷம் அழற்கதிர் பரப்பி உலகம் முழுவதும் எரித்திடுவன் பின் 100 வருஷங்கள் மேகங்கள்கூடி சோனைபோல் மழை வருஷித்து வெள்ளப்படுத்தும் அப்போது பிரமன் யோகநித்திரை புரிவன். விஷ்ணுவராகாவதாரங்கொண்டு அண்டத்தைக்கோட்டிற் சுமந்து பிரமனுக்கு உதவினதால் இதை வராககற்பம் என்றுங் கூறுவர்.

திரமகா பலி பாதாளஞ் சேர விக்குவல களந்த
சரணனே வாமனவ தார செம்பீர கூரா
திருவுருக் களப மார்பா திவ்விய துளப மார்பா
தெருள் செக நாத தேவா சீக்கிரங் காக்கவாவா.

மாவலியின் செருக்கடக்க அவனிடம் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி யானவர் வாமனவதார மாகிய குறுகிய உருவாய்ச்சென்று மூவடி மண் வேண்டினர். அக்காலத்தில் அசுர குருவாகிய வெள்ளி (சுக்கிராச்சாரி) மாவலிக்கு உறுதி கூறித்தடுக்கவும், மாவலி கேளாது தானஞ் செய்யத் துணிந்து தாரைவார்க்கையில், சுக்கிரன் சிறு ரூபியாய்த் தாரைவிழாது தடுத்தது கண்ட வாமனர் தர்ப்பையினல் நீர்த்தாரை வரும் வழியைக் குத்திச் சுக்கிரன் கண்ணைக் கெடுத்தனர். பின் திரிவிக்ரமராய் மூவுலகத்தை ஈரடியளந்து ஓரடிக்கு இடமில்லாது மாவலிதன் சிரத்தைக் காட்டவைத்துப் பாதாளத்தில் சகல போகங்களையு மனுபவிக்கச் செய்தனர். வாமனவ தாரத்தின் காரணமீதே யாகும்.

பிரகலாதனுக் காகத்தூணிற் பெருநர ஹரியாய்த் தோன்றி
இரணியன் றனைவதைத்த வீசனே நெடிய மாலே
பிரமனைப் பெற்ற நாதா பேதையே னனே நீதா
தெருள் செக நாத தேவா சீக்கிரங் காக்கவாவா

மற்றோர் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் துவேஷித்த இரணியகசிபை ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியானவர் தூணினின்றும் நரசிம்ம மூர்த்தியாகத் தோன்றி இரணிய கசிபனைக் கொன்று பிரகலாதனுக்கு முடிசூட்டி யாதரித்தனர். இதுவே நரசிம்மாவதாரத்தின் காரணமாகும்.

அரசர் கடமை யடக்கி யந்தணர் தம்மைக் காத்த
பரசு ராமா கோபாலா பரந்தாமனே பூ பாலா
விரிமறை தேடு மூலா வேலையிற் றயின்ற சீலா
தெருள் செக நாத தேவா சீக்கிரம் காக்கவாவா.

க்ஷத்திரியர்கள் மிகுந்து துஷ்டத்தனஞ்செய்ய வாரம்பித்தனர். ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி பரசுராமாவதாரம் எடுத்து க்ஷத்திரியர்களை இருபத்தொரு தலைமுறை வரை நாசஞ் செய்தருளினர். இது பரசுராமாவதாரம்.

இருடி கடவுஞ் செழிக்க விராவணன் றனை வதைக்கத்
தரைதனில் வந்த ராமா சாஸ்விதனே சங்க ராமா
முருகனுக் கிசைந்த மாமா முறையிடு மெனையாள் சோமா
தெருள் செக நாத தேவா சீக்கிரங் காக்கவாவா

மற்றோர் காலத்தில் மோக்ஷ மென்னு மயோத்தியாண்ட பிரம மென்னுந் தசரத சக்ரவர்த்தி தான் புத்திரர் இல்லாமல் கலைக்கோட்டு முனிவரால் புத்திர காமேஷ்டி யாகஞ்செய்விக்க, அந்த யாகத்தில்

ஒரு பூதம் தாம்பாளத்தில் அன்ன மேந்தித்தந்தது. அதனைத் தசரதன் தனது மனவியர் ஞான சத்தியாகிய கௌசலைக்கும், இச்சாசத்தியாகிய சுமித்ரா தேவிக்கும், கிரியா சத்தியாகிய கைகேசிக்கும் தந்தனன். அரக்கர் உபத்திரவத்தைச் சகிக்காத தேவர் முதலியோர் வேண்டுகோளின்படி ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியானவர் முதல் மனைவியாகிய கௌசலா தேவிக்கு சித்திரை மாதம் நவமிதிதி, புனர்பூச நக்ஷத்திரத்தில் நாராயண மூர்த்தியினுடைய அர்த்தாமிசத்தில் ஆத்மா வென்னும் ஸ்ரீ ராமரும், சுமித்ரா தேவிக்கு ஆதிசேஷன் அம்ஸமாகிய வைராக்கிய னென்னும் இலக்ஷுமணனும், சங்கு சத்துருக்கனகவும், கைகேசிக்கு சக்கரம் பரதனகவும் பிறந்தார்கள். அவ்வியக்த மென்னும் பால்யத்தால் தன்னை மறந்து அஞ்ஞான மயனுன ஜீவனே தானகித் தேகேந்திரி யாதிகளுக்கு கோனகி சிரவண மென்னும் வசிஷ்டரை யடைந்து கல்வியிற்றேர்ந்து மனனனென்னும் விஸ்வாமித்திரருக்காக தாடகையை வதைத்து, அகலிகையின் சாபத்தைப்போக்கி, மிதிலையை யடைந்து வில்லைமுரித்து ஜாநகியாகிய சீதையை மணந்து அயோத்தியை யடைந்தனர். இவர் தந்தை யுவ ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்ய ஏற்பாடுகள் செய்வதை யறிந்த கூனி உட்பகை கொண்டு கைகேசியைத்தூண்டி அவள் மனதை வேறு படுத்தி, ராமனைக் காட்டிற் கேவச்செய்ய தசரதனிடம் முன் பெற்ற மூன்று வரத்தைக் கேட்பித்தனள். அவ்வகையே கைகேசி வரம் பெற்று தசரதர் சொல்லென்று ராமமூர்த்திக்கு வனஞ் செல்லக் கட்டளையிட, இராமர், சீதை, இலட்சுமணர் மூவரும் வனஞ்சென்றிருக்கும் காலத்தில் சூர்ப்பனகையைப் பங்கப்படுத்தி, சீதையை அபகரித்துச்சென்ற, துவார பாலகர்களி லொருவராயிருந்த ஜெயாம்ஸ இராவணனை சம்ஹரிக்கச் செல்லும்போது அநுமனைக்கண்டு அவரால் சுக்ரீவனை நட்புகொண்டு மராமரம் ஏழும் ஒரே பாணத்தால் துளைத்துக் காட்டி வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு பட்டாபிஷேகஞ் சூட்டி வானரசேனைகளுடன் பஞ்சமாபாதக மென்னும் பர்வதங்களைக் கடந்துபோய் இராவணனையும், விஜயாம்ஸ கும்பகர்னனையுஞ் சங்கரித்து சீதையை மீட்டு விபீஷணருக்குப் பட்டங்கட்டி அயோத்தியை யடைந்து மகுடாபிஷேகஞ் சூட்டிக்கொண்டு யாவர்களையு மாதரித்தரசு புரிந்தனர். இதுவே இராமாவதார மாகும்.

திரைகட லுலகி லுற்ற தீயர் கடமை யழித்துத்
தரும ராதிபரைக் காத்த சங்கு சக்ரனே கிருஷ்ண
வரையினைச் சுமந்த சீலா வாரியிற் றுயின்ற பாலா
தெருள் சேக நாத தேவா சீக்கிரங் காக்கவாவா.

ஓர் காலத்தில் வசுதேவருக்கும், தேவகிக்கும், விஷ்ணுமூர்த்தி கிருஷ்ணவதாரமெடுத்து தமது தாய் மாமனகிய சகடகஞ்சனையும், சிசுபாலனையுஞ் சம்ஹரித்து சாப விமோசனஞ்செய்தும் தருமாதியர்களுக் குதவிபுரிந்து காத்து துவாரகையை அரசாண்டு, பாரத

யுத்தத்தை யுடனிருந்து நடத்தி பாபங்களைப் போக்கினர். இது கிருஷ்ணவதாரமாகும். தாருகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்ற மூன்றசுரர்கள் திரிபுரங்களுடன் தேவர்களைத் துன்பப்படுத்தும்போது, யாவரும் விஷ்ணு மூர்த்தியை வேண்ட, தாம் புத்தாவதாரராய் நாரதரை சீடனாகக்கொண்டு, புத்பத்-புத்பத எனக்கூறி புத்த மதத்தைப் போதித்து தேவர்களைக் காத்தருளினர். இதுவே புத்தாவதார மாகும்.

பரியவ தார மாகிப் பாரினை யழிக்க வுன்னுங்
கரியனே கஞ்சத் தாளா கடையனேன் றன்னை யாள
வுரியனே முறையோ வென்று மோலங் கேட்டிருக்க லாமோ
தெருள் செக ஙாத தேவா சீக்கிரங் காக்கவாவா.

கலியுக முடிவில் விஷ்ணுமூர்த்தி குதிரை முகமாக அவதரித்து அதர்மங்களைப்போக்கித் தருமத்தை நிறுத்துவர்.

காசிபர் வரலாறு.

இனி காசிபர் வரலாற்றைக் கூறுகின்றேன். அது எவ்விதமென்றால் பிரமன் மனதிற் பிறந்த மரீசி பிரசாபதிக்கும் தனது மனைவியாகிய கலைக்கும் காசிபர் பிறந்து தக்ஷப்பிரசாபதியின் குமரிகளாகிய அதிதி, திதி, தநு, அநாயு அல்லது காலை, பிரதை அல்லது ஆயு, முனி, சுரசை அல்லது சிங்கிகை, இளை, குரோதவசை, தாமிரை, சுரபி, விநதை, கத்ரு எனும் பதின் மூவரையும் மணந்தனர். இவர்களுள் அதிதியிடம் ஆதித்தியரையும், திதியிடம் தைத்தியரையும், தநுவிடம் தானவரையும், அநாயுவிடம் சித்திரையையும், பிரதையிடம் காந்தருவரையும், முனியிடம் அப்சரசுக்களையும், சுரசையிடம் யக்ஷரையும், இராக்கதரையும், இளையிடம் விருக்ஷம் கொடி பூண்டுகளையும், குரோதவசையிடம் புலி, சிங்கம் முதலிய மிருகங்களையும், தாமரையிடம் குதிரை, கழுதை, பக்ஷி முதலியவற்றையும், சுரபியிடம் பசுக்கூட்டங்களையும், விநதையிடம் அருணனையும், கருடனையும், கத்ருவிடம் நாகரையும் உறபத்தி செய்தார்கள். திதியானவள் காசிபரை சந்தியா காலத்திற் புணர்ந்ததால் பிறந்த அரக்கர் தைத்தியராவர்.

வைகுண்டத்தில் துவார பாலகராயிருந்த ஜெய விஜயர்களின் பிரபாவம்.

வில்லி பாரதம்.

ஐவகைவடிவாம் எங்குமாய்நின்ற அச்சுதநமல நாகந்தன்
செய்யொழிதிகழும் பங்கயக்கண்ணன் திருமகள் கொழுனனைக்காண
துய்யசெய்தவத்து தூருவாசமுனிவன் சேரலும்சுடர்கொள் வைகுண்ட
மெய்புயர்கோயிற் துவாரபாலகரவ் வேதபண்டிதன் தனைவிலக்க.

விலக்கிய விருவர் தம்மையுமந்த வெஞ்சினமுனிவரன் வெகுண்டு
துலக்கியகோயிற் துவாரம்விட்டவினி தோன்றிமின் போயெனசபித்தார்
நலங்கலன்துளவ மவுலியானது கேட்டந்தணன் தனையெதிர்கொண்டு
கலங்கியதுவார பாலர்கின்சாபம் கடப்பதற்காலமோ வென்றான்.

என்றலும்முனிவன் பரிந்திவ ரெழுகாலின் புருமன்பருவருத
லன்றிமும்மடங்கும் பகைவரா வருதலல்லதிங்குன் பதமணுகார்
மன்றலும்துளபமால யாயின்னமலர்மகன் மகணனுமவறை
கன்றிமறையோன்சாப நீர்கடக்கும் கருத்துமற்றி யாதுகோலென்றான்.

என சபா பர்வம் இராஜசுயச் சருக்கம் பக்கம் 113-கூறிய பிரமாணப் படி, முன் ஒரு காலத்தில் இலக்ஷ்மியானவள் தனது நாயகனுகிய விஷ்ணு மூர்த்தியைப் பார்த்து சுவாமி தங்களுடைய திருஉருவம் மிக்க கோமளமாதலின் எவ்வாறு போர் புரிதற்கியலு மெனக் கேட்க, திருமால் பெண்ணே நீவிரும்பினுல் விரைவில் பார்ப்பா யென்று கூறினர். சில காலத்திற்குப் பிறகு வைகுண்டத்தில் லக்ஷ்மி சமேதராய் வீற்றிருக்கும் போது விஷ்ணு மூர்த்தியை சேவிக்க வேண்டி தூருவாசர் வைகுண்டத்தின் வாசப்படி கடந்து செல் லும்போது துவாரபாலகர்களாகிய ஜெய விஜய ரென்னுமிருவர்கள் அவரை வழிமறித்துத் தடுத்தார்கள். தூருவாசர் எவ்வளவு கூறியும் பயன்படாமையால் அவர்களை உடனே சபித்தார். இதை யறிந்த விஷ்ணு மூர்த்தி உடனே அவ்விடம் வந்து ஜெய விஜயர்க ளாகிய துவார பாலகர்களை நோக்கி நீங்கள் வழிமறித்தது பிச கென்று தடுத்து முனிவரைப் பார்த்து, நீர் இவர்கள் பதவியை யிழந்து உலகிற் பிறந்து துன்புறும்படி சபிக்கலாமா, அநுக்கிரகஞ் செய்தருள வேண்டுமென முனிவர் பகவானைப் பார்த்து, இவர்கள் தங்களை பக்தி செய்வதான ஜெனனங்க ளெடுத்தால் ஏழு ஜென னங்களிலும் பகைக்கொள்வதான ஜெனனங்க ளெடுத்தால் மூன்று ஜனனங்களிலும் மீண்டுந் தங்கள் பதவியை யடைவார்கள். இதில் இவர்கள் விரும்பத்தக்கது எதுவோ அதை யடையட்டுமென, அதற்கு ஜெய விஜயர்கள் சுவாமி நாங்கள் ஏழு ஜனனங்கள் வரையில் சர்வ ரக்ஷகராகிய உங்களைப் பிரிந்திருக்கமாட்டோம், ஆகையால் மூன்று ஜனனங்களிலேயே பகைமை கொண்டாயினும் எங்கள் பதவியை யடைகிறேம். தாங்கள் அம்மூன்று பகைமை ஜனனங்களிலுடனி ருந்து அனுக்கிரகஞ்செய்து இரக்ஷிக்க வேண்டுமென்று கூறினர்கள்.

உடனே ஜெய விஜயர்கள் தங்கள் பதவியினின்றும் நீங்கி உலகத் தில் காசிபருக்கும், திதிக்கும் தூல தேகவடிவுள்ள இரணியகசிபும் சுமத்தி வடிவுள்ள இரணியாக்கனும் மகா பராக்கிரம சாலிகளான இராக்ஷதர்களாகத் தோன்றினர்கள்.

இரணியாக்ஷன் தபசு.

சுமுத்தி வடிவங்கொண்ட இரணியாக்ஷன் சிறுவனயிருக்கையில் விளையாடு நிமித்தம் சூரியனையுஞ் சந்திரனையுங் கூப்பிடுவான். அவன் வனங்களிலுள்ள சிங்கங்களின் பேரிலும், மதயானைகள் பேரிலும் ஏறிச்சவாரியிட்டு விளையாடுவதேயன்றி சாமான்யமான குதிரைகள் மேலேறுவதில்லை. சண்டை செய்யவேண்டி யிருப்பின் சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களோடு சண்டை செய்வான். பருவத்தில் மணம் புரிந்து வாழ்ந்து வருங்காலத்தில் தமது சகோதரனுகிய இரணிய கசிபுக்கு பிரகலாதன், அநுக்கிலாதன், இலாதன், சம்பிலாதன் என்னும் நான்கு புதல்வர்கள் பிறந்திருக்க, தமக்குப் புத்திரப் பேறில்லையே யென்ற மனவருத்தமும், கலக்கமுமடைந்து, கானகத்தை யடைந்து தேகமெல்லா மிளைக்க, இராகத் துவேஷங்களின்றி சிவதரிசனத்தை விரும்பி பெருந்தவஞ்செய்ய, சிவபெருமான் அவன் தவத்திற்கிரங்கி அவ்விடத்தை யடைந்து, பஞ்சேந்திரியங்களை யடக்கி இத்தகைய தவம் யாதுகருதி செய்கின்றனை? உமக்கு வேண்டிய வரத்தைக்கேள் கொடுக்கின்றேனென்று சொல்ல, இரணியாக்ஷன், சர்வேஸ்வர! சர்வரக்ஷகா! சர்வதயாபர! சர்வலோகைக சரண்ய! எனப் பலவாருகத்துதித்து, எனக்குப் பராக்கிரம சாலியாகவும், கல்வியிற் சிறந்தவனுகவும், எமது அசுர குலத்தை ஆதரிப்பவனுமாகிய புத்திரன் வேண்டு மாதலினிவ்வரத்தை அடியேன் ஆசரிக்கின்றேன். எனது சகோதரனுகிய இரணியகசிபுக்கு நான்கு புத்திரர்களுளர். அடியேனுக் கில்லாம லிருப்பது இவர்களுக்கு மிகுந்த ஏளனமாக விருக்கின்றது. கிருபாகர! அன்பர்களினிதய மென்னு மோடையில் வீற்றிருக்கும் அருட் பிரகாச! கோறிய வண்ணமளித்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க சிவபெருமான் அவ்வார்த்தைக்கு மனங்களித்து ஓ! தைத்திய! உன் வீரியத்தினுற் ஜனித்த புத்திரன் உனக்கு தற்போது கிடையாது. உனக்குப் புத்திரனுகவும், உனக்கு சமானமான பராக்கிரம முடையவனுகவும், பிறரொருவராலும் வெல்லக் கூடாதவனுகவுமுள்ள புத்திரன் ஒருவனை அளிக்கின்றேன். அவனே உன் குலத்தையும் உன்னுல் சம்பாதிக்கப்பட்ட இராஜ்ஜியத்தையும் காப்பாற்றுவான். ஆனுல் நெறிதவறில் நாசமடைவன் எனக்கூறினர்.

பார்வதிதேவி பரமசிவத்தின் கண்களை மூடியபோது, அந்தகாசுரன் உற்பத்தியானது.

செழுமலக்கலவி யாற்றுஞ் செவ்வியினெள்ளி கான்றுள்ள
முழுவது நாணச்செய்வ விவையென முனிவாள்போலப்
பொழிகதிர்ச் சுடர்ப்பூங்கண் களிரண்டையும் பூங்கைநீட்டிக்
கழிகளியகத்துப் பொங்கக் கதுமெனப் புதைத்தல்செய்தாள்.

இன்னணம் விளையாட்டாக விமயமீன்றெடுத்த நங்கை
பொன்னவிர் சடையார்கண்கள் புதைத்தலும் புவனமெல்லாந்
துன்னிய சகலத்தன்மை யெய்தியுந்தொல்லை நாட்கண்
மன்னுகேவலமே யென்னச் செயலறவிருள் வந்தன்றே.

இருந்தவா ரிருந்துபம்பு மெண்ணிலா வுயிரும்வாடி
வருந்திடு மிம்மைபைநோக்கி வள்ளலார் வறிதேநெற்றித்
திருந்தழல் விழியைவல்லே திறந்தனரி னமகார்கள்
கருந்துய ருழக்கவீன்றோர் காண்பரோ சிறிதுபோதும்.

எண்ணிலா வுயிருமின்ப மெய்தின விறைவர்கண்கள்
பண்ணுறு மொழியாண்மூடும் பொழுதினும் பானுநெற்றிக்
கண்ணினைத் திறந்தபோதுங் கதிர்சுடர் மூன்றுந்தத்தம்
வண்ணவா ளொளிபெறுமை மழுங்குதலுற்ற வன்றே.

அடியனேன் விளையாட்டாக வலர்விழிபுதைத் தேனந்தக்
கொடியதோர் செயலால் விண்ணுங் குரைகடலுலகு மெங்குங்
கடியிருண் மிடைந்ததிந்தக் கடும்பிழை பொறுத்தியென்னுத்
துடியி டை மடந்தைமீட்டுந் துணையடிவணங்கி நின்றாள்.

எனக் காஞ்சிபுராணங் கூறியுள்ளது

18-புராணங்களில் ஒன்றாகிய சிவ மகா புராணம்.

முனிவர்களே! ஓர் காலத்தில் சர்வலோக நாயகனாகிய சிவபெருமான் ஸ்ரீ கைலாயத்தில் பஞ்சாக்ஷரபீடத்திலும், லோக மாதாவாகிய பார்வதிதேவியார் *திரியாக்ஷர பீடத்திலும் சல்லோபமாக உட்காந்து பேசிக்கொண்டு இருக்குங் காலத்தில் பார்வதியார் பகவானே இந்த சூரியன் சந்திரன் யாரென்று கேட்க அதற்கு பகவான், பார்வதி சூரியன் எனது வலது கண், சந்திரன் எனது இடது கண் என்றார். இதைக்கேட்ட பார்வதி ஒன்றுங்கூறாமல் ஷ்டி பீடத்திலிருந்தபடியே பகவான் பின்புறமாகத் திரும்பி பார்வதியம்மன் தனது மாந்தளிர் போ ற திருக்கரத்தால் வினோதமாக பகவான் திருகண்களை மூடினார். அவ்விதம் மூடிய ஓர் விநாடியிலே உலகமெங்கு மந்தகாரம் நிறைந்தது. இவ்வந்த காரத்தைக்கண்ட பார்வதிதேவிக்கு உண்டான அச்சத்தால் வியர்வை யுண்டாயிற்று. அவ்வியர்வை யானது இறைவனது லலாட நேத்திரமாகிய ஹக்கினியாற் சூடுண்டு அவ்விரலிலேயே பயமுறுத் தத்தக்கதும் கொடூரமானதும் குரூர புத்தியுடையதுமான விலக்ஷணமும், விரூபமும், கருமையும், சுருண்டு நறைத்தமயிரும் பிரளய காலமேகம் போன்ற குரலோசையு முடைய ஒருவன் ஜனித்தான். மகா ஆச்சரியமான வுருவத்தோடு உதித்த அவனைச் சிவபெருமான் கண்டு பார்வதியை நோக்கி சிறித்து பெண்ணே! என் விழிகளை நீ வேடிக்கையாக உன் திருக்கரத்தினுல் மூடி, இவ்வகையான ஒருவனைப் பிறப்பித்தது என்னை பயப்படுத்துவதற்கோ? என வினோதமாகக்கூற,

*திரியக்ஷர பீடங்கள் என்றது—அகாரம், உகாரம், மகாரம் இந்த மூன்றுஞ் சேர்ந்த பிரமமே ஓங்காரமாமாகிய பீடங்கள்.

பார்வதியார் அவ்வார்த்தையைக் கேட்டு நகைத்து அவ்விழிகளிற் பொத்திய திருக்கைகளை யெடுத்தனர். இவ்வகை கோர ரூபத்துடன் அந்தகாரத்திற் பிறந்ததினாலவன் கண்ணில்லாத அந்தகனாக விருந்தான்.

அப்பொழுது மகாதேவி மகாதேவனைப் பார்த்து சுவாமி! இவன் யாவன்? குருடனாயும், விரூபியாயு மிருக்கின்றான். யாது காரணத்தாலிவனிவ்வாறு ஜனித்தான்? இவன் யாருடைய புதல்வன்? இந்த உண்மையை எனக்குக் கூறவேண்டுமெனக்கூற, சிவபெருமான் சொல்லத் தொடங்கினார். பெண்ணே! இவன் மகா பராக்கிரம சாலி. என் விழிகளை நீ மூடிய காலத்தி லுன்கைவிரலிலுண்டாகி அந்தகன் என்னும் பெயர் பெற்றனன். இவனுக்குத் தந்தை நானே தாய் நீயே. இவனை நீ ஒருவருஷங் காக்கவேண்டுமெனக்கூற, பார்வதியார் சிவபெருமான் கட்டளைப்படியே தோழிகளுடன் அவ்வந்தகனைத் தன் புத்திரனைப் போலவே பாதுகாத்து வந்தனள். எனக்கூறியது சான்றாகும்.

இரணியாக்ஷன் சிவபெருமானிடம் அந்தகனைப் புத்திரனாகப் பெறல்.

உக்கிரனும் திரிபுராந்தகனும் பூதநாதனும் உமாபதியுமாகிய சிவபெருமான் அந்தகனைச் சுமத்தி வடிவு இரணியாக்ஷனுக்குக் கொடுத்தருள இரணியாக்ஷன் பெற்றுக்கொண்டு பரமசிவனையும், பார்வதி தேவியையும் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து பலவித தோத்திரங்களால் துதித்து சிவபெருமானிடம் விடைப்பெற்றுத் தனது இராஜ்ஜியத்தை படைந்தனன். அடைந்து தன் மனைவி கியாதியினிடம் அந்தகனைக் காப்பாற்றுமெனச் சொல்லிக் கொடுத்துவிட்டு தான் தேவர்களைத் துன்பப்படுத்த வேண்டுமென்று நினைத்து சாமானியர்கள் போல அடிப்பதும் வேதியர்களை சங்கரிப்பதும் யாகங்களை அழிப்பதுமாக விருந்தான்.

காஞ்சி புராணம்.

வாராகிச் சரமன்னதன் றெற்கது மன்னுபொற்
பேரான் றன்னொடு தோன்றியபொன் விழிப்பேரினன்
பார்தான் வௌவினன் பாதலத்தேகலும் பைந்துழாய்த்
தாரான் சூகரமாயவன் றன்னைச் சவட்டியே.

முன்போற் பாரைக்கொணர்ந்து நிறீஇமத மூண்டெழிக்
கொன்பா யேற்றவன் வேருக்கொண்டு யிருண்டொரு
வன்பார் கோடுபெங்கி யணிந்தபின் மற்றவ
னன்பாலீசனை யர்ச்சனை செய்தருள் பெற்றதே.

இரணியாக்ஷன் பார்மகளை அபகரித்துப் பாதாளலோகத்துக்குச் செல்லுங் காலத்தில் பார்மகள் விஷ்ணு மூர்த்தியைநோக்கி ஸ்ரீமந்

நாராயண! இலக்ஷ்மிச்மேத! என்னைக்காக்க வேண்டுமென்று சொல்லி துக்கித்ததை யறிந்த பகவான், பூமிதேவியை பாதாள லோகத்தில் கொண்டுபோய் வைத்திருக்கின்றானென்று அறிந்து வராக அவதார மெடுத்து பாதாளலோகத்துக்குள் பிரவேசித்து இரணியாக்ஷனுடன் சமர்செய்து இரணியாக்ஷனைச் சம்மரித்து பார்மகளை மீட்டுத் தன் கோட்டில் தாங்கிக்கொண்டு, இரணியாக்ஷன் தபசால் சிவனிடம் புத்திரனைப்பெற்ற அந்தகாசுரனுக்கு பாதாள லோகத்தைப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்து, பூமிதேவியைக் கொண்டுவந்து பிரமனிடம் ஒப்புவித்து பகவான் வைகுண்டஞ் சேர்ந்தனர்.

இரணிய கசிபன்.

விஷ்ணுமூர்த்தியால் இரணியாக்ஷன் இறந்தானென்னுஞ் செய்தியைக் கேள்விப்பட்ட தூலதேக வடிவ இரணியகசிபன் தன் தம்பியைக் கொன்ற விஷ்ணுவைக் கொன்று தன் துக்கத்தை யொழிக்கக் கருதி பிரமதேவனை நோக்கிப் பத்தாயிரம் வருஷங் கடுந்தவஞ் செய்துக் கொண்டிருந்தனன். அதுவரையிலிவன்பேரில் விருக்ஷங்கள் முளைந்து நாற் புறத்திலுங் கிளைத்துப் பெருவனமாயிற்று. அம்மரங்களில் பலவகைப் பக்ஷிகள் கூடுகட்டி வாசஞ்செய்து முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்தன. அவனுந் தவத்தைக் கைவிடாதிருந்தான். அவனது தவாக்கினி தேவலோகத்திற்றாக்கத் தேவர்கள் அதனைச் சகிக்காமல் பிரமதேவனிடஞ் சென்று உம்மை நோக்கியே இரணிய கசபன் தபஞ்செய்கின்றான். நீர் சும்மாயிருப்பது சரியல்ல. நாங்களவனது தவச்சுவாலையாலிறக்க நேரிடும் எனப் பலவாறு கூறி வருந்த, பிரமதேவர் அவனுக்கு வரங்கொடுக்கக் கருதி இரணிய கசிபனை யடைந்து உனது தவத்திற்காக பெருமகிழ் வடைந்தேன். உமக்கு வேண்டிய வரம் யாது? யெனக்கேட்க இரணியகசிபன் சுவாமி! உமது படைப்பாகிய உலகத்தில் எவனாலும், எவ்வகையாயுதத்தினாலும், இரவிலும், பகலிலுமென்னைக் கொல்லப்படாது. இந்தவரம் வேண்டுமெனக்கேட்க பிரமதேவரு மவ்வாறே வரங் கொடுத்துத் தனதிருப்பிடஞ் சேர்ந்தார். இவ்வரத்தைப்பெற்ற இரணியகசிபன் சோணிதபுரியை யடைந்து சகல தைத்திரியர்களையும் விளித்து அசுரர்களே! நீங்கள் யாவரும் எனது கட்டளைக்கு அடங்கியிருத்தல் வேண்டும். அவ்வாறில்லாதவர்களைச் சங்கரித்துவிடுவேன். கட்டளைக் கடங்கினவர்களைக் காப்பாற்றுவேன். சுவர்க்க லோகமும், மத்திய லோகமு மெங்களால் ஜெயிக்கப்பட்டன. திரிலோகங்களையுந் தன்வசமாக்கி இரணியகசிபு மகாராஜன் ஏகச்சக்கிராதிபதியாய் விஷ்ணு துவேஷத்துடனரசு புரிந்து, எவ்விடத்திலும் யாக காரியங்கள் செய்யப்படாது யென்று பலருமறிய பறையறைவித்து அரசு புரிந்துவந்தான். போர் புரிய வேண்டியவர்கள் போர் புரிய வரலாம் சரணகதி யென வந்தவர்களை யாதரிக்கக் கடவேன் எனக்கூறி

தனக்கு எங்கும் எதிரின்றி சுவர்க்க, மத்திய, பாதாளம் முதலிய திரிலோகங்களிலும் அரசு செலுத்தி வந்தனன். சில காலத்துக்குப் பிறகு விஷ்ணு துவேஷியாகிய இரணியகசிபனுக்கு விஷ்ணு பக்தியுடைய ஜீவனாகிய பிரகலாத னென்னும் புத்திரன் ஜனித்தான். அச்சிறுவன் பிள்ளைத் தன்மையால் வாய்விட் டமுகையிலேயும் விஷ்ணுவின் திருநாமங்களைக் கூறுமியல்புடையவனேயன்றி வேறொரு வழக்கமுடையவனல்லன். இச்சிறுவன் ஐந்து வயதடையவே பிதாவாகிய இரணியகசிபன் சகல வாத்திய கோஷ்டத்துடன் அசுரச் சேனைகள் புடைசூழ்ந்துவர நிருத்த நாட்டிய முதலிய வைபவங்களோடு வித்தியாப்பியாசஞ் செய்விக்கக்கருதி பாடசாலைக்குக் கொண்டு போய்விட்டு வித்தியாப்பியாசஞ் செய்விக்கும்படி கட்டளையிட, அவ்வசுர உபாத்தியாயர் வழக்கப்படி சிறுவனைப்பார்த்து முதலில் "ஹிரணியாய நம" எனச் சொல்லும்படிச்சொல்ல, பிரகலாதன் "ஓம் நமோநாராயண" எனக்கூற உபாத்தியாயன், தம்பி! அவ்விதஞ் சொல்லாதே, சர்வ லோகங்களுக்கும் மகா பிரபுவாகிய உன் தந்தையின் பெயரையே முதலில் தோத்திரஞ் செய்ய வேண்டும் என, பிரகலாதன் மீண்டுமப்படியே கூற உபாத்தியாயன் இரணியகசிபனை நோக்கி பிரபுவே! இது முதல்நா ளாதலின் இது இதுவரையிலிருக்கட்டும் நாளைபதினம் கற்பிக்கிறேன். சிறுவனுஞ் சரியாகச் சொல்லுவான் எனக்கூறினர். அதற்குப் பிரகலாதன் இன்றல்ல நாளையல்ல என்றைக்குமே நான் விஷ்ணுநாமத்தை யன்றி வேறொன்றினைச் சொல்லவேமாட்டேன் எனக்கூறிய பிரகலாதனை வீட்டுக்குக் கொண்டுபோயினர். சில தினங்கள் சென்றதன் பின்னர் தந்தையாகிய இரணியகசிபன் ஓர்நாள் தனது புத்திர ரத்தினமாகிய பிரகலாதனை யழைத்து மடியின்மேலிருத்தி குழந்தாய்! இதுகாறும் நீ பள்ளியில் யாது வாசித்தனை? அதனைக்கூறுகவென பிரகலாதன் நான் "ஓம் நமோநாராயணய" என்பதை வாசித்தேன் என்றான். உடனே பிதா சினங்கொண்டு உபாத்தியாயரை வருவித்து விசாரிக்க, உபாத்தியாயர் ஐயா! தங்கள் புத்திரனால் என் கல்விச் சாலைச்சிறார்க ளெல்லாம் கொடியராயினர். இஃதென்னாலாகத் தக்கதல்ல. இவன் எனக்கு அடங்கான் என, இரணியகசிபன் தன் இல்லக்கிழத்தியாகிய லீலாவதியைப் பார்த்து பெண்ணே, உன் பிள்ளை படித்ததைக் கேட்டுக்கொள். அதற்கேற்ப அவனை தண்டனை செய்யென, லீலாவதி தன் புத்திரனை அழைத்து அப்பா இனிஹரிநாமத்தைச் சொல்லாதே. உன் தந்தை திரிலோகங்களுக்கும் பிரபுவாயிருக்கின்றார். அசுரர்கள் எவ்வளவு கௌரவ மடைந்துள்ளார். உன் சம்பத்து எப்படிப்பட்டது யோசித்துப்பார். இதனை என் அலக்ஷியஞ்செய்து ஹரிநாமத்தை விரும்புகிறாய். உனது சிறிய தந்தையாகிய இரணியாக்ஷனைத் தான் தன் சயரூபத்துடன் வந்து சம்ஹாரஞ்செய்ய பயந்து வராகவுருவெடுத்து சங்கரித்தான். ஆகையினா

லத்துன்மார்க்கனது நாமத்தைப் பகாற்க எனக்கூறியதைக் கேட்ட பிரகலாதன், தாயே நீ என்ன சொன்னபோதிலும் பயன்படாது. நான் விஷ்ணுவின் திருநாமத்தை கினவிலும் மறக்கமாட்டேன். இந்த இராக்ஷஸ நீச்சனன இரணியகசிபன் வலிமை எவ்வளவு? உலக ரக்ஷகராகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் வலிமை எவ்வளவு? நீங்கள் யார் என்னவிதஞ் சொன்னபோதிலும் இன்னு மெந்தவித மான தண்டனைச் செய்த போதிலும் நான் ஹரிநாமத்தையன்றி வேறு நாமத்தையுந் துதியேன். கேளேன். வணங்கேன். பூஜியேன். நான் எனது அவயவங்கள் யாவற்றையு மவனுக்கே யர்ப்பணஞ் செய்திருக்கிறேன். உங்களால் யாது செய்யக்கூடுமோ அதைச் செய்யுங்கள் எனக்கூறக்கேட்ட தாயாகிய லீலாவதி பெருந்துக்கத் துடன் தனது நாயகனுகிய இரணியகசிபனிடஞ் சென்று பிரக லாதனை விடுத்து நாயக! "கெடுபுத்தி கண்ணுக்குத் தோன்று" தெனும் பழமொழிக் கிணங்க யான் எந்தவிதமான இன்சொற் கூறியும் பயனற்றனவாயின. இனி தங்களுத்தேசம்போற் செய்து அவனைத் திருப்புகவெனக்கூறிச் சென்றனள். அரசன் கடுங்கோப மடைந்து மந்திரிகளைப் பார்த்து மந்திரிகளே! நமது அசுர குலத் துக்கு ஒரு நெருப்பு உற்பத்தியானது போல் எனக்கு உற்பத்தியாகிய தென்று புலப்படுகின்றது. ஆகையாலிப்பேர்ப்பட்ட புத்திரனை நாம் சங்கரிப்பதே உத்தமத்திலுத்தமமாகும். தனது சிறிய தந்தையாகிய இரணியாக்ஷனைக் கொன்ற அந்த விஷ்ணு மூர்த்தியை நேசிக்கின்று னல்லவா? தனது சகோதரனும் இரணியாக்கனின் புதல்வனுமாகிய அந்தகாசுரனுக்குப் பகைமைத்தன மிருக்கும்போது இவனுக்கில் லாதுபோயின காரண மென்னவோ தெரியவில்லை. ஆதலினுலிவனை நெருப்பிலிட்டாவது, ஆயுதங்களாற்றுண்டு செய்தாவது, விஷமூட்டி யாவது, ஜலத்தில் மூழ்கச்செய்தாவது கொன்றுவிடும்படியான பிரயத்தன மெதுவோ அதைச்செய்யுங்கள். "கோடாரிக்காம்பே குலத்துக்கின "மாக விளங்குகிறது. இவனை உயிருடன் வைத்திருக் கக்கூடாது. இவன் விஷ்ணுவை விட்டுவிடுகிறுனே அல்லது தன் னுயிரை விட்டு விடுகிறுனே பார்ப்போம் என ஆக்ஞாபித்து, அவர் கள் வசம் ஒப்புவிக்க, அவர்களுமரசனிட்ட கட்டளைப்படியே, தண்ட வாளர்களிட மொப்புவிக்க, தண்டவாளர்கள் பிரகலாதனை நெருப்பி லிட்டும், ஜலத்திலெறிந்தும், மலைகளினுச்சியிலிருந்து உருட்டியும், விஷமூட்டியும், ஆயுதங்களால் தண்டித்தும் பயன்படாமையினுல் மனஞ்சாம்பி, இரணியகசிபினிடம் அழைத்து வந்து விடுத்து மகா பிரபு! யாங்கள் தங்களுத்திரவுபடி எத்தன்மையான கொடுஞ்செய் கைகள் செய்தும் பயனற்றவை யாயின தென்று மனந்தளர் வுற்றீண் டமர்ந்தோம். இனி தங்களுத்திரவு எப்படியோ அப்படிப்பட்ட வுத்திரவுக் கெதிர்பார்க்கின்றோம் எனப்பகர்ந்தனர். மீண்டும் தந்தை யாகிய இரணியகசிபு ஏதேதோ இன் சொற்புகன்றும் பலிதமாகாமை யால், எல்லை கடந்த சினங்கொண்டு வெளியிற் காட்டாதவனுய் தன்

சமீபத்திலுட்காரவைத்து, மகனே நான் சொல்லும் வார்த்தையைக் கேள், உன் பிடிவாதத்தை விட்டுவிடு, 'தந்தைசொல் மிக்க மந்திர மில்லை' யென்பதைக் கைப்பிடி. ஹரியை சேவிக்கும்படியான பலனை நீ யென்னாலடையப் போகின்றாய். உனக்கு ஹரி நானேயன்றி வேறு ஹரி வேண்டுமா. எப்படி ஹரிக்கு தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், ரிஷிகள் முதலானவர்கள் வசப்பட்டிருக்கின் றார்களோ, அப்படியே எனக்கும் வசப்பட்டிருக்கின்றார்கள். சகல உலகங்களுமெனது ஆதீனத்திலிருக்கின்றன. நிக்ரகாநுக்ரக சாமர்த்திய முடைய என்னைக்காட்டிலும் வேறு சிறந்த ஹரியாவனிருக்கின்றான். என்னைவிட்டுவிட்டு நீ சொல்லுகிற ஹரி எங்கே யிருக்கின்றான். நீ காட்டுவாயா? நீ அறியாமையினு லென்னைச் சேவிக்காம லிருக்கின் றாய் என்றனன். பிரகலாதன் ஓ தைத்ரியா! இரணியகசிபா! நானே விஷ்ணு என்னைக் காட்டிலும் வேறே விஷ்ணு இல்லை என்று கூறுகின்றனையே. ஸ்ரீ விஷ்ணு மூர்த்திக்கும் உனக்கும் அதிக ஏற்றத்தாழ்வுகளுள. இரத்தினத்துக்கும் பருக்கைக்கும், குயிலுக்கும் தவளைக்கும், சந்தனத்துக்கும் சேற்றுக்கும், சாந்த முடையவனுக் கும் கோபமுடையவனுக்கும், சூரியனுக்கும் மின்மினிப்பூச்சிக்கும், வேதத்துக்கும் சாதாரணப்பேச்சுக்கும், பொன்னுக்குமிரும்புக்கும், பசுவுக்கும் பன்றிக்குமுள்ள வித்தியாசத்தைப்போல விஷ்ணுமூர்த் திக்கும் உனக்கும் எவ்வுளவு உயர்வு தாழ்வுகளிருக்கின்றன. அவரோ சாந்த சீலர், நீயோ அகங்காரி, பாபி, காமுகன், தேகாபி மானி, நீச்சன், இறப்பவன், பிறரை தூஷிப்பவன், வீண் சந்தோஷ மடைவதால் நீ மோக்ஷமடைய மாட்டாய். விஷ்ணுவை சந்தோ ஷிப்பித்தால் மோக்ஷமடைவாய். நானே விஷ்ணு வென்று சொல்ல உனக்கு நாணமில்லையா? எவ்வளவு தைரியத்துடன் சொல்லுகிறாய். உனக்கும் அவ்விஷ்ணு மூர்த்திக்குமுள்ள தார தன்மியங்களை இது காறுமெடுத்து விளக்கினேன். அதனை யறிந்துக்கொள். யானையை விட்டு நரியை வாகனமாகக் கொள்ளுவாறு முண்டோ? இல்லை. ஆதலின் நான் விஷ்ணுவைச் சேவிப்பேன். முக்காலுஞ் சேவிப்பேன். உனக்கு ஏதாவது செய்ய சக்தியிருந்தால் விரைவிற் செய்யலாமென மிகுந்த தைரியத்துடன் கூறினன். இரணியகசிபன் மகனை நோக்கி சரி நீ சேவிக்கவேண்டு மென்கிற அவ்விஷ்ணு எங்கிருக்கின்றான்? அவனைக்காட்டுகவென கோபாவேசத்துடன் திரிலோகங்களும் திடுக் கிட உரத்த தொனியுடன் அதட்டிக்கூறினன். அதற்குப் பிரகலாதன் உலகத்திற் காணப்படும் சமுத்திரங்கள், பர்வதங்கள், விருக்ஷங்கள், மேகங்கள், நதிகள், சேதனுசிரவியப் பொருள்கள், சூரியன், சந்திரன், நீ, நான் முதலிய ஸ்தூல சூக்குமப் பிரபஞ்சமுழுவதிலும் நிறைந் திருப்பவனே நாராயணன். அவன் எவ்விடத்திலும் எக்காலத்திலும் விளங்கியிருப்பன். அவன் இல்லாத இடமே கிடையாது என்று மகன் கூறியதைக்கேட்ட இரணியகசிபன், அடா பிரகலாதா! அங்

ஹரி யென்பன் எவ்விடத்து மிருப்பதாக நீ கூறுகின்றதினல், அவன் இத்தூணிலிருக்கின்ருனே? சொல் என, பிரகலாதன் சர்வ வியாபியாகிய விஷ்ணு இத்தூணிலு மிருக்கின்ருன் தடையில்லை எனத், தன்னினுமிக்க கடவுளில்லை யென்று இனிவருவதறியாது மிகச் செருக்குற்ற இரணியகசிபன் அப்படி இத்தூணில் ஹரி இருப்பாருகில் நான் அவனைப் பூஜிக்கின்றேன் பார், என்றுகூறி கோபத்தாற் கண்கள் சிவந்து பற்களைக்கடித்து மீசைதுடிக்க வாளைக்கையிற் பிடித்துத் தான் உட்கார்ந்திருக்கும் பீடத்திலிருந்து விரைவிலெழுந்து வாளாலத்தூணை வெட்டினன். அப்படித்தூணை வெட்டியபொழுது மலையின்பேரிலிடி விழுந்தாற்போல் சப்த முண்டாயிற்று. அப்போது விஷ்ணுமூர்த்தியானவர் சந்தியாகாலத்தில் அத்தூணிலிருந்து பாதி சரீரம் சிங்கவடிவமாகவும், பாதி மானுட வடிவமாகவுமுள்ள நரசிங்கவடிவத்துடன் பிரளய காலமேகம் போன்று உக்கிரமான கோபவுருவத்துடன் கர்ச்சித்துக்கொண்டு பிடரிமயிர்கள் ஆகாயத்திலுள்ள மேகங்களை யுடைக்கவும், சிங்கநாதம் திசைகளைச் செவிடுபடுத்தவும், முகத்திலுற்பவிக்கு மக்னிச் சுவாலையால் அசுரர்கள் எறிந்துபோகவும், ஹூங்காரங்களால் அசுரமாதர் கற்பத்திலுள்ள பிண்டங்களெல்லாம் விழுந்துபோகவும், கூர்மையான வளைந்த நகங்களோடு கூடிய நரசிங்க மூர்த்தி தோன்றினர். இவரைப்பார்த்த அசுரர்கள் பலர் பயந்து மடிந்தார்கள். நரசிங்கத்தின் மூக்கிலிருந்து வந்த காற்றின் வேகத்தினல் பலர் நாசமடைந்தார்கள். அசுர சைன்னியங்கள் க்ஷணத்திலழிந்ததைக்கண்ட இரணியகசிபன் சர்வ ஆயுதங்களையுந்தாங்கி,தானே ஒரு முகூர்த்தகாலம்வரை போர்புரியும் போது, உலகத்துக்கு கஷ்டமுண்டுபண்ணுமிவனை சங்கரிப்பதற்கு இதுவே சமயமென்று நரசிங்க மூர்த்தி திருவுளங்கொண்டு அத்தூணின் துவாரபீடத்தில் தன் தொடையில் இரணியகசிபனை இறுத்தி சாயங்கால வேளையில் தமது திருவிரல்களிலுள்ள நகங்களாலவன் மார்பைப் பிளந்து பெருங் கர்ச்சனையுடன், அவன் குடலைப்பரித்து தமது கண்டத்தில் மாலையாகத்தரித்து நின்ற அக்கணமே உயிரிழந்தான். உடனே பிரகலாதனுக்கு முடிசூட்டினர். இதைப்பார்த்திருந்த தேவர்கள் யாவர்களும் சந்தோஷமடைந்து புஷ்பமாரி பொழிந்து ஜய ஜய வென்று நரசிங்க மூர்த்தியைத்துதித்து புகழ்ந்தனர். பிரகலாதனும் விஷ்ணு மூர்த்தியின் தரிசனங் கிடைக்கப் பெற்றதற்கும், துஷ்டனை பிதா இறந்தொழிந்ததற்கும் சந்தோஷ மடைந்தனன். நரசிங்கமூர்த்தியின் கோபந் தணியாமலிருப்பதைப் பார்த்த தேவர்கள் பயந்து திருக்கைலையங்கிரியை யடைந்து சிவபெருமான் சந்நிதியைச் சேர்ந்து நமஸ்கரித்து சுவாமி! எங்களுக்கு அடிக்கடி வருந்துன்பங்களை நீக்கி இரக்ஷிப்பவர் தேவரீரொருவரே. இப்போது நரசிங்க மூர்த்தியின் உக்கிரமான ஜுவாலை எங்களைத் துன்பப்படுத்துகின்றது. அதனை யடக்க தேவரீரே சமர்த்தராதலின் அதனை சாந்திசெய்து எங்களைக்

காப்பாற்ற வேண்டுமெனப் பலவாறு துதித்துக் கொண்டிருந்தனர். சிவபெருமான் தேவர்களைக் காப்பாற்று நிமித்தம் சரபத் திருவுருவம் வகித்து நரசிங்கமூர்த்தி யிருக்குமிடத்துக்கு வந்து நரசிங்கமே! நீ இரணியகசிபனையும் அசுரர்களையுஞ் சங்கரித்து உலகத்துக்குசுகத்தை யுண்டாக்கினையல்லவா? எனக்கூறிய தக்ஷணமே ஜய விஜய வென்று சொல்லிக்கொண்டு மறைந்தனர்.

இருக்கு வேதம்.

"॥அஹம் மருணுஸரபாய ருஷிபக்தவோ" எனவும்,

தைத்திரியோப நிஷதம்.

"॥ஹரிம் ஹரந்த மநுயந்தி தேவா
॥விஸ்வஸ் யேஸாநம் வ்ருஷபம் மதிநாம்॥" எனவும்,

காசி காண்டம்.

புரா ஹிரண்ய கசிபும் தைத்ய ராஜம் மஹாபலம்।
ஹத்வா தத்ருதி ராபாநப் ரமத்தம் யாசிதஃ ஸுரைஃ।
ருத்ரஃ ஸரபரூபேண நரஸிம்ஹ மபீடயத்॥ எனவுங் கூறுகின்றன.

அந்தகாசுரன் பிரமனை நோக்கித் தவஞ்செய்தல்.

காஞ்சிபுராணம்.

இரணி யாக்க னளித்திடு மந்தக னென்பவன்
மரபி னெந்தையை யாயிடை யேத்திவரம் பெருஉ
முரனை யட்டபிரான் முதல்விண் ணவர் யாரையு
முரனில் வென்று புறக்கொடை கண்டலை காண்டனன்.

முனிவர்களே! கேளுங்கள். இரணியாக்ஷனிறந்ததும் அந்தகாசுரன் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்யும்போது, இரணியகசிபனின் புத்திரனாகிய பிரகலாதன் தனது சகோதரன் புடைசூழ, அரசு செய்திருக்கும்போது ஓர் நாள் வேடிக்கையாக, தனது சகோதரனாகிய அந்தகாசுரனைப் பார்த்து ஓ, அந்தகா, இரணியாக்ஷ னென்னு முன் தந்தையாகிய என் சிறிய தந்தை அஞ்ஞானத்தால் பலகாலம் மேரு மலையின் குகையில் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, அவரது கருணையினால், விரூபமும், கோரமும் குருடுமாயிருக்கு முன்னைப் புத்திரனாக வரம்பெற்றான். நீ உன் தந்தையி னிராஜ்ஜியத்தைப் பரிபாலனஞ் செய்யத் தக்கவனல்லன். வேறு யாருக்காகிலும் புத்திரனாகப் பிறவாமற் போயினையே எனக்கூறி இராஜ்ஜியத்தை விட்டு துரத்த அந்தகன் துக்காக்கிரந்தனாய் வருந்தி, தனது வாய்மொழியாலவர்கட்கேற்ற சமாதானஞ் சொல்லிவிட்டு, வனத்தையடைந்து பிரமதேவனை நோக்கி மனம், வாக்கு காயங்களை யொடுக்கி அநேக

வருஷங்களாக ஆகாரமின்றி ஒற்றைக்காலினின்று கையை உயரத் தூக்கிக் கொண்டு அசுரர்களால் செய்யமுடியாத ஜெப தபங்களைச் செய்தும், பின்னர் ஒரு வருஷகாலம் கூர்மையான அம்புகளால் தன் தேகத்தைச்சிறிது சிறிதாகக்கொய்து தினந்தோறும் யாகத்திலிட்டு உதிரஞ்சொரியும் எலும்பு மாத்திரமிருக்கப் பெற்றவனானன். இவ்வளவு செய்தும் பிரமன் பிரசன்னமாகாமையினல் எஞ்சிநின்ற எலும்புகளையு மோமத்திற்போட வுத்தேசித்திருந்தான்.

பிரமன் அந்தகன் தபசுக்கிரங்கி வரங்கொடுத்தல்.

இதைக்கண்ட தேவர்களும் முனிவர்களும் பிரமனை வணங்கி சுவாமி! இவன் மகாபாபி, அவனுக்கு வரங்கொடுத்தால் பெருந் தீமைகளுண்டாகும்; அப்படி கொடாவிடில் அவன் தன் எலும்புகளையும் நெருப்பிலிட்டு மரிப்பான். அவ்விதம் மரித்தால் நமக்கு நேரிடும் இடுக்கண்கள் ஒழியும் எனத்தடுப்பவுங் கேளாமல் பிரமன் அந்தகாசுரனை அணுகி, அந்தகா! உனக்கு வேண்டிய வரங்களைக்கேட்டுக் கொள் எனக்கூறலும், அந்தகன் அகங்களித்து நமஸ்கரித்து சுவாமி! மகா பலசாலிகளாகிய பிரகலாதனதி யோர்களாகிய தம்பிமார்களா லிராச்சியங் கைக்கொள்ளப்பட்டது. அவைகள் கைகூடவும், அவர்களென் சேவகர்களாகவும், யான் என் கண்களைப்பெறவும், இந்திராதி தேவர்கள் எனக்கு கப்பங்கட்டவும், தேவராக்ஷஸ கந்தர்வ யக்ஷ மானுடர்களாலும், என் தந்தையைக் கொன்ற நாராயணனாலு மின்னும் வேறு வகையாலு மிறவாமலிருக்க வரந்தரல் வேண்டுமெனக் கேட்க, பிரமதேவன் அந்தகா, உனக்கு யாவுங் கைகூடுமாயினு மிறவாமலிருக்க முடியாது. அவ்வாறு இறவாதவர் திரிலோகங்களிலுங் கிடையாது. சாதாரணமாக சத்புருஷர்கள் தீர்க்காயுளை விரும்ப மாட்டார்கள், என தந்திர வார்த்தைகள் கூறிவிட்டுப் போகும்போது மறுபடியும் அந்தகன் பிரமனை வணங்கி சுவாமி, நான் அஸ்திசேஷமாயிருத்தலின் என்னைத் தங்கள் திருக்கரங்களாற் பரிசித்து பூரண தேகமுடையவனக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க பிரமனுமவ்வாறே செய்து தனது சத்திய லோகமடைந்தனன். அந்தகாசுரன் தான் பெற்றுக்கொண்ட வரத்தின் விசேஷத்தால் கண்களையும் பூரண தேகத்தையுஞ், சிறந்த வல்லமையையும் பெற்றுத் தனது நகரத்தை யடைந்தனன். இவனைக்கண்ட பிரகலாதனதியோர் இவன் பிரமதேவனல் வரம் பெற்றுள்ளா னென்றுணர்ந்து எதிர்க்க முடியாமல் அரசாக்ஷி முழுவதையும் ஒப்புவித்துவிட்டு அவனுக்கு அடங்கி யிருந்தனர்.

அந்தகாசுரன் திக்குவிஜயஞ் செய்தல்.

அந்தகாசுரன் சகல லோகங்களையுஞ், ஜெயிக்கக் கருதி தன் பரிசனங்களுடன் சுவர்க்க லோகத்தை யடைந்து தேவர்களையும், அவர்கள் சைனியங்களையும் வென்று இந்திரனை கப்பங்கட்டும்படி

செய்து, நாகர், அசுரர், கந்தர்வர், யக்ஷர், மானுடர் முதலியவர்களை யும், சிங்க முதலிய துஷ்ட ஜெந்துக்களையும், பூரணமாக ஜெயித்து, அவர்களி லதிரூப சௌந்தர்யமான பால்ய வயதுள்ள மங்கையர்கள் நாற்றுவரை யபகரித்து, ரஸாதலத்து ஸ்ரீகளை பூலோகத்திற்குக் கொண்டுவந்து சுவாதீனப் படுத்தி ஏகாந்தமான நதிதீரங்களிலும், பல புஷ்பங்களோடு விளங்கும் பர்வதங்களிலும், நந்தவனங்களிலும் விளையாடி கிரீடித்துக் கொண்டிருந்தான். உருசிகரமான பழங்களை யும், மதுவையும் அம்மங்கையர்களுக்கு ஊட்டி, அவர்கள் புசித்து யெஞ்சியதைத்தான் உட்கொண்டும் விமான வாகனங்களிலமர்ந்து மயனல் நிருமிக்கப்பட்ட மலர்மணங்கமழும் திவ்விய மாட மாளிகை யினல், மதனுகம முறைப்படி அவர்களைக்கூடியும், ஆயிரம் வருஷங் கழித்தனன். விநோதார்த்தமாக ஓர் நாள் மந்தரமலையை யடைந்து ஆங்கு மகா பிரகாசத்துடன் சுவர்க்க லோகத்தை யொத்ததுகை யொன்றினைக்கண்டு தன் சைனியத்துடன் மதுபானஞ்செய்து வெறி கொண்டு அங்கே ஆடியும் பாடியும், இது நாம் வசிப்பதற்குத்தக்க தென்று கருதி அங்கிருக்கத் தீர்மானித்து அதிவிநோதமான நகர மொன்று மயனல் நிர்மானஞ் செய்யப்பெற்று நகரப் பிரவேசஞ் செய்தனன்.

அந்தகாசுரன் மந்திராலோசனை செய்தல்.

இன்னுங் கேளுங்கள் முனிவர்களே !

அந்தகாசுர னிவ்வாறு சிறிது காலம் ஆனந்தத்துடன் கழித்த பின்னர், அவன் மந்திரிகளாகிய துர்போதனன், விகஸன், அஸ்தி யென்னு மூவரும் அதிசுந்தரமான வோர் மங்கையைக்கண்டு, விநாடி காலத்திற்குள் விரைந்து அந்தகனை யணைந்து ஐய ! யாங்கள் விநோத மாக விளையாடிக் கொண்டிருக்கையில் ஓர் குகையும், அக்குகையில் தியான யோகத்திலமர்ந்து கண்களை மூடிக்கொண்டிருக்கும் போழ குடன் அர்த்த சந்திரனலலங்கரிக்கப்பட்ட தலைமயிரும், புலித்தோ லுடையும்,கபாலமாலிகாபரணமும், ஜடையும், கையில் சூலாயுதமும், தோளிலம்புறாத் தோணியும், வீரம் பொருந்திய ஜெபமாலையும், கட்கமும், யோகதண்டமுமுடைய ஒரு முனிவரைக் கண்டோம். அவன் சமீபத்தில் ரிஷபமுகமும், அதிகோரமும், திறந்தவாயும், சர்பாபரணமும், தீக்ஷண்யமான காந்தியும் வெண்ணிறமுக முடைய வொருவன் அம்முனிவனுக்குப் பணிவிடை செய்கின்றான். தியான யோகத்திலிருக்கு மம்முனிவனுக்கருகில், நல்ல திவ்ய ரூபமும், யௌவன பருவமும் மிருதுவான இனியவசனமும், பவளம், முத்து, இரத்தினங்கள், பொன், மலர், மாலை முதலியவற்று லலங்கரிக்கப்பட்ட திவ்விய தேகமுடைய மாதர்களுட் சிறந்த வோர் மங்கையைக் கண்டோம். அவ்வனிதையைக் கண்டவனே, கண்களைப் பெற்றதனு லுண்டான பலனையடைவன், காணுதகண்கள் பயன் பெறுவாதலின்

அவளைத் தேவ ஸ்ரீ யென்று நாங்கள் நினைத்தோ மென்றனர். இவ்வாறு கூறிய மந்திரிகளின் வார்த்தையைக்கேட்ட அந்தகாசுரன் மன்மத பாணங்களாற்றைக்கப்பட்ட காமாதுரனாகி, மந்திரிகளே, நான் சொல்லும் வார்த்தைகளை முனிவனிடஞ்சென்று சொல்ல வேண்டுமென்று கூறிவிடுப்ப, அவர்களு மவ்வாறே அம்முனிவ யடைந்து கூறலாயினர். ஓ! முனிவரே! தைத்திரிய ராஜனை அந்தகாசுரன் சரித்திரத்தைச் சொல்லுகிறோம்; அதனைக்கேட்டுக் கொண்டு உன்னுடைய சமாசாரத்தைச் சொல்லவேண்டும். அந்தகாசுரனே இரணியாக்ஷனுடைய குமாரன், மகா பராக்கிரமசாலி, அவனை வெல்லுவதற்கு யாராலு முடியாது. நீ யாவன்? இளம் பருவமும் பேரழகுமுடைய இப்பெண் யார்? யோசித்துப் பார்க்கையினுன் மனைவியென்றே நினைக்கின்றோம். அவளது மெல்லிய தேகமோ அதிகோமளமானது. உடல் முழுவதும் பஸ்மதாரணஞ்செய்து என்புமாலையை ஆபரணமாகப் பூண்டனை. ஹே! விரூபி, அம்புறாத்தோணி, வில், அஸ்திரம், டமருகம், சூலம், மழு, தோமரம் முதலியவற்றை எற்றுக்கு யேந்தினை? உன் தேகத்திலோர் நதி பிரவாகிக்கின்றது. சந்திரனுமிளிர்கின்றான். முகத்திற் கோரமான நெருப்பு பிரகாசிக்கின்றது. சர்ப்பங்களுன் மேலுலாவுகின்றன. எருது வாகனத்தை எதிர் நிற்கவைத்துக் கொண்டு அதனை எந்நேரமும் பார்த்துக்கொண்டிருக்கின்றனை, பெரிய தர்மவானைப்போல் தியானத்திலிருக்கின்றனை. உன் உணவுகளெவை? ஒன்றுந்தெரியவில்லை. இப்படிப்பட்ட சாமானியமான உனக்கும் அச்சௌந்தர்யமான மங்கைக்கும் சம்பந்தமானது விருத்தமாக விருக்கின்றது. ஆதலின் எங்கள் பிரபுவான அந்தகாசுரனுக்கு அம்மங்கையை நல்லதனமாகவே கொடுத்துவிடு. அப்படி நீ கொடாவிடிலவன் திரிலோகங்களையுஞ் ஜெயித்தவனாதலின் அவளை பலாத்காரமாகக் கொண்டுபோய் விடுவான். இதிற்றடையில்லை. எங்கள் சொல்லைக்கேட்டு உன்னுடைய அஸ்திர சஸ்திரங்களை விடுத்து இவ்வணங்கினை அந்தகனுக் களித்துப் பின்னர் தவஞ்செய்க. இவ்விஷயத்தை நீ ஒத்துக்கொள்ளாவிடில் யாங்கள் உன்னுடைய கருத்தை அந்தகாசுரனுக்குத் தெரிவித்தா லுன்னுடலுனக்கு நிலைக்காது என்றுகூறினர்கள். இதனைக்செவியுற்ற முனிவேடம்பூண்ட சிவபெருமான் புன் சிரிப்புடன் அசுரர்களே! சிவபெருமானிருக்கும் பக்ஷத்திலுன்னலுமென்னலு மென்ன நடக்கும். எனக்கும் தாய் தந்தையரிலர். யானுமவர்களை யறியேன். இக்குகையிலிருந்து ஏதோ வொன்றை ஸ்மரித்துக்கொண் டிருக்கின்றேன். இதுவே என் பாசுபதவிரதம். இதுவிலக்கமுடியாதது. என் தவத்துக்குச் சித்திபூதமா யிருக்குமிச் சந்திரவதியே என் மனைவி. உங்களுக்குச் சாத்தியமானலிவளை அழைத்துப் போகலாமென்று கெம்பீரமாகச் சொல்ல; அதனைக் கேட்ட வசுரர்கள் அம்முனிவனைப் பணிந்து, திரிலோக நாதனை

விளங்கும், தங்களரசனுன அந்தகாசுரனை யடைந்து, மதுபானத்தால் தன்னைமறந்து புரளுமவனை நமஸ்கரித்துச் சொல்லலாயினர். அரசனே! அம்முனிவனும் அங்கிருப்பவர்களும் அவ்வந்தகாசுரன் எவ்வளவினன்? அவன் வலிமை எத்தகையது? சே! சே! என்று புன் சிரிப்புடன் கேலியாகக் கூறினரென்று கூறிய மந்திரிகள் பேச்சைக்கேட்டு, குரூரனும் மகாபாபியுமான அந்தகாசுரன் கோபச் சிரிப்புடன் ஆ ஆ அவ்விதமாகவா கூறினன் அந்தமுனிவன். அசுரனென்றாற் சாமான்யனு, என் பெயரைக்கேட்ட இயமனுமஞ்சுவான். இமாசலம் போன்ற புஜங்களையுடைய எனக்குச் சமானமான வீரனுமிருக்கின்றானே? என் பாணங்களுக்குச் சமானமான பாணங்களுமிருக்கின்றனவோ? இந்திரன் இயமன் முதலியோர் கதறுமாறு போர் புரியவல்லேன். கிழப்பருவத்தாலுடல் வளைந்த அவ்விரகனுகிய சந்நியாசி யெங்கே? மகாபலசாலியாகிய என் வீரமெங்கே? மந்தபாக்கியனுன அம்முனிவனுக்கு மகா ரூபவதியான அந்தப்பெண் தகுதியாயென்றுகூற, மந்திரிகள் அரசனே! அம்முனிவன் கூறிய வார்த்தைகளை யெல்லாஞ் சொல்லுகிறோம். உம்முடைய பல மெவ்வளவு? தான் பெருந்தவஞ்செய்து சிறந்த பலனை யடைந்திருக்கின்றானும், கூடுமானுலெதிர்த்து உங்கள் வலிமையைக் காட்டலாம். தன்னிடத்தில் வஜ்ஜிராயுதம் போன்ற பாணங்களிருக் கின்றனவாம். ஆதலினுல் நீங்கள் அம்முனிவனுடன் அஸ்திர யுத்தஞ் செய்வது யுக்தமல்ல. அவன் மகா கர்வமுடையவன். பலவித யோசனையாற் பயனென்ன வெனக்கூறவும், அந்தகன் மானத்தால் ரோஷமுற்று கோபங்கொண்டு கட்கத்தைக் கையிலேந்தி யெனக்கு பெருத்த வரமிருக்கையிற் பயமேது? யென்று பெருந்தொனிசெய்து, மதுபானம் விசேடமாகச் செய்ததினுலும் கோபத்தினுலும் கண்கள் சிவந்து மதயானையைப்போல நடந்து அக்குகையை யடைந்து திரிநேத்திர தாரராகிய சிவபெருமானது சாரபூதமாகிய உமாபிராட்டியாரையும் சிவபெருமானையும் நந்தி தேவரையும் ஒரேபிடியாகப் பிடித்துக்கொள்ள எண்ணங்கொண்டு பிரவேசிக்கும்போது உமையவள் ரூபலாவண்ணியத்தைக்கண்டு மிகுதியான காமாதுரனுய் மதிகெட்டு தீயில் விழும் புழுவைப்போல் மதிமயங்கினன்.

அந்தகாசுரனுக்கும் நந்தி தேவருக்கும் யுத்தம்.

அந்தகனவ்வாறு துணிகையில் நந்திதேவர், பாறைகள், மரங்கள், வஜ்ஜிரம், ஜலம், அக்கினி, நாகாஸ்திரம் முதலிய பயங்கரமான பல பொருள்களால் பாதித்து அடா! நீ யாவன்? ஏன் இங்கு வந்தனை? யென வினவும் வீரவாக்கியத்தைக் கேட்ட அந்தகன், தன் கருத்தைக்கூறி யிறுதியில் ஒரு முகூர்த்தகாலம் புத்திக்கெடாத வாச்சர்யமான யுத்தஞ்செய்து, பராஜிதனுகி அவ்விடம் விட்டு பசி தாகங்களால் வருந்தி மது வெறி தெளிந்து புறங்காட்டி யோடி

னன். கத்தி முதலிய பல படைகளால் சின்ன பின்னஞ் செய்யப்பட்ட தேகத்துட ணேடிப்போன பின்பு விகஸன் முதலிய மந்திரிகளும், வீரர்களும் நந்தி தேவனேடு அஸ்திர சஸ்திரங்களால் பயங்கரமான யுத்தஞ்செய்து நான மென்னுமங்குசத்தாற் குத்தி யிழுக்கப்பட்ட புத்தியை யுடையவர்களாய்ப் பிரிந்தனர். பிறகு விரோசனன், பலிபாணன், சஹஸ்ரபாகூரஞ்சன், ஸூரஞ்சன், விருத்திரன் முதலிய வசுரர்கள் பலர் நந்திபகவானேடு அகண்டமான யுத்தஞ்செய்து ஜெயிக்கமுடியாதவர்களா யிறந்தார்கள். இவ்வாறு போர்புரிந்திறந்த அசுரர் தொகையைக்கேட்ட சித்தசாரணர் ஜய ஜய சப்தத்துடன் சிவபெருமானைப் புகழ்ந்தனர். கண்ட பேருண்ட பக்ஷிகளினபிநயமும் இராக்ஷதர் சமூகத்தால் வியாகுலமும் பயங்கரமு மிரத்தத்தால் சேறுபட்ட மாம்ஸ முதலியவற்றின் துர்மணமு மமைந்த போர்க்களத்தில் சர்வகாலனுகிய பிநாகபாணி பார்வதிதேவியுட னெழுந்தருளி, உமாபிராட்டியாரைப் பார்த்து பெண்ணே! யான் எவ்வளவு கடினமான பாசுபத விரதத்தை யாச்சிரயித்தேனே, அந்த விரதத்தின் பலன் இதுவே யென்று நன்மொழிகளாற்கூறி, நான் இன்னுஞ் சிறிதுகால மிப்பாசுபத விரதத்தை யாச்சிரயிக்க வெண்ணினேன். ஆதலின் நான் வேறு யிடத்தை அடைகிறேன். நீ இவ்விடத்திலேயே இரு. உன் குமாரனுன நந்தி உன்னைக்காத்திருப்பான். யானிவ்விரதத்தை முடித்து வருமளவுந் துக்கமின்றி சந்தோஷத்துடன் நிர்ப்பயமாயிருப்பா யென்று கூறிப் புறப்பட்டு, வேறொரு வனத்தை யடைந்து தம்மைத் தாமே பூஜித்துக்கொண்டிருந்தார். பார்வதி தேவியும் தனித்திருந்து தன் புத்திரனுன வீரனல் பாதுகாக்கப்பட்டு, தன் கணவன் வருகையைக் கருதி சிவத்தியானத்துட னிருந்தனர்.

மகா மந்தனுன அந்தகன் அநேக சைனியங்களுடன் அக்குகையை மீண்டு மடைந்து நந்திதேவரோடு இரவும் பகலும் பசிதாக நித்திரைகளின்றி சில நாள் கடுங்கோபத்துடன் கட்கம், குந்தம், பிண்டி, பாலம், கதை, புசுண்டி, அஸ்திரங்கள், அர்த்தசந்திர பாணங்கள், நாராசங்கள், தீக்ஷண்யமான சூலம், மழு, தோமரம், பர்வதம், விருக்ஷம், முதலிய பல படைகளாலதி விநோதமான யுத்தஞ் செய்தனர். அவ்வாறு ஒருவர்க்கொருவர் பிரயோகித்த பாணங்கள் அக்கினியைக் குபீர் குபீரென்று கக்கிக் கொண்டு, உலகம் நடுக்குறும்படி செய்யும் யுத்தத்தைக் கண்ட தேவர்கள் பயந்து சிவபெருமானைத் தியானித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி யிருக்குஞ் சமயத்தில் நந்திதேவர் மிகுதியு மடிப்பட்டு அக்குகை சமீபத்திலேயே தைத்தியர்கள் சந்தோஷிக்க க்ஷணநேரம் தன்னை மறந்து மூர்ச்சையாயினர். அசுரர்கள் சந்தோஷித்துக் குகையின் கதவைத்திறக்க யெத்தனித்துஞ் சாத்தியப் படாமலிருந்த

னர். இதனை யெல்லா முணர்ந்த பார்வதிதேவி அச்சமுற்றுத் தோழியருடன்கூடி பிரம விஷ்ணுக்களேயும், வீரபத்திரரையும், அவரது சைனியங்களேயும் அஷ்டதிக்குப் பாலர்களேயும் நினைத்தனர்.

அந்தகனுக்கும், பார்வதி தேவிக்கும் யுத்தம்.

இவ்வாறு நினைத்த மாத்திரத்திலே இந்திரன், பிரமன், விஷ்ணு, முனிவர்கள், சித்தர்கள் யாவரு மந்தப்புரத்தி லிருப்பது மகா ராணி யாதலின் அம்மகா தேவியைத் தரிசிக்கப் பெண்வடிவோடு தனது சைனியங்களுடன் குகைக்குட் சென்று தமது திவ்விய ரூபங்களேக் காண்பித்தனர். பின்னர் பார்வதி தேவியாரவர்களே சேனைகளாகக் கொண்டு போர்புரியத் திருவுளங் கொண்டனர். அப்போது அவரவர் சங்கங்களேப் பூரித்து யுத்த பேரிகை முழக்கினர்கள். அவ்வோசையைக் கேட்ட நந்தி தேவர் மூர்ச்சை தெளிந்தெழுந்து இரதாரூடராய் அநேக வகையான ஆயுதங்களால் அசுரர்களே யடித்துக் கொண்டிருந்தார். இதற்குள் பிரமனிடத்திற் றோன்றிய பிராமி மகா கோரமான உக்கிர ஸ்வரூபத்துடன் குகை முகத்தினின்றும் புறம்போந்தாள். விஷ்ணுவிடத்திற் றோன்றிய நாராயணி கதை, சங்கு, சக்கரம், வில், பழுக்கக்காச்சின கத்தி முதலியவற்றை யேந்தி இரத்த நிறத்துடன் வந்தனள். இந்திரனிடந் தோன்றிய சக்தி வச்சிராயுதத்தை ஆயிரங்கணங்களோடு அசுரர்கள் அஞ்சத் தோன்றினள். அக்னியிடந் தோன்றிய சக்தி தண்டந் தாங்கிய கரத்தைத் தூக்கிக் கொண்டுவந்தனள். நிருதி சம்மந்தமான நைஸாசரி மகா கோபத்துடன் கட்கமேந்தி வந்தனள். இயம சம்மந்தமான சக்தி காலதண்டந் தாங்கி வந்தனள். வருண சம்மந்தமான சக்தி வருணாஸ்திரந்தரித்தும், வாயு சம்மந்தமான சக்தி அங்குஸ பாஸந்தரித்தும், குபேர சம்மந்தமான சக்தி யக்ஷக்ஷேஸ்வரி ஆழித்தியை நிகர்த்த கதையைக் கரத்திலேந்தியும், ஈசான சம்மந்தமான சக்தி தீக்ஷண்யமான முகமும், கோரரூபமும், பாம்பும் பயப்படத்தக்க நகங்களே ஆயுதமாகக்கொண்டும், மற்றும் பல தேவர்களாற் றோன்றிய எண்ணிறந்த சக்திகளு மொன்று சேர்ந்து வந்து யுத்தபூமியையும், அபாரமான வசுரச்சேனை களேயுங்கண்டு கோபாவேசங்கொண்டு நந்தி தேவரை சேனுதிபதியாகப் பெற்று, எக்காலத்திலும் நடந்திராததும், கண்டோரதிசயிக்கத்தக்கதும், இயமனு மஞ்சத்தக்கதுமான பெரிய யுத்தத்தைப் பார்வதி தேவியாகிய உமா தேவியார் செய்தனர். இதைப்பார்த்த தேவர்கள் மிகுந்த அச்சத்தை படைந்து பிரமதேவனுடன் தபோவனஞ் சென்று பாசுபதவிரதம் நடாற்றுஞ் சிவபெருமானிடம் யாவுங்கூறிக் குறையிறந்தார்கள்.

பிரம யாகத்தில் பிருதிவீச் சுர னுற்பத்தி.

பிருதிவீச்சுரன். பிரம்மா.

நமஸ்தே பகவ ருத்ராயஃ தேவரக்ஷகப் பரமேஸ்வர
ப்ரதி பிம்போஸ்து நமோ பகவதே!! எனப்பௌடீகமும்.

" இந்த வண்ணம் தேவரிறைஞ்சிட
அந்தர்கால வயிரவ ரயனது
வன்னியிற் பிரதி பிம்பத்தி னேருரு
தொந்தமாய்த் தோற்றுவித் தானரோ." எனப்பிரமாண்டமும்,

† வைரவ மூர்த்தங்கள் பலவகையுள. அவற்றுள் சந்தர்ப்பங்களுக்குகந்தவாறு எடுத்தது 16 உருவங்களாகும் அவை 1. காலவைரவர். 2. அசிதாங்க வைரவர். 3. குரோத வைரவர். 4. சண்ட வைரவர். 5. உன்மத்த வைரவர். 6. கபால வைரவர். 7. விபூஷண வைரவர். 8 மார்த்தாண்ட வைரவர். 9. சுந்தர வைரவர். 10. சங்காரகால வைரவர் 11. சுவேச்சா வைரவர். 12. உலோக வைரவர். 13. உக்கிர வைரவர். 14. பிரச்சைய வைரவர். 15. நின்மாண வைரவர். 16. பூஷண வைரவர்.

தருமனெனுஞ் சுவாயம்பு மனுக்காலத்தில்
சகத்திலந்த காசூரனுற்றுன்ப முற்ற
இருடிகள்வா னவரயன் பாலபயங் கூற
வீஸ்வரன் பாலயன் முதலோர் சென்றியம்பப்
பிரம நீ கங்கையின் மகமொன்றியற்றில் யாமும்
* பிரதிபிம்பிப் போமென்ன வயனவ்வாறே
திரமுடனேர்மகம்புரிய வரனவற்றிற்
சிறந்திட்டா னெருமனுவாய்ப் பிறந்திட்டானே

எனத் தேசாதிபதி நாடகமுங் கூறியவாறு,

சிவபெருமான் பிரமதேவனை நோக்கி, நீ கங்கைக்கரையில் யாகமொன் றியற்றினல், யான் அந்த யாகத்தில் பிரதிபிம்பித்து, அவ்வந்தகா சுரனைக் கண்டித்து அடக்குவேன் எனக்கூறியதைக் கேட்ட பிரமன் தீர க்ஷத்திரிய யாகமொன்று கங்கைக்கரையில் விதிப்படி செய்தனர். அந்த யாகாக்கினியினின்று அதி வீர தீர திடகாத்திரத்துடன் விகார முதலிய வில்லாதவனுய், கரத்தில் வில்லுடையவனுய், அம்புறுத் தோணி முதுகிற்றுங்கியவனுய், என்றும் மாறுத திவ்விய மங்கள சோதிமயமாயுள்ள ஓர் மஹா உத்தம புருஷன் தோன்றினன்.

தேசாதிபதி நாடகம் சந்த விருத்தம்.

வந்த புருடன் அயன் முனின்றெனை யழைத்ததை
வரைந்த ருளுகென்ற பொழுதே
இந்திரர் வயிரவர்கள் சதுரங்கதளமும் படைகள்
யாவுமீந்திக் கண நீ சென்
றந்தகனெனும் நிருதன்னைந் துவிழ வென்றுலகர்
தந்துய ரகற்றிடுகென
அந்தர நடுங்க விவன் வந்தவ்வசுரனே
டடர்ந்தமர் தொடங்கினனரோ.

அவ்விதம் தோன்றிய உத்தம புருடன் பிரமனை வணங்கி, அடி யேனுக்கு யாதுபணி யீரென்றியம்ப, நான்முகனுகிய பிரமதேவன் தேவர்களையும், இருடிகளையும் பார்த்து, ஓ தேவர்களே! இருடிகளே! இதோ இவ்வக்கினியிலுதித்த இம்மகா புருஷன் சகல உலகங்களையு மரசாண்டு ரக்ஷிக்கும் வல்லமையுள்ளவன். இவன் பிருதிவி = மண், பூமி, புவி, ஈச்சுரன் = அதிபதி, தலைவன் துஷ்டர்களை சம்ஹாரஞ் செய்து அன்பர்களை இரக்ஷிப்பவன் பிருதிவீச்சுரனுவான். இனி உங்கள் கவலைகள் நீங்கிய தென்றுணர்க எனக்கூறிப் பின் யாகாக்கினியிலுதித்த மகா உத்தமப் புருஷனைப்பார்த்து பிருதி வீச்சுரனே! இம்மூவுலகங்களை வருத்துகின்ற, இரணியாக்கன்

* தமது உருவத்தை மற்றோரிடத்தில் தோற்றுவித்தல்.

அகராதி:—வைரவர் = தோற்றுவித்தல், காத்தல் அழித்தல் என்னும் மூன்றும் வல்லார். பிம்பம் = அடையாளம்.

காலவைரவர் – காசியிலுள்ள பைரவமூர்த்தி சிவனுர் பிரதிபிம்பம்.

புதல்வனுன அந்தகாசுரனையும், அவனுடைய சைனியங்களையும் ஹதஞ்செய்து தேவர்களையும், இருடிகளையு மிரக்ஷிப்பதற்காகவே உன்னை உற்பவித்தோம் என்றுகூறி வேல், வாள் முதலிய வாயுதங்களையும், விருதுகளையுங் கொடுத்தனுப்பினர். உடனே தேவேந்திரன் மாதலியால் நடத்தப்படும் நவரத்தின கசிதமான இரதத்திலாரோகணிக்கச்செய்து, நால்வகைச் சேனைகளுடன் அந்தகாசுரன் யாங்குளன் என்று புறப்பட்டார்கள். எங்கு பார்த்தாலும் வெற்றிச்சங்கம் பூரித்தன. எக்காளம் இரணபேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கின. இதற்குள் பிருதிவீச்சுரன் குகையினிடஞ் சென்று சிவபெருமானை வணங்கித் தோத்திரஞ் செய்கையில், சிவபெருமான் பிருதிவீச்சுரனைப்பார்த்து குழந்தாய்! நீ நமது ஆக்கினையினுல் பிரமன் செய்த யாகத்தில் உற்பவித்தனை. எமது அம்ஸமே நீ. என்னுல் வளர்க்கப்பட்ட அவ்வந்தகாசுரனை யானே சங்கரிப்பது உசிதமாகாது. ஆனமையின் அந்த யாகத்தில் பிரதி பிம்பித்தோம். இச்சூலாயுதத்தைக் கையில் வைத்துக்கொள். அந்தகாசுரனை உனது அஸ்திரங்களினுற் சங்கரிக்க முடியாவிட்டால், இச்சூலாயுதத்தினுற் சங்கரிக்கலாம். சர்வவெற்றியும் பெருவாயாக என்று ஆசீர்வதித்துகொடுத்தனுப்பினர்.

ஸ்ரீ சிவபெருமான் பிருதிவீச்சுரனுக்கு சூலாயுதங் கொடுத்தல்.

அசுரராஜனுன அந்தகாசுரன் தமது சைனியங்களுடன் மிகுந்த கோபாவேசத்துடன் வில்லை வளைத்து நந்தி யெம்பெருமான்மீதும் மற்றுமுள்ள தேவ சைனியங்கள் மீதும் அஸ்திரங்களை சோனு மாரியாக விடுத்தான். உடனே நந்தியெம்பெருமானும் வில்லை வளைத்து அஸ்திரங்களை ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினுயிரம், இலக்ஷமாகவிடுத்து அகோரமான பெரும் போர்புரிந்தனர். அச்சமயத்தில் சிலர் ஆங்குள்ள நந்தவனங்களை யழித்தனர். சிலர் காய்களையும், கனிகளையும், கிழங்குகளையும் புசித்து திவ்வியமான ஜலத்தைப் பானஞ்செய்து தடாகம் முதலிய வைகளை யலக்கழித்தனர். இவ்

வாறு அசுரச்சேனைகள் ஹதஞ்செய்வதைக் கண்ட பிருதிவீச்சுரன் தமது தேவ சைனியங்களுடன் சமீபித்தனர்.

பிருதிவீச்சுரனுக்கும், அந்தகாசுரனுக்கும் யுத்தம்.

பிருதிவீச்சுரன் தமது தேவசைன்னியங்களுடன் வருவதைப் பார்த்த விகஸனென்னும் மந்திரி அந்தகனை யணுகி, அரசே! இந்த யுத்தத்துக்காற்றுது பிரமன் கங்கைக்கரையில் யாகஞ்செய்து, அதனின்றும் ஒரு புருஷனை யுற்பவித்தான். அந்த மகா புருஷனே இந்திராதி தேவர்களுடன் யுத்தத்துக்கு வருகின்றுன். நாம் சும்மா விருத்தல் தக்கதன்று எனக்கூறித் தனது இரதத்தை முன்னல் செலுத்திவந்து பிருதிவீச்சுரன் இரதத்தின் பேரில் பத்து பாணங்களையும், மாதலியாகிய சாரதியின் பேரில் (25) பாணங்களையும், பிருதிவீச்சுரன் பேரில் (50) பாணங்களையும் விடுத்தனன். இதைப்பார்த்த சிவகணத் தலைவராகிய நந்தி யெம்பெருமான் சிவத்தியானஞ் செய்து மூன்று அஸ்திரங்களை விடுத்து (85) பாணங்களையு மறுத்துத்தள்ளி, கூர்மையான பத்து பாணங்களை விகஸன் பேரில் விடுத்தார். இதைப் பார்த்த விகஸன் பயந்து அப்பத்து பாணங்களுக்கும் எதிர் பாணங்களை விடுத்து தான் இனி சும்மா இருத்தல் கூடாதெனத் தேர்ந்து, பசியுற்றவன் தன் கண்ணெதிர்ப் பட்டதை புசிப்பதைப்போல தேவர் திரள்களையும், பூதகணங்களையும் விழுங்கினுன். இதைப்பார்த்த நந்திதேவர் சிவபெருமானிடஞ்சென்று வணங்கி சுவாமி! என் சேனை முழுவதும் விகஸனுற் கமளீகரிக்கப்பட்டன. அவ்வசுரச் சேனைகளை ஒரு விநாடியில் துவம்ஸம் செய்யவல்ல, சூரிய சந்திரர்கள், இந்திரன், இயமன், வருணன், வாயு முதலிய தேவர்களையும் விழுங்கினுன். எஞ்சி நின்றதுயானும், பிருதிவீச்சுரனுமேயாகும். யாங்கள் தனிமையாக யாது செய்யவல்லோம். அத்தைத்ரிய ராஜனுன அந்தகன் மிகுந்த சந்தோஷத்துடன் விளங்குகின்றுன். அவன் விரைவில் தேவரீரிடத்தும் வருவான். ஆதலின் சர்வேஸ்வர! யாது செய்யத்தக்கதோ அதை விரைவிற்றிருவருள் புரியவேண்டும். அவ்வந்தகனும் சாமான்னியனல்லன். விகஸனும் வெல்லுவதற்கரிய பலசாலி. இவன் பூர்வத்திலுலகங்களை விழுங்கவேண்டுமென்று வாயைத் திறந்துகொண்டு புறப்படுகையில் புனிதரும் சிரேஷ்டருமான வசிஷ்டர் முதலிய சப்தரிஷிகளாற் சபிக்கப்பட்டு போர்க்களத்தில் சூரிய சந்திரர்களைக் கஷ்டப்படுத்தி பலவித பாணங்களாலும், முஷ்டியாலும் தாக்கப்பட்ட பிறகு வதரிகாரண்யத்தில் நரநாராயணர்களால் பாப விமோசனமாய் சிறந்த பதவியை யடைவாயென்று வரம் பெற்றவன். அவ்வாக்கின்படியே இவன் பெரும்பசியுடையவனுய் யுத்தத்திற்காகத்திரிந்து, அந்தகாசுரனுக்கு மந்திரித்வம் புரிகின்றுன். இத்துஷ்டர்களுக்கு சுக்கிரன் பரம மித்துருவாகவும் குருவாகவு மிருக்கின்றுன். அமரர்களாற் சங்கரிக்கப்பட்ட வசுரர்களை மிருத்யுஞ்சயமந்திர சக்தியாலுயிர்ப்

பித்து, யுத்தகாயமுதலிய வொன்றுமில்லாதவர்களாகச் செய்கின்றான். அவ்வாறு செய்து வருவதினாலே அசுரர்களுலக மாதாவாகிய உமா தேவியாரை யெடுத்துக்கொண்டு போவார்கள், என்றுக்காக்கிரந்த ராய்க்கூறியதைக் கேட்ட சிவபெருமான் குழந்தாய் நந்தி! அஞ்சற்க. அவன் வலிமை யெவ்வளவு யெனக்கூறிக்கொண்டு ஸோமனென்னும் பெயரையுடைய சாமத்தைக்கானஞ் செய்தார். அப்போது அந்தகன் வலிசிறிது குன்றினவனாயிருந்தனன். அவர் அச்சாமகானத்தை நிறுத் தவே அந்தகன் பழையபடியே, மகா பராக்கிரமசாலியாய் நந்தி பக வானையும் பிருதிவீச்சுரனையு மெதிர்த்து நானாவிதமாகப் போர் புரிந்தான்.

பிருதிவிச்சுரனுக்கும் அந்தகாசுரனுக்கும் யுத்தம்.

பிருதிவீச்சுரன் அந்தகனைப் பார்த்து அடா கொடிய துஷ்டனே! இதுகாறுமும்முடைய திறமையை உற்று நோக்கினேன். நீ சிறிதும் அச்சமில்லாமல் சர்வசங்கார கர்த்தாவாகிய சிவபெருமானையும், சர்வ லோக மாதாவாகிய பார்வதிதேவியாரையும் எதிர்த்தனை? உன் னுடைய திறமையும் வலிமையும் எவ்வளவு? இதோ இந்த அஸ் திரத்தை விடுத்து உன் சிரத்தை துண்டிக்கின்றேன் பார் என்று, தனது பாணத்தை விடுக்கும்போது அந்தகன் திடீரென்று மறைந்து ஜலத்தினுள் மூழ்கி கடுந்தபஞ் செய்து மந்திரங்களை யுச்சரித்து நந்தி யையும் மற்றுமுள்ளவர்களையும் விழுங்க நெருங்கினான். இதனைக் கண்ட பிருதிவீச்சுரன் அந்தகனை சமீபித்து இதுவரையில் விகஸ னால் விழுங்கப்பட்ட தேவர்திரள்களையும், பூதகணக் கூட்டங்களை யும், வெளியே வரத்தக்கதோர் மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு பாணப்பிரயோகஞ் செய்யும்போது சிவகணங்கள் தேவர்கள் நந்தி முதலிய யாவர்களும் வந்து ஒன்றுகூடி அந்தகனுடனும், விகஸனுட

னும், அசுரச்சேனைகளுடனும் போர் புரிய, அசுரர்களிற் சிலர் புறமுது கிட்டோடினர்கள். பலர் இறந்தொழிந்தனர். இம்மாதிரி இறக்கும் அசுரர்களை யுயிர்ப்பிக்கும் பார்க்கவனைப் பார்த்து, இவனல்லவா நாமெல்லோருந் தன்புறுகின்றோமென்று கோபித்து கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டுபோய் பூதபதிக்குப் பசுவைக் கொடுத்தாற்போலக் கொடுத்தனர். அச்சமயத்தில் சிவபெருமான் பார்க்கவனை மறைத்து விட்டனர். பார்க்கவன் நஷ்டமடைந்த பின்னர் அசுரர் சேனையிற் பலர் மாண்டனர். சிலர் உடலற்று விழ்ந்தனர். யுத்தபூமியில் பூதப்பிரேத பேதாள பிரம ராக்ஷஸாதி கணங்களும், நரி முதலிய மிருகங்களும், மாமிஸங்களைப்புசித்து உதிரத்தைப்பருகிக் குதித்துக் கொக்கரித்து சந்தோஷித்துக் கானஞ்செய்துக் கொண்டிருந்தன.

இதைப்பார்த்த அந்தகாசுரன் மிகுந்த கோபாவேசங்கொண்டு பிருதிவீச்சுரனைப் பார்த்து அடா சிறுபயலே! உன்னால் யாது செய்ய முடியும். எனது வீரத்தையும் எங்கள் அசுர சைன்னியங்களின் வலிமையும் நீ அறிந்தும் அறியாதவனைப்போல், யுத்த முனையில் நிற்கின்றனே. இதோபார் நான் விடுக்கும் அஸ்திரங்களைத் தடுத்துக் கொள், என்றுகூறி நாகாஸ்திரத்தை யெடுத்துப்பூஜித்து விடுத்தனன். நாகாஸ்திரமும் குபீர் குபீர் என்று விஷத்தைக் கக்கிக்கொண்டு வருவதைப்பார்த்த பிருதிவீச்சுரன் அரவப்பணிபூண்ட அரனாராக் கினை ஈது அமருக யென்றனர். அந்நாகாஸ்திரம் தமது வலியை அடக்கி காத்திலமர்ந்தது. உடனே பிருதிவீச்சுரன் தமது கரத்தி லிருக்கும் மோகனஸ்திரத்தை யெடுத்து விடுக்கவும், அது ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், இலக்ஷ, மாகப்பாவிசாரதி யையும், மற்றுமுள்ள அசுரர்களையும் இரதங்களையுமழித்தது. அந்தக னும் தனதுசாரதியும் இரதமும் அழிந்ததை யோர்ந்து கோபாவேசத் துடன் கத்தி, வேல், வாள், தோமரம் முதலிய கையிலேந்தி ஓடிவந்த னன். இதைப்பார்த்த பிருதிவீச்சுரன் சிவபெருமானு ளளிக்கப் பட்ட சூலத்தின் முனையிற்குத்தி உயரத்தூக்கிச் சூரிய கிரணத் தால் தகிக்கச்செய்தும் உயிர்விட்டிலன். இதைப் பார்த்திருந்த தேவர்கள், கின்னரர், கிம்புருடர் முதலியவர்களும் ஜெய ஜெய வென்று வாழ்த்தி நிற்கும்போது, சிவபெருமான் ரிஷபா ரூடராயும் மகா விஷ்ணு கருடாரூடராயும், பிரமன் அம்ஸவாகன ரூடராயுமவ்விடம் வந்து சேர்ந்து பிருதிவீச்சுரனைப் பார்த்து குழந்தாய்! நீயே காலவைரவராக நின்று அந்தகனை ஹதஞ்செய்தனை. யாவரானும் நீ காலவைரவ பிருதிவீச்சுரன் என்ற பெயருடன் அழைக்கப்படுவாய். நீ எமது பிரதிபிம்பத்தினுதித்தனை. உன்னை வெல்லுவதற்கு யாராலு முடியாது. அந்தகாசுரன் சூலாயுதத்தின் முனையிற்கிடந்தும் தன் தைரியத்தை விடாது சிவபெருமானைப் பார்த்து தொங்கிக் கிடந்தபடியே,

॥ மஹாதேவம் விரூபாக்ஷம் சந்திரார்த்த க்ருதஸேகரம்
॥ ஜம்ருதம் சாஸ்வதம் தனும் நீலகண்டம் பிநாகினம்
॥ வ்ருஷ பாக்ஷம் மஹஜ் ஞேயம் ॥

என்னு மஷ்டோத்ர திருநாமங்களை நூற்றெட்டு மூர்த்தங்களாகத் தியானித்துக் கொண்டிருந்தனன். இவ்விதமாகிய தோத்திரங்களினால் சிவபெருமான் களித்து, பிருதிவீச்சுரனைப் பார்த்து குழந்தாய்! இவனது தியானத்துக் ககமகிழ்ந்தேன். இவனை சூலத்தினின்றும் பூமியில் விடுக வென்றியம்பியதும், நிலமிசை விடுத்தனன். சிவபெருமான் அந்தகனைப் பார்த்து உபதேசகரமான நன்மொழிகளைப் புகட்டி, அந்தகா! நீ இந்திரிய நிக்ரகத்தா லெம்மையே யிதுகாறுந் தியானித்ததினாலும், பலகாலமாகப் பலரூபமாய் எம்மையே துதித்தமையாலும் யான் உன் விஷயத்தில் பெருங்களிப்படைந்தேன். நீ இதுகாறும் மதியீனத்தாற் செய்த பாவங்களினின்றும் விலகினவனாய். நீ விரும்பும் வரத்தைக்கேள். உனக்கு மூவாயிரம் வருஷங்களுக்குப் பின்னர் மோக்ஷமுண்டாகு மென்று திருவாய் மலர்ந்தருளலும், அசக்தனயிருந்த அந்தகன் தன் கை கால்களை யூன்றி யெழுந்து உடல் நடுங்கி கைகூப்பித் துதித்து ஓ! பகவ! மகா நீசனுன யான் போர்க்களத்தில் செய்த துஷ்கிருத்தியங்களை க்ஷமித்தருளல்வேண்டும். காம தோஷத்தினாலும் துன்மந்திரிகளின் போதனைகளினாலும், அறியாமையினாலும் ஜகன் மாதாவாகிய பார்வதியார் விஷயத்திற் செய்த பெரிய அபராதத்தை பொருத்தருளல் வேண்டும். மாதா பிதாக்களாகிய தங்களிருவர்களுக்கும் பணிவிடை செய்யவும், தேவர்களுடன் விரோதமின்றி யொத்திருக்கவும், ஞானவானாகவும், சிவகணங்களுக்கு ளொருவனாகவும், மீண்டு மெக்காலத்தினுமிராக்ஷஸப் பிறவி யடையாமலு மனுக்கிரகிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து நமஸ்கரித்து நின்றனன். சிவபெருமான் புன்னகை புரிந்து அவ்விதமே யனுக்கிரகஞ் செய்தனர். அந்தகனுமப்பொழுதே அவ்வண்ணமாயினன் அந்தகன் காணப்பத்திய மடைந்து உமாபதியை வணங்கி மகிழ்ந்திருந்தனன்.

அந்தகாசுரன் விண்ணவர் வெள்ளி யடுக்கலின்
வந்து பெண்மையராகி மறைந்துரை செய்தி கேட்
டுந்து சீற்ற மிகுத்தவ ணெய்தியுடற் றழி
மூந்து மம்பிகை தன்னருள் பெற்று முகுந்தனா

தனைப்புறங்கண்ட மின்னூர் தமைப்பற்றி வருது மெனுன்
மனத்தருக்குப்ப மீட்டு மந்தகன் வருதல் காணு உப்
புனத்து ழாய்ப் புத்தேண் முன்னாப் போற்றி விண்ணப்பஞ் செய்ய
வினைத் தொடர்களுக்கு மெங்கோன்† வயிரவன் றனை விடுத்தான்.

† வைரவனுக்கு வடுகன் என்னும் பெயரிருத்தல் தனிப்பாடற்றிரட்டு ' வண்ணான் சுமக்க வடுகன் செட்டி " என்ற பாசுரம் விளக்கும். வடுகன் என்றால் தெலுங்கன் என்று வழங்குதல் மரபு பற்றி வந்த தென்க. இஃது பாஷையையும் அதற்குரிய மரபையுங் குறிக்கும்.

அந்தகற் கருளாலுண்மை யறிவுவந் துதிப்பவன்னோன்
கொந்து முத்தலைச் சூலத்திற் கோப்புண்டு கிடந்தவாறே
கந்த மென்மலர்த்தாள் போற்றித் துதித்தலுங் காரிப்புத்தேள்
மைந்தயா மகிழ்ந்தாம் வேட்ட வரமினிப்பு கறியென்ன.

எனக் காஞ்சிபுராணமும், " அந்தகன் மிகுந்த தவஞ்செய்து பிரமனிடம் வரம் பெற்று தேவர்களை இம்ஸித்து வாழும்போது தனது துர்மந்திரிகளின் துர்ப் போதனையால் பார்வதியைக் கோரி பரமேஸ்வரனிடம் யுத்தஞ்செய்து நிற்கையில், பரமேஸ்வரன் தனது பிரதி பிம்பத்தை யதிட்டித்து, அந்தகாசுரனைச் சூலத்தினாற் குத்தி யுயரத்தூக்கி வறுத்தும் போது அந்தகன் தனது அகங்கார மொழிந்து சிவபெருமானை சரணமடைந்து தோத்திரஞ் செய்து சிவ கணத்திலொருவனாக நின்றான்" என்று காஞ்சிக்ஷேத்ர மஞ்சரியும், "பார்வதியும் பரமசிவனும் வனத்துக்கு வந்து தவஞ் செய்யும் போது, அந்தகன் விகஸனுடைய துர்ப் போதனையால் பார்வதியைத் தூக்கிக் கொண்டு போக அணுகுஞ் சமயத்தில் பரமசிவாம்ஸம் அந்தகனுடன் யுத்தஞ்செய்து சூலத்தினால் குத்தி யுயரத்தூக்கிய போது, சிவனை மிகவாகத்துதித்து நின்றதினால் சிவகணத்திலொருவராயிருக்கும் பதவியை யடைந்தான்" என்று சமஸ்கிருத மச்சபுராண தமிழ் மொழி பெயர்ப்பும், "இவனைத் தநு என்னும் தானவன் குமரன் என்றும் இரணியாக்ஷன் குமரன் என்றுங் கூறுவர். இவன் பிரமனை எண்ணித்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்று தேவரை வருத்த, தேவர்கள் சிவமூர்த்தியை வேண்டினர். சிவமூர்த்தியின் பிரதி பிம்பரூபம் இவனைச் சூலத்தாற் குத்திய போது அந்தகன் வேண்டச் சிவமூர்த்தி கருணை செய்து சிவகணத் தலைமை யளிக்கப் பெற்றவன்" என்று காசிகாண்டமும்," அந்தகாசுரன் ஒரு அசுரன். இவன் துங்காசுரன் அம்பாசுரனுடன் கூடி இருள்மலை மேகவுருக்கள் கொண்டு மழை வருஷித்து நிற்க, மகோற் கடப் பெயருள்ள விநாயகமூர்த்தி, ஓர் பறவை யுருக் கொண்டு அவற்றை நீக்க, மீண்டும் அம்மூன்று அசுரரும் ஆலமரமாகவும் கண்ணியாகவும், வேடனாகவும் உருக்கள் கொண்டு பக்ஷியாகிய விநாயகரைத் துரத்த விநாயகர் இம்மூவரையும மூக்காலும் காலாலும் கௌவித் தவலோகவுயரஞ் சென்று இவர்கள் தாயாகிய பிரமரையிடம் பிரேதங்களாக வீழ்த்தினர்" என்று விநாயகபுராணமும், "சிவபெருமான் கண்களைப்பிராட்டியார் விநோதமாக மூடிய காலத்து உண்டான அச்சத்தால் தேகத்தில் வியர்வையுண்டாயிற்று. அவ்வியர்வை யானது இறைவன் நெற்றிக் கண்ணாற் சூடுண்டு மூடிய விரலிலேயே ஒரு கருப்பமாயிற்று. அவ்வகைக் கருவில் அசுர வுருவமாக ஒருவன் கோரத்துடன் ஜனித்தான். இவன் பிறவிக் குருடனாகத் தோன்றியதால் அந்தகன் எனப் பெயருற்றான். இவன் இரண்யாக்ஷனுக்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்டுப் பிரமதேவரை யெண்ணி யொருவராலுஞ் செயிக்கப்படாத வன்மையும் கண்களும் பெற்று

அரசு செலுத்திப் பார்வதியைக் கண்டு மோகிதனுய்ச் சிவப்பெருமான்மீது யுத்தத்திற்கு வந்து அவரது சூலத்தாற் குத்தப்பட்டு, அச் சூலத்தின் மேல் பலநாள் உலர்ந்திருந்து சிவபெருமானைத் துதித்ததால் கருணை பெற்றுச் சிவகணத் தலைவனுயினன்" என்று சிவமகா புராணமும், "திருக்கோவிலூர் வீரட்டானத்தில் வீரட்டானேச்சுரர் சிவானந்த வல்லி சமேதராய் விளங்கும் தலத்தின் பெண்ணை நதிதீரத்தில் அந்தகாசுரனை வைரவரைக்கொண்டு அடக்கிய தென்று" சிவதலமான்மியச்சுருக்கம் 44வது பக்கத்திலும் கூறியிருப்பது விளக்கிக்காட்டும். என்று கூறினர். மீண்டுந் தவமுனிவர்கள் ரிஷியை வணங்கி சுவாமி! அப்பிருதிவீச்சுரன் எவ்வாறாயினன். அதன் வரலாற்றைக் கூறுதல் வேண்டு மென்று மன்ருடிய போது உரோமரிஷி கூறத் தொடங்கினர். கேளுங் தபோதனர்களே!

பிருதிவீச்சுரன் தேவனுடு செல்வது.

இது விஷயங்கள் யாவையும் உடனிருந்து பார்த்த தேவேந்திரனும், மற்று முள்ள தேவர்களும் சந்தோஷ மடைந்து சிவபெருமானைப் பன்முறை வணங்கி உத்திரவு பெற்று பிருதிவீச்சுரனை பொன்னுலகுக்கு அழைத்துச் சென்ருர்கள். அங்குள்ள தேவகுருவாகிய வியாழ பகவான் ஆசிர்வதிக்க தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள் கொண்டாடினுர்கள். தேவமாதர்கள் தேவனுட்டியம் புரிந்து களிப்பித்தார்கள். இவ்வாருகிய தேவசுகங்களைத் தேவநாட்டிலனுபவித்துக் கொண்டிருக்கும் நாளில், சகல தேவர்களும் தபோதனர்களும் பிரமனை நோக்கி நமஸ்கரித்து, சுவாமி! தங்கள் யாகத்தினுதித்து எங்கள் துன்பங்களைக் களைந்த மகா உத்தமராகிய இப்பிருதிவீச்சுரனுக்குத் தக்கதோர் மனைவி யிருத்தல் வேண்டும். இவர் தன் மனைவியுடன் நீதி முறைவழுவாது அரசு புரிந்து இல்லற தருமம் நடத்துதல் வேண்டும். பார்முழுவதிலு மிவர் சந்ததி பரவியிருந்தாலு சிதமாகுமெனக் கருதுகின்ருேமெனக் கூறியதைக்கேட்ட சதுர்முகன் சந்தோஷித்து மறுபடியும் யாகத்தைச் செய்து சுனைபை யென்னும் பெண்ணை யுண்டாக்கினர்.

பிரமன் யாகத்தில் சுளுபை உற்பத்தி.

(தேசாதிபதி நாடகம்) விருத்தம்.

விண்ணவர்கள் வானவர்கள் தானவர்கள் தபோதனர்கள்
    விரைந்து மிக வொன்றுகூடி
நண்ணு பிரம்ம லோகத்தை நாடிமிக வணங்கிப்பின்
    நான்முகனே சொல்லக் கேண்மின்
மண்ணுலகோர் புகழ்பிருதி வீஸ்வரனுக்கோர் மாதிருத்தல்
    வகை யாகு மென்றியம்ப
பண்ணயனும் மகமியற்றி சுளுபையெனும் பெண்மணியை
    பரிவாக வளித்தான் தானே.

பிருதிவீச்சுரனுக்கும் சுளுபைக்கும் திருமணம்.

அதிகுணமும் தேஜஸும் பொருந்திய சுளுபை யென்னும் பெண்மணியை பிரமன், இந்திரன், மகாவிஷ்ணு முனிவர்கள் இயக்

கர்கள், கின்னரர், கிம்புருடர், கந்தருவர் முதலியவர்கள் முன்னிலையில் தேவநாட்டை யலங்கரித்து பிருதிவீச்சுரனுக்குத் திருமணஞ் செய்தார்கள்.

(தேசாதிபதி நாடகம்) விருத்தம்.

வந்தபர மேஸ்வரனு கந்தயன் மகன்றனை
  மலர்திரு கை கொண்டுதழுவி
மண்ணுலகர் விண்ணுலகர் நண்ணு துயரங்களைய
  வந்த பிருதீஸ்பரனே கேள்
சொந்த மொடெம் வேள்விவரு மங்கையை மணஞ்செய்தோம்
  சுகமாக வாழ்க வென்று
சொல்லியே செல்லவும் நல்லெழில் சுனைபையின்
  சுகபோக மேதுய்த்திட

காசி க்ஷேத்திர மகிமை.

அரனரின் ஆக்கினைப்படி சூலத்தினுற்குத்தி தேவர்களை ஆதரித்தமையால் நீயேபுவியை யரசாளுதற்குரிய பிருதிவீச்சுரன். ஏழுதீவுகளாகப் பிரிக்கப்பட்ட இவ்வுலகத்துக்கு நடுநாயகமாகவிளக்குவது நாவலந்தீவு, அந்நாவலந்தீவானது ஒன்பதுகண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வொன்பதில் புண்ணியமானகண்டம் பரதகண்டமாகும். அப்பாத கண்டத்துக்குச் சற்றேரக் குறைய மத்தியஸ்தலமாயும், அவிமுக்த பதியாயும், வாரணசி யென்றுஞ் சொல்லப் பட்டதாகவும் விளங்கும் காசி யென்றொரு திவ்வியக்ஷேத்திர முள்ளது. இதற்கு விசாலாவதி யென்றொரு பெயருமுண்டு. இந்த க்ஷேத்திரம் மிக்க இரசியமானதும் சிவனருக்குப்பிரியமானதுமாகும். சகலபிராணிகளுக்குஞ்சர்வகாலத்திலும் மோக்ஷத்தைக் கொடுக்க மிக்க யெளிதாயுள்ளது மாகும் இதிலிருந்து யோகசித்தியடைந்த புண்ணியர்கள் பூஜை, விரதம், தவம் முதலியன செய்து பஸ்மருத்திராக்கங்களைத் தரித்து சிவலோகத்தை யடைய விரும்பி, சிரேஷ்டமான சிவயோகத்தை யப்பியாசித்து பஞ்சேந்திரியங்களை ஜெயித்து அங்கே வசித்திருப்பார்கள். அநேக விருக்ஷங்கள், பறவைகள் முதலியவற்றாலும், தாமரை, நெய்தல் முதலிய புஷ்பங்கள் நிறைந்த தடாகங்களாலும், அலங்கரிக்கப்பட்டு பக்தர்கள் கந்தர்வர்கள் முதலியவர்களாலெப் பொழுதுஞ் சேவித்துக் கொண்டிருக்கப்பட்டது மாகும். அந்த முக்கிய க்ஷேத்திரம் சிவபெருமானுக்கு முக்கியமான வாஸஸ்தலமாகும். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும், பிரமசரிய, கிருகஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாசிகளும், பாலகுமார யெளவனர்களும், அபரிசுத்தனும், குழந்தையும், கன்னிகைகளும், பதிதையும், விதவையும், மலடியும், ரஜோ தோஷமுடையவனும், பிரசவித்திறந்தவளும், பரிசுத்தமானவனும், பாபியும், கர்மவசத்தையுடைய வஞ்ஞானிகளும், இக்காசியிலிறந்தால் சந்தேகமின்றி மோக்ஷ மடைவார்கள். ஞானம், தியானம், யோகம் முதலியவை

களொன்று மில்லா தவர்களாயினுந் தடையின்றி மோக்ஷமடைவார்கள் எண்ணிறந்த சிவஞானிகளிவ்விடத்தில் வசிப்பதால் இந்த க்ஷேத்திரம் எல்லா க்ஷேத்திரங்களைக் காட்டிலுஞ் சிறந்ததாகும். இவ்விஷயத்தை சித்த யோகிகள் அறிவார்களன்றிப் பிறரறியார். இந்நகரமே ஆன்மாக்களுக்கு முத்தி கொடுக்கும் நகரம். இதற்குத்தான் அவிமுக்தமெனக் கூறுவார்கள். விமுக்தம்: விடத்தக்கது. அ: எதிர்மறைப் பொருள் தருதலின் அவிமுக்தம்: விடத்தகாதது என்பது பொருள். காசி நகரம் என்றும் சிவபரம் பொருளைவிட்டு நீங்காதது எக்காலமும் முத்தியளிக்கத்தக்க தேயன்றி விடத்தகாதது என்றும் பொருள் கூறுவர். நைமி சாரண்யம், குருக்ஷேத்திரம், கங்கா துவாரம், புஷ்கர முதலிய தீர்த்தங்களாடி சேவித்து வந்தால் மோக்ஷ முண்டாகுமேயன்றி, இறந்தால் மோக்ஷ மடைய மாட்டார்கள். இக்காசி, க்ஷேத்திர மகிமை, மூர்த்தி மகிமை, தீர்த்த மகிமை, யாகிய முச்சிறப் புடையது இந்நகரத்தில் வசிப்பவர்கள் யாவரே யாயினும் எந்தன் மைத்தவரே யாயினும் அநேக பாபங்களைச் செய்து பைசாசத்துவமடைந்தவரே யாயினும், பலகோடி புண்ணிய காரியங்களைச் செய்து சுவர்க்கத்தில் வசிப்பதைக் காட்டிலுஞ் சிரேஷ்ட மாகும்.

இறந்தால் மோக்ஷமேயன்றி வேறில்லை. குபேரன் அந்த தலத்தில் பூஜித்து காணபர்திய முற்றான். பராசர னென்னும் யோகியும், வேத வியாசனும், விஷ்ணு மூர்த்தியும், திருமகளும், அஷ்ட வசுக்களும், சூரியனும், மற்றெல்லா தேவர்களும் பூஜித்து தங்களுக்கு வேண்டியதைப் பெற்றார்கள். காலவைரவரால் காக்கப்பட்ட தலமாகும். வருண அசி என்னு மிரண்டு நதிகள் கலந்திருக்கின்ற காரணத்தினால் வாரணசி யென்ற நாமம் பெற்றிருக்கின்றது.

அருணசல புராணம்.

காசி யெனு மொருதல மிக்கையிலுஞ் சிறப்புளது கங்கைத் தீர்த்தம்
வீசுதிரைக் கொழுந்தோட்டம் பரகதிக்கு வேரோட்டும் வியந்து மூழ்கின்
மாசினுடலதிலிருந்தான் மரமேனும் விலங்கேனும் மனிதரேனும்
ஈசனருளுபதேசஞ் செவிப்புகலா விறைவனென விருக்கலாமே.

வீர சிங்காதனப் புராணம்.

காசியென்றொரு புண்ணியப்பதியது கழறி
ஞசிலா மணிகர்ணிகை விலங்கிடு மதன்கண்
மாசிலா வயிரவனவண் மரித்தவர் பவத்தை
வீசியேதிரிசூலம் வைத்தளிப்பன் மெய்ம் முத்தி.

இன்னும் பலநூல்கள் இக்காசியைப் பற்றி விரித்துக் கூறுகின்றன.

பிருதிவீச்சுரனுக்கு திருமுடி சூட்டடல்.

ஆனமையின் பிருதிவீச்சுரனே! நீரித்தகைய அருமை பெருமை வாய்ந்த திவ்விய பட்டணத்திற் றிருமுடி சூட்டிக் கொண்டு உலக முழுவது மரசாண்டு இல்லற தருமத்தைக் கைக் கொள்ளல் வேண்டு மெனக் கூறி தேவதச்சனை நினைத்தார்கள். தேவதச்சனும் வந்து நமஸ்கரித்து சுவாமி! தாங்கள் என்னை அழைத்த காரணம் யாது என்று வினவியதற்கு தேவேந்திரன் பிருதிவீச்சுரனாகிய உத்தமனுக்கு விசாலாவதியை ஆளும்படி மகுடதாரணஞ் செய்யப் போகிறதினால் நீ அப்பட்டணத்தை தேவநாடொப்ப நிருமித்து அலங்காரஞ் செய்க வென்றனன். உடனே தேவதச்சனாகிய தேவ சிற்பி விசாலாவதி பட்டணம் வந்து அண்டச்சுவர்க்குச் சமானமாக ஆகாயத்தை யளவா நிற்கிற மதில்களையும், அதைச்சுற்றிலும் கடலுக்கு நிகராகிய அகழிகளையும், கைலாயபர்வதம் போன்ற சிறந்த மாளிகைகளையும், சூரிய சந்திராதி மண்டலங்களைத் தழுவும்படியான கோபுரங்களையும், கருடன் தனது சிறகுகளை விரித்தாற் போலிரா நின்ற கதவுகளையும், அதிஜாக்கிரதையுள்ள காவற்காரர்களையும், பலவித ஆயுதயந்திரங்களமைந்த அரண்களையுமுடையதாய் அகண்டும் நீண்டும் சமமாயும் கோணலின்றியுமிரா நின்ற வீதிகளையும், மண்டபங்களையும், சாலைகளையும், சந்திகளையும், தேவாலயங்களையும், நந்தவனங்களையும், உத்தியானவனங்களையும், ஆங்காங்கு அமிர்த்தத்துக் கொப்பாகிய தண்ணீர் மலிந்த தாடாகங்களையும், சகல வஸ்துக்கள் நிறைந்த கடைவீதிகளையும், பலமும், சுறுசுறுப்பும் இலக்ஷணங்களுமுடைய யானைகள், குதிரைகள், பசுக்கள், எருதுகள், ஒட்டைகள் முதலிய மிருகங்களையும் சித்திரசாலைகளையும், ஆயுதச்சாலைகளையும், அன்னசாலைகளையும், மிருககண்காட்சி சாலைகளையும், ஆக்காங்கு அமைத்து அலங்கரித்தனன்.

அரன்மனையொன்று ஆகாயத்தையளாவி மேரு பர்வதம்போற் சூரியனின்தேரோடும் வழியையணுகி பிரகாசித்தது. பொன்தட்டினால்

மூடப்பட்டு நவமணிகளுமிலங்குகின்ற ஸ்தம்பங்களும், படிகட்டுகளும் ஆருதாரங்கள் போல ஆறுவித மேல் மெத்தைகளும், பூமியின் கீழ் வீடுகளுமுள்ளதாய் விசாலமுள்ள சபா மண்டபங்களும், திசை மயக்கும் வழிகளும், கொலுமண்டபங்களும், அவ்வவ் வரைகளிலும் மண்டபங்களிலும் முத்துக்கொத்துக்களையும்,பவழக்கொத்துக்களையும் இரத்தின ஜாலர்களையும் இரத்தின கொடுங்கைகளும், பரப்பித் தொங்கவிட்டிருந்தது. இன்னும் எக்காலத்திலும் பூப்பதும், காய்ப்பதும், தளிர்ப்பதும், விசேஷ வாசனையும், ருசியும், குளிர்ச்சியும் தருவதுமாகிய பலாமரம், மாமரம், மாதுளமரம், எலுமிச்சமரம், நாரத்தைமரம், பேரீச்சமரம், தென்னை, கமுகு, கதலி, அரசு, வேம்பு பனை, கூந்தர்ப்பனை, ஈச்சம், பாதிரி, முல்லை, சண்பகம், கொன்றை, சந்தனம், வில்வம், இருவாக்ஷி, நாகலிங்கம், முதலிய பலவித மரங்களையும், புஷ்பச்செடிகளையும், தாமரை, செங்கழுநீர் முதலியவைகளால் நிறைந்து அன்னம், சக்கரவாகம் முதலிய பறவைகள் வாசஞ்செய்யும் தெளிந்த நீருள்ள வாவிகளையும், கரைகளில் பளிங்கு மேடைகளையும், மயில்கள், குயில்கள், மற்றுமுள்ள பட்க்ஷிகள் சப்தித்து விளையாடிக் கொண்டும் வண்டுகளிசைபாடிக் கொண்டுமிருக்கு மிடங்களை யுண்டாக்கி விடைகொண்டேகினன்.

இதைப்பார்த்த தேவர்கள் சந்தோஷங்கொண்டு அனுமந்தக்கொடி, சிம்மக்கொடியுடைய சிங்காதனத்தில் பிருதிவீச்சுரனையும், சுனையையும் அமரச்செய்து, ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்குண்டி, பசுவிற்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெருவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப்பிணஞ் சுடல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல் மடம், தடம், கா, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம் ஆகிய முப்பத்திரண்டு தருமங்களையும் கிரமமாக வழங்கி யாகம் முதலிய ஓமங்களை வளர்த்து, அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்தமை முதலிய தேவமாதர்கள் புடைசூழ்ந்து சாமரம்வீசி, பரத நாட்டியம் நடிக்க இரதகஜ துரகபதாதிகளை யணியாக வகுத்து பேரிகை தாரை முதலிய வாத்தியங்களும், தேவதுந்துபியும் தாம் தாமென்று ஆரவாரிக்க தேவர்கள் யாவரும் புஷ்பமாரி பொழிய ரிஷிகளும், பிராமணர்களும் மங்களவாழ்த் தொலிமுழங்கிக் கொண்டிருக்குஞ் சமயத்தில் தேவேந்திரன் நவரத்தின கசிதமான ரத்னதிருமுடியை யெடுத்து பிரகஸ்பதி பகவானிடம் கொடுக்க, பிரகஸ்பதியும் வசிஷ்டருமேகோபித்து பவழம், பச்சை, நீலம் முதலியவைகளா லபிஷேகஞ் செய்து திருமுடியைச் சூட்டினர்கள். உடனே தேவமாதர்கள்

ஆலாத்தி யெடுத்து சந்தோஷத்துடன் ஜய ஜய வென்றார்ப்பரித்து குதூகலத்துடன் தத்தம்பதிக்குச் சென்றார்கள்.

பிருதிவீச்சுரனுக்குப் புத்திரோற்பவம்.

பிருதிவீச்சுரனும், சுனைபையும் இரதியும் மன்மதனும் போல வாழ்ந்து நீதிமுறை வழுவாது மாத மும்மாரிபொழிய, புலியும் பசுவு மோர்துறையில் நீரருந்த செங்கோல் செலுத்திக்கொண்டு வந்தார்கள். இவ்விதமாக வாழ்ந்துவரும் நாளில் தங்களுக்குப் புத்திரப் பேறின் மையால் மிகுந்த மனவருத்தமுற்றுப் பிரதி தினமும் வைகறைத் துயிலெழுந்து காலைக் கடன்களாற்றி ஸ்நானஞ்செய்து பஸ்ம ருத்தி ராக்ஷங்களைத் தரித்து பூஜை முடித்து கோதானம், பூதானம், வஸ்திர தானம், அன்னதானம் முதலிய தானங்களை முறையாய்ச்செய்து விஸ்வநாதர்மேல் மிக்க பேரன்பு கொண்டு சோமவார முதலிய சிவ விரதமனுட்டித்து விளங்குங் காலத்தில் சிவபெருமான் அசரீரியாக நின்று மன்னவ! நீவருந்தற்க. நினக்குப் புத்திரப்பேறு கூடியவிரை விற் கிடைக்குமெனப் புகன்றனர்.

இதைக்கேட்ட பிருதிவீச்சுரன் மிக்க சந்தோஷத்துடன் தானும் தனது பத்தினியாகிய சுனைபையு மில்லற தருமங்களை நடாற்றிக்கொண்டு வரும்போது சுனைபை கருப்பமுற்று நல்லோரை யில் மிக்க வழகுடைய புத்திரனைப் பெற்றனள். தந்தையாகிய பிருதிவீச்சுரன் மனங்களித்து, மந்திரி பிரதானிகளைப் பார்த்து நமக்குப் புத்திரப்பேறுண்டாயது. ஜோதிட நூல் வல்லோரையும் புரோகிதர்களையு மழைப்பியுங்களென்று கூறித்தருவித்து ஜாதகங் கணிக்கப்பெற்று வேண்டிய சன்மானங்களைத் தந்து அனுப்பிவிட்டு, ஊரிலுள்ள ஏழை முதலியவர்களுக்குத் தானமீந்து விடங்க தேவரா

சிலர் கந்தர்வத்தலைவனான சுரதபிந்துவின் குமாரத்தி சுனைபை எனவுங் கூறுவர்.

யன் என்னும் நாமகரணமிட்டு சந்தோஷமாய் வளர்த்துக் கொண்டிருக்கும்போது, சுனைபை மீண்டும், சுனபகன், மணிக்கிரீவன், சுனச்சேனன், என்னு மூன்று புத்திரர்களேயுமீன்றுள். ஆக நான்கு புத்திரர்களேயும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து உபநயன முதலிய சடங்குகளே நடத்தி நாலு வேதங்களேயும் ஆறு சாத்திரங்களேயும், கலே ஞானங்களேயும், வில்வித்தை, வாள் வித்தை, யானே யேற்றம், குதிரை யேற்றம் முதலியவைகளே ஐயந்திரிபறக்கற்பித்து, பருவகாலத்தை யனுசரித்து பிருதிவீச்சுரன் நாரதரை அழைத்து அவர் மூலமாகத் தமது அருமைத் திருக்குமாரர்கள் நால்வருக்கும் அங்காரகாக்கிய னென்னுங் கந்தர்வத் தலேவனுடைய அழகிய குமாரத்திகளாகிய மாலினி யென்பவளே விடங்க தேவராயருக்கும், சம்பூரண திலகியென்பவளே சுனபகனுக்கும் சந்திரலேகை யென்பவளே மணிக்கிரீவனுக்கும், விசித்திரலோசனே யென்பவளே சுனச்சேனனுக்கும் திருமணஞ்செய்து, விசாலாவதி வந்து சேர்ந்த பிறகு, விடங்கனென்னும் முதல் மைந்தனுக்குத் தனது அரசை யளித்து மகுடாபிஷேகஞ்செய்து நீதி வழுவா தரசு புரியுமாறு நீதிகளேப் போதித்து மற்ற மூவர்களேயு மொற்றுமையாக விருக்கும்படிசெய்து, பிருதிவீச்சுரன் தனது பத்தினியாகிய சுனைபையுடன் தவக்கோலம் பூண்டு நைமி சாரண்யஞ்சென்று, சிறிதுகாலம் தாத மார்க்கம், புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கங்களுக்குறிய சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய மார்க்கங்களே யனுஷ்டித்து சாலோக, சாமீப, சாரூபங்களேக் கடந்து சிவசாயுஜ்ஜியப் பதவியை யடைந்தார்கள். விடங்க தேவராயரும் தந்தை தாய்க்குச் செய்ய வேண்டிய கிரியைகளேத் தனது சகோதரர்களுடன் கிரமப்படி பௌரோகிதர் மூலமாக செய்து முடித்து, மனு நீதி தவராது மன்னுயிரைத் தம்முயிர்போல் பாவித்து அரசு செலுத்திவந்தார்.

வீர தீர கோர ராக்ஷஸ ஸம்ஹாரம்.

இவ்வாறு அரசு செலுத்திவரு நாளில் வீரன், தீரன், கோரன் என்னு மூன்றசுரர்கள் தேவர்களே யெல்லாம் வருத்தித் துன்புறுத்தி கிரவுஞ்சத்தீவில் வசித்துக்கொண்டு வந்தார்கள். இத்துன்பத்துக் காற்றுத தேவர்கள் மிகுந்த சஞ்சலமடைந்து பிரமனே வணங்கி

முறையிட பிரமன் விசாலாவதியை அரசுபுரியும் பிருதிவீச்சுர னுடைய குமாரர்களாகிய விடங்க தேவராயர் முதலியவர்களிடம் செல்லுங்கள்; அவர்கள் அவ்விராக்ஷதர்களை ஸம்ஹரித்து உங்கள் துயரங்களை நீக்குவார்கள். இவர்களும் தங்கள் தந்தையைப்போல் பராக்கிரம சாலிகள். அவர்களின் தந்தையும் சாக்ஷாத் சிவபெருமா னுடைய பிரதி பிம்பமாக்கும் என்றுகூற விசாலாவதிக்கு வந்தார்கள்.

விடங்கதேவராயர் வந்த தேவர்களை யெல்லாம் மிகுந்த வணக் கத்துடனும் மரியாதையுடனும் வரவேற்று ஆசனமிட்டமரச் செய்து தேவர்காள்! நீங்கள் இவ்விடம் வர யாங்கள் செய்த தவத்தின் பயனே பயன். யாது கருதி வந்தீர்கள் என்று வினவ தேவர்கள் கூறலாயினர். கேளும் விடங்கதேவராயரே! அந்தகாசுரனால் நாங்கள் பட்ட துன்பங் களும் கஷ்டங்களு மளவு கடந்தவை. அவைகளை உமது தந்தையாரா கிய பிருதிவீச்சுரன் நிவர்த்தித்தனர். அவ்வந்தகனுஞ் சிவ கணத் தலைவனாயினன். தற்காலம் கிரௌஞ்சத்தீவில் வசிக்கும் வீர, தீர, கோரனென்னும் மூன்றசுரர்களால் நாங்கள் அளவிறந்த துன்பத்தை யும், துயரத்தையு மடைந்திருக்கின்றோம். அவர்களோ அகோரமான தவங்களைச் செய்து, காத்திர தேகமும், பவிசும், பலமும், தைரிய மும், ஆயுத அஸ்திரங்களும், மாயா விசித்திர ஜாலங்களும் பெற் றிருக்கின்றார்கள். நாங்களோ இரண்யாக்ஷன், இரண்யகசிபு, அந்த காசுரன் முதலியவர்களால் இம்ஸிக்கப்பட்டு பலமற்றிருக்கின்றோம். 'தந்தை யெவ்வழியோ மகனுமவ்வழி' யென்றபடி தந்தையின் வீர தீர பராக்கிரமங்கள் புத்திரருக்குண் டென்னுந் தாத்பரியத்தை யனுசரித்து உம்மிடம் வந்தோம். பிரம தேவனு மவ்விதமே புகன்ற னர் யெனக்கூறினார்கள். இதைக்கேட்ட விடங்கன் சந்தோஷமுற்று எனது தந்தையைப் போலவே அத்துஷ்டர்களை ஹதஞ்செய்கின்றே னெனக் கர்ஜித்து தம்பிமார்களையும், அமைச்சர்களையும் விளித்து தனக்குரிய முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, மகிட தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், இணைக் கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம் முதலிய அரச சின்னங்களி ருபத்தொன்றையும், தேரொன்று, களிரொன்று, பரிமூன்று, காலாலைந்து கொண்டபத்தி, பத்திமும்மடி கொண்டது சேனாமுகம், சேனாமுகம் மும்மடி கொண்டது குலுமம், குலுமம் மும்மடி கொண்டது கணம், கணம் மும்மடி கொண்டது வாகினி, வாகினி மும்மடி கொண்டது பிரதனை, பிரதனை மும்மடி கொண்டது சமு, சமு மும்மடி கொண்டது அனீகம், அனீகம் பத்து கொண்டது அக்ரோணி முதலிய படைத் தொகைகளாகிய இரத, கஜ, துரக, பதாதிகளை அணியாக வகுக்கும்படி யேற்படுத்தி யூகத்தலைவர்,

அக்குரோணிக்கு தேர் 21870, யானை 21870, குதிரை 95610, காலாள் 109350 சேர்ந்தது.

அணித்தலைவர், படைத்தலைவர், புடைசூழ பேரிகை, பூரி, எக்காள முதலிய வாத்தியங்களுடன் கிரௌஞ்சத்தீவை யடைந்து சாம, பேத, தான, தண்ட மென்னுஞ் சதுர்வித வுபாயங்களாலரக்கர் மூவரையு மெதிர்த்து அகோரமான யுத்தஞ்செய்து அச்சேனை சைனியங்களை ஹதமாக்கி, அம்மூவர் சிரங்களைக் கொய்து ஜெயக்கொடியை நிலை நாட்டித் தமது காசிப்பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

வீரமணிப் பிரபாவம்.

கோர வீர தீரனை கொதித்த வெங்கண் யானைபோல்
சேரநின்ற படையுடன் சேர்ந்த சேனை தன்னொடு
சிரிக்ரௌஞ்ச தீவினை தீரமாக சூழ்ந்தனர்
நேரு நேராய்க் கொன்றனர் சேர்ந்த துன்பம் ஓடிட.

தேவ துந்துமி முழங்கி மலர்மாரி பொழிந்தனர். இப்பால் விடங்க தேவராயர் முதலியோர் வாரணசியில் மனு நீதி வழுவாது செங்கோற் செலுத்தி வருங் காலத்தில்

விருத்தம்.

இந்திரனை நேர்தனையர் நால்வரவரவர்களுக்
கிருநால் வரிருபுத்திரிகள்
இடலொடு பிறந்திடுமெவர் விசாலாவதியி
லினிதாக வரசாளவாள்
சந்ததியிலாது வெகு சிந்தனையதாகிமதி
தனையுதவு மந்திரிகளுடன்
தங்கள் மனதினிலுறுகின்ற திவையாவை யெனச்
சாற்றுவர் தேற்றுவாரே.

விடங்க தேவராயர் மனைவியாகிய மாலினி என்பவள் வைடங்கன், இந்திரசேனன் என்னு மிரண்டு புத்திரர்களையும், சித்திரவல்லி, சுந்தரவல்லி என்னுமிரண்டு புதல்விகளையும், சுனுபகனுடைய மனைவி சம்பூரணதிலகி என்பவள் சுனுபிகன், பூரணன் என்னுமிரண்டு புதல்வர்களையும், மணிக்கிரீவனுடைய மனைவி சந்திரலேகை என்பவள் மணிக்கிரீவன் சோபிதன் என்னுமிரண்டு புத்திரர்களையும் சுனச்சேனனுடைய மனைவி விசித்திரலோசனை என்பவள் ஸௌஎஸ்யன் அந்தரீஷன் என்னுமிரண்டு புத்திரர்களையும் பெற்றார்கள்.

இவ்விதம் பிறந்த குழந்தைகள் பூரண சந்திரனைப் போல விருத்தியாகி மிகுந்த அழகுடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சகல கலைகளையு முணர்ந்தவர்களாயு மீரேழு பதினன்கு லோகங்களையு மரசு புரியுஞ் சக்தியுடையவர்களாயும், தயை, தாக்ஷண்யம், ஜீவகாருண்ய முதலியவைகளை யேந்தியவர்களாயும் விளங்கும் நாளில் நான்கு பிதாக்களும் தங்கள் தங்கள் குமாரர்களுக்குத் திருமணம் புரிய வேண்டுவதவசிய மென்றாலோசித்து, நாரதமுனிவரை வரவழைத்து நமஸ்கரித்து, ஸ்வாமி!

தேவனாட்டில் ஊகூவென்னுங் கந்தர்வத் தலைவனுக்குச் சில பெண்களிருப்பதாகச் செவியுற்றேன். அங்ஙன மிருப்பின் எங்கள் புத்திரர்களுக்குத் தாங்களே முன்னின்று திருமண முடிக்கவேண்டு மெனப் பிரார்த்தித்தனர். நாரத முனிவரும் ஒப்புக்கொண்டு ஊ கூ வென்பவனிடஞ் சென்று முடிவுசெய்து நன்னாள் நியமித்து விடங்கதேவராயர் முதலியவர்களிடங் கூறிவிட்டு அந்தர்த்தான மாயினர். பிறகு விடங்க தேவராயர் முதலியோர் ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது தேவேந்திரன் உலையத்திரி யொத்த விமானத்துடன் அவ்விடம் வந்து சேர்ந்தான். சகோதரர்கள் நால்வரும் பார்த்து சோடசோப சாரம் புரிந்து வணங்கி சிம்மாசனத்தில் அமரச்செய்தார்கள். தேவேந்திரனு மிவர்களை வாழ்த்தி சிம்மாசனத்தி லமர்ந்தான். விடங்க தேவராயன், சுனாபகன், மணிக்கிரீவன், சுனச்சேனன் ஆகிய நால்வர்களும் மறுபடியும் நமஸ்கரித்து, சுவாமி! தங்களனுக்கிரகத்தினால் எங்களுக்கு எட்டு புத்திரர்களும் இரண்டு புதல்விகளுமிருக்கின்றார்கள். இவர்களுக்கு நாரத முனிவர் கந்தருவத் தலைவனுடைய குமாரத்திகளைத் திருமணம் புரிய முடிவு செய்தனர். தாங்களும் மற்றவர்களும் உடனிருந்து திருமணத்தைப் பூர்த்திசெய்து ஆசிர்வதிக்கும்படி வேண்டுகின்றோம், எனக்கூறித் தேவதச்சனை நினைத்தார்கள். தேவதச்சனும் வந்து வணங்கினான். உடனே தேவேந்திரன் இவர்களுக்கு வேண்டியவாறு உதவிபுரிக வெனக்கூறி வுத்திரவு பெற்றுச் சென்றனன். விடங்க தேவராயன் தேவதச்சனுக்கு கந்தருவ நகரத்தை வானாடொப்ப வலங்காரஞ்செய்ய உத்திரவு கொடுக்க, அவனுமவ்வாறே நவரத்தினங்களால் மணவறை முதலிய யாவுமலங்கரித்துச் சென்றனன். விடங்கதேவராயனும் முகூர்த்த வோலை தேவேந்திரன் முதலிய யாவர்களுக்கும், காந்தருவர்களுக்கும், ரிஷி, முனி, தபோதனர்களுக்கும் அரசர்களுக்கும் எழுதியனுப்பினார். விசாலாவதி பட்டணத்தையு மலங்கரித்து பிராமணர், ஏழை முதலியவர்களுக்கு இல்லை யென்னாது வேண்டியவாறீந்து, யாவரும் கந்தருவ நகரத்தை யடைந்தார்கள். முகூர்த்த வோலையைப் பார்த்த யாவருஞ் சந்தோஷித்து அவரவர்களுக்கு விட்டிருக்கும் விடுதிகளில் தங்கள் தங்கள் சைனியங்களுடன் வந்து சேர்ந்தார்கள். நல்லோரையில் விண்ணி லுறைவானவரும் மண்ணிலுறை மன்னர்களும் மற்றுமுள்ள பிராமணர் முதலிய யாவர்களும், தபோதனர்களும், யதீந்திரர்களும், முனிவோர்களும் வீற்றிருக்கும்போது முப்பத்திரண்டு வாத்தியங்களும் தாம் தாம் என்று முழங்கியது. அச்சமயம் ஊ கூ என்பவனுடைய அஷ்ட லக்ஷ்மிகளைப் போன்ற குமாரத்திகளை நவரத்தினங்களா லலங்கரித்து பட்டு பீதாம்பர முடித்தி எல்லோர் முன்னிலையிலும்,

---

† இந்த கந்தருவநகரம் யமபுரியின் வழியிலுள்ள பட்டணம். ஆன்மா நான்காம் மாசிக பிண்டம் புசிக்குமிடம்.

1. வைடங்க தேவராயருக்கு மஞ்சுவாணி என்பவளையும்
2. இந்திர சேனனுக்கு சுனந்தாபி என்பவளையும்
3. சுனபிகனுக்கு மாயாவதி என்பவளையும்
4. பூரணனுக்கு ஜெயகாமினி என்பவளையும்
5. மணிக்கிரீவனுக்கு சுவர்ணரேகை என்பவளையும்
6. சோபிதனுக்கு சந்திரவதனி என்பவளையும்
7. ஸௌளஸ்யனுக்கு சுந்திரசுராபி என்பவளையும்
8. அந்தரிஷனுக்கு விசித்திர காமினி என்பவளையும் விடங்க தேவராயனின் மைத்துனனாகிய வீரசேனனுடைய குமாரர்களும் அங்காரகாக்கியன் பௌத்திரர்களுமாகிய,
9. சித்திர வாகனனுக்கு சித்திரவல்லியையும்
10. சித்திர தேவனுக்கு சுந்தர வல்லியையும், தந்து பாணிக் கிரஹணஞ் செய்தார்கள். பிராமணர்களும் ஆங்கு விஜயஞ்செய்த தேவர்கள் தபோதனர்கள் முதலிய யாவர்களும் ஜெய ஜெய வென்று வாழ்த்துகள் கூறித் தங்கள் தங்களிருப்பிடஞ் சென்றார்கள். இப்பால் விடங்க தேவராயன் முதலியவர்கள் அவ்விடத்தில் சின்னாளிருந்து தன்னுடைடைந்தார்கள். பிறகு வைடங்க தேவராயராகிய பிரதம புத்திரருக்கு மகுடாபிஷேகஞ்செய்து தாங்கள் நால்வரும் தங்கள் பத்தினியார்களுடன்,

திருவிளையாடற் புராணம்.

வட்டவார் சடைக்குஞ்சியும் பூணநூன் மார்பு
மிட்ட நீறணி திலகமு மினைக் குழைதூங்க
விட்ட வெள்ளை முத்திரையுந் தோல்விரித்த பட்டிகையுஞ்
சுட்டவெண் பொடிப் பொக்கணந்தூக்கிய தோளும்
துய்யவெண்பொடி யழிந்து மெய்சிவந்திடக் சுவடு
செய்யும் வெண்டிரட்படிக நீண்மாலையுஞ் சிவந்த
கையிலங்கு கட்டங் கமுங் கண்டவர் மனஞ் சென்
றுய்ய வன்புற வீக்கிய வுதர பந்தனமும் எனத்

தபோ வேடம் பூண்டு வானப் பிரஸ்தாச் சிரமத்தைக் கைப்பற்றி திருக்கோ கரணமென்னு மரிய சிவதலமடைந்து சின்னாட் பூசித்து சிவலோக மடைந்தார்கள்.

வைடங்க தேவராயர் அரசாக்ஷி.

இப்பால் வைடங்க தேவராயர் தங்கள் பிதா பிதாதா முதலியவர்கள் அரசாண்டதுபோல, மனுநீதி தவராது செங்கோல் செலுத்த, மற்ற சகோதரர்களாகிய எழுவரும் தம்மைப்புடைசூழ, பலவரசர்களுந் தந் திருவடி துதிக்க மைத்துனர்களிருவரும் சேனாதிபதிகளாயிருக்க மந்திரி பிரதானிகள் தமதருகில் வீற்றிருக்க வரசுபுரிந்துக்

கொண்டு வருங்காலத்தில் தங்களுக்குப் புத்திரப் பேறில்லாமல் மிகுந்த துயரமுற் றிருந்தார்கள். அச்சமயத்தில், ஒரு யதீந்திரர் கையிற்றண்டு கமண்டலமும், இடையில் வெளுத்தமைந்த கிளோடு கோவணமும் மெய்யில் பஸ்மவிலேபமும், களத்திற் களங்கமற்ற உருத்திராக்ஷமும், நாவால் சங்கர: சங்கர: யெனப் போற்றிக் கொண்டு, வருங்காலவரிஷியை நமஸ்கரித்து வரவேற்று, ஆசனத்தி லமரும்படி சோட சோபசாரஞ் செய்தனர். காலவரிஷி சர்வ மங்கள முண்டாகும்படி ஆசிர்வதித்து ஆசனத்தி லமர்ந்தனர்.

வைடங்க தேவராயர். காலவரிஷி.

வைடங்க தேவர்—நமஸ்கரித்து, சுவாமி! தாங்களுறையுமிட மியாது? தங்கள் திருநாமம் யாது? தங்களைக்காண நாங்கள் கோற்ற நோன்பே நோன்பு.

காலவ—பிருதிவீச்சுர வம்ஸத்திற் பிறந்த உத்தம குணத்தோய்!

"வீடதேது வாசலேது விஷயமேது வேந்தனே!
மாடமக்கள் மனைவியேது மற்றுமாவ தேதுகாண்
நாடுபெற்ற நடுவர்கையி லோலைவந் தழைத்திடி
லோடுபெற்ற தவ்விலை பெராது காணுமிவ்வுடல்"

எமக்கு வீடேது, வாசலேது, மாடு, மக்கள், மனைவி யேது, ஒன்று மில்லை யாயினும், திருவிராமேச்சுரத்தினின்றும் பல சிவஸ்தளங்களைத் தரிசித்துக்கொண்டு ஈண்டடமர்ந்தேன். உங்கள் முகம் வாட்டத்துட னிருப்பதற்குக் காரணம் யாது? ஏதாகிலுங் குறையிருந்தால் அஞ்சாது கூறக்கூடும் என்று கூறினர்.

வைடங்க தேவர்—சுவாமி !

எழுபிறப் புந்தீயவை தீண்டாப் பழிபிறப்பாம்
பண்புடை மக்கட் பெறின் எனவும்

மக்கள் மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர்தம்
சொற் கேட்டலின்பஞ் செவிக்கு எனவும்

போந்த பலநியாயங்களையும், எனது முன்னோர்களுக்கு புத்திரப்பேறு உண்டாயிருந்து, எங்களுக்கு மாத்திர மில்லாதிருப்பதையும் நோக்க பெருங்கவலையும் துன்பமூ மூட்டுகின்றது. யாங்கள் புத்தென்னும் நரகத்தினின்று மெவ்வாறு விடுதலை யடைவோம். எங்கள் சந்ததி எவ்விதம் விருத்தி யடையும் என்னுந் துன்பமே எங்களை வருத்துகின்றது.

திருவள்ளுவர் குறள்.

மலரினும் மெல்லிது காமம்சிலரதன்
செல்வி தலைப்படுபவர் என்ற

இத்தகை இல்வாழ்க்கையிற் பெறக்கிடக்கும் பேறுகளில் மக்கட் பேறே மிக்கச் சிறந்ததாம்.

குழலினி தியாழினி தென்பர்தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்

என்ற செவ்விய செய்யுளொன்றே சாலும் புதல்வரின் அருமையை விளக்கும்.

காலவ—வைடங்கரே ! யானிதுகாறுந் தரிசித்துக்கொண்டு வந்த பல சிவதலங்களுக்குள் தொண்டை நாட்டில் திருக்காஞ்சி யென்னு மரிய தல மொன்றுண்டு. அத்தலம் மிக்க சிறப்புகள் பொருந்தியதாகும். ஒரு காலத்தில் பார்வதி பிராட்டியார் தமது நாயகனாகிய சிவபெருமானின் இருகண்களை விளையாட்டாகப் பொத்தியதினால் உலகம் யாவுமிருண்டது. பல உயிர்கள் மாய்ந்தன. பூசை, ஜெபம், தபம் முதலிய யாவுங் குன்றின. உடனே சிவபெருமான் உலகமுய்ய தமது நெற்றிக்கண்ணைத் திறந்தனர். இதனால் வந்தபாபம் நீங்கும் பொருட்டு உமாபிராட்டியார் சிவபெருமானை நோக்கி தான் அறம் வளர்க்க வேண்டுமெனக் கேட்க, உடனே இரு நாழி நெல்லை அளித்து முப்பத்திரண்டு தருமங்களையும் பூவுலகில் சிறப்புற்ற காஞ்சிமாநகரிற் புரிகவெனக்கூறி யனுப்பிய திவ்விய தலமாகும். இது காரணத்தினால் அறம் வளர்த்த நாயகி யென்று காமாக்ஷியம்மனுக்கு பெயருண்டாயிற்று.

காஞ்சிபுராணம்.

பற்பல வுயிர்களெல்லாம் பருவரவடி கேணின்றன்
விற்படு சுடர்கண் மூடிவிளைத்த தீவினையின் பேறு
மற்பனேனுடம் பின்மாசுங் கழியு மாதவங்க ளாற்றப்
பொற்ப மரிடமுங் காட்டி விடையருள் புரிதியென்முன்.

திருந்த நம் பூசையாற்றி விழிபுதை செயலால் வந்த
வருந்தவ றொழிவாயாக வங்கண் மாலதியு நின்றன்
பெருந்தனி யிருக்கை வைப்பிற் பிரசம்வார் காஞ்சியாகி
வருந்தடங் கருங்கட்பாவாய் மற்று நம் மிருக்கைதன்னில்.

சலதியுடைச் சேயிழைக்கு தமிழ்நாடே மதிமுகமாந் தமிழ்நாட்டுள்ளும்
அலர்புகழ் தண்டகநாடே கனிவாயா வதனுள்ளுஞ் ஜாதிபேதங்
குலவு மாருயிர்க் கெல்லாந் தத்தமது மரபொழுக்கம் குடங்கைசேரா
மகல மெனத்தேற்றுதலினு வெனவாங் காஞ்சிநகர் வண்மை சொல்வாம்.

சமுத்திரத்தை யாடையா யுடுத்திருக்கும் பூமிதேவிக்கு செந்தமிழ் நாடு மதிமுகமும், அந்நாட்டின் புகழ் மலிந்தோங்கும் கண்டக நாடே தொண்டைக்கனிபோற் சிவந்திருக்கும் வாயாகவும், பல ஜாதிப் பேதங்களாய் விளங்கும் மனிதர்க ளெல்லாம் தங்கடங்கள் வருணாச் சிரம தருமங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கத் தெரி விப்பதனுல் நாவுயென்றுஞ் சொல்லக்கூடிய திருக்காஞ்சி நகர மொன் றுண்டு. இதற்கு கச்சி யென்றும், காஞ்சி யென்றும், புவனசார மென்றும், விண்டுபுர மென்றும், கவிசித்து யென்றும், இளைய சித்து யென்றும், சகல சித்திபுர மென்றும், தபோமயபுர மென்றும், வரத ராஜபுர மென்றும், சிவபுர மென்றும் பல திருநாமங்களுள.

காஞ்சிபுராணம்.

பற்பல தேயமெல்லாம் பாங்குடைத் தொண்டைநாடு
பற்பல சங்கநாப்பட் படர்வலம் புரியா மங்கட்
பற்பல நகரமெலாம் வட்டமாய் படைத்த காஞ்சி
பற்பல வலம்புரிக்குள் சஞ்சலம் பணிலமாமால்.

திருச்சேது வாலவாய் சிராப்பள்ளி திருவழூவூர் திருவை யாறு
தருச்சூழுமிடை மருதூர் யாமென்று நடம் புரியச்சலியாத்தில்லை
கருச்சாடு முதுகுன்ற மருணகிரி திருவிரிஞ்சை கவினுரோத்தூர்
மருச்சூழுங் குழலுமையே நின்னெடுயொமகிழ்ந் துறையும் வளஞ்சூழ்காஞ்சி.

அக்காஞ்சிகலி நாசப் பொருட்டு நாம் படைத்து வைத்த தாதலாலே
யெக்காலு மந்நகரின கத்துயரும் வினைத்துயரு மெய்தாவாகு
மைக்காளஞ் சுவையமிழ்தின் மணந்த விழிமணி நீவியல்கு லெட்டுத்
திக்காளர்தமைப் பொதியும் பெருங்கீர்த்தி நகரவஞ் சிறிது கேட்டி.

பம்பை கம்பை புண்ணிய நீர் மஞ்சணதி வேகவதி பாலி சேயா
றென்பன வேழுலகு மிடுமேழ் மாலை யென வொழுகு மெய்து வோரைச்
செம்பது மக்கர் மெடுத்து விரைய நகர் விளிப்பது போற் றெங்கு நீறும்
வம்பவிழ் பூஞ் சோலைகளுண் மழை மறைத்த கதிர்போல வயங்குமூதூர்.

திசைமுகனுலஞ் சிக்கப்படுதலினுற் காஞ்சி யெனத்திசை போய் மல்கு
மிசை யுடையதிது பிரமலோக மென்று மிதனுற் பேரெய்துமாற்ரு
னசை விலாதங்குறைவோ ரெல்லார்க்கும் வீடுதவுமவ்வூர் நாப்பண்
வசையின்றித்திப் பியமாய்ப்புண்டரிகம்போலெமக்குவயங்குங்கோயில்.

அப்பிரம புரங்காஞ்சிநக ரல்லால் வேறில்லை யாகுமென்றே
செப்புமுப நிடதமெலாஞ் சிவாகமங்க ளொடுமுழக்குஞ் செல்வீயிந்த
வைப்பினைச் சேயிடையானு மாயிடையானு மிருந்து வணங்கிறக்கண்ணி
லெப்பெரும் பாவமுநீங்கி வீடெய்து முனக்குண்மை யியம்பினேமால்.

கச்சியு ளெண்ணூறு தீர்த்த நிறைந்துளகாமுறு பலதானம்
பொச்சமில்போகமும் வீடுமெளிப்பன போக்கரு மேன்மையாவா
மச்சமறுத்து வியாத னெனக்கருள் செய்த முறைப்படியே
யிச்சையி னோதுவலந்தணிர்கேண் மினெனச் சொல்லுற்றனனால்.

புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு !
நாரீஷு ரம்பா நகரீஷு காஞ்சி !
நதியீஷு கங்கா! நரபதியீஷு ராமா !
காவ்யேஷு மகாகவி காளிதாஸு !

சத்தி என்றாலும் காமாக்ஷி என்றாலும் இந்த அம்பிகையையே குறிக்கும். காமகோட்டி பீடம் என்றும் பெரியோர் கூறுவர். இவர் திருக்காஞ்சியில் எழுந்தருளிய சத்திபீடம். இவர் சிவத்தோடு அபின்னையா யிருப்பதால் பராசத்தி எனப்படுவர். இவர் காரியோன் முகியானபோது தமது சத்தியில் ஆயிரத்தொரு கூற்றில் ஆதிசத்தியையும், அந்த ஆதிசத்தியில் ஆயிரத்தொரு கூற்றில் இச்சா சத்தியையும் அவ்விச்சா சத்தியில் ஆயிரத்தொரு கூற்றில் ஞான சத்தியையும், அந்த ஞான சத்தியில் ஆயிரத்தொரு கூற்றில் கிரியா சத்தியையும் தோற்றுவிப்பர்.

இச்சத்தி அளவுபடாத ஆன்மாக்களை யீன்றும் வளர்த்தும் மலபரிபாகத்தின் பேரின்பத்தைக் கொடுத்தும் சிவமூர்த்தியின் திருவடியை யடையச் செய்வதால் உலகமாதா எனப்படும். இன்னும்

க் —	இடது கண்	— பிரமன்	கா—கலைமகள்
அ —	வலது கண்	— விஷ்ணு	மா—திருமகள்
ம் —	நெற்றிக் கண்	— உருத்திரன்	ஆக்ஷி—கண்

எனவும், காமகோடி — கோடி மன்மதரை உற்பவித்தவள்
காமகோடி — கோடி குபேரரை உற்பவித்தவள்
காமகோடி — தர்மார்த்த காம மோக்ஷத்தில் மூன்றாவதான காமத்திற்கு அப்பாற்பட்ட மோக்ஷமளிப்பவள்.
காமகோடி — காமியார்த்தமாக பூஜித்தாலும் ஏற்பவள்.
காமகோடி — கலைமகளையும், திருமகளையும் தோழிகளாகப் பெற்றவள்.

எனவுங்கூறுவர். தன லக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி, விஜய லக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, கஜ லக்ஷ்மி, வித்தியா லக்ஷ்மி, வீர லக்ஷ்மி என்னு மஷ்ட லக்ஷ்மிகளுஞ் சூழ்ந்திருப்பார்கள்.

சப்த முத்தி புரியிலொன்று. சுவர்ன காஞ்சி விருக்ஷம் நளைகள் பொன்மயமாகவும் இலைகள் மரகதங்களாகவும் கனிகள் சிவமணிகளாகவும் ஓங்கி மகரிஷிகளாற் காணப்பட்ட தடா

கத்தருகிலிருந்ததால் இப்பெயர் பெற்றது. இப்பட்டணத்தைப் பிரளயசித் என்றும் சிவபுரம் என்றும் விண்டு புரமென்றும் திரு மூர்த்தி வாசமென்றும் பிரமபுரமென்றும் காமபீட மென்றும் தபோவன மென்றும் ஜகச்சாரம் சகல சித்தி என்றும் கன்னி காப்பு என்றும் தொண்டீரபுர மென்றும் தண்டகாபுர மென்றும் காமபீடம் என்றும் புராணங்கள் கூறும்.

இத்தியாதி சிறப்புகள் வாய்க்கப்பட்ட காஞ்சி நகரத்துக்குச் சென்றால் ஸ்ரீ காமாக்ஷி யம்மையாரின் திருவருளைப் பெருவீர்க ளென்று கூறிவிட்டுச் சென்றனர். இவ்வாறு கூறின காலவரிஷியின் வார்த்தைகளைச் சிரமேற்பூண்டு மந்திரிகளை நகர் காவல்புரியும்படி யாக்ஞாபித்து தங்கள் தங்கள் பரிவாரங்களுடன் நவகண்டங்களையும் பார்த்து, கடவுளுடைய சிருஷ்டி வியப்பை வியந்து மனம் புளகித்து ஆங்காங்குள்ள சிவாலய விஷ்ணு வாலயங்களையும் தரிசித்துக்கொண்டு பரத னரசாக்ஷிபுரிந்த பரத கண்டத்தை யடைந்து வொவ்வொரு நாடுகளையும் பார்த்து மகிழ்ந்து,

> மேற்குப் பவழமலை வெங்கடநேர் வடக்காம்
> ஆர்க்கு மூவரி யணிகிழக்குச்—சீர்க்குளுயர்
> தெற்குப் பினாகை திகழிருபதின் காதம்
> நற்றொண்டை நாட்டெல்லை நாடு.

என்னும் தொண்டை நாட்டெல்லையை யடைந்து, இரும்பை, மாகாளம், அரசிலி, திருவக்கரை, அச்சிறுபாக்கம், திருக்கழுக்குன்றம், இடைச்சுரம், திருக்கச்சூர், ஆலக்கோயில், திருவான்மியூர், திருமயிலாப்பூர், திருவேற்காடு, வட திருமுல்லைவாயல், திருவலிதாயம், திருவொற்றியூர், திருக்காளத்தி, திருக்கன்னில், திருவண்பாக்கம், திருப்பாசூர், திருவாலங்காடு, திருவிற்கோலம், இலம்பையங் கோட்டூர், திருவூரம், திருமாற்பேறு, திருவல்லம், திருப்பனங்காட்டூர், திருவண்பாத்ரன், திருஓத்தூர், திருயாகரல், குறங்கணி முத்தம், திருநெறிக் காரைக்காடு, கச்சியனேக தங்காவதம், திருக்காதன்றளி, கச்சிமேற்றளி முதலிய தலங்கள் முப்பத்தொன்றையுந் தரிசித்து திருக்கச்சி யேகம்பம் வந்தடைந்தார்கள்.

வைடங்கன் முதலிய யாவர்களும் தங்கள் பத்தினிமார்களுடன் ஸ்நான பானங்கள் பூசை முதலியவைகளைச் செய்து முடித்துக் கொண்டு காமகோட்டி பீடத்தை யடைந்து, உமாமகேசுரனைத் தரிசித்து

> மாக்கைக்கிரங் குங்குருகும் வளர்சக்ர வாகப்புள்ளும்,
> நாக்கச்சரபங் குழைந்த தெவ்வாறு சகநலத்தை
> ஆக்கிப்பெருக்கித் திருவறச்சாலையி லன்னமிட்டுக்
> காக்கைக்கொரு கொக்கின் கீழேயிருக்குங் கருங்குயிலே.

(இ-ள்) உலகங்களைப் படைத்து வளர்த்து அழகிய தருமசாலையில் அமுது படைத்துக் காத்தற் பொருட்டு ஒரு மாமரத்தின் கீழிருக்கும் கருங்குயில் போன்றவளே! மாந்தளிர் போன்ற உன் கையில் அணியப்பட் டொலிக்கின்றவளையலும், வளராநின்ற சக்ரவாகப் பறவையை நிகர்த்த தனங்களும், படுதலால் சரப ரூபியாகிய சிவபெருமான் குழைந்து போயின தெப்படி? எனக் காளமேகன் புகழ்ந்து பாடியதுபோல, பல பாக்களால் போற்றிசெய்து தங்கள் துயரங்களைப் பகர்ந்து கரங்கூப்பித் தங்களை மறந்து துதித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படித் துதித்துக் கொண்டிருக்கும் நாட்களில் ஓர் இரவு வைடங்கனது சொப்பனத்தில் ஸ்ரீ காமாக்ஷியம்மன் தோன்றி,

> மைந்தரிலை யென்றுவாடும் மாண்புறு பிருதிவிவம்ஸ!
> புந்தியிற்கவலை நீக்கி புத்ரகா மேட்டியாகம்
> பந்தமில் லருணஸ்ருங்கர் பார்த்திடச் செய்வீராகி
> லந்தமாம் புத்ரப்பேற்றை யடைகு வீரவனிதன்னில்.

பிருதிவீச்சுர வம்சத்திற் றேன்றிய அரசர்களே! நீங்கள் வருந்துதல் ஒழிக. விபுண்ட புத்திர சிகாமணியும் பரமாத் மாவால் சாலோக சாமீப சாரூப சாயுச்ய பதவியும் சிரஞ்சீவி பட்டமும் பெற்ற அருண சிருங்க முனிவரைக்கொண்டு புத்திர காமேஷ்டியாகம் புரிந்தால் உங்களுக்குப் புத்திரப்பேறுண்டாகிவம்ஸ விருத்தியாகுமென்று மொழிந்து மறைந்தனர். உடனே வைடங்கன் திடுக்கிட்டு எழுந்து தம்பிமார்களைப் பார்த்துகண்ட கனவைக்கூறி சந்தோஷித்து கலைக்கோட்டு காலவ முனிவரை யழைத்து வருமாறு கனிஷ்ட சகோதரனாகிய இந்திர சேனனுக்காக்ஞாபிக்க, இந்திர சேனனு மவ்வாறே சென்று வணங்கி அழைத்து வந்தனன். வைடங்கன் முதலியவர்கள் சோட சோபசாரஞ்செய்து ஆசனமிட்டமரச் செய்து சுவாமி! யாங்கள் எவ்வாறு புத்திரப்பேற்றை யடைவோம். நமது காமகோட்டி பீடத் தாயாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் இருசிகசிங்க முனிவரையும் தங்களையுங் கொண்டு புத்திர காமேஷ்டி யாகஞ்செய்தால் புத்திரப்பே றுண்டாகுமெனக் கருணைகூர்ந்து சொப்பனஞ் சாதித்தனர். ஆகையினால் நமது இருசிகசிங்க முனிவர் எவ்விடமிருக்கின்றார்? இவரைத் தருவிக்கும்வழி எவ்வித மென்றும் விளங்கவில்லை. தாங்களே கருணைகூர்ந்து எங்களுக் கனுக்கிரஹம் புரிய வேண்டுமென வணங்கினார்கள். இதைக்கேட்ட முனிவர் அரச குமாரர்களே! இருசிக சிருங்கமுனிவர் மஹாவுத்தமர், நீரார்ந்த மேனியர் தண்டக மண்டலத்தர், நீள்சடையர், இவரை அரணி புத்ரர் எனவும், விபாண்டகர் புத்ரர் யெனவும், கலைக்கோட்டு முனிவர் எனவுங்கூறுவர். இவர் பிதாவாகிய விபாண்டகரென்பவர் காசிபரிஷியின்புத்திரர். இவர் ஒரு முறை நீராடச்சென்று அவ்விடம்

வந்த ஊர்வசியைக்கண்டு காமுற்றதினால் வீரியம் நீரில்விழ அதனை அவர் வளர்த்தமான் குடித்தது. அந்தமான் வயிற்றில் கலைக் கோட்டு முனிவர் தலையில் ஒரு கொம்புடன் பிறந்தவர். ரோமேஸ அஷ்டகோண மஹாமுனிவர்களுடன் கூடிச்சென்று மகாமேருவிலிருக்கும் புசுண்ட யோகியினிடம் ஞானார்த்த விசாரணை செய்துக் கொண்டிருக்கின்றார். உங்களி லொருவர் அவரிடஞ் சென்று உங்கள் குறைகளையும், உமாபிராட்டியார் சொப்பனத்திற் சாதித்ததையும் பகர்ந்து வணங்கினால், அவர் உடனே புறப்பட்டு வருவாரென்றுகூறித் தம திருப்பிடஞ் சென்றனர். வைடங் தேவ ராயர் அந்தரீக்ஷ ராயரென்னுந் தமது சகோதரனை விசாலாவதிக்கு அனுப்பி ஆங்குள்ள தங்கள் சகோதரிகளையும் மைத்துனர்களையும், மற்றுமுள்ள பெரியோர்களையும் அழைத்துவரும்படி அனுப்பினர். அவர் அவ்வாறே சென்று மைத்துனர்களிடமும் சகோதரிகளிடமுங் கூறி அழைக்க, அவர்களும் தங்களது பிரதானிகளில் ஒருவராகிய சுதன்மனை அந்நகரத்தை யாளும்படி திட்டஞ்செய்து விட்டு சதுரங்க தளத்துடன் கச்சியம்பதிக்கு வந்து சேர்ந்தார்கள். இப்பால் இந்திர சேனராயர் தமயனுக்கிணைப் பிரகாரம் வடதிசையை யடைந்து முக்கண்டங்களையுங் கடந்து இளா விரத கண்டத்தி லிராநின்ற ஆயிரத்தெட்டு சுவர்ன சிகரங்களையுடைய மேருமலையின் மேற் சென்று தென் கீழ்திசையில் பிரகாசிக்கும் பிரம்மாண்ட காரமாய் விளங்கும் படிமரத்தை அடுத்து, அதன் சாகைகளைக் காணுதவனுகி சித்தங்கலங்கி வருந்தி மீண்டு மொவ்வொரு சாகைகளாக ஆராயுங் காலத்தில், உத்திர திசையில் விசாலமான வோர் சாகையின்மீது நான்கு முனிவர்களும் ஞான சாத்திர சம்பாஷணை செய்துக் கொண்டிருப்பதைக் கண்டான். கண்டதும் காலவரிஷி கூறிய குறிப்பை மனதிற் கொண்டான். இந்திர சேனராயர் அவர்கள் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து கை கட்டி வாய் பொத்தி நின்றான். இதைப்பார்த்த புசுண்ட யோகி குழந்தாய்! நீ யார்? இங்கு வந்த வரலாறென்ன? என்று வினவியதும் இந்திர சேனராயர் வணங்கி தாழ்ந்த குரலுடன் தங்கள் வம்ச பரம்பரையையும், மனேதுக்கத் தையுங்கூறி ஸ்ரீ காமகோட்டி பீடத்தின் தாயாகிய ஸ்ரீ காமாக்ஷி யம்மன் சொப்பனத்திற் கூறியதுங் கூறிநின்றான். இவைகளைக் கேட்ட தவமுனிவர்கள் மிக்க சந்தோஷ மடைந்து விபாண்டக புத்திர ரத்தினமே! அதி சீக்கிரத்தி லிவ்விஷயத்தை முற்றுவித்து இவர்களை சந்தோஷ மடையச்செய்து விட்டு வாருமென விடை யளிக்கவே! இருவரும் நமஸ்கரித்து உத்திரவு பெற்று ககன மார்க்க மாய் காஞ்சி நகர் வந்து சேர்ந்தார்கள்.

விருத்தம்.

வந்தமுனிவனை யரசனெதிர் கொண்டேத்தி
மணித்த விசிலிருத்தி யர்க்கிய பாத்திய மீந்து
எந்தனுள மயல்தீர்க்கு மமுதே தேவே
யென்றிறைஞ் சித்தமதுகுறையி யம்பவோர்ந்து
சுந்தரிக்கன்ப ருமாகிக் கச்சியாளுஞ்
சுதரிருபத் தொருநால்வர் தோன்றுவாரென்
றந்த ரங்கந்தேர்ந்தெதிர் காலங் கண்டம்மைக்
கன்பானுன் தோத்திரஞ் செய்தின்பானுனே.

அம்மகா முனிவரைக்கண்டவுடன் வைடங்க தேவராயரும் தம்பிமார்களும் புத்திரப்பே றடைந்தது போலவானந்த பரவசராய் அவரது திருத்தாட்களிற் சிறங்களைத் தாழ்த்தி அர்க்கிய பாத்திய முதலிய சோட சோப சாரங்கள் புரிந்து பக்தி விநயத்துடன் நிற்பதைக்கண்டு முனிவர் சந்தோஷித்தி ஆசிர்வதித்தனர். பிறகு முனிவரிடம் தங்கள் குறைகளை யெல்லாங்கூறி, ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் சொப்பனத்திற் சாதித்ததை பரிவுடன் சாற்றினார்கள். இவை யாவுங் கேட்ட முனிவர் சந்தோஷித்து, இராஜ கெம்பீரர்களே! நீங்கள் ஒன்றுக்கும் வருந்த வேண்டாம். உமா பிராட்டியார் சொப்பனத்திற் சாதித்ததைப்போல் நாம் புத்திர காமேஷ்டியாகஞ் செய்வதற்கு வேண்டிய சாமான்களைத் தயாரிக்கும்படி ஏற்பாடு செய்ய உத்திரவிட்டனர், உடனே வைடங்கன் முதலியவர் யாகத்துக்கு வேண்டிய வஸ்துக்களையுஞ் சித்தஞ்செய்து ஓர் யாகசாலையு மமைத்தார்கள். கூடவே யாகசாலைகளையும், விடுதிசாலைகளையும், மற்றும் வேண்டிய பாக சாலை முதலாய வனந்த சாலைகளையும், தனித்தனி நியமித்து, இந்திரன் முதலிய சகல தேவர்களையும் பிராப்த மாகும்படி பிரார்த்திக்க, அவர்களும் யாகசாலைக்கு வந்து விஜயஞ்செய்தார்கள். அஷ்ட வசுக்கள், கருடர், காந்தருவர், கின்னர், கிம்புருடர், வித்தியாதரர் முதலிய ரிஷிகளும் காஞ்சி யெனும் பதியில் நடைபெறும் புத்திர காமேஷ்டி யாகத்துக்கு வந்து தங்கள் தங்கள் விடுதிகளிலமர்ந்தார்கள். பூவுலக மன்னர்களுக் கெல்லாந் தனித்தனி வோலை விடுக்க, அவரவர்கள் சேனைகள் புடை சூழ ஆயுத பாணிகளாய் காஞ்சிமாநகரத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

வீர நாராயணர் விஜயம்.

துங்கமுறுங் கொய்யுளையது ரகதமாப் படைகுழுமிச்
சங்கமுறுங் கடலலையிற் சங்கவெணிற் ருவுவன
சிங்கள ரொட்டியர் துளுவர் சீனரவந்தியர் கலிங்கர்
செங்கையிலா யுதராகித் திருக்கச்சி மிசைப்படர்ந்தார்.

இப்பால் வைடங்க ராயர் முதலிய எண்மரும் அவர்கள் மைத்துனர்களிரு வருமாக பதின்மரும் விதிப்படி தீக்ஷா சமஸ்காரம் முதலிய பெற்று கலைக்கோட்டாருடன் ஸ்ரீ காமாக்ஷியம்மன் சந்நிதியடைந்து வலம் வந்து தோத்திரஞ்செய்து நிற்கும்போது

விருத்தம்.

கலைமுநி யிறைஞ் சிவாழ்த்தக் காமாக்ஷி யன்புகூர்ந்து
நிலையுடனெதிர் காலங்தேர் நிமலயோ கீஸ்வரன்முன்
சிலைநுதற் றெரிவை மாருந்தே வருமிருபாற் சூழத்
தலைமையாந் தரிசனத்தைத் தந்திட்டாள் வந்திட்டாளே.

ஸ்ரீ காமாக்ஷி.

கலைக்கோட்டார்.

ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மையார் கருணை கூர்ந்து தமது சேவையைத் தந்தனள். உடனே கலைக்கோட்டார் நமஸ்கரித்து துதித்து, அம்மணி! அடியேனை இங்கு அழைப்பித் தேவிய கரும முடியுமாறு நீயே யாகசாலையில் எழுந்தருளி யிருந்து நடத்த வேண்டுமெனப் பலவாறுகத் துதித்து நின்றூர். அப்போது அம்மை யாரும் அகமகிழ்ந்து, மைந்தவா! உமது கோரிக்கைப் படியே பிரசன்ன மாகிறேம். நீ இப்பதின்மரின் குறைகளை நிவர்த்திக்கும் பொருட்டு யாகசாலைக்குச் செல்லெனக்கூறி மறைந்தனள். பிறகு முனிவர் முதலிய யாவரும் சந்நிதானம் விட்டுப்புறப்பட்டு யாக சாலைக்கு வந்து, ஆங்கு விஜயஞ் செய்திருக்கும் தேவர்களுக்கும் மற்று முண்டானவர்களுக்கும் வந்தனை வழிபாடுகள் செய்து, தக்க ஆசனமிட்டு அமருமபடியாகக் கூறினர்கள்.

மஹா தபோதனரும் திரிகால முணர்ந்த சாமர்த்தியரு மாகிய கலைக்கோட்டு முனிவர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலிய சப்த ரிஷிகளும், பிரகஸ்பதி முதலிய தேவ புரோகிதர்களும் மற்றுமுள்ள பல முனிக்கூட்டங்களும் தம்மைச் சூழ்ந்திருக்க வேதாகம விதிப்படி வைடங்கன் முதலிய எண்மரும் அவர்களின் மனைவியரும், சித்திர வல்லி, சுந்திரவல்லி யாகிய இரு சகோதரிகளும், அவர்களின் நாயகர்களும் வீற்றிருக்க மந்திர பூர்வகமாய் பவுத்திரமணிந்து

அம்மனின் அனுக்கிரகத்தாலும், தேவர்கள் முனிவர்களது ஆசீர்வாத பலத்தாலும் புத்திர காமேஷ்டி யாகத்தை இனிது முடித்தார்கள்.

கலைக்கோட்டார் புத்திர காமேஷ்டி யாகம் புரிதல்.

அது சமயத்தில் அந்த புத்திர காமேஷ்டி யாகத்தின் ஓமாக்னி மத்தியில் ஒரு பூதமானது அவிர்ப்பாக மாகிய பாயாசத்தை சுவர்ன பாத்திரத்திலேந்தி நிற்பதைக்கண்ட ஸ்ரீ காமாக்ஷியம்மன் கலைக்கோட்டாரையும் வைடங்கன் முதலியவர்களையும் பார்த்து, கலைக்கோட்டாரே! நீர் இப்பாயாசமாகிய அவிர்ப்பாகத்தைப் பெற்று யாவருக்கு மளிக்கின் புத்திரோற்பவ முண்டாகும். அஞ்சுதல் ஒழிக. அரசர் மக்களே! நீங்களிக்கச்சிமா நகரத்தையும், விசாலாவதியையும் அரசு செலுத்தி வருவீர்களாக. உங்களுக்குப் புத்திரப் பேறுண்டாகி நீங்கள் மிக்க சந்தோஷ மடைவீர்கள். உங்களுக்கு மனக்கஷ்டமும் சஞ்சலமும் இடையூறும் நேர்ந்த காலத்தில் யான் உடனிருந்து இரக்ஷித்தருளுவேன் என்றுகூறி அந்தர்த்தானமாயினர். கலைக்கோட்டார் ஆனந்த முற்று, மிகுந்த பக்தி விநயத்துடன் ஓமாக்கினியை வணங்கி நமஸ்கரித்து, அந்த சுவர்ன பாத்திரத்தை வாங்கியபோது, வைடங்கன் முதலிய வரசர்கள் எண்மரும், அவர்களின் பத்தினிமார்கள் எண்மரும், சித்திரவல்லி, சுந்தரவல்லி யாகிய இரு சகோதரிகளும் தங்கள் புருஷன் மார்களும் வணங்கி கை கட்டி வாய் பொத்தி நின்றார்கள். அப்போது இவர்களை ஆசீர்வதித்து அந்த பாயாசத்தை முறைப்படி பகுத்து பத்து பெண்களுக்கு மளித்தனர். ஆங்கு விஜயஞ் செய்திருந்த முனிவர்களும், தேவர்களும் புத்திரப் பேறுண்டாகும்படி யாசீர்வதித்து பூமாரி பொழிந்து தங்களிருப்பிடஞ் சென்றார்கள். பிறகு பூவுலகத்தரசர்களும் விடைபெற்றுத் தங்கள் தங்கள் நகரங்களுக்குச் சேனைகளுடன் புறப்பட்டனர்.

சுலோகம்.

"ஸ்ரீ காஞ்சி காமகோட்டி காமாக்ஷி க்ருபாகடாக்ஷாய:
ஸ்ரிங்முனியந்து புத்ர யாக ப்ரதிஷ்டஹ:
அதித்துவிதச சதுர்யாகப் புத்ரஸ்ய தியோமஹி:"

கவி.

காமாக்ஷி வரத்தானுங்கலைக் கோட்டார் மகத்தானுந்
தாமாக மூவெண்மர் தோன்றினர் தரணியினிற்
பூமா ஞயரசாண்டு புவிபுகழ வாழ்ந்திவெர்
நேமாகக் கோட்டங்கள் நிருவி வாழ்வர்.

விருத்தம்.

கச்சியுமையினை முனிவன் துதித்திறைஞ் சக்
காவலரு மிக வணங்கிக் கருத்தைக் கூற
மெச்சு முனிவனை நோக்கியாக மொன்று
விதித்தியற்றிற் புத்ரருண்டா மெனக் கேட்டன்னேன்
உச்சிதவானேரிருடிமு னிவனேடு
முயர்மகஞ் செய்தவிர்பாக மெண்மருக்கும்
இச்சை மனைவியர்க் கவர்புத்ரிகட்கு மீய
வின்புற்றூர் புதல்வரைப் பெற்றன் புற்றூரே.

இப்பால் கலைக்கோட்டு முனிவர் வைடங்கராஜன் முதலியவர் பார்த்து உங்களுக்குப் புத்திரர்களுற்பத்தி யானதுந் தெரிவிக்கில், யான் வந்து செய்ய வேண்டிய சடங்குகளை இனிது முடிப்பேன் அஞ்சற்கவென்றுகூறி, உத்திரவு பெற்று அரசமக்கள் யாவரும் வணங்கி வழிவிட, தங்கள் ஆச்சிரமங்களுக்குச் சென்று இனிது வீற்றிருந்தார்கள்.

வீரபிரம்மையங்காரு காலக்கியானமு.

1-வது. முட்டுமுட்டனியேறு முட்டருதனியேறு ஈமுட்டு ரத்தம் ஈசரீரம்பு.

2-வது. கமலமுலோஈமுட்டு கமலமுலோவெலசிந்தி கமல முலோப்பலமுட்டு காந்திகா துமிக்கன்.

3-வது. முன்னுள்ளாமுச்சுடலு முட்டநீதொலி குண்டே முட்டுலோபலமுட்டு அதியாலாசமிசன்.

1-வது. நெலக்கொகதினமு நேர்ப்புத்தோ ஈமுட்டு பாது தெலியக்காமுட்டு பாராடசாகன்.

2வது. ரெண்டுநெலலொகதினமு அண்டபாயகராத்திரி ஸ்ரீ ஹரிநீவெதுக்குடக்கு சிலுக்கவாலதிரிகன்.

3-வது. மூடுநிலலொகதினமு முறிக்கிகெர்ப்பமூனந்து மூல மந்திரசேத்தா முத்தேருபலிசன்,

4-வது. நாலுநெலலொகதினமு நாககாண்டுகுடொச்சி நவ சூஸ்திரதுவாரம்புலு நலமேருபரிசன்.

5-வது. ஐதுநெலலொகதினமு ஆ சதாசிவடொச்சி கண்டஸ் தானமு சிரசு கிரமமேருபரிசன்

6-வது. ஆறுநெலலொகதினமு ஆருத்துருடாபிர்மா அபையஸ் தானமுலிச்சி ஆயிசுலுபோசன்.

7-வது. ஏடுநெலலொகதினமு எருக்காயஜீவனுக்கு மதி லோனலுங்கொட்டி மனசுதாதெலிப்பன்.

8-வது. எனிமிதிநெலலொகதினமு ஏர்ப்பாட்டு பிண்டம்பு காந்தஸ்திரிகொர்ப்பமுனு கதிலாடுதுண்டன்.

9-வது. தொம்மிதிநெலலொகதினமு துவாரம்புலுவிடுவுமனி உற்பத்தியாயினு யீபதவிலோனு

1-வது. தல்லிஉகதேகானி தன்றிலெந்தரோகானி தனதப்பு தீர்ப்புமணி தெண்டமுலுபெட்டன்.

2-வது. ஈபிண்டவசனம்பு ஈபிண்டசாஸ்திரம்பு காருபிண்டமு சேத்த கலிநீளுசல்லன்.

3-வது. மாயமந்தரசானி மறிபோத்துலூரையா மந்தரமுலு செப்புகு மரிபொட்டுகோசன்.

பிறகு விசாலாவதியையும், காஞ்சிமாநகரத்தையும் நீதிவழு வாது அரசுபுரிந்துவரும் நாளில் காஞ்சியில் பதின் மருக்குங்கர்ப்பந் தரித்தது.

திருவள்ளுவர் ஞானம்.

ஓராமாதம்—உதிரந்திரண்டு

ஈராமாதம்—கொழுந்துவிட அமர்ந்து

மூன்றாமாதம்—முகமதுவெளுத்து மாங்கிஷந்திரண்டு மூலே நுனிகருத்து

நான்காமாதம்—நசக்கியமசக்கை நரம்பு நாடிகளமர்ந்து

ஐந்தாமாதம்—அழகுசீமந்தம் பஞ்சவர்னமாய் ஆமைபோல் மெய்களும்

ஆராமாதம்—அறிவுபுகுந்து ஆமைபோல்வடிவுற்று கால் கைகள் வகுத்து துவாரங்கள் உண்டாகி அடிவயிர்கனத்து அரையது நொந்து

ஏழாமாதம்—இனியதுபுசித்தேன் கொர்பத்திலிருந்து முழக்க முற்று கொர்ப்பத்தை சூழ்ந்து புரள

எட்டாமாதம்—பட்டணமரிய பட்டுபாவாடையுடித்தி நீட்டி முடக்கி தாயுண்ட அன்னசாரத்தை தொப்புள் வழியாகவுண்டு பிள்ளையுடல் வளர்ந்து உயிருண்டாகி

ஒன்பதாமாதம்—உகந்தறிவுண்டாகி தலைகாலளவு ரோமத்துவாரம் உண்டாகி ரோமக்குருத்து அறிவுட னுரங்கையில் விசனம் பொருக்கமாட்டாமல் ஈசனை நோக்கி தவஞ் செய்து

பத்தாமாதம்—நிரைந்தபிண்டமாய் மலைமேலிருந்து தலையது கிழாய் அபானவாயுவால் தனையனும் தள்ளப்பட்டு அலகிலாவருத்தம் அரிவையாள்தனக்குமேலிட்டு வாய்மெய்கள் நொந்திடவும் பாலகனைப் பெருவது பரமன்கற்பனையே.

அன்னையெனுங் கெர்பமதுள் வந்த தனிலேயிருந்து
நன்னயமாய்ப் பத்து திங்கள் நானகத்திலே யிருந்தேன்
என்னென்ன வதிசியங்களிவ்வுலகிலே யமைந்த
உன்னதமெலாம ரைந்தே உண்மையினைக் காண்கில்லார்

புத்திரோற்பவம்.

இவ்விதம் பத்து திங்கள் கழிந்ததும் வைடங்கராஜன் முதல் எண்மர்மனைவியர்க்கும் தனித்தனி ஒவ்வொருவருக்கு மிரண்டு புத்திரர் விகிதமாக 16 பிள்ளைகளும், சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் 4 குமாரர்கள் விகிதமாக, இரண்டு சகோதரிகளுக்கும் 8 குமாரர்களுஞ் ஜனித்தார்கள். இச்சங்கதியறிந்த வைடங்கராஜன முதலாயுள்ளவர்கள் ஆனந்தசாகரத்தி லாழ்ந்தவர்களாய் திருக்கம்பை முதலிய நதியில் ஸ்நானஞ்செய்து புதல்வர்களைக் கண்டு களித்து ஸ்ரீ காமாக்ஷியம்மனைத் துதித்து வணங்கி கலைக்கோட்டாரையழைத்து வரும்படி தமது சகோதரரை அனுப்பினர்.

இந்திரசேனராஜனும் அதிவிரைவில் விபாண்டக வனஞ்சென்று முனிவரை நமஸ்கரித்து புத்திரோற்பவ விசேஷத்தை அறிவிக்க, கலைக்கோட்டு முனிவர் சந்தோஷமடைந்து தமது சீடர்களையும் அழைத்துக்கொண்டு கச்சியம்பதிக்கு வந்தருளினர். முனிவர் வரவை வைடங்கராஜன் முதலானோர் சென்றழைத்து அர்க்கியபாத்திய சோடசோபசாரத்துடன் வலம் வந்து பணிந்து நவரத்தின கசிதமான பீடத்திலிருத்தி தங்கள் சிசுக்களுடன் பத்தினிமார்களை வரும்படி கட்டளையிட அவ்வாறே வந்து பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து

கெர்ப்பத்தைச் சூழ்ந்து 72-ஆயிரம் நாடி நரம்புகளும் ஆராதாரமும் ஐந்தெழுத்தும் 51-அக்ஷரமும் பஞ்சபூத தேவதைகளும் தூலசூக்மத்துடனே கொழுந்துவிடும்.

நிற்கக்கண்ட தபோதனர் ஆசிர்வதித்து சுப லக்கினத்தில் ஜாதக கர்ம மெழுதி முடித்தனர்.

நாமகரணம்

கேட்பீர் தபோவல்லவர்களே!

தங்கள் நகரை அலங்கரித்து முப்பத்திரண்டு தருமங்களையும் புரிந்து ஏழைகள் கேட்கும்படியானவைகளை இல்லையென்னாது கொடுத்து களித்து நாமகரணஞ் சூட்டுவதற்க்காக முனிவரை நமஸ்கரித்து சுவாமி தங்களனுக்கிரகத்தினாலுதித்த இக்குமாரர்களுக்கும், தங்கையின் பிள்ளைகளுக்கும் நாமகரணஞ்சூட்ட வேண்டுமென்று பிரார்த்தத்தனர். கலைக்கோட்டார் சந்தோஷித்து நல்லோரையில் ஓமாக்கினி வளர்த்து ஏழைமக்களுக்கு கோதானம், பூதானம், வஸ்திர தானம், அன்னதானம் முதலியவளித்து ஸ்ரீசொர்ன காமாக்ஷியம்மனை கலச பூஜையில் ஆவாகனஞ் செய்து ஸ்தாபித்து பத்திர புஷ்பங்களாலருச்சித்துப் பரவிப்போற்றி நமஸ்கரித்து வைடங்கராஜனையும் மற்றவர்களையும் குழந்தைகளுடன் அமரச்செய்து குழந்தைகளைப்பார்த்து மிகுந்த வாஞ்சையுடன் அடியிற் குறித்த நாமகரண மிட்டார்கள்.

ஆண் சந்ததிகள்.

தந்தையின் பெயர்.	மனைவியின் பெயர்.	புத்திரர்களின் பெயர்.
வைடங்கன்	மஞ்சுவாணி	பிரபோதயன் சுப்ரதீகரன்
இந்திரசேனன்	சுநந்தாபி	ஜெயகரன் வீரபாகன்
சுஞபிகன்	மாயாவதி	பராக்ரமன் வைரவன்
பூர்ணன்	ஜெயகாமினி	நாபன் சுகுணன்
மணிக்கிரீவன்	சுவர்ணரேகை	சுபசீலன் பந்துருவன்
சோபிதன்	சந்திரவதனி	வாமலோசன் விக்ரமன்
சௌளஸ்யன்	சுந்தரசுரபி	கமலலோசன் ஜெயசிம்மன்
அந்தரீஷன்	விசித்திரகாமினி	வராங்கன் கடிகன்

பெண் சந்ததிகள்.

தந்தையின் பெயர்.	மனைவியின் பெயர்.	புத்திரர்களின் பெயர்.
சித்திரவல்லி	சித்திரவாகனன்	போஜகன் நந்தன் மைடனன் வஜ்ஜிரஹாரன்
சுந்தரவல்லி	சித்திரதேவன்	ரத்னசேகரன் அதிகாந்தன் சாந்தவர்த்தனன் பிரதாபன்

இவ்வாறாகிய நாமகரணங்களைச் சூட்டியதும் ஸ்ரீ ஏகாம்பர நாதர் ஆலயத்துக்கு அழைத்துச் சென்று தரிசனந்தந்து ஸ்ரீகாமாக்ஷியம்மன் சந்நிதியில் விழுந்து நமஸ்கரித்து, தாயே! எங்கள் வம்ஸத்தை யாதரித்துக் காத்தருள வேண்டும். தங்களனுக்கிர கத்தினாலிருபத்தி நான்கு புத்திரர்களுற்பத்தியாகி கலைக்கோட்டாரால் நாமகரணஞ் சூட்டப்பட்டது. ஆனவிவர்களுக்கு கோத்திர மிருத்தல் வேண்டுவது நியாயமாயினமையின், அக்கோத்திர மின்னதென்று எங்களுக்கும் கலைக்கோட்டாருக்கும் விளங்காமையினால் தாங்களே அதை விளக்கியருள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டு நிற்கும்போது, மன்னவ! இந்தக் கலைக்கோட்டு மஹரிஷி 24-மனையார்களுக்குங் குலகுருவாகும். மற்ற ரிஷிகளால் கோத்திரங்களைப் பெருவீர்களென்று அசரீரியாக வந்ததிருவாக்கைக் கேட்டு மகிழ்ந்து யாவருந் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள்.

இப்பால் அம்மன் வாக்கின்படி குலகுருவாகிய கலைக்கோட்டு மாமுனிவர் ரிஷிகளைப் பார்த்து சுவாமிகளே! கிருஹஸ்தாஸ்ரமத்திலிருக்கும்படியான ஒவ்வொருவர்களுக்குங் கோத்திர மிருத்தல் வேண்டுவது அவசியம். ஆனால் இப்புத்திரர்களுக்கு கோத்திர மில்லா திருப்பதே பெருங்குறையாகும். ஸ்ரீ காமாக்ஷியம்மனின் திருவாக்குப் பிரகாரம் கோத்திர மளிப்பீர்களாக என்று பக்தி விநயத்துடன் கேட்டுக் கொண்டபடி ரிஷிகள் சந்தோஷித்து சந்தன புஷ்ப தாம்பூலந் தரித்தும் வழங்கியும் ஒவ்வொரு ரிஷிகளும் ஒவ்வொரு குழந்தைகளையும் பற்றி யணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு அடியிற்குறித்த கோத்திரப் பெயர்களிட்டனர்.

ஆண் சந்ததிகள்.

நெ.	ரிஷிகளின் பெயர்.	அரசகுமாரர்களின் பெயர்.	கோத்திரப் பெயர்.
1	முகுந்தரிஷி	பிரபோதய ராஜனுக்கு	மும்முடியவார்
2	மங்களரிஷி	சுப்ரதிகர ராஜனுக்கு	மக்கடவார்
3	கௌசிகரிஷி	ஜெயகர ராஜனுக்கு	கவலவார்
4	நகுலரிஷி	வீரபாக ராஜனுக்கு	தம்மயவார்
5	காளத்திரிஷி	பராக்ரம ராஜனுக்கு	கணித்தியவார்
6	தொந்துவரிஷி	வைரவ ராஜனுக்கு	தில்லையவார்
7	பில்லவரிஷி	நாப ராஜனுக்கு	பில்லிவங்கரவார்
8	கணத்தரிஷி	சுகுண ராஜனுக்கு	கந்தவங்கரவார்
9	மாண்டவ்யரிஷி	சுபசீல ராஜனுக்கு	மரட்டியவார்
10	சாண்டின்யரிஷி	பந்துருவ ராஜனுக்கு	கப்பவார்
11	தார்க்கியரிஷி	வாமலோச ராஜனுக்கு	தரிஷியவார்
12	வாசவரிஷி	விக்ரம ராஜனுக்கு	வாஜ்ஜவார்
13	அனுசூயரிஷி	கமலலோல ராஜனுக்கு	கெந்தியவார்
14	மதுசூதனரிஷி	ஜெயசிம்ம ராஜனுக்கு	நலிவிரிவார்
15	சுரகமாரிஷி	வராங்க ராஜனுக்கு	சுரயவார்
16	குடிகுலரிஷி	கடிக ராஜனுக்கு	கோலயவார்.

பெண் சந்ததிகள்.

நெ.	ரிஷிகளின் பெயர்.	அரசகுமாரர்களின் பெயர்.	கோத்திரப் பெயர்.
17	குந்தலரிஷி	போஜ ராஜனுக்கு	மாதளையவார்
18	கௌண்டியரிஷி	நந்தன ராஜனுக்கு	தவலையவார்
19	கௌதமரிஷி	மைடன ராஜனுக்கு	கொரகவார்
20	சோமகுலரிஷி	வஜ்ஜிரஹார ராஜனுக்கு	சொப்பியவார்
21	ரோசனரிஷி	ரத்னசேகர ராஜனுக்கு	ராஜபைரவர்
22	சௌனஸ்யரிஷி	அதிகாந்த ராஜனுக்கு	பலிவிரியவார்
23	ஹரிகுலரிஷி	சாந்தவர்த்தனராஜனுக்கு	சென்னவர்
24	பாரத்துவாசரிஷி	பிரதாப ராஜனுக்கு	பசுபதியவார் †

† இதை பச்சைய கோட்டவார் என்றும் கூறுவர்.

இவ்விதமாகிய கோத்திர மருளிச்செய்த பின்னர் யாவர்களையும் ரிஷிகள் ஆசீர்வதித்து தங்கள் தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

கலைக்கோட்டார் 24 பிள்ளைகளுக்கு உபதேசஞ் செய்தல்.

இருபத்தினான்கு குமாரர்களுக்கும் அன்னப்பிராசனம், சௌளோபநயனம் முதலிய சம்ஸ்காரங்கள் செய்தபின், தினே தினே பூரண சந்திரனைப்போல பிள்ளைகள் வளர்ந்து, தக்க பருவம் வந்தபோது, கலைக்கோட்டார், இருக்கு, யசுர், சாமம், அதர்வமாகிய நான்கு வேதங்களையும், மந்திரம், நிகண்டு, சந்தோபிசிதம், சோதிடம், வியாகரணம், நிருத்தம் முதலிய ஆறு சாஸ்திரங்களையும், அக்கர இலக்கணம், இலிகிதம், கணிதம், புராணம், நீதிசாஸ்திரம், தரும சாஸ்திரம், யோக சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், சகுன சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், உருவ சாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுர பாடனம், நாடகம், நிருத்தம், சத்த பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர பரீக்ஷை, கனகபரீக்ஷை, இரத பரீக்ஷை, கஜபரீக்ஷை, அசுவபரீக்ஷை, இரத்தின பரீக்ஷை, பூ பரீக்ஷை, சந்திராம இலக்கணம், மல்யுத்தம், ஆகருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதன சாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தர்வ வாதம், பைபீல வாதம், கௌத்துக வாதம், தாது வாதம், காருடம், நட்டம், முட்டி ஆகாயப் பிரவேசம், ஆகாய கமனம், பரகாயப் பிரவேசம், அதிரிச்யம், இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், அக்கினி ஸ்தம்பம், ஜல ஸ்தம்பம், வாயு ஸ்தம்பம், திட்டித் தம்பம், வாக்குத் தம்பம், சுக்கிலத் தம்பம், கன்னத் தம்பம், கட்கத் தம்பம், அவத்தைப் பிரயோக முதலிய அறுபத்து நான்கு கலை ஞானங்களையும், சைவம், பவிஷ்யம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிர்மாண்டம், காருடம், நாரதீயம், விஷ்ணு பாகவதம், பிரமம்,

பதுமம், ஆக்னேயம், பிரமகைவர்த்தம் முதலிய பதினெட்டு புரா ணங்களேயும், உசனம், கபிலம், காளி, சநற்குமாரம், சாம்பவம், சிவதர்மம், சௌரம், துர்வாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீபம், பாரா சரீயம், பார்க்கவம், ஆங்கிரம், மாரீசம், மாளவம், வாசிட்டம், இலிங் கம், வாருணம் முதலிய பதினெட்டு உப புராணங்களேயும், சீருத்தி ரம், விரத காருண்யம், சுவேதாசுவதிரம், கைவல்லியம், காலாக்கினி, கடம்வல்லி, காந்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பிரம கபாலம், பிரமாங்கிசம், பாற்காம், பிரம பிந்து, ஆருணி, அமுர்த பிந்து, பகுவபஞ்சம், தேசோ பிந்து, வார்சயாயநியம், போதாயநியம், ஆசுவலாய நியம், சாங்கியாய நியம், வாசிகாய நியம், சௌனகியம், சிவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோட்டியம், மாண்டூகம், முண்டிறம், மௌண்டிரம் என்னும் முப்பத்திரண்டு உபநிடதங்களே யும் காமிகம், யோகம், சிந்தியம், காருணம், அசிதம், தீப்தம், சூக்மம், சகத்திரம், அன்சமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்பு வம், அனலம், வீரம், இரேவரம், மகுடம், விதலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலௌதம் முதலியவைகளேயும், தருமம், விச்சுவேசம், விஸ்வசாரம், விருத்தம், தாம்ரம், நளம், யமம், அனுமான், பானு, கற்பாறியம், சிருட்டம், மானசாரம், வத்து, வித்தியாபதி, பாராசரியம், அரிடிகம், சயித்திகம், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சௌமம், விஸ்வகாசீபம், மகதந்திரம், விசாலம், சித்திரம், காலயூபம், நாமசங்கீதை, காந்தீகம், விஸ்வபோ தம், ஆதிசாரம், வெகுச் சுருதம், மானபேதம் என்னும் முப்பா னிரண்டு சிற்ப நூற்களேயும், மனு, அத்திரி, ஔரிதம், விட்ணு, யாக்ஞ வற்கியம், உசனம், ஆங்கிரசம், யமம், ஆபத்தம்பம், சம வர்த்தம், காந்தியாயனம், பிரகஸ்பதி, பாராசரம், வியாஸம், சங்கலி தம், தர்க்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம் என்னும் பதி னெட்டு தரும நூல்களேயும், அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம் காம்போசம், கொங்கம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோளகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் என்னும் பதினெட்டு பாஷைகளேயும், நன்கு கற்பித்தனர். இதன் பிறகு இந்த இருபத்தினன்கு கோத்திரத்தோடுங் கூடிய பிருதிவீச் சுர வாசகுமாரர்களும் பெற்றோர்களும், கலைக்கொட்டாரையும், ரிஷி களேயும் நமஸ்கரித்து, எங்கள் குலமீடேற்ற வந்த குருமணியாகிய தாங்கள் அடியேங்களுக்கு வருணச்சிரம தருமங்களேயும் பிரணவத் தின் சொருப லட்சூணங்களேயும் யெடுத்து இனிதுபோதித்து எங்களேக் கடைத்தேற்றுவிப்பது தங்கள் கடமையாதலால், சிறிது சிரமம் பாராது திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப் பித்தார்களென்று உரோம முனிவர் தபோதனர்களுக்கு எடுத்துக் கூறினர்.

தபோதனர்களும் உரோம முனிவரைப் பார்த்து சுவாமிகளே! கலைக்கோட்டார் கூறியவைகளையுமெங்களுக்கு எடுத்துக் கூறினல் நாங்களும் புனிதர்களாவோமென்றுகூற முனிவர் எடுத்துக் கூறத் தொடங்கினர். முனிவர்களே! கேளுங்கள் இப்பூவுலகத்தின் தருமங்களை நிலைநிறுத்தும் பொருட்டு பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வருணங்களையு முற்பத்தி செய்திருக்கிறார்கள் அவ்வவ்வருணங்களின் தருமங்களையு மெடுத்துச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

பிராமண தருமம்.

பிராமணனைவன் தானங்கொடுக்கவும், யாகங்கள் செய்யவும், அதிகாரமுடையவனுய் வேதாத்தியானம் விடாமற் செய்துக் கொண்டு, தினமும் ஸ்நான தர்ப்பணுதிகளையும், ஸ்ரவுதஸ்மார்த்த அக்னிஹோத்ரங்களையுஞ் செய்து வரவேண்டியது. ஜீவனத்துக்காக பிறருக்கு வைதிக கருமங்களைச் செய்வித்தலும், வேத சாஸ்திரங்களை போதித்தலும் பிறருக்குக்கொடுக்க யோக்கியமானவர்கள் நியாயவழியில் சம்பாதித்த பொருளை தானஞ்செய்தால் அதைப் பெற்றுக்கொள்ளு தலுமாகிய காரியங்களைச் செய்தலுமாம். பிராமணன் சகல பிராணிகளிடத்தும் ஹிதமேசெய்ய வேண்டியது. ஒன்றுக்கு மதீதஞ் செய்யலாகாது. சகல பிராணிகளுக்கும் மித்திரனுக விருப்பதினலே பிராமணன் மேலானவனுகின்றான். இதுபற்றியே அன்னவர்களுக்கு அந்தணரென்ற பெயர் வழங்கலாயிற்று. "அந்தணரென் போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலால்" எனச்சென்னுப் புலவருங் கூறியுள்ளார். பிறருடைய பொன், இரத்தினம் முதலியவைகளில் பிராமணன் சமமான நினைப்புள்ளவனுக விருத்தல் வேண்டும். ருதுகாலத்திலே தமது பத்தினியுடன் சேர்தல் நியாயம். சதாகாலமும் தனது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலியவைகளை யொடுக்கிப் பரப்பிரம்மத்தினிடத்தில் மனதைச் செலுத்தி ஞானத்தைப் பெறுவதே பிராமணனுக்கு இலக்கணமாகும்.

ஸ்மிருதி.

அத்யாபனஞ் சாத்யயநம்!
யஜநம் யாஜநந்ததா
தாநம் பிரத்திக்ர ஹஞ்சைவ!
பிராஹ்மணோ நாமகல்பயேதுஃ

என்று கூறியது விளக்கிக் காட்டும்.

க்ஷத்திரிய தருமம்.

இனி க்ஷத்திரியர் தாங்கள் நடு நிலைமையா யிருந்து செங்கோன் முறையைச் செலுத்தி குடிகளின் குறைகளைக் களைந்து, பகைவர், கள்வர், விலங்கு முதலியவர்களால் நேர்ந்திடுந்தீங்கு களைத்தீர்த்து

அரசு புரிதல், வேத மோதல், தமது குடிகளுஜ்ஜீவிக்கும் பொருட்டும், தமது நாடு சிறப்படையும் பொருட்டும், யாகஞ்செய்தல், அடியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அதிதிகளுக்கும் தானங்கொடுத்தல், மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய அந்தக் கரணங்களையொடுக்கல்முதலியவைகளை அனுஷ்டித்தும்வருவது இலக்கணமாகும்.

ஸ்மிருதி.

பிரஜாநாம் ரக்ஷணந்தாந !
மிஜ்யாத்ய யநமே வசஃ
விஷயேஷ்வ பிரஸக்திஸ்ஸ
க்ஷத்திரியஸ்ய் ஸமாஸதஃ எனவுங் கூறப்பட்டது.

வைசியர் தருமம்.

இனி வைசியர்கள் பசுக்களைப் பரிபாலனஞ் செய்தலும், பலவித தானியங்களாலும், நவரத்தினங்களாலும் இரஸவர்க்கங்களாலும், வியாபாரஞ் செய்தல், பயிர் செய்தல், தானங் கொடுத்தல், வட்டிக்குப் பொருளீட்டல், வேதமோதுதல் முதலிய அறதொழில்களையுஞ் செய்ய வுரித்தானவர்கள்.

ஸ்மிருதி.

பசூநாம் ரக்ஷணந்தாந
மிஜ்யாத்ய யநமேவச !
வணிக்பதம் குஸீதஞ்ச
வைஸ்யஸ்ய கிருஷிமேவசஃ எனவுங் கூறப்பட்டது

சூத்திர தருமம்.

சூத்திரனே முந்தினவர்களுக்கு ஊழியஞ்செய்து பிழைத்தலும், அவர்களுக்கு சேஷ பூதனுயிருந்து அவரால் போஷிக்கப் படுதலுமாம். இவனுக்குத் தானங்கொடுக்கவும், யாக யெக்கிய விதியினலே பிதுர்க்கிரியை முதலான கருமங்களைச் செய்யவும் அதிகாரமுண்டு. இதுவே இவர்களின் இலக்கணமாகும்.

ஸ்மிருதி.

எகமே வதுஸூத்ரஸ்ய
பிரபுகர்ம ஸமாதீஸத்
எதேஷாமேவ விர்ணூநாம்
ஸுஸ்ரூஷாமந ஸூயயஃ எனவும் விளக்கியது.

இந்நால்வர்களும் ஆபத்கால விருத்திக்கு, பிராமணன் க்ஷத்திரியன் தருமத்தையும், க்ஷத்திரியன் வைசியன் தருமத்தையும், வைசியன் சூத்திரன் தருமத்தையும், அனுசரிக்கலாம். பிராமணன் க்ஷத்திரியன் ஆகிய இருவர்களு மொருபொழுதும் சூத்திரன் தருமத்தைக் கையாளக்கூடாது.

ஆபத்காலத்தில் தாங்கள் முன்கூறிய விருத்தியைக்கையாண்ட போதிலும், தங்கள் தங்கள் சம்ஸ்காரங்களேயும் மதாசாரங்களேயும், ஒழுக்கங்களேயும், கைவிடலாகாது என்று கலேக்கோட்டார் கூறிப்பின் னுஞ் சொல்லுவாராயினர்.

ஆஸ்ரம தருமம்.

அவிர்ப்பாகத்திலுதித்த அரச குமாரர்களே ! கேளுங்கள். இது காறுமுங்களுக்கு வருணாச்சிரம தரும முறைத்தோம். இனி ஆஸ் ரம தருமம் விளக்குவேன். மிகுந்த கவனத்துடன் கேட்பீர்களாக என்று கூறத்தொடங்கினர். பிரமசாரித்வம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசத்வம் எனநான்கு ஆஸ்ரமங்களுள. அதில்,

பிரம சாரித்வம்.

சிறுவனு யிருப்பவன் உபநயனஞ் செய்யப்பெற்று விரத நியமத் தோடு வேதங்களே யோதிக்கொண்டு குருவின் கிருஹத்திலிருக்க வேண்டும். குருவுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். காலே மாலே யிரண்டிலும் சூரியனேயும், அக்னியையும் மனம்பொருந்தி பூஜிக்க வேண்டும். குருவந்தனஞ் செய்துக்கொண்டு நிற்குமளவும் தான் நிற்கவேண்டும். அவர் போகும்போது தானும் போகவேண்டும். குரு மேலே உட்கார்ந்தால்தான் கீழே உட்காரவேண்டியது. ஒரு போதுமவருக்கு விரோதமானகாரியஞ் செய்யக்கூடாது. அவர் ஓதென்று கட்டளே யிட்ட உடனே அவருக்கு எதிரிலிருந்து வேறு நினேப்பில்லாமல் வேதத்தையோதி யுணர வேண்டியது. ஓதினபிறகு குருவின் ஆக்ஞையைப் பெற்று பிக்ஷையிற் கொண்டு வந்த அடிசிலே யுண்ணவேண்டிது. காலேயில் சமைத்து தருப்பை முதலானவைகளே குருவுக்கு கொண்டுவந்து கொடுக்கவேண்டும். இவ்விதமாய் குரு விடத்தில் ஓதவேண்டிய விஷயங்களே அர்த்தஞானம் வருமளவும் ஓதிய பின்பு அவருடைய கட்டளேயைப் பெற்று குருதக்ஷிணே கொடுத்து கிரகாச்சிரமத்திற்குப் போகவேண்டியது.

கிருகஸ்தாஸ்ரமம்.

இவ்வித பிரம சாரியத்தைக் கழித்த பின்னர் விதிப்படி ஒரு பெண்ணே விவாகஞ் செய்துக்கொண்டு தனக்குத் தகுந்த காரியத் தினுலே திரவியஞ் சம்பாதித்து இல்லர வொழுக்கத்தை சக்தியுள்ள மட்டும் நடத்திவர வேண்டியது. பருவகாலங்களில் பிண்ட மிடுவதி ஞலும், எள்ளோடு கூடிய தண்ணீரினுற் பிதுர்க்களேயும், யாகங்களி ஞல் தேவர்களேயும், அன்னங்களினுல் அதிதிகளேயும், சம்ரக்ஷிக்க வேண்டுவது கடமையாகும். இப்படிப்பட்ட கிருகஸ்தன் புண்ணிய லோகத்தை யடைவான். சந்நியாசிகளும், பிரமசாரிகளும், கிருகஸ்த னிடத்திலேயே நிலேப்பெற்றிருக்கின்றுர்கள். ஆதலால் இல்லரமா னது மேலானதாயிருக்கிறது. 'இல்லரமல்லது நல்லரமன்று'

எனவும், 'துறந்தார்க்குந் துவ்வாதார்க்குமிறந்தார்க்கு மில்வாழ்வான் என்பான் துணை' யெனவு முறன்படாமல் மொழிந்தார்கள். இக்கிருகஸ்தன் சகல இடையூறுகளினின்றும் விடுபட்டு உத்தமமான உலகங்களையடைவான். இக்கிரகஸ்தாச்சிரமத்திலிருந்து செய்யவேண்டியவைகளைச் செய்து வயது முதிர்ந்தபோது புத்திரர் வசத்தில் பத்தினியை யொப்புவித்தாகிலும், அவளோடு கூடியாகிலும் வனத்திற்குப் போகவேண்டும்.

வானப்பிரஸ்தம்.

வானப்பிரஸ்தனனவன் இலைகளையுங் கிழங்குகளையும் புசித்துக்கொண்டு தாடி, சடையுடையவனய், எல்லாப்பொருள்களையும் பற்றற்று முனியாய் காட்டிற்றரையிற் படுத்துக்கொள்ளவேண்டும். தோல், நாணல்புல், மரவுரி முதலானவைகளிலொன்றை யுடுக்கவேண்டும். முச்சந்திகளிலும் நீராடவேண்டும். இவ்வானப்பிரஸ்தனுக்கு தேவதாராதனமும், ஹோமமும், புறம்பாகக் கிடையாது. இவனுக்கு எண்ணைவேண்டுமாயின் காட்டெண்ணையைக்கைக் கொள்ளவேண்டும். குளிர் வெப்பம் முதலிய வற்றைப் பொருத்து தவஞ்செய்தல் முக்கியமானதுஞ் சிறந்ததுமான தருமமாகும். இவன் எல்லா தோஷங்களையும் அக்னி தகிப்பதுபோல் தகித்து நிலைபெற்ற யோகத்தையடைவான்.

சந்நியாசித்வம்.

எவன் புத்திரகளத்திராதிகளிலும், பொருள் முதலானவைகளிலும், மனம்பற்றில்லாதவனே அவன் நான்காவதாகிய சந்நியாசித்துவத்தில் பிரவேசிக்கவேண்டியது.

காமக்குரோத மோகமத மாச்சரியாதிகளில்லாமல் சந்நியாசம் பெற்று தர்மாத்தகாமங்களுக்குறிய சகலயத்தினங்களையும் விட்டு பிரமஞான நிஷ்டை செய்துவர வேண்டியது. சத்துருமித்துருக்களிடத்தில் ஒரேவிதமான மித்திரபாவனமாயிருந்து மிருகம், பக்ஷி சகலத்துக்கும், வாக்கு மனம் காயம் என்கிற மூன்றினுலும் துரோகஞ் செய்யாமலிருக்கவேண்டும். புத்திராதி சம்பந்தங்களையும் விடவேண்டும். கிராமத்தில் ஒரு இரவும் பட்டிணத்தில் ஐந்து இரவும், இடத்துக்குத் தக்கபடி வாசஞ்செய்துக்கொண்டு ஒருவருடைய துவேஷமும், சிநேகமும் நேராதபடி நடக்கவேண்டும். வீட்டாரெல்லாம் புசித்திருக்குங்காலம் பார்த்து சாதிகுலாசாரங்களிலே சிறந்தவர்களுடைய மாளிகைக்குப்போக வேண்டும். தான் எல்லாவற்றிலுமபிமான மற்றவனயிருத்தல் வேண்டும். எந்த யதி சகல பூதங்களுக்குமபயம் கொடுத்து ஆதரிக்கின்றனே, அவன் சகல பூதங்களினின்றும் பயம் நீங்கி பரிசுத்தனவான். பிராமணன் சந்நியாசியாகிய தன்னுடைய அக்னி ஹோத்திரத்தைக் தன்சரீரத்திலிருக்

கச்செய்து, சரீரத்திலிருக்கிற ஹக்னியைக் குறித்து தன் முகமாகிய குண்டத்திலே பிக்ஷையினல் வந்த ஹவிசுகளை விதிப்படி ஹோமஞ் செய்து வருவானுகில் அவன் ஹக்னி சயனஞ் செய்தவர்களடையும் உலகங்களையடைவான். இது குடீசகன், பகூதகன், அம்சன், பரம அம்சன், என நான்கு விதம். இவையாவும் சாதாரண சந்நியாசி களைக் குறித்தது.

விசேட சந்நியாசித்வம்.

விசேட சந்நியாசித்வம் எவன் நன்ருய் நிச்சயிக்கப்பட்ட புத்தி யுள்ளவனுய், பரிசுத்தனுய், மோக்ஷாஸ்ரமமாகிய இந்த சந்நியாசத்தை விதிப்படி ஆசிரிக்கிருனே அவன் எரிகரும்பில்லாத அக்னியைப்போல மிகவுஞ் சாந்தமான சோதியாய் விளங்குகிற பிரமலோகத்தையடை வான் என்பது நிச்சயமென்று கலைக்கோட்டார் கூறியதுமல்லாம லின் னுமில்லறதருமத்தை யெடுத்து கூறுவாராயினர்.

இல்லறதருமம்.

யாக க்ஷத்திரிய குல சிகாமணிகளே'

இல்லற தருமத்தை முதன் முதல்யாவருமறிந்துக் கொள்ள வேண்டியது முக்கியக் கடமையாகும். தந்தையானவன் முந்தி கர்பா தான முதலானவைகளைச் செய்து பிள்ளை பிறந்தவுடனே அதற்கு ஜாதககர்மாதிகளான சகல கிரியைகளையுஞ் செய்ய வேண்டும். நாந் திமுகர்களான பிதுர்க்களைக்குறித்து பிண்டங்களை சந்தோஷத்தோடு தேவதீர்த்தத்தினுலேயாகிலும், பிரதக்ஷணமாய் கொடுக்க வேண்டும்.

பின்பு தகப்பன் பத்தானுள் முதலாக சாஸ்திரங்களிற் சொல் லிய நாட்களில் தகப்பனே அப்பிள்ளைக்கு பெயரிடவேண்டும். அந் தப் பெயர் தன் குலதேவதையின் பெயரையாவது தன் பெரியோரு டைய பெயரை முன்னிட்டதாயாவது புருஷனுக்கு புருஷவாசகமா யும் ஸ்ரீக்கு ஸ்ரீவாசகமாயும் அர்த்த வீனமாகாததாயும் அமங்கலமில் லாததாயும் வழுவில்லாததாயும், சமமான எழுத்துள்ளதாயும், மிக குருகலில்லாததாயும், சுகமாயுச்சரிக்கத்தக்கதாயும், கடினசந்தியில் லாததாயுமிருத்தல் வேண்டும். அப்பெயரானது பிராமணருக்கு சர்மா வென்ற சொல்லோடும் க்ஷத்திரியருக்கு ராஜு, வர்மா ராயர், வைசிய ருக்கு குப்தர் செட்டி, சூத்திரருக்கு தாஸன் என்னுஞ் சொற்களுடன் கடைசியில் கூட்டி உச்சரித்தல் வேண்டும். விஷ்ணுசர்மா, இந்திர வர்மா, மல்லிகார்ச்சுன தேவராயர் சந்திரகுப்தன், ஹரிதாஸன், எனக்கூறியுள்ளவாறு கண்டு கொள்க. இவ்விதம் நாமகரணமான பின்பு உபநிஷ்கிரமணமுதல் உபநயனமீறுகவுள்ள சம்ஸ்காரங்களைப் பிதாவினற் செய்யப்பெற்று, குருவினிடத்திலிருந்து முன்சொல்லிய விதிப்படி வேதசாஸ்திரங்களை யோதியுணர்ந்து குருதக்ஷிணை கொடுத் து வேத விரதங்களை யனுஷ்டித்து, கிரகாஸ்ரமத்துக்குப் போகயிச்

சிப்பானுகில் விவாகஞ் செய்துக் கொள்ள வேண்டும். அல்லது நைட்டிக பிரமசாரியாய் காலங்கடத்த வேண்டுமாயின் குருவுக்காகிலும், குருபுத்திரர்களுக்காகிலும் பணிவிடை செய்துக்கொண்டிருக்க வேண்டும். அல்லது தனக்கிஷ்டமெப்படியோ அப்படியே வானப்பிரஸ்தராயாகிலும், யதியாயாகிலு மாகலாம். அப்படி கிரகாஸ்ரமத்திற் புகுவதாக விருந்தால், மிக்க குறைவான கூந்தலில்லாதவளாய் அதிக கருமை நிறமும், அதிக பசுமை நிறமுமில்லாதவளால், அளவுக்கு மேற்பட்டாகிலும், குறைந்தாகிலுமுள்ள அவையவங்கள் பெறுதவளாய் சூத்திரர்களாலே வளர்க்க படாதவளாயும், இழிகுலத்திற் பிறக்காதவளாயும்.உடம்பில் மயிர் மொய்க்கப்படாதவளாயும், குஷ்டமுதலிய கர்ம வியாதிகளால் பீடிக்க பட்ட தாய் தந்தையருக்குப் பிறக்காதவளாயும், மீசை முதவிய புருஷலக்ஷணமில்லாதவளாயும், ஆண்பிள்ளையைப்போன்ற தோற்ற மற்றவளாயும், பெருத்த குரலில்லாதவளாயும், மெலிவில்லாதவளாயும், காக்கையின் கத்துதலோடொத்த குரலில்லாதவளாயும், இமைகளில் மயிர்செரிவுயில்லாதவளாயும், வட்டமாகிலும் வேறுவித அவலக்ஷணப்படாத நேத்திரங்களுடையவளாயும், மயிர்மொய்த்த கணுக்கால்களும் உயர்ந்து காணப்படும் புறங்கால்களுமில்லாதவளாயும், சிரிக்கும்போது கபோலங்கள் பாலிபோற் குழிந்து போகாதவளாயும், உக்ரமான காந்தியும், மிக வெண்மையான நகங்களும், மிகச்சிவந்த கண்களும், மிக பெருத்த கை கால் களுமில்லாதவளாயும், கொடுமையும் பயங்கரமுமான தோற்றமில்லாத முகமுடையவளாயுள்ளவளாயும், தாய் வரிசையில் ஐந்து தலைமுறைக்கும், தகப்பன் வரிசையில் எழுதலை முறைக்கு முட்படாதவளாயுமிருக்குங் கன்னிகையை நியாயமான விதிப்படி விவாகஞ் செய்துக்கொள்ள வேண்டும். இந்த விவாகமானது பிரமம், தெய்வம், ஆருஷம், பிரஜாபத்யம், ஆசுரம், காந்தருவம், இராக்ஷஸம், பைசாசம் ஆக எட்டு வகைப்படும். இதில் முதல் நான்கும் பிராமணனுக்கும் அடுத்த காந்தர்வம், ராக்ஷஸம் என்னுமிரண்டும் க்ஷத்திரியருக்கும் ஆசுரம் வைசியருக்கும் மற்றையருக்கும் தகுதியாகும் என்றுகூறியதைக்கேட்ட இருபத்தினன்கு புத்திரர்களும், தந்தையர் பதின்மரும், சந்தோஷித்து கலைக்கோட்டாரை நமஸ்கரித்து எங்கள் குருமணியே! தங்களால் நாங்கள் மிக்க நுட்பமான விஷயங்களை யறிந்தோம். ஆனல் கிருகஸ்தன் அனுசரிக்க வேண்டிய நல்லொழுக்கங்களைக் கேட்டுத் தெளிய விரும்புகின்றோமென்று கேட்டுக் கொண்டதைக்கேட்ட முனிவர் கூறத்துணிந்தனர்.

நல்லொழுக்கம்.

ஓ, அரச சிகாமணிகளே! எப்படிப்பட்ட நல்லொழுக்கத்திலிருப்பவன் இம்மை மறுமைகளில் துன்பமடைய மாட்டானே, அப்படிப்பட்ட வொழுக்கத்தை யெடுத்துப்புகட்டுகின்றேன் கேளுங்கள்.

நல்லொழுக்க முள்ளவனலே இம்மை மறுமைகள் சாதிக்கப் படும். சத் என்றால் சாதுக்கள் என்றருத்தமாகும். ஆதலால் சத்துக்களாவார் சாதுக்கள், சாதுக்கள் என்பவர் தோஷமில்லாத வர்கள். அவர்களுடைய ஒழுக்கந்தான் சதாசாரம் யெனப்படும். இந்த சதாசாரத்தைச் சொன்னவர்களும், செய்தவர்களும் யாரென்றால் சப்த ரிஷிகளும், மனுக்களும், பிரஜாபதிகளுமே. புத்திமான் பிரம்ம முகூர்த்தத்திலே எழுந்து மனதினல் தருமத்தையும், அதனேடு விரோதப்படாத அர்த்தத்தையுஞ் சிந்திக்க வேண்டும். இவ்விரண்டுக்கும் யாதொரு விரோத முண்டாகாத கர்மத்தையுஞ் சிந்திக்கலாம். இப்படிச் சிந்திப்பதினலே இம்மை மறுமைகளின் பிரயோஜனங் கெடாமலிருக்கும். தரும விரோதிகளான அர்த்த காமங்களை விடவேண்டும். இப்படிச் சிந்தித்தெழுந்தபின் தன்னிடத்துக்கு நைரிதா மூலையில் அம்புபாய மவ்வளவு தூரத்திற்கு அப்புறமே போய் ஜல மலவாதிகளை விடவேண்டும். வீட்டினிடத்தில் கழுவுதல் முதலான அசுத்தமான காரியங்களைச் செய்யலாகாது. தன்னிழல், மரத்துநிழல், பசு, சூரியன், அக்கினி பெரியோர் முதலானவர்களி னெதிரிலும், உழுத நிலத்திலும், பயிர் நடுவிலும், பசுக்களிருக்கு மிடத்திலும், ஜனங்களிருக்குஞ் சமூகத்திலும், வஸ்திரத்தினற்றலை மூடிக்கொண்டும், மலம் மூத்திரங்களையும் விடப்படாது. பகலில் வடக்கு முகமாகவும், இராவில் தெற்கு முகமாகவுமிருந்து ஜலபாதிகளை விடவேண்டியது. இப்படிச் செய்ய சங்கடமாயிருந்தால் தகுந்தபடி செய்யலாம். அந்த விடங்களில் நெடும்போதிராமலும், ஒன்றும் பேசாமலும், காரியந் தீர்ந்தவுடன் செத்தைகளினலே அவ்விடத்தை மறைத்து வரவேண்டும். பின்பு புற்றுமண், பெருச்சாளி தோண்டித் தள்ளினமண், அசுத்த பூமியிலிருக்கிற பூச்சிகளோடு கூடியமண், கலப்பையினற் கிளரப்பட்டமண், ஆகிய இவைகளைத் தவிர்த்து வேறு மண் கொணர்ந்து முந்தி அசுத்தத்தின் நாற்றம் மாறும்படியாக சௌசஞ்செய்து பிந்தி சுத்திக்காக இலிங்கத்தை யொருதரமும், அபானத்தை மூன்றுதரமும், இடக்கையைப் பத்துதரமும், மீண்டுமிரண்டு கைகளை ஏழுதரமும், மண்ணிட்டு சுத்தமான நீரினற்கழுவி மறுபடியும், கை கால்களைக்கழுவிக் கொண்டு அசுத்த சம்பந்த மில்லாது சுத்தமாயும், குமிழி கிளம்பாத தாயுமுள்ள ஜலத்தினலே மும்முறை ஆஸமனஞ்செய்து சிரசில் புரோக்ஷித்தல், ஹிருதயம் முதலான அங்கங்களைத் தொடுதல் முதலிய செய்கைகளை விதிப்படி செய்து பின்பு, ஆகமர்ஷண முதலான மந்திரங்களை யுச்சரித்துக் கொண்டே நீராடி சந்தியாவந்தன முதலிய கிரியைகளை விதிப்படி யனுஷ்டிக்கவேண்டும். வேதமோதலாகிய பிரம யாகத்தையும் ஓமம் வளர்த்தலாகிய தெய்வயாகமும், †பலியீதலாகிய பூதயாக

† பலி என்பது எலுமிச்சம்பழம் பூசுணைக்காய் முதலியவைகளால் பலி செய்தலாகும்.

மும், தர்ப்பணஞ் செய்தலாகிய பிதுர் யாகமும், இரப்போர்க்களித்த லாகிய மனுஷயாகமும், முறையேசெய்து பிறகு மற்றுமுள்ள தனது காரியங்களைச் செய்ய வாரம்பிக்க வேண்டியது. பிராமணன் தனத்தைச் சம்பாதிக்க வேண்டும். க்ஷத்திரியன் நீதிமுறை தவராது பகுதி பெற்றுச் செங்கோல் செலுத்தவேண்டும். மத்தியானமான வுடன் மறுபடியும், நதிகளிலாகிலும், தடாகங்களி லாகிலும் நீராட வேண்டும். இவை கிடையாமற் போனல் கிணற்றின் தண்ணீரெடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு நீராடலாம். இப்படி நீராடின பிறகு பரிசுத்தமான வஸ்திரம் முதலானவைகளைத் தரித்துக்கொண்டு தேவதைகளுக்கும் ரிஷிகளுக்கும், பிதுர்க்களுக்கும் தீர்த்தத்தினலே விதிப்படி தர்ப்பணம் செய்தல்வேண்டும். அரசனு மிவர்களுக்கு மிவ்வாறே பிரீதி யுண்டாகும்படி தர்ப்பணஞ் செய்யலாம். அப்போது ஜபிக்கவேண்டிய தென்னவெனில் தேவாசர யக்ஷ நாக காந்தர்வ ராக்ஷஸ பிஸாஸ குஹ்யக சித்தகூச்மாண்டதருக்களும் ஜலம், பூமி, காற்று இவைகளைப்பற்றிய ஜெந்துக்களும் என்னல் கொடுக்கப்பெற்ற இத்தண்ணீரினல் திருப்தி யடைய வேண்டும். நரகங்களில் பல பாதைகளி லிருக்கிறவர்களுக்கு சோர்வு நீங்கும் பொருட்டு, இத்தண்ணீரை யான் விடுகிறேன். எனக்கு பந்துக்களா யிருப்பவர்களுக்கும் எங்காவது பசிதாகங்களினல் வருந்தி யிருக்கிறவர்களுக்கும் நான் விடுகிற எள்ளுந் தண்ணீரும் திருப்தியை யுண்டாக்கக்கடவது, என்றிவ்விதஞ் சொல்லி தர்ப்பணஞ் செய்ய வேண்டும். இது காமிய தர்ப்பணம். இதனல் சகல லோகங்களுக்கும் பிரீதியுண்டாக்கும். மகா புண்ணியங் கிடைக்கும். பிறகு தனது கிருகத்திலிருக்கிற தேவதா பிம்பத்துக்குத் திருமஞ்சனம், திருமாலை, தூப தீபாதிகள் நைவேத்தியம் முதலான வுபசாரங்களினலே ஆராதனஞ் செய்யவேண்டும். பின்பு பிரமாகுதி முதலாக வைசுவ தேவஞ்செய்து கிரகங்கர், காசிபர், அனுமதி இவர்களுக்கு அன்னபலியிட்டு அதன் மிகுதியைப் பிரித்து வீபர்ச்சனியர்களுக்காக ஔபாசன சமீபத்தி லிடவேண்டும். கிரகத்தின் துவாரத்தில் தாதா விதாக்களுக்கும் நான்கு திசைகளி லிந்திரன், வருணன், யமன், சந்திரன் எனும் நாற்றிசைத் தேவர்களுக்கும், வாயுவுக்கும், பிரம்மா, அந்தரிஷம், சூரியன், வடகிழக்கு தற்கியகாறி முதலியவர்களுக்கும் அன்னம் பலியிடவேண்டும்.

அரசர்களே ! கிரகஸ்தன் எப்படிப் புசிக்க வேண்டுமோ அப்படிப் புசித்தால் பாப சம்பந்தம் வாராது. ஜெபத்தையும் ஓமத்தையும் நிரைவேற்றிச் சுத்தமான வஸ்திரந்தரித்துக் கொண்டு அதிதிகளுக்கும், சுரோத்தியருக்கும் குருமார்களுக்கும் கந்த புஷ்பங்களை நல்கியும் தானும் நல்ல சந்தனத்தையும் புஷ்பத்தையும் தரித்துக்கொண்டு, சிறந்த ரத்தினதி உத்தம வஸ்துக்களைக் கையிலிட்டுக் கொண்டு கிழக்கு முகமாகவாகிலும் வடக்கு முகமாகவாகிலும் புசிக்கவேண்டும்,

சிறந்ததும் இதமுமான அன்னத்தையே சுத்த தீர்த்தத்தினலே புரோக்ஷித்து புசித்தல் வேண்டும். உண்ணும்போது மதுரமானவைகளை முதலிலும், புளிப்பு உப்புக்களை இடையிலும் கைப்பு முதலானவைகளை கடைசியிலும் புசித்தல் வேண்டும். அன்றியும் முன்னே நீர்த்தவைகளையும் புசித்தல் வேண்டும்.

இப்படி உண்பதினல் பலமும் ஆரோக்கியமுங் குறையமாட்டாது. அன்னமானது ஜீரணித்து உடற்கூருன பிருதிவி, அப்பு, வாயுக்களுக்குப் பல முண்டாக்கி சுக முண்டாக்கும். பிறகு விரோதமற்ற சாஸ்திரங்களைக் கற்றல்வேண்டும். அஸ்தமன மாகுமுன்னமே மாலை சந்தியையு முபாசிக்கவேண்டும். எவர்களிந்த சந்தியாவந்தனங்களைச் செய்யாம லிருக்கின்றார்களோ அந்த துராத்துமாக்கள் தாமிசிரம் என்கிற நரகம் புகுவார்கள்.

அதிதிபூசை செய்து தானுமுண்டு பாத சௌச முதலானவைகளைச் செய்துக்கொண்டு வெடிப்பில்லாத பாளை, தந்தம் முதலியவைகளாலாவது நல்ல ரத்தினத்தினலாவது செய்யப்பட்டதும் ஒடியாததும் விசாலமானதும் மேடு பள்ள மில்லாமற் சமமான படுக்கையிற் படுக்கவேண்டும். படுக்கு மளவில் கிழக்கிலாவது தெற்கிலாவது தலை வைத்துப் படுப்பது நன்று. மற்ற திசையில் வைப்பது ரோக காரணமா தும். ருது காலத்திற் கற்பத்தினிடத்திற் சேர்வது நன்று. இப்படிச் சேரும்போது புருஷ நக்ஷத்திரத்திலே சுபமான காலத்திலே சஷ்டி முதலான இரட்டைப்பட்ட இராத்திரிகளிலே கந்த புஷ்பாதிகளைத் தரித்தவனும், தகுந்த ஆகார முண்டவனும், ஆசையுங் காமமு முள்ளவனுமச் சேரவேண்டும். தனக்கு அனுகூலப்படாதவளையும், வியாதியினற் றுன்பப்படுகிறவளையும், கோபித்திருப்பவளையும், யோக்கிய மாகாதவளையும் கர்ப்பிணியா யிருப்பவளையும், இரமில்லாதவளையும், பிறரிடத்தில் மனம் வைத்திருப்பவளையும், காம மில்லாதவளையும், ஒருவனுடைய ஸ்ரீயையும், பசியால் வருந்துகிறவளையும், மிகப்புசித்திருப்பவளையும், ஜல மல வுபாதியுடைய வளையுஞ் சேரலாகாது. சதுர்த்தசி, அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி, சூரிய சந்திர கிராணம் முதலிய பர்வகாலங்களில் எண்ணெயிட்டுக் கொள்ளுதல், பெண்டீரோடு புணர்தல், புசிக்கத் தகாதவைகளைப் புசித்தல் முதலியவைகளைச் செய்கிறவன் மலமூத்திர போஜன மென்கிற நரகத்தையடைவான். பிராமணர், ஆசிரியர் இவர்கள் ஆசரிக்குமிடங்களிலும் நாற் சந்தகளிலும் ஆலயம், தீர்த்தம், கொட்டில், மயானம், தோட்டம் ஜலங்கள் முதலிய விடங்களில் மனதினலும் ஸ்ரீ போகஞ் செய்யலாகாது. பிறர் மனையாளை மனதினலும் நினைக்கக்கூடாது. இப்படிப் பட்டவர்களுடைய ஆயுசு க்ஷீணிக்கப்பட்டு இறந்தபின் நரக வாதனைகளையும், அனுபவித்து பின்பு எலும்பில்லாதவைகளாகிய புழு முதலிய ஜந்துக்களிலே பிறப்பார்கள். ருதுகால

மல்லாத போதும் முன்னுரைத்த குற்றங்களில்லாத தன் பத்தினி யோடு புணரலாம். துவேஷமா யிருக்கிறவன், பைத்தியம் பிடித்த வன், விபசாரியைச் சேர்ந்தவன், அற்பன், பொய்யன், மிகச் செலவு செய்பவன், வஞ்சகன் முதலானவர்களுடன் சிநேகஞ் செய்யலாகாது. ஜலப்பிரவாகத்துக் கெதிராக நீந்தக்கூடாது. தீப்பட்ட வீட்டிற் பிரவேசிப்பதும், மரத்தினுச்சியி லேறுவதும், பல் கடித்தலும் தவிர்க்கவேண்டும். இப்படிப்பட்ட உத்தம செய்கைகளோடு தேவ தைகளையும், ரிஷிகளையும், பிதுர்க்களையும், அதிதிகளையும், பெரியோர் களையும் விதிப்படி பூசிப்பானே அவன் உத்தமமான லோகங்களை யடைவான். எவன் விவேகமும், நியொழுக்கத்தில் நாணமும், பொரு மையுமுடையவனாய் வேதத்தில் நம்பிக்கைப் பெற்று கல்வியிலும் குலத்திலும் மேலானவரிடத்தில் வணக்கமாய் நடக்கிறானே அவன் ஒப்பற்ற உத்தமலோகத்தைச் சேறுவான். அரச புதல்வர்களே! விபூதி உருத்திராக்ஷங்களையும், திருமண் துளப மாலை முதலியவை களையும் சதா தரித்துக் கொண்டிருத்தல் வேண்டும். பஸ்ம ஜாபால உபநிடதமும், உருத்திராக்ஷ ஜாபால உபநிடதமு மிதைப்பற்றி முறையே விளக்குகின்றது. நெற்றியில் விபூதி தரிக்காமல் யாதொரு காரியங்களுஞ் செய்யக்கூடாது. இதுவே எல்லா தருமங்களினுஞ் சிரேஷ்டமானதாகும். நாம் அறிந்து மறியாமலுஞ் செய்யப்பட்ட பாபங்களை யெல்லாம் (பொடி) நீருக்குவதினால் பொடி யென்றும் நீ றென்றுங் கூறப்படும்.

பேரூர் புராணம்.

"நீடலு றுந்திவினையனைத்தும் நீற்று விடலால் நீறென்றும்
வீடில் வெறுக்கை தருதலினால் விபூதியென்று முயிர்தோறுங்
கூடுமலமாசினைக் கழுவுங்குணத்தாற் சார மென்றுமட
மோடவளர் சோதியைத் தரலாற் பசிதமென்று முரைப்பாரால்.

பட்டினத்தார் புராணம்.

வினைவிருப்புடல் பால்காலம் விரியுல குயிரெனத்தம்
நினைவரு வழக்கம்பேதம் நிறுபரிச்சேதம்போக
மினைவருபிணி பசுத்வங் கரணமும் பிறப்புச்சாத
மெனவரு திரயமெல்லா மிறப்பது காட்டுநீதே.

பிரமோத்தர காண்டம்.

ஆயமாமணி யாயிரம் புனைந்திடலவரை
மாயநான்முகன் புரந்தரன்வானவர் முதலோர்
பாயுமால் விடைப்பரனெனப் பணிகுவரென்றூற்
றாயமாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்லீர்.

ஆகையினாலே முக்கியமான தருமங்களில் இது மிக்க சிரேட்ட மானதாகும். இதற்கு மிஞ்சிய தருமங்களெங்குங் கிடையாது. விபூதி உருத்திராக்கம், திருமணி துளபமாலை அணிந்துக் கொண்

டிருக்கும் புனிதர்களுக்கு அவர்கள் வேண்டியவாறு நாம் கொடுத்தல் வேண்டும். அப்படி தானஞ்செய்தால் அது சாக்ஷாத் ஸ்ரீ சிவபெருமானுக்கும் ஸ்ரீமகா விஷ்ணுவுக்கும் தானங்கொடுத்ததாகும். அதனலவர்களடையும் பலனே ஆயிரம் நாவு படைத்த ஆதிசேடனுலும் செப்பத்தரமல்லாதிருக்கும்போது யான் யாதுகூறுவேன்.
யாக க்ஷத்திரிய மைந்தர்களே!

சுலோகம்.

அநித்யாநி சரீராணி
விபவோவை வஸாஸ்வத
நித்யம் ஸந்நிஹிதோ மிருத்யு
கர்த்தவ் யோதர்மஸம் கிரஹ:

பிரமனுற் சிருஷ்டிக்கப்பட்ட எண்பத்தினன்கு லக்ஷ ஜீவராசிகளுள் மானுடஜென்மம் வெகு அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு முதலிய நீக்கிப் பிறத்தலரிது. அதிலும் மிக்க உன்னதமாகிய இப்பரதகண்டத்திலுதித்தல் அரிது. அங்ஙனமுதித்த இத்தூலதேகம் நித்தியமோ வென்ருல் நீர் மேற்குமிழியைப்போல் அநித்தியமாகும்.

இந்த பிராணன் இப்பவோ பின்னேயோ இரவிலோ பகலிலோ என்றறியாமல் எப்போதாவது தேகத்தை விட்டு நீங்குமேயல்லது வேறில்லை. "இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லை" எனவும், "ஆலம் சரீரம் அநித்தியமென் றெண்ணுங்கோள், காலந்தினம் வருவான் கண்டுக்கொள்" எனவும் "இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ" எனவுங் கூறியபடி எப்போதாவது நீங்கும் "வினையொழிந்திடிற் றினையளவும் நில்லாது யாக்கை" வினையினுலுண்டாயது இத்தேகம். இவ்வாத்மா சரீரத்துள் வசிப்பது எங்ஙனமெனில், கூட்டிற் கிளியை வைத்து வளர்ப்பது போலும், வெட்டவெளியில் வைத்த விளக்கைப்போலும், பழுத்த இலையைப்போலும், கனிந்த பழத்தைப் போலும், நீர்க்குமிழியைப் போலும், சுழற்காற்றைப் போலும், பம்பரத்தைப்போலும், மின்னலைப்போலு முள்ளது. அநித்தியமாகிய இவ்வுடலைமெய்யென்று நம்பிப் பொய்த்துப் போகாதீர்கள். உயிர் நீங்கிய உடல் பிணமென்று கூறப்படும். காய்ந்து விழுந்த செல்லுபற்றிய மரமெதற்கு முபயோகப்படாததுபோல் பிணமென்றுகூறு மிவ்வாக்கையை நாய், நரி, கழுகு, காக்கை முதலியவைகள் தம்மதென்று கூறித்தின்று களிப்படையும். இந்நாறுமுடலைச் சதமென்று நினைத்து மண முதலியவைகளை முடித்து இன்புற்று நரகத்துக் காளாகாமல் பிரணவஸ்வரூபமாகிய வாதார வஸ்துவை சதா தியானித்திருத்தல் வேண்டும். ஹரி ஓம் என்பதில் ஹரி என்னும் பதத்தின் முதலி லிருக்கும் சுழி கடவுளுடைய பிரணவஸ்வரூபமெனச் சொல்லப்படும். ஹ என்னு

மகூரத்தில் அகர, உகர, மகரங்கள் விளங்கிநிற்கும். அதுவே பிரணவமாகும். பிரணவ மென்றால் வட்டவடிவம். இதை யனுசரித்தே நாம் தரிசிக்கும் கடவுளின் மேற்றரிக்கும் திருவாசி பிரணவ வடிவம். ஓங்காரமே நற்றிருவாசி உற்றதனில் நீங்கா வெழுத்தே நிறை சுடராம் என்று ஆன்றோர் துதியாநிற்பர். இவ்வட்ட வடிவமாகிய பிரணவ ஸ்வரூபம் உலகத்திற் றோன்றிய எல்லா ஆன்மாக்களின் உடற்கூற்றி லமைந்திருப்பது பிரத்தியக்ஷவனுபோகம். இவ் வகார உகார மகாரத்திற்குக் கும்பித்தலாகிய மாத்திரை யடங்கி நிற்கும்.

அகாரம் :—சாக்ராவஸ்தை யெனவும், பிரமதேவ னெனவும் சிருஷ்டி யெனவும் நாத மெனவும் ருக்வேத மெனவும் பிருத்திய லோகமெனவும் மனதெனவுஞ் சொல்லப்படும்.

உகாரம் :—சொப்பனவஸ்தை யெனவும், விஷ்ணு வெனவும், ஸத்தி யெனவும், பிந்து வெனவும், யஜுர்வேத மெனவும், சுவர்க்க லோக மெனவும், புத்தியெனவுஞ் சொல்லப்படும்.

மகாரம் :—சுழுப்தி யாவஸ்தை யெனவும், உருத்திர னெனவும், சம்மார மெனவும், களை யெனவும், சாமவேத மெனவும், பாதாள லோக மெனவும், அகங்கார மெனவுஞ் சொல்லப்படும்.

கும்பமாத்திரை :—துரியாவஸ்தை யெனவும், ஆதிசத்தி யெனவும், ஞான மெனவும், அதர்வண வேத மெனவும், மோக்ஷ லோக மெனவும், சித்த மெனவுஞ் சொல்லப்படும்.

ஓங்காரம் :—பிண்டம், அண்டம், பிரமாண்ட மெனவும் இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தியெனவும், சத்வகுணம், ராஜகுணம், தமோகுணமெனவும், இடைகலை, பிங்கலை, சுழுமுனை நாடியெனவும், கங்கை, யமுனை, சரஸ்வதி யெனவும், மனம், வாக்கு காயம்யெனவும், அவன், அவள் அதுயெனவும், வாணி சரஸ்வதி பவானி யெனவும், ஆதி, மத்திமம், அந்தம் எனவும், மாதா, பிதா, குருயெனவும், ஆகாம்யம், சஞ்சிதம், பிராரத்துவமெனவும், ஆதியாத்மீகம், ஆதிபௌதீகம், ஆதிதெய்வீகமெனவும், சந்திரன், சூரியன், அக்னியெனவும், அறம், பொருள், இன்பமெனவும், சரியை, கிரியை, யோகமெனவும், இலயம், போகம், மோக்ஷமெனவுஞ் சொல்லப்படும்.

மனசு என்பதில் "ம" என்பது தமோகுணத்தையும், "ன" என்பது ரசோகுணத்தையும், "சு" என்பது சத்துவகுணத்தையும், அடக்கியுள்ளது. இதில் 96 தத்துவங்களு மடங்கியிருக்கின்றன. இந்ததிரியக்ஷாதிபதிகளாகிய திரிமூர்த்திகளுமிதிலிருந்து தங்கள் தொழில்களையியற்றுவார்கள். திரியக்ஷரங்களில்லாத வஸ்த்துக்கள் உலகத்திற்கிடையாது. உலகமே திரியக்ஷரங்களாகும். இன்னும்

அகாரம் ஸ்தூலதேகமெனவும், உகாரம் சூக்ஷமதேகமெனவும், மகாரம் காரணதேகமெனவும், அர்த்தமாத்ரா மகாகாரண தேகமெனவுஞ் சொல்லப்படும். மூன்று தேகங்களுக்கும் மகா காரணமாயுள்ளதை பிரத்யேகாத்மாவெனவும், ஆனந்தமெனவும், அனாதிகாரணமெனவும், அசி எனவும், ஐக்கியபாவத்தையளிப்பதெனவும், நித்ய சத்ய வஸ்துவெனவும் நிர்வாணபதமெனவும், பெரியோர் கூறுவார்கள். துரியராணியோடுங் கூடிச்சுகித்திருக்கும் ஆத்மராயனைத் துரியாதீதனெனவும், பரமாத்மாயெனவும், பரிபூரணனெனவும், பரமேஸ்வரனெனவுஞ் சொல்லுவார்கள். அந்த துரியராணியே ஆனந்தமெனவும், ஆனந்தத்தை யனுபவிப்பவனே ஆத்மராமனாகும். அர்த்தமாத்திரையாகிய மாயையுடன் கூடியது அவாங்மனோ கோசரமாகும். நிர்சப்தமான பிரமத்திலிருந்து ஓங்காரமுண்டாயிற்று. அதில் சப்தமும், பதமும் வாக்கும் வார்த்தையும், சுலோகமும், வேதாகமங்களுமுண்டாயிற்று. வேதாகமங்கள வாச்சியார்த்தமென்றும் ஓங்காரம் லக்ஷியார்த்த மென்றுங் கூறுவார்கள்.

அகாரத்தில் நரரும், உகாரத்தில் சுரரும், மகாரத்தில் அரக்கரும் அர்த்தமாத்திரையில் ஞானிகளுந்தோன்றினர்களென்று வேதங் கூறும். ஓங்காரம் சமுத்திரமாகவும் அதன்காரண வஸ்து லவணமாகவும், வேதாகமங்கள் அதன்நுரையாகவுங் கொள்ளப்படும். பிரமஞானியாகுதல் அரிதினுமரிதாகும். ஓங்காரம் சகுணபிரமமாகவும், நிர்குணப்பிரமமாகவும், ஓம் நமசிவய வென்பதும், ஓம் நமோ நாராயண வென்பதுவும், சகுணபிரமமான பிரதான மந்திரங்கள். இதற்கு முதலிலிருப்பது ஓங்காரம். ஓங்காரத்தை யுச்சரிப்பவன் திரிமூர்த்திகளையும், ஆதிசத்திகளையும், பிரமத்தையும், ஸ்மரித்தவனுவன், சிவோஹம் என்னும் அத்வைத மந்திரமே வசிஷ்டபகவான் போதித்தது. ஓங்காரமே பிரணவத்துக்கு ஆதாரமாக விருப்பது. இதன் மகிமை ஒருவராலுஞ் சொல்லக்கூடியதல்ல. ஆதலால் இவ்விஷயங்களை நீங்கள் முக்கியமாக கவனிக்கவேண்டியது.

அரசர்களே! இனி நீங்களிக்குமாரர்களுக்கு, கந்தர்வ வமிசத்திற்றோன்றிய அங்காரகாக்கியனது சந்ததியில் சந்திரவதனம்போன்ற அழகிய கன்னிகைகளைப்பாணிக்ரஹணஞ் செய்யும் முயர்ச்சிகளைத் தேடுங்கள் யென்று கூறிமறைந்தனர். இப்பால் வைடங்கன் முதலிய அரசர்கள் பிள்ளைகளின், பராக்கிரமத்தையும், கல்வித்திறமைகளையும் யௌவனதசையடைந்திருப்பதையுஞ் சிந்தித்து, சந்தோஷித்து, விவாகஞ்செய்யத் தீர்மானித்து அங்காரகாக்கியனது சந்ததியிற்றோன்றிய கன்னிகைகளை முடிவு செய்தார்கள்.

இப்பால் மந்திரிமார்களைப்பார்த்து, நகரலங்காரஞ் செய்யுமாறு உத்திரவிடவும், மந்திரிமார்களும் அவ்விதமலங்காரஞ் செய்ய ஏற்பாடு செய்தார்கள். கருங்கடலைகலையாகவுடுத்த காசினியையாளுங் காவ

லர்க்கெல்லாம், கல்யாண ஓலையும், தூதும்விடுத்தனர். காஞ்சிமாநகரை யலங்கரிக்கும் நிமித்தம், பவழக்கால்நாட்டித், தவள விட்டம்பூட்டி மரகதவோலை நீட்டி, வஜ்ஜிரப்பிரதிமைமாட்டி, மாணிக்க மலர்மாலை தூக்கி, முத்துக்கொத்து வடங்கள் வீக்கி, ஆணிப்பொன்ரேகை யமைத்து, தொங்கொளிவட்டம், சுடரொளிவட்டம், நிலவொளி வட்டம், முதலிய விளக்குகளைப் பாங்குறவமைத்து, வாழை, கமுகு, மா, பலா, தாழை, இளநீர், சரக்கொன்றை, கூந்தர்பனை, கரும்பு, ஜாலர்கள், ஜடமாலைகள், தமனியப்படங்கள, நிலைக்கண்ணாடி, முதலியவைகளால் வீதிகளையும், மணவரைகளையும் அலங்கரித்து, மணமேடை ஓமமேடை முதலாகச் சமைத்து நானுவித மேளவாத்தியங்களுடன், பிராமணர்களும், பிராமணஸ்ரீகளும், தேவகன்னிகையரும், சூழ்ந்து நின்றார்கள். அந்தந்த அரசர்களும், வந்து தங்கள் தங்களிருப்பிடங்களில் சூழ்ந்தார்கள். ரிஷிகளும், முனிவர்களும், தபோதனர்களும், தேவர்களும், கந்தருவர்களும், தங்கள் தங்கள் குடும்பங்களுடனும், சீடர்களுடனும் வந்து காஞ்சிமா நகரையடைந்து மணவரையைச் சேர்ந்து ஆசிர்வதித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆண் சந்ததிகள்.

ெ.	அரசகுமாரர்களின் பெயர்.	காந்தர்வமங்கையர்களின் பெயர்.
1	பிரபோதயராஜகுமாரனுக்கு	அமிர்தவல்லியையும்
2	சுப்ரதீகர ராஜகுமாரனுக்கு	சுந்தரவல்லியையும்
3	ஜெயகர ராஜகுமாரனுக்கு	காந்திவல்லியையும்
4	வீரபாகராஜகுமாரனுக்கு	இந்திரசேனையையும்
5	பராக்ரமராஜகுமாரனுக்கு	பாலகுஞ்சரியையும்
6	வைரவராஜகுமாரனுக்கு	சுந்தரலோசனியையும்
7	நாபராஜகுமாரனுக்கு	வனசலோசனியையும்
8	சுகுணராஜகுமாரனுக்கு	விடலோசனியையும்
9	சுபசீலராஜகுமாரனுக்கு	கோமளாங்கியையும்
10	பந்துருவராஜகுமாரனுக்கு	மோகனங்கியையும்
11	வாமலோசனராஜகுமாரனுக்கு	இரத்தினமாலிகையையும்
12	விக்ரமராஜகுமாரனுக்கு	விரதகுயையும்
13	கமலலோலராஜகுமாரனுக்கு	சந்திரவதனியையும்
14	ஜெயசிம்மராஜகுமாரனுக்கு	மயூரநடனியையும்
15	வராங்கராஜகுமாரனுக்கு	தீர்க்கசுந்தரியையும்
16	கடிகராஜகுமாரனுக்கு	சாந்தலோசனியையும்

பெண் சந்ததிகள்.

17	போஜகராஜகுமாரனுக்கு	சண்பகவல்லியையும்
18	நந்தனராஜகுமாரனுக்கு	காமவல்லியையும்
19	மைடனராஜகுமாரனுக்கு	சுரதசுந்தரியையும்
20	வஜ்ஜிரஹாரராஜகுமாரனுக்கு	வஜ்ரமாலினியையும்
21	ரத்னசேகரராஜகுமாரனுக்கு	விசித்திரமோகினியையும்
22	அதிகாந்தராஜகுமாரனுக்கு	இரத்னவல்லியையும்
23	சாந்தவர்த்தனராஜகுமாரனுக்கு	கமலவல்லியையும்
24	பிரதாபகரராஜகுமாரனுக்கு	மந்தாரவல்லியையும்

முறையே மங்களஸ்நானஞ் செய்வித்து தெய்வமாதர்கள் முத்தாலாத்தியெடுக்க தேவரிஷிகளும், கந்தர்வராஜர்களும், மண்ணுலகத்தரசர்களும் கல்யாணமண்டபங்களில் மகாவைபவங்களுடன் வீற்றிருக்க தேவதுந்துபிமுழங்க வேதகோஷ்டங்களுடன் இருபத்தினன்கு இராஜகுமாரர்களும் தங்கள் தாய்தந்தையர்கள் காந்தர்வர்கள் மற்றுமுள்ள ரிஷிகள்முதலியோர் புடைசூழ ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர்

வம்சாவளி.

ெந.	ரிஷிகளின் பெயர்.	அரசகுமாரர் பெயர்.	கோத்திரப் பெயர்.	மனைவியர் பெயர்.
1	முகுந்தரிஷி	பிரபோதயராஜன்	மும்முடியவார்	அமுர்தவல்லி
2	மங்களரிஷி	சுப்ரதீகரன்	மக்கடவார்	சுந்த்ரவல்லி
3	கௌசிகரிஷி	ஜெயகரன்	கவலவார்	காந்திவல்லி
4	நகுலரிஷி	வீரபாகன்	தம்மயவார்	இந்திரசேனை
5	காளத்திரிஷி	பராக்கிரமன்	கணித்தியவார்	பாலகுஞ்சரி
6	தொந்துவரிஷி	வைரவன்	தில்லையவார்	சுந்திரலோசனி
7	பில்லவரிஷி	நாபன்	பில்லிவங்கரவார்	வனசலோசனி
8	கணத்தரிஷி	சுகுணன்	கந்தவங்கரவார்	விடலோசனி
9	மாண்டவ்யரிஷி	சுபசீலன்	மரட்டியவார்	கோமளாங்கி
10	சாண்டின்யரிஷி	பந்துருவன்	கப்பவார்	மோகனாங்கி
11	தார்க்கியரிஷி	வாமலோசன்	தரிஷியவார்	இரத்தினமாலிகை
12	வாசவரிஷி	விக்ரமன்	வாஜவார்	விரதகுயை
13	அனுசூயரிஷி	கமலலோலன்	கெந்தியவார்	சந்திரவதனி
14	மதுசூதனரிஷி	ஜெயசிம்மன்	நவிவிரிவார்	மயூரநடனி
15	சுரகமாரிஷி	வராங்கன்	சுரயவார்	தீர்க்கசுந்தரி
16	குடிகுலரிஷி	கடிகன்	கோலயவார்	சாந்தலோசனி
17	குந்தலரிஷி	போஜகன்	மாதளைவார்	சண்பகவல்லி
18	கௌண்டியரிஷி	நந்தன்	தவலையவார்	காமவல்லி
19	கௌதமரிஷி	மைடனன்	கொரகவார்	சுரதசுந்தரி
20	சோமகுலரிஷி	வஜ்ஜிரஹாரன்	சொப்பியவார்	வஜ்ரமாலினி

வம்ஸா வளி.

பிரம யாகம்.

A

B பிருதிவீச்சுரன்
மனைவி
C சுனைபை.

- 1 விடங்கன் மனைவி D மாலினி.
  - 1 வைடங்கன் மனைவி E மஞ்சவாணி.
    - 1 பிரபோதயன்.
    - 2 சப்ரதிகான்.
  - 2 இந்திரசேனன் மனைவி E கைத்தாபி.
    - 3 ஜெயகரன்.
    - 4 வீரபாகன்.
  - 3 சித்திரவல்லி புருஷன் F சித்திராங்கனன்.
    - 17 போஜனன்.
    - 18 சுந்தன்.
    - 19 மைடனன்.
    - 20 வஜ்ஜிரஹாரன்
  - 4 சந்தரவல்லி புருஷன் F சித்திரதேவன்.
    - 21 ரத்னசேகரன்
    - 22 அதிகாரதன்
    - 23 சாத்தவர்த்தனன்
    - 24 பிரதாபகரன்
- 2 அருபகன் மனைவி D சம்பூர்ணதிலகி.
  - 1 சுருபிகன் மனைவி E மாயாவதி
    - 5 பராக்ரமன்.
    - 6 வைரவன்.
  - 2 பூர்ணன் மனைவி E ஜெயகாமினி
    - 7 தாபன்.
    - 8 சகுணன்.
- 3 பவளிக்சீலன் மனைவி D சந்திரலேகை.
  - 1 மணிக்கீசல் மனைவி E சுவர்ணரேகை.
    - 9 சுபதிலன்.
    - 10 பந்துருவன்.
  - 2 சோபிதன் மனைவி E சந்திரவதினி.
    - 11 காமலோசன்.
    - 12 விக்ரமன்.
- 4 கனர்சேனன் மனைவி D விசித்திரலோசனை.
  - 1 சௌனஸ்யன் மனைவி E சுந்தரசுரபி.
    - 13 கமலலோசன்.
    - 14 ஜெயசிம்மன்.
  - 2 அந்தரீசன் மனைவி E விசித்திரகாமினி.
    - 15 வராங்கன்.
    - 16 கடிதன்.

A. பிரம்மா கங்கைக் கரையிலியற்றிய யாகத்தில் தோன்றிய மூல புருஷன்.
B. சிவனுரது பிரதிபிம்ப மூல புருஷன், கால வைரவ பிருதிவீச்சுரன்.
C. மற்றுமோர் பிரம யாகத்திலுதித்த மங்கை சுனைபை.
D. கந்தர்வத்தலைவனாகிய அங்காரகாக்கியனுடைய புத்திரிகள் நால்வர்.
E. ஷ சு வென்னும் கந்தர்வனுடைய புத்திரிகள் எண்மர்.
F. அங்காரகாக்கியன் பௌத்திரரும் வீரசேனனுடைய புத்திரர்களுமாகிய இருவர்.

21	ரோசனரிஷி	ரத்னசேகரன்	ராஜபைரவராயர்	விசித்ரமோகினி	h
22	சௌளவ்யரிஷி	அதிகாந்தன்	பலிவிரியவார்	இரத்தினவல்லி	h
23	ஹரிகுலரிஷி	சாந்தவர்த்தனன்	சென்னயவார்	கமலவல்லி	h
24	பாரத்துவாசரிஷி	பிரதாபகரன்	பசுபதி கோட்டவார்	மந்தாரவல்லி	h

G. அங்காரகாக்கியனுடைய சந்ததியில் வந்த 16 பெண்கள்.

H. பூர்வ அங்கார காக்கியனுடைய சம்பந்த வர்க்கத்தில் பிறந்த புதல்விகள் எண்மர்.

1 முதல் 16 வரையில் பிருதிவீச்சுர வம்ஸமாகும். }
17 „ 24 „ அங்காரகாக்கியன் வம்ஸமாகும். } இவ்விருதிறத்தார்களுக்கும் இருபத்திநன்கு மனையார்கள் என்கிற பெயர் இருந்தபோதிலும், ஒருவர்க்கொருவர் சம்பந்தஞ் செய்துக்கொள்ளுஞ் சம்பந்திகளாவார்.

சந்நதியை யடைந்து நமஸ்கரித்து ஆலயத்தை வலம் வந்து ஸ்ரீ சாது சொர்ன காமாக்ஷி யம்மையாரைத் துதித்து தோத்திரங் கூறி நிற்கும்போது, அம்மையார் அசரீரியாக குழந்தைகளே! நீங்கள் திருமணத்துக்குச் செய்யுங் கிரிகைகளை இனிது புரியுங்கள். முகூர்த்த லக்கினத்தில் திருமணம் புரிந்து திருமகுடஞ் சூட்டி வைப்பீர்களாக வென மொழிந்தார். இதை கேட்டதும் வணங்கி ஜெயஜெய வெனப் போற்றி மணவரைக்குச் சென்று மாங்கல்யஞ் சூட்டினார்கள். தேவர் களு ் புஷ்பமாரி பொழிந்தார்கள்.

ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் பிரபோதயராஜனாகிய மும்முடியனுக்கு முடி சூட்டுதல்.

விருத்தம்.

மழலை மொழிக்கின்ப முறுமன்னைப் போலும்
வளமலிகன் றழைக்க வருமாவைப் போலும்
குழலுடன்யா ழொலிகேட்ட விடங்கர்போலும்
குமரர் முன்னன்னைய ளெழுந்து குறைவைநீக்கும்
விழிகொபோர்த்தன் பருக்குள் முன்பரான
மேலாமும் முடிகோத்ரன் மங்கணகோத்ரன்
தொழிற் கச்சிவிசாலை யினையாளக் கிரீடஞ்
சூடினள்திரு விளையாட்டாடினளே.

இவ்விதமாகத் திருமணம் நடந்தவுடன், ஆங்கு விஜயஞ்செய்த அரசர்கள் முன்னிலையில் வைடங்க தேவராயர் முதலிய தந்தையர் பதின் மரும் ஸ்ரீ காமாக்ஷியம்மனை பக்தியுடன் துதித்து சிறுவர்களுக்கு மகுடாபிஷேகஞ் செய்யுமாறு பிரார்த்தித்து திருக்கச்சியை அளகா புரியைப்போ லலங்கரித்து, பல புண்ணியதீர்த்தங்களைத் தருவித்தார்கள். இன்னுஞ் செய்யவேண்டு வனவற்றை யெல்லாஞ் செம்மையாகச் செய்து தானங்களை வழங்கி அபிஷேக தூபதீப நைவேத்தியங்களைச் செய்து ஸ்ரீ காமாக்ஷியம்மனை மனமாரத் துதித்

துக்கொண்டு நிற்கும்போது, ஸ்ரீ காமாக்ஷியம்மன் யாவர் முன்னிலையிலுந் தோன்றி, திருமகுடங் கரத்திற்றாங்கி பிரபோதய ராஜகுமாரனாகிய மும்முடியனுக்கு, முடி சூட்டி சிங்கக்கொடியைக் கொடுத்து திருக்கச்சியை யாளுகவெனக் கூறிப்பின்பு, காஞ்சிமா நகரத்தை இருபத்தினன்கு கோட்டங்களாகவும் 79 நாடுகளாகவும் பிரித்துத் தந்தனர்.

1-வது புழற்கோட்டம்.
2-வது புலியூர்கோர்ட்டம்.
3-வது ஈக்காடுகோட்டம்.
4-வது மணவூர்கோட்டம்.
5-வது செங்காட்டுகோட்டம்.
6-வது பையூர்கோட்டம்.
7-வது எய்யில்கோட்டம்.
8 வது தாமற்கோட்டம்.
9-வது ஊற்றுக்காடுகோட்டம்.
10-வது களத்தூர்கோட்டம்.
11-வது செம்பூர்கோட்டம்.
12-வது ஆமூர்கோட்டம்.
13-வது ஈத்தூர்கோட்டம்.
14-வது வெண்குன்றக்கோட்டம்.
15-னது பல்குன்றக்கோட்டம்.
16-வது இளங்காட்டுக்கோட்டம்.
17-வது காலியூர்கோட்டம்.
18-வது சிறுகாரைக்கோட்டம்.
19-வது படுவூர்கோட்டம்.
20-வது கடிகைக்கோட்டம்.
21-வது சந்திரிகைக்கோட்டம்.
22-வது குன்றப்பற்றிக்கோட்டம்
23-வது வேங்கடக்கோட்டம்.
24-வது வேலூர்கோட்டம்.

பூர்வஸ்தானமாகிய விசாலாவதியை மக்கடவ சுப்ரதீகானுக்கு காஞ்சிமா நகரத்திலேயே தபோதனர்கள் யாவருங்கூடி முடிசூட்டினர்கள். அவ்விடத்தில் வீற்றிருந்த முதியோர்களும், அரசகுமாரர்களும் சொர்னசாது காமாக்ஷி தேவியைப் பார்த்து துதித்து, ஓ, மகா தேவி! ஈஸ்வரி! ஜகத்ரக்ஷகி! சிறுவர்களாகிய இக்குமாரர்கள், இப்பெரும் பூபாரத்தைத் தாங்கவல்லவர்களோ? இவர்களுக் கொன்றுந் தெரியவராதேயென் றிரங்கியதைக் கேட்ட உமாபிராட்டியார், அரசமக்களே! நீங்கள் மனக்கவலை யுராதீர்கள். யானும், அரிகரபுத்திரனுகிய ஸ்ரீ மஹா சாத்தன், ஐயனர் என்று கூறும் சாத்தாவும் அவர் படைத்தலைவனுகிய வீரமாகள ரென்னுந் தண்டத்தலைவனு முடனிருந்து உங்களேயும் உங்கள் ராஜ்யபாரத்தையும் காப்பாற்றி வருவோம். இச்சாத்தா தேவேந்திரன் மனைவியாகிய இந்திராணியை காவல் கார்த்து ரக்ஷித்தது போலுங்களேயுங்காப்பார், யென்று கூறி மறைந்தருளினர். சகல முனிவர்களும், பிராமணர்களும் நமஸ்கரித்து தோத்திரங்கள் சொல்லி ஆனந்தபரவசமடைந்து மலர் மாரிதூவினர்கள். அக்ஷதை முதலியவைகளால் ஆசீர்வதித்து மங்கள வாழ்த்துகள் கூறி அரசகுமாரர்களிடம் விடைபெற்றுத் தங்களிருப்பிடஞ் சொல்லும்போது,

விருதுகள் பெற்றது.

கேளும் தவத்திற் சிறந்த முனிவர்களே! இவ்வித வைபவத்துடன் அம்மன் சிங்கக்கொடி யீந்து முடிதரிக்கப் பெற்ற யாகக்ஷத்திரிய

ராகிய மும்முடியருக்கு மஹாவிஷ்ணு சக்கரமும், துளவமாலையும், பிரமன் தண்டாயுதமும், உருத்திரமூர்த்தி தமது பிரதிபிம்பத்தி னுதித்த பிருதிவீச்சுரன் வம்ஸத்தவனெனமகிழ்ந்து சூலாயுதமும், சுப்பிரமணியர் வேலாயுதமும், இந்திரன் வஜ்ராயுதம், குடை, சாமரம், கத்தி, கட்டாரியும், குபேரன் முத்துமாலையும், இன்னுமிருக்கப் பட்ட பல தேவர்கள் அஸ்திர சஸ்திரங்களையுந் தந்தார்கள். இவைகளை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து பெற்றுக்கொண்டு பூஜை முதலிய வைகளை விமரிசையாகச்செய்து துதித்தார்கள். தேவர்களும் மற்றுள்ளவர்களுஞ் சந்தோஷித்துத் தங்களுலகஞ் சென்றார்கள்.

ஆங்கிருக்கும் கலைக்கோட்டார் முதலிய ரிஷிகளை வைடங்க தேவராயர் முதலிய எண்மரும் நமஸ்கரித்து, சுவாமி, இதுகாறும்

* சாத்தாவின் பிறப்பு முதலியவைகள் கந்தபுராணம், மகா சாத்தப் படலம் நன்கு விளக்கும். இவர் விஷயம் கடைசியில் வரும்.

இந்த இராஜ்யபாரங்களைத் தாங்கி நீதி நெறிவழுவாது அரசு புரிந்து, பிரஜைகளும் நன்னெறியி லொழுகும் வண்ணமாண்டு வந்தோம். இனிமேல் விருத்தாப்பிய காலமாய் விட்டபடியால் இவ் வரச காரியங்களை நடத்த புத்திரர்களுக்கு முடி சூட்டினோம். அவர்களும் மிகுந்த ஜக்கிரதையாகவும தன்னுயிர்போல் மன்னுயிரைப் பாதுகாப்பார்கள். ஆகையினால் யாங்கள் துறவு பூண்டு வானப்பிரஸ்தாஸ்ரம மடையவேண்டியது. அதற்குத் தங்களுடையவனுக் கிரகமிருத்தல் வேண்டுமென வினயத்துடன் கூறிய தற்சிசைந்து ஆசீர்வதித்தார்கள். தங்கள் தங்கள் மனைவியருடன் காட்டிற்குச் சென்று வானப்பிரஸ்தாஸ்ரம வாசத்திலிருந்து சர்வ சங்கபரித்தியாகஞ் செய்து மைத்துனர் முதல் பதின்மரும் பரமபதமடைந்தார்கள்.

கட்டளைக் கலித்துறை

பூரணயோகக்கலைக் கோட்டார் செய்தபுகழ் மகத்திற்
பூரணமாய் வந்த தேசாதிபர்கள் புலவர் பணி
பூரணியா ளருளாலே திருக்கச்சி பொன்னகரும்
பூரணமான விசாலாவதியும் புரந்தனரே.

வாணிபஞ்செய்ய உத்தேசித்தல்.

உலகெலாம் மதிக்க அறிஞர்கள் துதிக்க இரு நாட்ட ரசரும் பலகாலொருங்கு கூடி மநு நீதி தவாாது நீதியுடன ரசுபுரிந்து செங்கோல் செலுத்தி வருங்காலத்தில், குடிகளாகிய பிரஜைகளுக்கும், மற்ற பிரதேச நாட்டினுள்ளவர்களுக்கும், தீவுதீவாந்தரங்களி லுண்டாகும் அபூர்வ வஸ்துக்களெளிதி லடையக்கூடாத துன்பங்களைக் களைவான்வேண்டி, கச்சியரசன் மக்கடவராஜனுடன் கலந்து போசித்து, தன்னுயிர்போல் மன்னுயிர்களைக் காப்பாற்றுதலன்றோ வரசர்க்

கழுகென மதித்தும், நாமாத்திரம் அபூர்வ வஸ்துக்களை யடைந்து சுகித்திருக்கவும், ஏனையோர் அதனையடையா திருத்தல் தகுதியன் றென நினைத்தும், தமது நண்பனான விசுவசேன சோழனிடம் யோசித்து சிலரைத் தருவித்து, இவ்வியாபாரத்தை யெடுத்தோதி வேண்டும் பொருளீந்து தீவாந்தரங்களிற் சென்று ஆங்குள்ள அபூர்வ வஸ்துக்களைச் சேகரித்து வந்து, இப்பிரதேச சங்களிலுள்ள பிரஜைகளுக்கு குறைந்த விலைக் கிந்து சுகப்படுத்துவீர்க ளென்று விடை கொடுத் தனுப்பினர்கள்.

விருத்தம்.

திருவளர்மும் முடியிறைபாலனஞ் செய்காலஞ் ஜெயசோழன்
கச்சியரிற் சிலபேர்தன்னை
வரவழைத்தா தனத்திருத்தி யின்சொற்கூறி வளர்பிருதி வீசன்
வம்சத்தோரே நீங்கள்
பெருவணிக மியற்றிச் சாலுக்குழலைப் பெற்றி செய்வீரென
வேண்ட வியந்து தங்க
ளரசனுடன் கூறி விடை கொண்டின் புற்றே யார்த் திட்டார்
சரக்குவகை சேர்த்திட்டாரே.

இவ்விதமாக கச்சியரச னனுமதிப்பிரகாரம், பில்லிவங்கர ராஜனும் தன் குலத்தாரிற் சிலரும், சேனாதிபதிகளிற் சிலரும் காடு, மலை, வனம், வனாந்திரங்களுக்குச் சென்று,

நிகண்டு.

மாகத பவள நீலம் வச்சிரம் பதும ராகம்
விரவிய தாளமே கோமே தகம் புருடராகம்
வுரவிய காந்தி விட்டேயு மிழும் வைரீயந்தான்
பெருகிய நவமணிக்குப் பெயரிவை யாகுமென்ப.

யானையின் கொம்பிலுண்டாகும் வெண்ணிற முத்துக்களையும், மேகத்திலுண்டாகும் இளஞ் சூரிய நிறமுத்துக்களையும், மூங்கிலிலுண்டாகும் மழைத்துளி நிறமுத்துக்களையும், பன்றிக் கொம்பிலுண்டாகும் இரத்தநிற முத்துக்களையும், பாம்பின் சிரசிலுண்டாகும் நீலநிற முத்துக்களையும், செந்நெல்லிலுண்டாகும் பச்சைநிற முத்துக்களையும், மீனிலுண்டாகும் மீன் முத்துக்களையும், இன்னும் கரும்பின் முத்துக்கள், சிப்பி, சங்கு, கொக்கு, தவளை, முதலை, வாழை, பதிவிரதைகளின் கண்டம், தாமரை, உடும்பு, சந்திரகிரஹணம் முதலியவைகளிலுண்டாகும் முத்துக்களையும்,

இரத்தினச் சுருக்கம்.

நந்தி வராக மருப்பிப்பி பூகந்தனிக் கதலி
நந்து சலஞ்சல மீன்தலை கொக்கு நளினமின்னார்
கந்தரஞ் செந்நல் கழை கன்னலாவின் பல்கட் செவிகா
ரிந்துவுடும்பு கராமுத்த மீனு மிருப்பதுவே.

என்னும் முத்துக்களையும், வேறு சிலர் பலதீவுகளுக்குச் சென்று பொன், வெள்ளி, தாம்பிரம், பித்தளை, வெண்கலம், முதலிய உலோகங்களையும், சூரிய காந்தக் கற்களையும், பளிங்கு கற்களையும் சாலிக்கிராமங்களையும், வலம் புரிச்சங்குகளையும், உருத்திராக்ஷங்களையும், பீங்கான் சாமான்களையும், பலவிதப் பதுமைகளையும், மற்று முண்டான அபூர்வ வஸ்துக்களையும், வேறு பலவித தினுசுகளையும் குறைந்த விலைக்குப் பெற்றூர்கள்.

மற்றுஞ்சிலர் வேறு திசைகளுக்குச் சென்று கஸ்தூரி, அரிதாரம், கடுகு, மிளகு, ரோகணி, இலவங்கம், சித்திரத்தை, கற்பூரம், பச்சைகற்பூரம், குங்குமப்பூ, கோர்வாளம், அத்தர், பன்னீர், சுகந்தம், கெந்திப்பூ, அகிற்காரம், சிறுதேக்கு, கல்நாறு, வெந்தயம், சிறுநாகம், கார்போகம், வசம்பு, வால்மிளகு, ஏலம், ஜாதிக்காய், கஸகஸா, வெட்டிவேர், கெந்தகம், காந்தம், காயம், லிங்கம், சீரகம், குங்குமப், லவுங்கம், நவாச்சாரம், கோரோஜனம், அதிமதுரம், ஐவகை உப்பு, கருஞ்சீரகம், ஓமம், மல்லி, மஞ்சள், இஞ்சி, தேன், மெழுகு பலவித சாமான்களைப்பெற்று, யானை, குதிரை, கழுதை, ஒட்டகம். பொதிமாடு முதலியவைகளிலேற்றி, காடு, மலை, வனந்திரங்களைக் கடந்து,

சரக்குகளேற்றிய பொதி மாடுகள்.

விருத்தம்.

இந்த வண்ணம் பலவகையாஞ் சரக்கும் பொன்னும்
இன்னுமுள பலசாமானிறைவு செய்து
வந்த சில கோத் திரத்தாராயிரம் பேர்
மகிழ்ந்து குலதேவதையாங் காமாக்ஷித்தாய்
சுந்தரியாள் பத மலரைத் துதித்து வாழ்த்தித்
துணைவரது விடை பெற்றுத் தேசந்தோறும்
வந்து விற்கப் பொதிகடமைக் கப்பல்சேர்த்து
மகிழ்த்திட்டாருமை காக்கப் புகழ்ந்திட்டாரே.

பலவிதமான சாமான்களை வழியிலிருக்கும் பல தேசங்களில் விற்றும் ஆங்காங்குள்ள அபூர்வ வஸ்துக்களை வாங்கியும் விற்றுஞ் சோழதேசம் வந்தார்கள்.

மும்முடியரசனின் குலத்தவர்கள் வியாபார விஷயமாய் சோழதேசம் வந்தது.

கடைசியாக சோழ தேசஞ்சென்று சரக்குகளை விக்கிரயஞ் செய்துவிட்டு, இரவைக் கழிப்பதற்கு அவ்விடத்திலுள்ள ஓர் விடுதி யிற்றங்கி, யானை, குதிரை, ஒட்டகம், மாடு முதலியவைகளைக கட்ட வேண்டிய விடங்களிற் கட்டிவிட்டு தங்கள் வியாபாரக்கணக்குகளைச் சரிபார்த்து, அந்தந்த வூர்களின் விசேடங்களைப்பற்றி ஒருவரோ டொருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் சோழராஜ னின் காவற்றலைவர்கள் "பல்லவராய னென்னும் பராக்கிரம சாலியான ஆங்கார புருஷன் பலதேச அரசர்களிடஞ் சென்று சிலம்பு வித்தை மல் யுத்தம் முதலியவைகள் புரிந்து ஜெயித்து, தனக்கு நிகரில்லை யென விறுமாந்து இச்சோழ தேசம்வந்தான். விசுவசேன சோழ னும் தனது சேனை வீரர்களிற் கைதேர்ந்தவர்களை பல்லவனுடன் அனுப்பி அபஜெயப் பட்டதனல் மிகுந்த வருத்தத்துட னிருக்கின் முர். யாராயிருப்பினும் பல்லவராயனை ஜெயித்தவர்களுக்குத் தனது விருதுகளாகிய டங்கா, டமரகம், பேரிகை, ராஜமேளம், சின்னம், கோணக்கொம்பு, வெங்கலவில், பாங்கு, ஈட்டி, பல்லயம், வாள், பிண்டி, முஷ்டி, ஜெயக்கொடி, வெண்சாமரம், வெண்குடை, விசிறிதச் சுருட்டி, ஆலவட்டம், முத்துச்சிவிகை, பகல் தீவட்டி முதலியவை களைக் கொடுத்து எங்கும் புகழ் பரவச்செய்வோம் என்று உறுதி கூறியிருக்கின்முர்" என்று பறை சாற்றியதைக் கேட்ட மும்முடி குலத்தவர்களாகிய வியாபாரிகள் என்ன ஆச்சரியம், கேவலம் ஒரு மல்யுத்தக்காரனும், அவனை வெல்வதற்கு முடியவில்லையாம். நமது ஆதி புருஷனுகிய பிருதிவீச்சுரன் அந்தகனை யடக்கி தேவர்களை இரக்ஷித்தார். இன்னும் வைடங்க தேவராயர் முதலியவர்கள் கோர வீர திரரை சம்ஹரித்து துன்பங்களைக் களைந்தார்கள். இத்தகைய வம்ஸத்திற் பிறந்த நாம், இதைக்கேட்டு சும்மாவிருத்தல் தக்கதன்று. ஆனதுபற்றி அப்பல்லவராயனுடன் யுத்தஞ்செய்து அவனை ஜெயித்து சோழனது மனக்கவலையைத் திர்ப்பது கடமை யெனத் துணிந்து, சூரியோதய மானதும் தங்கள் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பில்லிவங்கரவனென்னும் நாப ராஜகுமாரன் யுத்தகோலத்துடன் சோழராஜனிடஞ் சென்று அரசே! காவலர்களாற் பறைசாற்று வித்ததைக் கேள்விப்பட்டு தங்கள் துயரை நீக்குவதற்கு வந்தேன் எனக்கழறி யதைக்கேட்ட சோழராஜன் சந்தோஷ மடைந்து இக்ஷணமே பல்லவராயனுடன் யுத்தஞ்செய்து ஜெயமடைவீர்க ளென்று விடையளித்தனர்.

பல்லவராயன் பில்லிவங்கரவன் மல்யுத்தம்.

யுத்தஞ் செய்யுமிடத்தில் சோழனும், மந்திரி, தந்திரி, பிரதானிகளும் குடிகளும், ஆங்குள்ள பெரியோர்களும் மற்றுமுள்ள வர்களும் வந்து கூடினார்கள். மும்முடி குலத்தவர்களாகிய வியாபாரிகளும் வந்து நிறைந்தார்கள். அதுசமயம் பல்லவராயன் ஜல்லடம், கச்சை முதலிய மல்யுத்த கோலத்துடன் ஆர்ப்பரித்து நின்றான். இதைப் பார்த்த மும்முடியனுடைய சகோதரனாகிய பில்லிவங்கரவனும் கச்சை முதலியதரித்து ஸ்ரீ காமாக்ஷியம்மனை நினைத்து அப்பல்லவராயனை யெதிர்த்து நின்றான். இருவர்களும் சமமாக நின்று கைதட்டி கடும் போர் புரிந்தார்கள். ஒருவரை யொருவர் தாக்கியும், ஆர்ப்பரித்தும், கொக்கரித்தும், ஒருவரை யொருவர் வீசி யெறிந்தும், பார்ப்பவர்கள் பயந்து நடுங்கும் படியாக கடும் போர்செய்தார்கள். கடைசியாகப் பில்லிவங்கரவன்பல்லவராயனைக்கொன்று ஜெயித்தான். சோழனும், மந்திரி, பிரதானி மற்றுமுள்ள பெரியவர்களுஞ் சந்தோஷமுற்றுபில்லிவங்கரவனை இருகரத்தாலுந் தழுவி, பல ஆசிமொழிகள் கூறி வீரகண்டாமணியைக் கழுத்திலிட்டு, மாலை மரியாதைகள் புரிந்து பறைசாற்றுவித்ததைப்போல விருதுகள் பல கொடுத்தார். இதைப் பெற்றுக்கொண்டு தாங்கள் கொண்டு வந்த அபூர்வ வஸ்துக்களை குதிரைகள், மாடுகள், ஒட்டைகள் முதலியவைகளின் பேரில் ஏற்றிக் கொண்டு சோணாடு செல்லத் தயாராயிருக்கும்போது விசுவசேன சோழன் தனது அந்தரங்க மந்திரியாகிய தியானனை, தன் குலத்தவர்களுக்குத் தெரியாமல் தனியாயனுப்பி, பில்லிவங்கரவ ராஜனை அழைத்துவரும்படி யேவினான். அவ்விதமே அழைத்து வந்ததைக் கண்ட சோழன், வீர தீர பராக்கிரம சீலராகிய நண்பரே! பிருதிவீச்சுர வம்ஸத்திலுதித்து ஸ்ரீசாதுகாமாக்ஷியம்மனின் வரப்பிரசாதம் பெற்ற இருபத்தி நான்கு மனையார்களாகிய நீங்கள் மகா உத்தமர்கள். நீங்கள் மகாசாதுர்ய சாமர்த்தியமும், அகண்டைஸ்வரியமும், புகழும் பெற்றவர்கள். மானுடர் துதிக்கும் தேவாம்ஸ பரம்பரையிற் றோன்றினவர்கள். காந்தர்வ வம்ஸத்து உத்தம ஸ்திரிகளை விதிப்படி மணந்த புண்ணிய சீலர்கள். ஆனபடியாலுங்கள் குடும்ப சம்பிரதா

யத்தில் எனக்கொரு பெண்ணை விவாகஞ் செய்துவைக்க வேண்டிய தென்று அந்தரங்கமாகக் கேட்டதற்கு, பில்லிவங்காவராஜன் சமயோ ஜிதத்தை யறிந்து, மறுக்கக்கூடாமல் ஒப்புக்கொண்டு, தாங்கள் கொண்டுவந்த அபூர்வ வஸ்துக்களை தேச சஞ்சாரஞ்செய்து விற்று விட்டு, தங்கள் நகாஞ்சென்று சகோதரர்கள், மைத்துனர்கள், சம்பந்திகள் முதலியவர்களுடன் கலந்து யோசித்து பின் கடிதம் எழுதுவ தாகவும், அதன்பிறகே தாங்கள் வரலாமென்றும், அதற்கு முன் தாங்கள் வருவது தகுதியன்று என்றும் கூறிவிட்டு, விடைபெற்றுக் கொண்டு தன் குலத்தாருடன் கலந்து வியாபாரஞ்செய்ய,

> கடல் கிழக்குத் தெற்குக்கரை பொரு வெள்ளாறு
> குடதிசையிற் கோட்டைக்கரையாம்—வடதிசையில்,
> ஏணாட்டுப் பண்ணை யிருபஃது நாற்காதஞ்
> சோணாட்டுக் கெல்லை யெனச் சொல்.

என்னுமிருபத்து நான்கு காதம் எல்லையாகக்கொண்ட காவிரிவளம் பெற்று அநேக சிவாலய விஷ்ணுவாலயப் பிரதிஷ்டைகளுடைய சோழநாடாகிய புண்ணிய பூமியைக்கடந்து,

> வடக்குத்திசை பழனி வான்கீழ் தென்காசி
> குடக்குத்திசைக் கோழிகூ டாம்- கடற் கரையின்
> ஓரமோ தெற்காகு முள்ளெண் பதின்காதம்
> சேரநாட்டெல்லை யெனச் செப்பு.

எனக்கூறியபடி வடக்கு பழநிமலை, கிழக்குத் தென்காசி, மேற்கு கள்ளிக்கோட்டை, தெற்கு கடற்கரை முதலியவைகளை எல்லையாக வுடைய சேர நாட்டை யடைந்து வியாபாரஞ் செய்ய வாரம்பித்தார் கள். அம்மலைநாட்டரசனின் காவலர்கள் இவ்வணிகர்களைக்கண்டு வணிகர்களே! நீங்கள் கொண்டு வந்த சரக்குகளுக் கெல்லாஞ் சுங்கங் கொடுத்தாலல்லது வியாபாரஞ் செய்யவும், ஓரடி அப்பால் எடுத்து வைக்கவு மொண்ணாது. எங்கள் ராஜ்ஜியத்தின் அரசனுக்கினை அவ்வித மென்றுகூறக்கேட்ட வணிகர்கள், காவலர்களே! யாங்கள் கச்சி மும்முடியரசரின் ஏவலாளர்கள் சுங்கம், கஞ்சுக்கும் பிஞ்சுக்கு மில்லாது மற்றவைகளுக்குண்டு. நாங்கள் உலக நன்மைக்காக அபூர் வஸ்துக்களை தீவு தீவாந்திரங்களுக்குச்சென்று பரோபகாரமாகக் கொணர்ந்து உதவிபுரிய விற்பனை செய்துக்கொண்டு வருகின்றோம். நீங்களல்லாது வேறு யாருஞ் சுங்கங்கேட்டதில்லை. நாங்கள் பலசரக் குகளையும் பலதீவாந்தரங்களுக்குச் சென்று பெற்று இலாபங் கருதாது குறைந்த விலைக்கு விற்று வருகின்றோ மாகையினால் யாங்க ளுங் களரசனுக்கு இறைவரி கொடோமென்று கூறிமறுத்தார்கள்.

சுங்கர் அரசனுக்கு அறிவித்தல்.

கேளும் தபோதனர்களே!

இவ்வாறு இவர்கள் கேட்ட சுங்கத்தைக் கொடுக்க மறுத்ததினாலிச் சுங்கக்காரர்களாகிய காவலாளர்கள் வணிகர்களிடம் தங்களாலியன்ற மட்டும் சொல்லியும் வாதாடியும் பயன்படாமையால் சினங்கொண்டு ஓடோடியும் வந்து தங்களரசனாகிய வீரப்பிரதாப சேரனிடமறிவித்தார்கள். இதைக் கேட்ட அரசன்சினமடைந்து, என்னுடைய கட்டளைக்கு எதிர்த்து நடப்பவர்கள் கூட வுலகத் திலிருக்கின்றார்களா? என்று ஆர்ப்பரித்து ஏ! காவலர்காள்! அவர்கள் யாரா யிருப்பினு மெமக்கு அவசியமில்லை. அவர்களிட மிறைதரி வாங்காது நீங்கள் ஓரடிவைக்க விடாதீர்கள் என்று உத்திரவிட்டு சில காவலர்களையு மனுப்பினார்கள். வந்த காவலர்கள் ஒருமித்து கோபாவேசத்துடன் வணிகர்களைக் கண்டித்து வரிகேட்க, வணிகர்களும் பயமடைந்து தம்முட் சிலரை கச்சிக் கேகி மும்முடியரசனுக்கறிவிக்கச் செய்தார்கள்.

இதைக்கேட்ட மும்முடியரசனும் மற்று முண்டான மந்திரிகளுஞ் சேனாதிபதிகளும் யோசித்து சேரனுடைய நீதி முறை நன்கு விளங்குகின்றது. நாம் நீதி பிறழாது நடத்துதல் கடமையாக விருத்தலின் மந்திரிகளை விளித்து சேரனுக்குத் திருமுகம் எழுதலாயினர்.

திருமுகம் வருமாறு.

சுவஸ்திஸ்ரீ ஸ்ரீமான் சிலையேந்துங்கரத் தோனே! மாற்றலரின் வீரங்கெடுத்த செங்கோற் கொல்லி காவலன் வில்லவர்கோன் வீரப் பிரதாப சேரர் சிகாமணியே! நினதன்பர்களாகிய பிரபோதய ராஜனென்னுங் கச்சி மும்முடியரசன் வரையும் லிகிதம் யாதெனில், தங்கள் நாட்டுக்கு வந்து உலகோபகார மாகவியாபாரஞ் செய்யும் வணி

கர்கள் எமதேவலால் வந்தவர்களே யல்லது வேறல்ல. யாம் உலகுக்கு நன்மை செய்யும்படி யிவ்விதஞ் செய்திருக்கின்றோம். அவர்கள் பல தேயங்களிலு முண்டான அபூர்வ வஸ்துக்களை இத்தென்னாடுகளிற் பரவச் செய்யு நிமித்தம் வியாபாரஞ் செய்கின்றார்களே யல்லது, இதனால் இலாபத்தை யடைந்து ஜீவனஞ் செய்யும்படி யான வர்களல்ல. ஆகையால் எமது நட்பு உமக்கு வேண்டுமாயின் அவர்களிடம் வரிவாங்காது விட்டுவிடும். என்றெழுதி இராஜமுத்திரையிட்டுத் தமது தூதரிடந் தந்து சேரனிடஞ் சேர்ப்பிக்கும்படியாக ஆக்ஞாபித்து அனுப்பினார்கள்.

நிருபத்தைப்பெற்ற தூதுவர்கள் விரைந்து பலவூர்களையும், காடு மேடுமலை வனந்திரங்களையுங் கடந்து குடகுநாடு போய்ச்சேர்ந்து அரசிருக்கை மண்டபத்திலிருந்த வேந்தனை நமஸ்கரித்து முழங்காலிட்டு திருமுகத்தைக் கொடுத்தார்கள். சேரன் அதைப்பெற்று வாசித்தறிந்து புன் சிரிப்புடன் பதில் திருமுகம் எழுதலாயினன்.

வீரப்பிரதாப சேரன் எழுதிய பதில் திருமுகம்.

ஸ்ரீராஜமஹாராஜஸ்ரீ பிருதிவீச்சுர வம்ஸ யாக க்ஷத்திரியகுல பிரபோதய ராஜ னென்னும் மும்முடி யரசனுக்கு வந்தனஞ்செய்து வரையும் பதில் நிருபம் யாதென்றால் தங்கள் நிருபங்கண்டு மிகுந்த ஆசங்கை கொண்டேன். வேற்றரசர்களுக்குப் பயந்து நட்பைக்கைக் கொண்டு அரசபுரிகின் றேனென்ற யெண்ணத்தை வகித்திருக்குங் கச்சியரசனே! நீவிர்விண்டது நம்மாட்டு சிலாக்கிக்கத் தக்கதாக விருக்குமே யல்லது எம்மாட்டு பொருந்தாது. க்ஷாத்திரியத்துட னிருப்பது க்ஷத்திரியனுக்குறிய தருமமென்பதை நீவிர் அறிகிலீர் போலும். வியாபாரஞ் செய்யும் வணிகர்கள் நும்மவர்களென்று அறிந்தே சுங்கவிதி நியமித்தனம். அஃதைக் கொடாது காக்கவல் லீரே லும்மாலானதைச் செய்வீர். யாமும் சுங்கம் வாங்காது விடுவோமல்லோம். அன்னவர்களை சரக்குகளுடன் சிறைப்படுத்தியுள்ளேம். என்று வரைந்து அரசமுத்திரையிட்டு தூதுவர்வசங்கச் சிக்குக்கொடுத் தனுப்பிவிட்டு, வணிகர்களை சரக்குகளுடன் சிறைப் படுத்தினன்.

கச்சியில் மும்முடி வேந்தனின் ஆலோசனை.

சேரனாற் கொடுக்கப்பட்ட நிருபத்தைப் பெற்றுக்கொண்ட தூதுவர் கச்சித்தலத்தை யடைந்து மும்முடி யரசனை வணங்கி முழந்தாளிட்டு கொண்டுவந்த நிருபத்தைக் கொடுத்து சிரந்தாழ்த்தி வணங்கிப் போயினர். அரசன் ஆக்ஞைப் பிரகார மந்த நிருபத்தை யாவருமறிய வாசித்து முடிந்ததும், ஒவ்வொருவருடைய முகமுங்கோபக்குறியடைந்து, கண்களில் நெருப்புப்பொறி பறக்க மீசை பட பட

வெனத் துடிக்க கர்ஜித்து அரசனைப் பார்த்து, அரசே! முன்னமேயே நாம் நிரூபம் வரையாது நமது சைனியங்களுடன் அங்குசென்று அவ்வரசனுடன் போர்புரிந்து வென்று வாகைமாலை சூடியிருப்போமாயின் இவ்விதமாகிய நிரூபம் இறுமாப்புடன் எழுத வியலாதல்லவா? துஷ்டர்களை உடனுக்குடன் சிஷ்டை செய்யவேண்டிய நியாய மிருத்தலினிவர்களுக்கு நீதியும் நியாயமுங் கிடையாது. ஆகையால் இனி நாம் சும்மா யிருப்பதில் யெப்படி யாகுமென்றால், நமது பெரியோர்கள் கூறியபடி,

கண்ணிகள்.

சிங்கமானது மங்கினால் யானை பொங்கி மேல் விழுந்தடித்திடும்-பூனை
திகைத்துச் சோம்பினால் மிகுத்தெலிகள்போய் நகைத்த தன்றலை கடிக்குமே
பொங்கிய விடந்தங்கு நாகந்தான் சிங்கினாற் பிள்ளைப் பூச்சியாம்- உக்ரப்
புலியொடுங்கினால் மெலியும் புல்வாயினன் வலியுளேன் புலி நீதாழ்ச்சியாம்.

என்னுமே நமது முன்னுளோர் வீரஞ்
சொன்னாலே பசிபோய்விடும்—பிருதி
வீஸ்வரன் வம்ஸ தாஷ்டிகஞ் சொன்னால்
வாஸ்தவங்கல்லும் வாய்விடும்
பன்னுமந்தகன் றன்னை யடக்கியுற்ற
மன்னுந் துன்பத்தை நீக்கினன்-ஆதி
பரமனால்மிகு வரமுங் கொண்டு பல்
விருது களு முண்டாக்கினன்.
அந்த வம்ஸத்தில் வந்ததும் அன்றி
சுந்தரியினருள் பெற்றுந்தில்லை
ஆண்டசீர் கலைக் கோட்டரருளால்
காட்டும் பிரணவம் உற்றும்
இந்தப் பகைக்குச் சிந்திப்ப தென்ன
அந்தரி அருள் நேரே— கொண்டு
எட்டிலாகிப் போய் வெட்டு வோமவனைக்
கட்டளை தருவீரே.

மந்திரி பிரதானிகள் நாம் எவ்வளவு பொருமையாகவும், தண்மையாகவும் மனு நீதியைக் கைவிடாது, எல்லவரு மொப்பத் தகுந்த தாய் எழுதிய நிரூபத்திலடங்கிய நன் மொழி அவ்வரசனின் கெட்ட காலத்துக்கு தக்கபடி அவன் மனதிற் படாது வீணாயிற்று. இனி அரை நிமிடங்கூட தாமதித்தல்கூடாது. அவனது இறுமாப்பை அடக்கவேண்டியது நமது கடமையாகு மென்றுலோதித்து மக்கடவதே சாதிபதியை ரத, கஜ, துரக, பதாதிகளாகிய சைனியங்களுடன் வரவழைத்து இருபத்து நான்கு பனையார்களும் தங்கள் குலதேவதையாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மனை துதித்து நின்றார்கள்.

லாவணி - இம் - நாதநாமகிரியை.

ஏகதாளம்.

எம்மைக்கைதூக்கி யாளுந்திருவே—நாங்கள்
எந்நேரமுமுனது பொன்னடி மறவேம்—திருவடி மறவேன் (எ)

இன்னல்புரியுந் துஷ்டர்—இனத்தையடக்குந் தேவி
பன்னுமுபநிடதம் பரவுவெங்கோவி—பக்தர்க்குமாவி (எ)

பஞ்சக்கரத்திரீயே—பாவைகாமாக்ஷித்தாயே
அஞ்சக்கரங்கொண்டெம்மை யாதரிப்பாயே—அபயஸ்தமீயே (எ)

உடல்பொருளாவிமுற்று—மும தடைக்கலமென்றே
ஒப்புவித்தோமன்னையே யுவந்தருளின்றே—உயிர்ப்பகைவென்றே (எ)

ஞானபலங்கள்தாரும்—நாராயணிவிசாலி
தானந்தவ விரதம் தங்குந்திரிசூலி—தாங்குங்கபாலி. (எ)

எனத்துதிக்கும்போது உமா பிராட்டியார் அசரீரியாக நீங்கள் மலை நாடு சென்று வெற்றியுடன் வருவீர்களாக வென்றுசீர் வதித்தனர். அதைக்கேட்ட யாவரும் மிக்க சந்தோஷமும் உற்சாகமுங்கொண்டு வெளியில் வந்து நமஸ்கரித்து, தங்கள் மாளிகைக்குச் சென்று நவ ரத்தின கசிதமான வாடையாபர்ண லங்கிர்தராய் கத்தி, கேடயம், வில், வாள் முதலிய வாயுதங்களுடன், இரத, கஜ, துரக பதாதிக ளோடு சிங்கக்கொடி பதிந்த இரதங்களிலாரோ கணித்து பதினெண் வகை மேள வாத்தியங்கள் தாம் தாமென முழங்கச்சென்று சேர நாட்டை யணுகி, கோட்டையை முற்றுகை போடும்போது, இவ்வர சனை திருமுகத்தின் மூலமாக வறிந்தோமே யல்லது,நேரிற் சந்தித்து வார்த்தையாடினே மில்லை. ஆகையினல் நேரில் சேரனைக்கண்டு பேசியபின் நடத்தவேண்டியவைகளைப் பற்றி யோசித்த லுசித மெனத் துணிந்து நேரிற் சென்றார்கள். இதைக்கண்ட சேரனுமாசன மிட்டு டமரச்செய்து வார்த்தையாட வாரம்பித்தான்.

சேரனுக்கும் மும்முடியனுக்கும் தர்க்கம்.

கண்ணிகள்.

திபகை இ-ம் (அடாணுரூபக தாளம்)

(மும்) மன்னனுனமலே மன்னனே நீரிந்த
விண்ணஞ் செய்யலாகுமோ—புதிதான
வழக்கஞ் செய்திட்டால் இழுக்கில்லாமலே
மொழுக்க எவராலாகுமோ.

(மலே) என்னவசனங்கள் பன்னவந்தீரதை
இன்னெருதரஞ்சொல்லும்—நான்கேளாத
எங்குள்ளவார்த்தையை யிங்குபுகலவந்தீர்
அங்குதானே நில்லும்.

(மும்) நில்லு மென்றே வெகுவல்லமை யாகவே
சொல்லுதல் கூடாது—வெகுவித
நிஷ்ரே வார்த்தை வாய் விட்டுச் சொன்னீர் நீதிச்
சட்டத்தை நாடாது.

(மலே) நல்லது நீரிங்கு சொல்லவருகிற
புல்லறிவு மேது— அதுதனே
நானறியும் வகையான படியாய் நி
தானமதா யோது.

(மும்) ஓதக்கேள் கஞ்சுக்கும் மீதான பிஞ்சுக்கும்
நீதியாய்ச் சுங்கமுண்டோ— பலசரக்
குள்ளதற்கு தீர்வை கொள்வதலால் மீதி
விள்ளுவ் தென்ன கண்டோ

(மலே) ஈதென்ன காரண மோதவந்தீரது
நீதியல்லகாணும்—என்தேசத்
திருக்கும் செயற்கைப் பெருக்க மறியா
துரைக்கிலதென் தோணும்

(மும்) கொல்லத் தெருவில் நல்லூசி மாறல்போல்
வல்லமை செல்லாதே— எவருக்கும்
கூருள வீரமுந் தீரமுந் தாரமும்
ஓரிடம் நில்லாதே.

(மலே) புத்தி சொலத் தருவித்தேனே நீரொரு
மித்துச் சண்டை தொடுப்பீர்—தொடுத்திப் போ
பொங்காரமா யுத்தமிங்கே செய்யாவிடில்
சுங்கந்தனைக் கொடுப்பீர்.

(மும்) அம்மையருளினு லும்மைஜெயித்து நாம்
செம்முடி சூட்டி வெல்வோம்— இன்றுமுதல்
ஐந்துநாளைக்குள்ளே உன்றன் சேனை யெல்லாம்
சிந்தவடித்துக் கொல்வோம்

(மலே) உம்படையும் உம்மை நம்பி வந்தோரையும்
கும்பலோடே யடிப்பேன்— கணத்தினில்
ஊழிக்காற்றிற் பஞ்சின் தூளியைப் போலிந்த
நாளதிலே மடிப்பேன்.

இவ்விதமாக ஒருவர்க் கொருவர் தர்க்கித்துக் கடைசியாக சேரன்,யான் இறைவரியாகிய சுங்கம் பெறுது உமது வணிகர்களை விடேனென்று கூறவும், மும்முடியன் இறைவரி கொடாது அவர்களை விடுவித்துக் கொள்வதுடன் உம்மையும் வென்று ஜெயக்கொடி நாட்டுகின்றே னென்று வீராவேசத்துடன் கூறி யுத்தத்திற்கு ஒரு நாளை நியமித்துக்கொண்டு தங்கள் தங்களிருப்பிடஞ் சென்ருர்கள்.

இதைக்கேட்ட நகரவாசிகள் கலக்க மெய்தி இது என்ன விபரீதகாலமோ? தெரியவில்லை. நமது அரசனும் ஒரே பிடிவாதத்துடன் இறைவரி கொடுத்தல் வேண்டு மென்கிருன். அந்த மும்முடியனும் எவ்வளவோ நீதிகளைக் கூறியும் பயன்படாமல் யுத்தத்துக்கு நாளையுங் குறித்து விட்டார்கள். இது என்னவாகுமோ "வினசகாலே விபரீத புத்தி" என்பதற் கிணங்க விருக்கின்றது. நாம் அரசனிடம் போய் யாது கூறப்போகின்ருேம். நமது வார்த்தைகளை அரசன் கொள்ளப் போகிறதில்லை. அவர்களோ மிகுந்த பராக்கிரமசாலிகள் உமா பிராட்டியாகிய ஸ்ரீ காமாக்ஷி யம்மையாரின் கிருபா கடாக்ஷம் பொருந்தியவர்கள் என்று வருந்தி ஒன்றுகூடி யோசித்து கல்விகேள்விகளிலும், பக்தியிலும் மேம்பட் டிருக்கும் அரசனின் தவப் புதல்வியாகிய மங்கைப்பருவமுடைய மாது சிரோமணியிடஞ் சென்று யேதேனும் வழிதேடும்படிக் கூறுவோ மென்று தேறி, சேரனது அரன்மனைக்குச் சென்று அரசகுமாரத்தியினிடம் முறையிட்டு வருந்தினர்கள். இவைகளைக் கேட்ட சிரோமணி திடுக்கிட்டு பயந்து அவர்களை யனுப்பிவிட்டு யோசிக்கலானள்.

மும்முடியன் சிரோமணிக்கு நடந்தவை கூறல்.

விருத்தம்.

மாதுசிரோமணி யிவ்வகை தனக்குட்டோற்றும்
வகைகளெலாந் தன்னுளத்திலுன்னிப் பன்னித்
தீதகலுங் கச்சியருக்குமை வந்தன்பாற்
சிறந்தவரங் கொடுத்தாணந்தியாளானேம்
எதிதனை யவரிடஞ் சென்றறிவோ மென்ருங்
கியலுறு சேடியருடன் வந்திட வின்னேர்நன்
கோதிமகிழ்ந்து பசரித்துண்மை களைக்கூறி
யொப்புவார வடனுக்குச் செப்புவாரே..

சிரோமணி ஆழ்ந்த யோசனையுடன் ஒருவாறு மனந்தேறி ஸ்ரீ சொர்ன காமாக்ஷி யம்மனை மனத்தினாலும் வாக்கினாலும் தியானித்து சிறுத்த யிடையும் மயிலினம்போல் நடையும் மிருதுவாகிய மெல்லி னப்பட்டு பீதாம்பிர உடையும், பொன், கெம்பு, வைடூரியம், மாணிக் கம், முத்து, பவழ மணிந்து கெண்டைபோல் விழியும் கிளிநு தல் மொழியும் கிளர் மதிவதனமும் பாதச்சிலம்புடன் கலீர் கலீர் என்ற சப்தத்துடன் காரிருளடர்ந்த நடு நசியில் தமது சேடியர்கள் புடைசூழ நடந்து கச்சியர் தங்கி யிருக்கும் கூடாரங்களிற்போய் கச்சி வேந்தனாகிய மும்முடியனைப் பார்த்து அவர்களின் பக்திக்குகந்து அவர்களின் நட்பால் சாக்ஷாத் அம்பிகையின் அருள் பெற்றுய்யக் கூடுமென்று கருதி, வணங்கி இராஜ சபையில் தங்களுக்கும் எமது தந்தையாகிய சேரனுக்கும் நடந்த விருத்தாந்தங்களை யுரைக்க வேண்டுமென வேண்டிக் கொண்டதைப் பார்த்த கச்சியரசன் யாவற் றையும் எடுத்துரைத்தது மன்றி சிரோமணியைப் பார்த்து குழந் தாய்! நீயோ பருவகால மங்கையாக விருக்கின்றனை, உமது தந் தைக்கு மெமக்கு மிருக்கும் விரோதத்தினால் பழிப்புக்கு விடந்தரு மல்லவா? நினது தாய் தந்தையருன்னை வெறுக்க நேரிடுமாகையி னால், நீ இங்கு தாமதிக்காது நினது அந்தப்புரஞ் செல்வது நலமாகு மென்று கூறினர். இதைக்கேட்ட உத்தம ஸ்ரீயும் கல்விக்களஞ்சி யமு மாகிய சிரோமணி கச்சியரைப் பார்த்து சில வசனங்கள் கூறுவாள்.

சிரோமணிக்கும் கச்சியருக்கும் தர்க்கம்.

கண்ணிகள்—மோகனம்—ஆதிதாளம்.

உங்களைத்தான் நம்பி வந்தனன்—சிலசந்தேகம்
உண்டது கேட்க இயைந்தனள்.

எங்குஞ் சத்தியிருக்க இங்குல குற்ற தேது
அங்கத்தாற் பெண்ணுமற்—றெங்கான் மாவுக்கீ தேது
பங்கிய வுலகியல் தங்கிய பொய்க் கட்டு
அங்கன மெனினமக் கெங்ஙனம் வருஞ்சொட்டு
பார்க்கில் நாமவுரு ஜாதிகள் பொய்யே
தீர்க்க பூரண சிந்நாதம் மெய்யே!.

எனதருமை சகோதரர்களே! "அரிது அரிதுமானுடராய்ப் பிறத்த லரிது பிறந்திடுங் காலையில் கூன் குருடு செவிடு பேடு நீக் கிப் பிறத்தலரிது பிறந்த காலையில் ஞானமும் கல்வியும் நயத்த லரிது ஞானமுங் கல்வியும் நயந்த காலையில் தானமுந்தவ முந்தான் செய்த லரிது தானமுந்தவமுந்தான் செய்வாராயின் வானவர் நாடுவழி திறந்திடுமே" என ஒளவைப்பிராட்டியாரும் மற்றோர் களுங் கூறியவைகளை உற்று நோக்கு மிடத்து, பரம சிவனுடைய

பராசத்தி யருளினலே குடிலையில் நாதமும், நாதத்தில் விந்துவும், விந்துவில் சாதாக்கிய முந்தோன்றும். சாதாக்கியத்தில் மகேசுவர னும், மகேசுவரத்தில் சுத்தவித்தையுந் தோன்றும். இவை ஐந்தி னுள் முன் கூறிய விந்துவில் நாலுவாக்கும் ஐம்பத்தோரக்ஷா மும், எண்பத்தொரு பதமும், இருநூற்றிருபத்து நான்கு புவனமும், சப்த கோடி மஹா மந்திரமும், சகல சாஸ்திரங்களும், விஞ்ஞான கலர், பிரளயாகலருக்குத் தனுகரண புவனபோகங்களும், சாமீப, சாரூப மென்னும் பத முத்திகளும், பஞ்ச கலைகளும் தோன்றும். இவைகள் தான் சுத்தமாயையின் தோற்றமாகும். இனி அனந்த தேவரருளினலே அசுத்த மாயையில் நின்று காலமும், நியதியும், கலையுந் தோன்றும். கலையில் வித்தையும், வித்தையில் இராகமுந் தோன்றும்.

இனி உருத்திர தேவரருளினல் முன்சொன்ன கலையில் மூலப்பிரகிருதியும், மூலப்பிரகிருதியில் முக்குணங்களுந் தோன்றும். முக்குணங்கள் தோன்ருது நின்றவிடம் அவ்வியக்தம். அந்த அவ்வி யக்தத்தில் சித்தமும், புத்தியுந் தோன்றும். புத்தியில் அகங்காரம் தோன்றும். அது யான் எனது என்று விகற்பித்துவரும். இதுவே அகந்தைக்கு வித்தாகும். பை, முட்டை, நிலம், வியர்வை ஆகிய நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும், எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களினு மீடுபடும். அத்தகைய யோனி பேதங்களில் மானுடப் பிறவி அருமையினுமருமை.

இத்தகைய பிறவியும் நீர் மேற்குமிழியைப்போல் நின்றழியுமா தலா லிதற் குறிய பயன் வாலறிவனற்றுள் தொழுதலே. அங்ஙனம் தொழுவோமேயாகில் பிறப்பென்னுந்துன்பங்கெடும். நம்மை ஈன்ற தாய் தந்தை பெண்டு பிள்ளை முதலியயாவும் பொய் அநித்தியமென் பது ஊர்ஜிதமாகிறது. “தந்தையார் போயினர் தாயாரும் போயினர் தாமும் போவார்” எனத்தேவாரம் மற்றுமுள்ள நூல்களு முறையிடு கின்றன. என்று மழியாது நிலைநின்று தம்மைவந்திப்போர்களுக்கு இகத்திற்சுகமும், பரத்தில் முத்தியுங் கொடுக்கக்கூடியது அந்த பராசத்தியேயாகும,

சத்தியாய்ச் சிவமாகித்தனிப்பர
முத்தியான முதலைத்துதி செய
சுத்தியாகிய சொற்பொருணல்குவ
சித்தி யானைதன் செய்ய பொற்பாதமே.

எனப்பரஞ்சோதியாரும் விளக்கிக்காட்டினர். இந்த பராசக்தி யாகிய உமாபிராட்டியாரின் திருவருளை, மதுரைமா நகரில் விரூபாக் கன் என்னும் அந்தணருக்குப் பிறந்த கௌரியென்னுமிளங்குழந்தை பூஜித்து அடைந்த முத்திசாதனத்தை யறியார்யாரிருக்கின்ருர்கள். அத்தகைய பராசத்தியினது அனுக்கிரகம் முழுமையும் பெற்ற உங்களைக் காண்டலே யெங்களது புண்ணியமும் நாங்கள் செய்த பூஜாபலமுமாகும். இப்புலால் உடம்பு என்றைக்காயினும் ஒரு

நாள் வெற்றுடம்பாதல் திண்ணம். நாம் கொண்டுபோகும் வஸ்து பாவம், புண்ணியம் தவிர வேறு கிடையாது.

எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் றமரொடும் போகான்
நல்லாரென்னான் நல்குரவறியான்" எனக்கபிலரும்,

"முடிசார்ந்த மன்னருமற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னுமிந்த"

எனத் திருவெண்காட்டடிகளும் மற்றுமுள்ள பெரியார்களுங்கூறி யவைகள் கண் கூடாக விருக்கின்றன. இத்தகைய சாதல் பிறத்த லாகிய துன்பங்களைப் போக்கக் கூடியது நமது உமாபிராட்டியாரின் திருவருட் கடாக்ஷமே யல்லது வேறில்லை. இவைகளை கூர்ந்தறியாத நாம் நமது வாழ்வு நித்திய மென்று நினைத்து வீணான விஷயங்களி லீடுபட்டு மீளா நரகத்திற் காளாகின்றோம். எனது தந்தையு மிதில் ஒருவராக நிற்கின்றார். ஆகவே தங்கள் விஷயத்தில் எனது பிதா செய்த அபசாரத்தை மனதில் வையாது க்ஷமித்தருள வேண்டு மென்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் தமது புத்தரி சிரோன்மணி கச்சியரசர்களாகிய மாற்றலரிடம் வார்த்தையாடிக் கொண்டிருப்பதை ஒற்றர்களாற் செவியுற்ற சேரனாகிய பிதா அடக்கொணா சினமடைந்து சேவகர்களை நோக்கி அம்மாதை உடனே அழைத்துவரும்படி கட்டளையிட்டான். சேவகர்களும் அவ்வாறே சென்று சிரோன்மணிக்கு முடி தாழ்ந்து வணங்கி அரசனது கட்டளையை யறிவிக்க, அம்மாதும் உடனே கச்சியரிடம் விடைபெற்று தந்தையின் மண்டபம் வந்து பிதாவை நமஸ்கரித்து நின்றாள்.

பிதாவாகிய வீரப்பிரதாப சேரன் தனது மகளைப் பார்த்ததும் கண்கள் சிவந்து பொறிபறக்க மிகுந்த கோபத்தை யடைந்து கூறுவ தாவது,

சேரனுக்கும் சிரோன்மணிக்கும் தர்க்கம்.

கண்ணிகள்.

(மலே) அதிகத்தவத்தா லுந்தனைப் புதல்வியாகப் பெற்று
அருமையாக வளர்த்தே னென் மகளே—எனக்
காகாதவரிடம் பேசி யாகாதவளேத்துதித்
தடிமைப் பட்டிடலாமோ என்மகளே.

(சிரோ) நினக்கானவாசையா லெனைப் பெற்றநாள் முதலாய்
நிரந்தரி யெனைக் காத்தாள் தந்தையரே—அந்த
நேயர்குணவம் நீரறியாது சொல்லும்
நீர் மூடமாகாதையா தந்தையரே.

இவ்விதமாகசிரோன்மணிக்கும் தந்தையாகிய சேரனுக்கும்நெடுநேரம் தர்க்கம் நடந்த பின்னர் சேரன் புத்திரியை அருகழைத்து என் கண் மணியே! உன்னை நான் எவ்வளவோ அருமையாக வளர்த்து நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினென் புராணம் முதலியவைகளைக் கற்பித்து தந்தது மல்லாமல் கண்டோரதிசயிக்க அருமை பெருமை யாக வளர்த்தேன். நமது குலம் உன்னால் புகழ்பெறுமென்று ஆவலாக விருந்தேன்; அதன் பிரதிபலனாக நடுநிசியில் நீ எனது சத்துருக்களுடன் நேசம் வகித்து என்னை வெறுத்து வார்த்தை யாடியது,

கோவிந்த சதகம்.

பீடர் குலத்திலாகாத பிள்ளை தற்பெற்றெடுத்தோர்
வாடாது வாடக் குலநாசமாக்கிடு மற்றதுதான்
தாடாண்மையாளர் கைக்குள்ளாய்த் தருக்குலஞ் சாயவெட்டுங்
கோடாலிக்காம்பல்லவோ வச்சுதாநந்த கோவிந்தனே.

எனக்கூறியதை யொத்திருக்கின்றது. ஆனமையின் நீ எனது கட்ட ளைக்குக் கீழ்ப்படிந்து எனது பகைவர்களின் அன்பையும், அவ்வம்பி கையின் பூசையு மொழித்து விடுவாயே யாயின் உன்னை எனது புதல்வியென மதித்து நினது பிழையை மன்னிப்பேன். இல்லையா யின் என் கைவாளுக் கிரையாய் விடுவாய் எனக்கூறி யதைக்கேட்ட மாது சிரோமணி தந்தையைப் பார்த்து வணங்கி, ஐய! இந்நாறு முடலுக்குத் தோன்றிய அன்னையும் அப்பனும் அளவுகடந்துள்ளார். அன்னை எத்தனை எத்தனை அன்னையோ அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ வென்று கூறிப்புறக்கணித் துள்ளார்கள். உண்மையில் தாங்கள் இந்தவுடலுக்குத்தந்தையரேயல்லது ஆன்மாவுக்குத் தந்தை யரல்லர். இவ்வுடலும் நீர்மேற் குமிழியை ஒக்கும். இதை யனு சரித்தே நமது முதியோர்கள்

"கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென்றலா
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்கண்டு—மணங் கொண்டீன்
டுண்டுண்டுண்டென்னு முணர்விஞற் சாற்றுமே
டொண்டொண்டென்னும் பறை."

"ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக்கேயிரை யாகிக் கழிவரே," எனவும்

மணமகனே பிணமகனுய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார்வாழ்த்தொலிபோய்அழுகையொலியாய்கிடந்தார்ப்ப"

வென்றுங் கூறியுள்ளார்கள். அண்ணல்! நமக்கு சத்துருவாக வந்திருப்பவர்கள் மிகுந்த அறிவாளிகள். அம்பிகையின் அன்பர்கள். சிவபக்தி மாருததீரர்கள். அவர்களொன்றுந் தீங்கிழையா திருக்கும் போது, நம்போன்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் நன்மைபுரிய வந்தவர்களைத்தாங்கள் சிறைப்படுத்தியது நன்றன்று.

அவர்களை வெளிவிடுத்து கச்சியரை நாம் வணங்கினல் நமக்கும் அம்பிகையின் அருள் அமரும் 'எந்நன்றி கொன்றூர்க் குய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகட்கு" எனப்பல விஷயங்களையும் நியாயங்களையு மெடுத்துக் கூறியதைக் கேட்ட பிதா மிகுந்த சினமடைந்து புத்திரி யென்பதை மனதில் வையாது வெறுப்படைந்து தனது ஏவலர்களாகிய கொலைஞர்களை வரவழைத்து தந்தையின் வார்த்தையைத் தட்டிப் பேசுமித்துஷ்டியை கானலிற் கொண்டுபோய் வெட்டிவிட்டு வருவீர்களாக வென்றுத்திர விட்டனன்.

சிரோன்மணியை கொலைக்களத்துக்
கழைத்துப் போய் கொலைபுரிதல்.

கொலைஞர்கள் சிரோன்மணியை அழைத்துக்கொண்டு ஊருக்குப் புறம்பே போகும்பொழுது ஊரார் யாவரும் ஒருங்குகூடி கூக்குர லிட்டுஈதென்னவனியாயம்நமதரசன் தனக்குள்ளமதியைஎங்கோசோர விட்டு தமதுபுத்திரி யென்பதையுங்கவனியாது இவ்வித பெண்பழியை யேந்திக்கொள்வானு. கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே யென்பதைப் போன்று அவனது கெட்ட காலத்துக்குத் தகுந்தது போல் புத்தியும் புகுகின்றது. ஏ குழந்தாய்! நீ என்ன பொல்லாங்கு புரிந்தனை. உமது பிதாவுக்கு கேடுவரும் நிமித்தம் புத்திகெட்டு வருகின்றது போலும். ஐயோ! இவளது கல்வி, குணம், செய்கை

முதலியவைகளை நோக்கு மிடத்து ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம் மாண்ட நாயகியை யொத்தவளாயிற்றே. ஏ குழந்தாய்! நில்லும் நில்லும் யாங்க ளும்முடன்வந்து எங்களுயிரையும் பலிகொடுக்கத் தயாராயிருக்கின்றோமென்று சொல்லிக்கொண்டு பின் தொடருவதைக் கண்ட, சிரோன்மணி எனது மாதா பிதாவுக்கு மேலாக நட்பு கொள்ளும் அன்னையர்களே! தந்தையர்களே! நில்லுங்கள், நில்லுங்கள், "அவரவர்வினையி லவரவர் வருவார்" "வினைப்போகமே யொரு தேகம்" யென்பதுபோல நான் அனுபவிக்க வேண்டியதை யனுபவித்துத்தான் தீரவேண்டும். ஆகையால் தாங்கள் வந்த வழியே திரும்பிப்போங்கள். உலகம் அநித்தியம், உலகத்தி லனுபவிக்கும் சுகமுமநித்தியம். உலகத்திலொருவர்க் கொருவர் பந்துத்வமு மநித்தியம். ஆகையினல் நீங்கள் யாவரும் மன்னித்து எனது தந்தையரை பாதுகாப்பீர்கள் என்றுகூறி நமஸ்கரித்து கொலைஞருடன் பின்சென்றுள்.

ஆயுதங்களால் வதைத்தல். A விருத்தம்.

வல்ல கொலைக் காரர்களூர் புலம்ப மன்னன்
 மகடனைக் கொல்லுங் களத்தில் வைத்தே மிக்க
அல்லலுறக் கட்டி யுருட்டிப் புரட்டி
 அவர் கையிலுள்ள வாயுதங்களான
வல்லயம் வேல் மழுவாழிவாள் கோடாரி
 மருவு பிண்டி பால மிவைதன்னைக் கொண்டு
சில்லுற வெட்டிட வுமையை யுள்ளத் துள்ளே
 தேடுவாள வளருளை நாடுவாளே.

கொலைஞர்கள் சிரோன்மணியைக் கொலைக்களத்தில் நிறுத்தி சிறிது மிரக்க முதலியவைகளை வையாது தமதரசனுக்கினைக்குப் பயந்து தங்கள் தங்களாயுதங்களினல் ஹிம்சை செய்யும்போது அம்மாது ஸ்ரீ காமாக்ஷியம்மையாரை,

B பல்லவி.

ஆதரிப்பாய் நீயே கதி—அடியாளைநன்
காதரிப்பாய் நீயே கதி
அன்புடனே செம் பொனடி நம்பின வென்றனையெடுத்.

அநுபல்லவி.

தீது புரியரக்கர் செறுக்கையடக் குந்தாயே
திரிபுரத்தை யெரித்த சிவனிடப் பாகத் தாயே
வாதனையை யொழித்து மாதைக் காத் தருணீயே
மங்களேஸ் வரியான மாதேவி யபயமீயே.

சரணம்.

துஷ்டர் சம்மட்டி கொண்டு புடைக்க லாச்சுதே விதி
இஷ்டர் தெய்வமே யென் மேலிரங்கி யருள்வாயித் ததி

கஷ்டம் விலக்கிக் காரும் காமாக்ஷியே சுமதி
கருணை யோகிநியே கடைக் கணித்தாள் நீயேகதி.

எனப்பலவிதமாகத் துதித்து தன்னை மெய்மறந்து நின்றாள். அப்போது கொலையாளிகள் தங்களாலியன்றமட்டும் எவ்விதமாகிய துன்பங்களைப் புரிந்தும் பயன்படாமல் தங்கள் தங்கள் ஆயுதங்களெல்லாம் மழுங்கிக் கூறொடிந்துப் போனது மல்லாமல், தங்கள் தங்கள் கை சோர்ந்தும் பயனில்லாததைக் கண்டு மிகுந்த வாச்சரியமும் பயமு மடைந்து அரசனிடம் வந்து முறையிடவும் அரசன் அவர்களைச் சினந்து கழுமரத்திலிடும்படி யாக்ஞாபித்தனன்.

கழுமரத்திலேற்று வித்தல்.

A விருத்தம் தேசாதிபதி நாடகம்.

புதல்வி துதித்திட மலராயுதங் களாகப்
புண்கண்ண ரோடி இறைக் கோதக் கேட்டு
விதிவழியே மதிகெட்டு வருவார ரோ
வேந்தனுயர்க் கழுமாட்டி வீட்டு மென்னக்
கதமுடைய கொலைஞர்களவ் வாறே செய்யக்
கருணை மொழி மனோன் மணியைக் கருத்துட் கொண்டு
மதிதவராத் தியாந மிர்தத்தை யுண்டு
மதித் திட்டாளன் புடனே துதித்திட்டாளே.

கொலையாளிகள் அரசனது ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு இம்மாதை யழைத்துக்கொண்டுபோய், ஓ அம்மணி யாங்களிதுகாறும் எங்கள் வாளுக்கு எத்தனையோ பேர்களை இறையாக்கினோம். தங்களிட மெங்கள் வாள், கத்தி, கட்டாரி நிஷ்பிரயோசன மாயிற்று. தங்கள் பிதாவின் கட்டளைப்படி கழுமரத்தி லேற்றுவிக்கின்றோம். என்றுகூறி கழுமரத்திற்றூக்கினார்கள். உடனே சிரோன்மணி மனதினிலே

B. கண்ணிகள்.

ஆரணியே வுன்னை நம்பி யவல மாவேனோ
தாரணியில் கழுவி லேறித் தமியாள் சாவேனோ
பொன்னடியை நம்பினானும் புகழைப் பூண்பேனோ
இன்னலுற்று மசடராலே யிழிவைப் பூண்பேனோ.
ஆதிபரா சத்தியானும் அண்டினேனாளும்
நீதியுடையுனது நாமம் நினைத்தேனே நாளும்.
அஞ்ச லென்றே யென்றனுக்கு அபயஸ்தந்தாரும்
பஞ்சை முறைக்கிரங்கியின்று பரிவுடன் காரும்.

இவ்விதமாகத் துதித்து நிற்கும்போது கழுமரமிட்டிருப்பது, தனக்கு ஒன்றுந் துன்பஞ்றோணாது ஊஞ்சலிலாடிக் கொண்டிருப்பதைப் போல் மகா சந்தோஷத்துடனிருப்பதைப் பார்த்த கொலையாளிகள்

பயந்து நடுங்கி வியர்த்து நாக்குளறவாய் வரண்டு ஐயோ ஈதென்ன வாச்சரியம். நமக்கென்ன தீங்குகள் நேருமோ தெரியவில்லை யென்று ஓடோடியும் வந்து அரசனிடம் தெரிவிக்கவும், அரசன் கோபா வேசத்தனாய் வாட்கூண்டிலிட்டுக் கொல்லும்படி கட்டளையிட்டான்.

வாட்கூண்டிலிடுதல்

கொலையாளிகளிதைச் சிரமேலேந்தி இக்கற்பரசியை கழுமரத்திலிருந்து இறக்கி அம்மணி தங்கள் தந்தையின் கட்டளை யிதுவாகுமென்று கூறி அரசாங்க தண்டனையில் மிகக்கொடிய தண்டனையாகிய வாட்கூண்டிலிட்டு உருட்ட வாரம்பித்தனர். அப்போது

A. விருத்தம் தேசாதிபதி நாடகம்.

ஊசலினுந் தென்றலுற்ற மலர்க்காளத்தி
  லுலவுதல மொப்பவருள முதமுண்டு
நாசமிலாச் சிரோமணியைக் கண்டுதுட்டர்
  நடுநடுங்கிப் பிதுர்கலங்கி ராஜன் முன்போய்
ஓசையுடன் சொலக்கட்டி வாட் கூண்டிட்டே
  யுருட்டு மெனக்கேட்டவுடன் கொலைஞராங்கு
பூசலுடன் விட்டுருட்ட கௌரிபாதம்
  பூசிப்பாளி தயத்துணே சிப்பாளே

அம்மனைத் துதித்தல்.

B இ - ம - கண்டா சாப்பு தாளம்.

ஐயோ நானிந்த விதிக்காளாகினேனே
அடியாளுந்தானே   ஐயோ

அநுபல்லவி

தானே தானே தானே தானே அடியாளுந்தானே   (தா)

சரணங்கள்,

செய்யா வாதுகள் செய்து சீரழித்தானே
தீங்கினர் போலென்னை சேதிக்கலானான் சிறியாளும் வீணே
வீணே வீணே வீணே வீணே சிறியாளும் வீணே   (தா)
வாதனைகள் தொடுத்தார் வாட்கூண்டினில் விடுத்தார் பேதை
நீதிபோதிக்கப் பிழையென்று முன்னி பெருமையுங் குன்னி
யேணும் பேணும் பேணும் பேணும் பிள்ளையான் காணும்   (தா)
  நாதியொன்று மில்லாது நஷ்டியாச்சு திப்போது
  பாதகர் வருந்துதல் பார்த்திருந்தாயே பார்வதி நீயே
  பாரும் பாரும் பாரும் பாரும் பழியினைத்தீரும்   (தா)

எனப்பலவிதமாகத் துதித்து தன் மெய்மறந்து தூளிகாமஞ்சத்தில் எவ்வளவு சுகமாக நித்திரை செய்வார்களோ அவ்விதம் நித்திரை

சுகமாகச் செய்துக்கொண்டிருப்பதைப் பார்த்த கொலையாளர்கள் இம்மாது காயசித்தி, மாயாசித்தி முதலிய சித்திகளைப் பெற்றிருக்கின்றனளென்றுன்னி அரசனிடஞ் சென்று வணங்கி, சுவாமி! அவ்வம்மணியைக் கொல்லும்படி எங்களுக்கு ஆக்ஞாபிக்கா திருக்கும்படி உங்களை மிகவும் கேட்டுக்கொள்ளுகின்றோம். அவ்வம்மணி எதினுலு மிறக்கவில்லை. இதைக்கேட்ட அரசன் துக்காக்கிரந்தனாய் தமது மந்திரிகளைப் பார்த்து ஓ மந்திரிகாள்! நான் பெற்று வளர்த்த பெண் எனக்கே துரோகஞ் செய்வதினால் நான் நமது கொலைஞர் மூலமாக கொலை செய்யும்படி யாக்ஞாபித்தேன. கொலையாளிகள் எந்த வகையிலுங் கொலை செய்தும் பயன்படாமையா லிவ்விடம் வந்து தங்களால் முடியவில்லை யென்று முறையிடுகின்றார்கள். இதற்கு யாதுசெய்யலாமென்று கூறினன்.

சேரன் மந்திரிகளிடம் யோசனை புரிதல்.

இ. ம. உசேனி - அடதாளம்.

பல்லவி

மந்திரி மாரே இதற்கொரு தந்திரஞ் சொல்வீரே

அனுபல்லவி.

எந்த விதத்தினி லிந்தப் பெண்ணைக் கொல்லும்
மந்திர மேதனதச் சிந்தையிலா ராய்ந்து
எந்த மக்குக் கிக்கணம் இந்தவித மென்று
மூட்டுங்கள்—நின்றுபா—ராட்டுங்கள்—சொன்னேன். (ம)

இத்தனை காலமாய் எத்தனை பேர்களைச்
சற்றுமெண்ணாமலே வெற்றிகொண் டிருந்தும்
பெற்ற பிள்ளையினாலே மெத்த யிழிவடைந்தேன்
எண்ணுங்கள்—யூகம்—பண்ணுங்கள்—பண்ணி
நண்ணுங்கள்—இவளுயிர்—உண்ணுங்கள்—கற்ற (ம)

இங்கிவர் வெட்டியும் வெங்கழு மாட்டியும்
தங்கும் கத்திக்கூண்டில் பங்கமாயுருட்டியும்
அங்கம் பழுதில்லாமல் மங்கை யிருக்கிறதை
அறியுங்கள் - என்னவோ - குறியுங்கள் - இவளை
எறியுங்கள் - என்னே - டரையுங்கள் - என்றன். (ம)

இதைக்கேட்ட மந்திரிகள் அரசனைப் பார்த்து வணங்கி அரசே! தங்கள் புத்திரி சிறுவயதாயிருப்பினும் வேதாக மங்கள் முதலிய சகலகலைகளைக் கற்று, ஸ்ரீ காமாக்ஷியினனுக்கிரகம் பெற்றவளாதலால் எவ்வித தண்டனைகளை விதித்தும் பயன் படாமையினால் வேறுதண்டனை செய்வதற்கில்லை. நாம் நமது புதல்வியின் மனம் போலவே கச்சிவேந்தனின் ஏவலால் வணிர்களிடம் இறைவரிவாங்காது விட்டுவிட்டு அவ்வரசனின் நட்பைப்

பாராட்டுவோமாயின் நீடூழிகாலமாய் நமது அரசுக்குப் புகழுங் கீர்த்தியும் நிலைக்கும் என மந்திரிகள் கூறியதற்கிசையாது வெறுத்ததை யுணர்ந்த மந்திரிகள் தாங்கள் சிரோன்மணியிடஞ் சென்று புத்தி புகட்டிதங்கள் இஷ்டத்தையனுசரிக்கும்படி செய்விக்கின்றோமென்று உத்தரவு பெற்று சிரோன்மணியிருக்கு மிடந்தேடிச் சென்று நேரில் பார்த்துக் கூறுவதாவது,

மந்திரிகளுக்கும் சிரோன்மணிக்கும் தர்க்கம்.

காவடிச்சிந்து மெட்டு.

இ. ம. குறிஞ்சி. சாப்புதாளம்.

(மந்) பெண்ணரசே யுன்னுடைய அன்னை தந்தையை மறத்த
லொண்ணுமோ நல்லறிவுடை யூகியே—இந்த
மண்ணுளோ ரேசிடும்படி யோகியே—சிறு
பேடையன்ன நடை கூடும் மின்னலிடை
சேடியர்கள் புடை சூழு நலமுடை
பேதையே யேதிலார் மீது நேசமா—யார்க்கும்
இஷ்டமன்றோ தாயுந்தந்தை தோஷமா. (பெண்)

(சி) தோஷமான வர்க்கிதம் பட விசேஷ தர்ம முணர்த்தினலும்
எசுவாரல்ல தாவதொன் றில்லையே—வசை
பேசியுஞ் செய்வார னேகந் தொல்லையே—அற்பர்
தொந்தமெது வுண்டு மந்தமதி கண்டு
பந்தமதை விண்டு பதத்தைப் பெறல் கொண்டு
தேறிநீர் தெளிந்து பார்க்கிற் காணுமே—நன்றுந்
தீதுணர்ந்த பேர்க்கித முந்தோணுமே. (தோ)

(ம) தோன்றுவ தெல்லாம் விநோதச் சூத்திரப் பாவைகள் போலாம்
ஆன்றவிருவினைக் காளா யாடுவார்—அன்பர்
ஊன்றிய பக்தியாற் சுகந்தேடுவார்—இங்கு
ஆமை போலைந் தையுமடக்கிட
ஊமைபோன் மனத்தை முடக்கிட
ஆசை கோப லோபம் மூன்றுஞ் சாகுமே—நி
ராசையுள் ளோர்க்கன்றோ வினை போகுமே. (தோ)

(சி) போகமும் புகழும் பலத்தியாகமும் உடையர் பக்கல்
மோகமுங் கோபமும் எட்டிப் பார்க்குமோ—என்சொல்
புருஷ சிங்கமான தந்தைக் கேர்க்குமோ —தூய
சித்த சுத்தர்கள் நித்த முத்தர்கள்
சுற்ற நற்றவர் வெற்றி பெற்றவர்
சேவையே சகலமான பூஷணம்—யார்க்கும்
தெய்வமன்றோ துணை செய் விசேஷணம். (போ)

மந்திரிமார்கள் சிரோன்மணிக்கு நன்மதியுரைத்தல்.

கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்குஞ் சிரோன்மணித்தாயே! தங்களை ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று அந்தந்த பருவத்துக்குத்தக்கவாறு போஷித்து வளர்த்து கல்வி முதலியவைகளிற்றேர்ச்சியடையும்படி செய்து அன்னாட்டொட்டு இன்னாள் வரையில் மிகுந்த ஜாக்கிரதையாக விருந்து பாது காத்த அன்னை தந்தையர்களது மனம் நோகும்படி செய்யலாகுமா?

நீதிநூரல்.

சின்னவோர் பொருட்டு நோரைச் சீவனுள்ளளவு முள்ளத்
துன்னவே வேண்டுமென்ன வுரைத்தனர் பெரியோர் தேகந்
தன்னை யாருயிரைச் சீரார் தரணியின் வாழ்வைத் தந்த
அன்னை தந்தையர்க்குஞ் செய்யு மருங்கைம்மாறுளதோ வம்மா.

எனக்கூறிய நீதிநூல்பாவும் நீயறிந்திருந்து மறியாதவர்போலிருக்கின்றாய். ஆகவே அம்மணி! யாங்கள் தங்களை கேட்டுக்கொள்வது என்னவென்றால் தந்தையாரின் சம்மதத்துக்கு இணங்கியிருத்தலே யாகும் என்றார்கள். சிரோன்மணியும், தந்திரமறிந்த மந்திரிமார்களே! நீங்கள் புகன்றவையாவுமுண்மையேயாயினும் எனது தந்தையானவர் அரசலக்ஷணங்களுக்குள்ள விதமாகவில்லாது, ஜகத்ரக்ஷகியும், ஜகன்மாதாவுமாகிய ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியை தூஷித்தும், அடியார்களை அவமதித்தும், எனது பக்தியைக் கெடுத்தும் வரும் விஷயத்தை கவனிக்கில் எனது தந்தையின் பேரில் நான் வைத்திருந்த விசுவாசம் போய் அருவருப் புண்டாக்கியது. இது மகாகொடியபாவத்தினும் பாவமென்று நினையாமற்போனது அவரது துர்க்காலத்துக்கு காரணமாகிறது. இவைகளை உற்று நோக்குமிடத்து உலகம்போய், அதனுள்ளிருக்கும் தந்தை, தாய், மக்கள், வீடு, நாடு, நகரம் யாவும் பொய்யெனக் கூறும் பெரியோர்களின் வாக்கு உண்மையெனத் தோன்றுகின்றது.

வாலைக்கும்மி.

பெண்டாட்டியாவது பொய்யல்லவோ—பெற்ற
பிள்ளைகளாவதும் பொய்யல்லவோ
கொண்டாட்டமான தகப்பன் பொய்யே—முலை
கொடுத்ததாயும் நிசமாமோ.

நெஞ்சறி விளக்கம்,

தந்தை தாய் நிஜமுமல்ல ஜனங்களும் நிஜமுமல்ல
மைந்தரு நிஜமுமல்ல மனைவரு நிஜமுமல்ல
இந்த மெய் நிஜமுமல்ல வில்லற நிஜமுமல்ல
சுந்தர நாகை நாதர் துணையடி நிஜம்பார் நெஞ்சே.

"மாதாநாஸ்தி, பிதாநாஸ்தி, நாஸ்திபந்து சகோதர:" எனக் கூறியவைகள் நன்கு விளங்கும். இந்த உடலுக்கு மாத்திரம் இவர் தந்தையரேயல்லது உயிருக்குத் தந்தையரல்லர். வினைக்கீடாக வெடுத்த ஒவ்வொரு உடலுக்கும் இவரைப்போல் எத்தனையோ தந்தையரிருக்கக் கூடும். இன்னும் எத்தனை தந்தையர்களை யடையப் போகின்றேனோ வறியேன். ஆகையினால் அத்தகைய உடலடையா வண்ணம் எமது உண்மைத்தாயாகிய ஸ்ரீ காமாக்ஷியம்மனை மனம், வாக்கு, காயங்களால் என்றும் மறவாமல் வணங்கிக் கொண்டிருப்பேன் என்பது நிச்சயம்.

சத்தியுஞ் சிவமுமாகித் தாண்டவ மாடும் வாசி
கத்திய மூல நாடிச் சுழுமுனைக் கம்பத்துள்ளே
புத்தியைச் செலுத்துமேலாம் பொருடனை யெடுக்கவல்லார்
பத்திசெய் நாகை நாதர் பதிதனைப் பார்ப்பாய் நெஞ்சே.

என்பதைக் கவனியுங்களென்று கூறியதைக் கேட்ட மந்திரிகள் ஒன்றும் பதில் கூறாமல் விடைபெற்று அரசனிடம் வந்து வணங்கி மன்னவ! தங்கள் திருமகளுக்கு எவ்வளவு கூறியும் பயன்படாமற் போயிற்று. இனி நாம் செய்யவேண்டிய திட்டங்களைச் செய்து மாற்றலர்களைக் கொன்று வெற்றிமாலை சூடுவதே முக்கியமானதாகும்.

விருத்தம்.

மந்திரிகளோர்ந்து மன்னுமகளைக் கொன்றால்
  மாற்றலரஞ் சிவோரோ வஞ்சாரிங்கே
வந்தவரோடெதிர்த்து வென்று வாகை சூடி
  மற்றுளகாரியஞ் செயலாமென்னக் கேட்டோன்
முந்து சதுரங்கமுடன் களத்துக்குற்று
  முனிவுட னென்னார்க் கறிவித்தணி பிரித்தான்
அந்தரியினடியருஞ் சேனைக ளோடாங்கே
  யடுத்திட்டார் சண்டை செய்யத் தொடுத்திட்டாரே.

அரசன் தட்டு ரத, கஜ, துரக, பதாதிகளென்னுஞ் சதுர் வித சேனைகளும், படைத்தலைவர், அணித்தலைவர், சேனைத்தலைவர் முதலிய சேனாதிபதிகளும், மந்திரி, பிரதானிகளும் புடைசூழ சகல வித வாத்தியங்களுடன் எக்காளம், பூரி, முதலிய யுத்தபேரிகை ஆர்வாரிப்புடன் தங்கள் ஆயுதங்களாகிய வில், வாள், ஈட்டி, கத்தி, கேடயம் முதலியவைகளுடன் புறப்பட்டு யுத்தகளம் வந்து சேர்ந்தார்கள்.

சேரனுக்கும் மும்முடியனுக்கும் யுத்தம்.

இதைக்கண்ட மும்முடி வேந்தனாகிய கச்சியரசன் தமது சைனியங்களுடன் எதிர்த்து இரணபேரிகை முழக்கி, குதிரை வீரர்களுடன் குதிரை வீரர்களும், யானை வீரர்களுடன் யானை வீரர்களும், காலாட்படைகளுடன் காலாட்படைகளும் மிகுந்த ஆவேசமாகக் கொக்கரித்து ஆர்ப்பரித்து ஒருவர்க்கொருவர் தாக்கி கடும்போர் புரிந்தார்கள். இப்போரில்மாண்ட யுத்த வீரர்களும் கால் வேறு கை வேறு தலை வேறு உடல் வேறாக மடிந்த யானை குதிரை ஒட்டகம் முதலியவைகளுமளவிறந்தன. கடைசியாக சேரன் தன்னாலானவரையில் யுத்தஞ் செய்தும் பயன்படாமல் உயிரிழந்தான். இந்த யுத்தத்தைப் பார்த்து பயந்த சிலர் அழுதுக்கொண்டு அரன்மனைக்கு ஓடோடியுஞ்சென்று அந்தப்புரத்திலிருக்கும் ராஜஸ்ரீகளிட முறையிட, யாவரும் ஓ வென்றலரிக்கொண்டு யுத்தகளத்துக்கு வந்தனர். அச்சமயம் குடிகளுமொருங்குகூடி அழுதுக்கொண்டு வந்து துக்கிக்கலாயினர். அரசனுடைய மனைவியும் புருஷன் மீது விழுந்து புரண்டழுதாள். சிரோன்மணியும் துக்கித்துப் புலம்பிக்கொண்டிருப்பதைப் பார்த்த மற்றவர்கள் தேறுதல் சொல்லி அரன்மனைக்கு அழைத்துக்கொண்டு போய் செய்யவேண்டிய கிரியைகளை செய்துமுடித்தனர்.

சிரோன் மணிக்கு முடிசூட்டடல்.

இதன் பிறகு மும்முடி வேந்தனும் நகரவாசிகளு மொருங்கு கூடி எல்லா வாசர்களுக்கு மோலை விடுத்து நல்ல சுப முகூர்த்தகாலம் நியமித்து நகரை அலங்கரித்துதமது சிங்கக்கொடியையும், அனுமந்தக் கொடியையும் நாட்டி சகல வாத்திய கோஷ்டத்துடன் தேவர்கள் புஷ்பமாரி பொழிய மறையோர் முதலிய பெரியோர்கள் ஆசிர்வதிக்க ஸ்ரீ தேவியைத் தியானித்துக்கொண்டு மும்முடி வேந்தன் தனது திருக்கரங்களால் திருமுடியை யெடுத்து சிரோன்மணியின் சிரசிற் சூட்டினூர். உடனே யாவருங் மங்களம்பாடி முத்தாலாலாத்தி பவழத்தா லாலாத்தி எடுத்தார்கள். அவ்விடம் வந்திருந்தவர்களுக்கு விருந்து முதலிய உபசாரஞ்செய்து வேண்டிய பரிசுகளைக்கொடுத்து அனுப்பிவிட்டு, மும்முடிவேந்தனுஞ் சிரோன்மணியைத்தமக்கு பகுதி கட்டும்படியேற்பாடு செய்துவிட்டுஉத்திரவு பெற்றுக்கொண்டு தங்கள் நகரமாகிய கச்சிநகருக்கு ஜெயத்துடன் வந்து சேர்ந்தார்கள்.

யாத்திரை வாசிகள்.

கேளுங்கள் தவத்திற் சிறந்தவர்களே!

இவ்விதமாக கச்சிநகருக்கு மும்முடி வேந்தனுகிய பிரபோதயனும் மற்றவர்களும் வந்து அரசுபுரிந்துக் கொண்டிருக்குங் காலத்தில், அயோத்தியிற் பிறந்து வேத முதலிய சகல சாஸ்திரங்களில் விர்ப்பன்னர்களாய், காசி, மத்ரா, கோகர்ணம் முதலிய பல ஸ்தலங்களுக்குச்சென்று தரிசித்தும், புண்ணிய நீராடியும் வந்துக்கொண்டிருந்த பிராமண சந்நியாசிகள், தொண்டை நாட்டிலிருக்கும் பல ஸ்தலங்களை தரிசித்துக் கொண்டு கடைசியாக காஞ்சிமாநகருக்கு வந்து பிரபோதய ராஜ னென்னும் மும்முடி யரசனைக்கண்டு, இராஜ ராஜ மார்த்தாண்டா! ஸ்ரீ சாது காமாக்ஷி வரப்பிரசாத புத்திர சிகாமணிகளே! யாங்கள் காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு, தங்களுடைய சகோதரர், மக்கடவ சுப்ரதீகர மகாராஜா வரசாக்ஷிபுரியும் விசாலாவதியிற் சென்று அவரால் சந்மானிக்கப்பட்டவைகளைப்பெற்றுக்கொண்டு வரும்போது தங்களுடைய பிரபாவத்தையும், கீர்த்தியையும் கேள்விப்பட்டோம். தங்களைக்கண்டு தரிசித்து வெகுமதி பெற்றுக்கொண்டு போகலாமென்று தங்களைக் கண்டோம் என்றுகூறலும், மும்முடியரசன் அவர்களைப்பார்த்து வணங்கி மந்திரிகளிடமிவர்களுக்கு வேண்டியவாறு கொடுத்தனுப்பும்படி உத்திரவிட்டனர். அவ்வுத்திரவுபடியே அவர்களும் யாத்திரை வாசிகளுக்கு அவர்களிஷ்டப்போல் வேண்டியவாறு கொடுத்தனர். சந்தோஷத்துடன் வெகுமதிகளைப் பெற்றுத்திரும்பும்போது சொர்ணம்பிகையென்னும்மும்முடி வேந்தனின் மகளின் அழகையும் ரூபலாவண்யத்தையும் பார்த்து வியப்படைந்து இவ்வழகியைப்போன்ற மங்கையை நாம் எங்கும்பார்த்ததில்லை. இவள் என்ன பரதநாட்டியமங்கையோ தெய்வலோகத்து மாதோ அல்லது இவர்களின் குலமாதாவாகிய ஸ்ரீ

காமாக்ஷியம்மனின் திருவவதாரமோ, ஒன்றுந் தெரியவில்லை. இவளுக்குத் தக்க நாயகன் யாரையுங்காணோம் என்று ஒருவரோடொருவர் வார்த்தையாடிக்கொண்டே அந்நாட்டை விட்டு செல்ல வாரம்பித்தார்கள்.

யாத்திரை வாசிகள் சோழனுடன் சம்பாஷித்தல்.

இவ்விதஞ் செல்லும் சந்நியாசிகள் சோழநாட்டை யடைந்து விசுவசேன னென்னுஞ் சோழராஜனைக்காண கொலுமண்டபத்திலிருக்கும் சேவகர்களிடங்கூற, அவர்களும் அரசனிடங்கூறி உத்திரவு பெற்று அழைத்துச் சென்றார்கள். அரசனுஞ் சந்நியாசிகளுக்கு வந்தனோபசாரஞ்செய்து ஆசனமிட்டமரச்செய்து, வணங்கி, சந்நியாசித்வ[illegible] வாய்ந்த பிராமணோத்தமர்களே! நீங்களிதுகாறும் எவ்வளவோ தேசங்களுக்குப் போயிருப்பீர்கள். ஆங்காங்கு என்னென்ன வதிசயங்களைக் கண்டிருப்பீர்கள். அவ்வதிசயங்களையும் விசேஷங்களையும் பெருமைகளையு மெடுத்துரைப்பீர்களாக வெனக்கூறியதைக் கேட்ட சந்நியாசிகள் தாங்கள் சென்றது முதல் கண்ட அபூர்வ விஷயங்களையுங் கூறிக்கொண்டே வந்து கடைசியாக தாங்கள் கண்ட கச்சியின் சிறப்புகளையும், மும்முடி வேந்தனின் அரசாக்ஷி விஷயங்களையுங் கூறிப்பின் அவ்வேந்தனின் மகளாகிய சொர்ணம்பிகையின் ரூபலாவண்யத்தையுங்கூறி முடித்தனர். இதைக்கேட்ட வரசன் மூர்ச்சித்து சிறிது நேரம் தன்னை மறந்து மீண்டு மெழுந்து, இப்படிப்பட்ட ரூபலாவண்யமுள்ள பெண்ணு! மும்முடி வேந்தனின் மகள் என்று தனக்குள் கூறிக்கொண்டு, மந்திரிகளைப்பார்த்து இவர்களுக்குத் தக்கவாறு பரிசளித்து அனுப்பிவிடும்படி யாக்ஞாபித்து கொலுவைக்கலைத்தனர்.

சோழராஜன் மந்திராலோசனை செய்தல்.

பிறகு அரசன் தனது அந்தரங்க மந்திரிகளைப்பார்த்து மந்திரிகளே! சந்நியாசிகள் கூறியவைகளைக் கேட்டிருப்பீர்களல்லவா? அந்த

மும்முடியாசனு மவர்களின் இருபத்தினன்கு மனையார்களும் மிக்க கெம்பீர புருஷர்கள்; உத்தம குணங்களைப் பெற்றவாகள். ஈகை, இரக்கம், தயை, தாக்ஷண்யம் முதலியவைகளைப் பெற்றவர்கள். ஸ்ரீ சொர்னசாது காமாக்ஷியம்மையாரின் கிருபாகடாக்ஷம் பொருந்தியவர்கள். அவர்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்று முறுதியுள்ளவர்கள். இவர்களை தேவாம்ஸ பரம்பரையாளர் என்று பெரியோர் கூறுவர். ஆகையால் எவ்வகையிலாகிலு மம்மாது சொர்ணம்பிகையை விவாகஞ் செய்துக்கொள்ள வேண்டியது. எனது மனம் முதலிய அந்தக்கரணங்கள் யாவும் அம்மங்கையின்மேல் பதிந்திருக்கின்றன. அதற்குத்தக்க உபாயம் எதுவோ அதைக்கூறுங்கள். அந்த சந்நியாசிகள் கூறியதிலிருந்து என்மனம் வேறுபட்டிருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும் என்று மந்திரிகளிடங் கூறலும், உடனே மந்திரிகள் அரசனை வணங்கி அரசே! அவர்கள் குலமும் வேறாயிருப்பதினல் ஒருவாறு சம்மதியாது அருவறுத்தா லென்னவாகுமோவென்று கூறும்போது, சோழன் மீண்டும் மந்திரிகளே! ஒருகாலத்திலிவ்விடம் வந்து வியாபாரஞ் செய்யும்போது பல்லவராயனை ஜெயித்த பில்லிவங்கா ராஜனை அந்தரங்கமாக வரவழைத்து தங்கள் வம்மிசத்தில் ஒரு பெண்ணை எனக்கு விவாகஞ் செய்துவைக்க வேண்டியதென்று கேட்டதற்கு, அவரும் வாக்களித்துள்ளார். இதுவே அதற்குத்தகுந்த தருணமாகு மென்று கூறக்கேட்ட யாவரும் தீர்காலோசித்து தமது இரத கஜ துரக பதாதிகளுடன் கச்சிநகரமடைந்து கூடாரமடித்துத் தங்கினர்கள்.

பிரபோதய ராஜனும் விசுவசேன சோழனும் வார்த்தை யாடல்.

பிறகு சோழராஜன் தமது மந்திரி பிரதானிகளுடன் கச்சிவேந்தன் கொலுமண்டபத்தில் வந்து பிரபோதய னென்னும் மும்முடியரசனை வணங்கி, தங்களைக்கண்டு சந்தோஷித்து விட்டுப்போகலாமென்று வந்தோம். யாத்திரை வாசிகளுக்கு நீங்கள் செய்த

உபகாரத்தைக் கேள்விப்பட்டு ஆனந்தபரவசரானேம். அன்னவர் மூலமாகத் தங்கள் குமாரத்தியாகிய சொர்ணம்பிகையின் ரூப லாவண்யத்தைக் கேட்டது முதல் என் மனம் புத்தி யாவும் ஒன்றுபட்டு லயப்பட்டுவிட்டது. எனது உயிரோ அவ்விடந் தங்கி விட்டது. ஆனதுபற்றி தாங்கள் பெரிதும் யோசித்து நான் உஜ்ஜீவிக்கும்படி செய்யவேண்டியது தங்கள் கடமையாகு மென்று பிரார்த்திக்கின்றேன் என்று கூறி முடித்தான். இவைகளைக்கேட்ட மும்முடியன் மிகுந்த கோபமடைந்து மீசைதுடித்து, கண்கள் சிவந்து சோழராஜனே நீர் நன்கு கேட்டனை? எமது குலத்துக்கும் உமது குலத்துக்குமுள்ள வித்தியாசங்களளவுகிடந்தன. ஆகையால் நீர் சிறிதுமஞ்சாது கூறவந்தீர் யாங்கள் பிருதிவீச்சுர வம்ஸத்தின ரென்றும், ஸ்ரீ காமாக்ஷியம்மையாரின் வரப்பிரசாதத்தை யுடையவர்க ளென்றும் மது மாமிஸம் அருந்தாத சுத்த சைவர்களென்றும் சொன்ன சொல்லை இல்லை யென்று மறுத்துரை யாடாதவர்களென் றுங் கவனியாது கூறத்துணிந்தீர். வேறு அரசர்களாக விருந்து எத்தகைய சேனைகளுடன் வந்தாலும் எங்கள் குலதெய்வத்தின் திரு வருளாலஞ்சாது இயமனுக்கிரையாக்குவோ மென்பது திண்ணம். இத்துடன் நீர் கூறவந்த விஷயங்கள் போதும் என்று கடுமையாகக் கூறியதைக்கேட்ட சோழன் மனம் வருந்தி தமது மந்திரிகளுடன் திரும்பி ஐந்து மைல் தூரத்திற்கப்பால் கூடாரமடித்து தங்கி சிந்தா குலனுய் மும்முடி யரசனுடைய அரன்மனைக்கு சுரங்க வழி யேற் படுத்தி, மாந்தலையும் மதுக்குடமும் அன்றிரவே கொண்டுபோய் வைக்கத்தக்க ஏற்பாடுகள் செய்தான். மறுநாட் காலையில் சோழன் ஸ்நானம் பூசை முதலியவைகளை முடித்துக்கொண்டு, இரதாரூடராய் மும்முடியரசனிடம் வந்து, நீங்கள் மது மாம்ஸ மருந்தாதவர்க ளென்று கூறினீர்களே வாருங்கள், தங்கள் அரன்மனையில் மது மாம்ஸ மெடுக்கின்றேன் என்றுகூறி சகலருமறியப் பரிசோதனை புரியும்போது ஸ்ரீ காமாக்ஷியம்மன் திருவருளால் மான்தலை மரத்தலை யாகவும் மதுக்குடம் பாற்குடமாகவுமாறி யிருந்ததைக்கண்ட சோழன் இவர்கள் ஸ்ரீ காமாக்ஷியம்மனின் அனுக்கிரகம் பெற்றவர்க ளென்று ஆச்சரிய மடைந்தான்.

மறுபடியும் சோழன் மும்முடி வேந்தனைப் பார்த்து அரசே! தங்கள் குலத்தவர்கள் வியாபார விஷயமாக எங்கள் நாட்டுக்கு வந்த போது மல்யுத்தத்திற் றேர்ந்து தனக்கு நிகரில்லையென விறுமாந்து கெர்வங் கொண்ட பல்லவராயனை பில்லிவங்கர ராஜன் என்னுந் தீர புருஷன் சம்ஹரித்தான். அப்போது எனக்கும் அவருக்கும் நட்பு வுண்டாயது, அச்சமயம் அவரை யடுத்து தங்கள் குலத்தி லொருமங்கையை எனக்கு விவாகஞ் செய்து வைக்கவேண்டிய தென்று கேட்டதற்கு அவரும் ஒப்புக் கொண்டார். அந்த வாக் குக்கு தாங்கள் என்ன சொல்லப் போகின்றீர் என்று கேட்க, மும்

முடி யரசன் இதை விசாரித்து தங்களுக்கு நிருபத்தின் மூலமாகத் தெரிவிக் கின்றோ மென்று கூறி யனுப்பிவிட்டு, இருபத்தி நான்கு மனையார்களாகிய தங்கள் ஜாதியார் அனைவரையும் வருவித்து பில்லிவங்கரவ ராஜனை விசாரிக்கும்போது, தான் சோழனுக்கு பெண் கொடுக்க வாக்களித்தது உண்மை யென்று கூறியதை யறிந்த யாவருஞ், வியாகூலத்தை யடைந்து இவ்வாக்கி னின்றுங் காப்பாற்றக் கூடியவர் ஸ்ரீ காமாக்ஷியம்மன் தவிர வேறு யாவரா லு மாகாது, ஆகையினால் நாம் யாவரு மொருங்கு கூடி அம்மன் சந்நிதியடைவோ மெனத் தேர்ந்து, ஸ்நானம் பூசை முதலிய முடித்து காமாக்ஷியம்மை யாரைப் பார்த்து அம்மணி! எங்களி லொருவராகிய பில்லிவங்கரவ ராஜன் சோழனுக்கு நமது குலத்துப் பெண்ணை விவாகஞ் செய்து வைப்பதாக வாக்களித்து விட்டான். அது எங்கள் இருபத்து நான்கு மனையார்களின் குலத்துக்குப் பழிப்புண்டாக்கும். அவரது வாக்குக்குப் பழுது வராமலும் எங்கள் குலத்துக்கு பின்னம் வராமலுங் காத்து ரக்ஷித்தருளுவது உங்கள் கடமை யென்று முறை யிட்டு நமஸ்கரித்து இத்தகைய அபகீர்த்தியை விட எங்கள்உயிரைத் திரணமாக மதித்து உடைவாளுக்கிறை கொடுக்க சித்தமாக விருக்கின்றோம் என்று உடை வாளைக் கையிற் பிடித்து ஆவேசமாக கழுத்தில் வைத்து வெட்டிக் கொள்ளுந் தருணத்தில், அம்மனினனுக் கிரகத்தினல் கத்தியின் பேரில் புஷ்பமாலை சூழ்ந்துக் கொண்டது."உடனே நீங்கள் அஞ்சவேண்டாம் உங்க ளிஷ்டப்படியே காத்து இரக்ஷிப்பேன். இருபத்து நான்கு மனையார் களாகிய நீங்கள் பொன்னுற் பெண்பாவை யொன்று செய்தால் அதற்கு உயிருண்டாகும். அந்த பொற்பாவையை சோழனுக்கு சீதன வரிசை களுடன் விவாகம் செய்தனுப்புக. அவனும் அப்பொற்பாவை யாகிய பெண்ணை புது சிங்கார மாளிகையில மர்த்தி சரசஞ் செய்யும்போது உயிர் துறப்பள்" என்று ஆகாயத்தினிடமாக ஒரு வாக்கு வந்தது.

இதைக் கேட்ட யாவரும் சந்தோஷித்து அம்மனை வணங்கி தங்கள் மாளிகைக்குச் சென்று தேர்ந்த சிற்பியின் மூலமாக பொன்னினால் ஒருபெண் பாவையை மிகுந்த அழகுடன் உருக்கி வார்த்து அம்மனைத் தியானிக்க, அம்மனி னருளினாலுயிர் பெற்று பார்ப்போரதி சயிக்க மிக்க ரூபலாவண்யத்துடன் விளங்கினாள். இதைப் பார்த்த யாவரும் மிகுந்த சந்தோஷ மடைந்தார்கள். பில்லிவங்கரவ ராஜன் சோழனுக்கு நிருப மெழுதி யனுப்பியதைப் பெற்ற சோழன் மிகுந்த பரவச மடைந்து சந்தோஷத்துடன் தமது மந்திரி பிரதானி சேனைகள் புடை சூழ கச்சி நகரத்துக்கு வந்து சேர்ந்தான்.



விசுவசேன சோழனுக்கு கச்சி நகரத்தில்

விவாகம் நடத்துவது.

[illegible] மும்முடியரசன் முதலாய இருபத்து நான்கு மனையார்களும் வான நாடொப்ப கச்சி நகரை சிறப்பாக வலங்கரித்து மகுட தோரண முதலிய கட்டுவித்து பவழத்தால் கலியாண மண்டபம் புதுக்கி நவரத்தினங்களால் மணவரை நியமித்து, எல்லா வரசர்களுக்கும் திருமண வோலை விடுத்து தருவித்து சகல வித வாத்திய கோஷ்டங்களுடன்நல்லமுகூர்த்தகாலத்தில் விவாகம் நடத்தி, வேண்டியவரிசைகளெல்லாந் தந்து சிறப்புடன் விடை கொடுத்து தம்பதி சமேதராய் வழி கூட்டி சோழ தேசத்துக்கு அனுப்பினார்கள். கலியாணத்துக்கு வந்தவர்களுக்கு வேண்டிய மாலை மரியாதைகள் செய்து வழி கூட்டி யனுப்பினார்கள். பிராமணர்களுக்கும் மற்று முள்ள பெரியோர்களுக்கும் முப்பத்திரெண்டு தானங்களும் வழங்கி பெருஞ் சிறப்புடன் விளங்கினார்கள். இப்பால் சோழனும் தனது மனைவியாகிய சொர்ணம்பிகையை யழைத்துக் கொண்டு மந்திரி பிரதானி நால் வகைச் சேனைகளுடன் சோழ தேசம் வந்து தனதரன் மனையில் புதுப்பித் திருந்த சிங்காரமாளிகையி லிருவருமாக வந்து அமர்ந்தார்கள். மற்றவர்கள் யாவரும் தங்கள் தங்கள் விடுதிக்குச் சென்றார்கள். இப்பால் இத்தகைய வழகு வாய்ந்த மாளிகையின் மத்தி

யிலி ரானின்ற நவரத்தின மிழைத்த மஞ்சத்தில் காம்பரிந்த மல்லிகை மலர் தூவி மெல்லிய இளஞ்சல்லாவை அதன்மேல் விரித்து பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களைத் தெளித்து பரிமளிக்கும் மஞ்சத்தின் பஞ்சணையில் சயனித்துக் கொள்ள, இரதியை நாடிவரும் மன்மதனைப் போல் தனது அன்புக் குறிய இன்பமுடையாளைக் காணவேண்டு மென்று ஆவலுற்றவனாய் அருகிற் சென்று, என் கண்ணே! மணியே! மும்முடி வேந்தனின்தவச் செல்வியே! எனது ஆருயிர்க் கொப்பான இரத்தினமே! உன்னை என தருங் காதலியாகக் கொள்வதற்கு யான் செய்த அருந்தவமே தவம். பாக்கியமே பாக்கியம்.

“ கண்டவுடன் மனங்கலங் குரிகிச் சோர்ந்து கலவிதனை
நினைத்ததிக காதலாலே
“ யண்டர்மின் னோகர் மின்னே ரதியோ நீயிவ்வகில மதி
லுற்பவித்துயென்னுவல் தீர,

என்னும் பலவித காமாந்தகார வார்த்தை யாடிக்கொண்டு அருகிற் சென்று ஹே! பூம்பாவாய்! என்னுடன் வார்த்தை யாடாயோ என்று கூறி கட்டி யணைத்து முத்தமிடும்போது உயிர் நீங்கி பொற்பாவைபோ லிருப்பதைக் கண்டு, மனஞ் சோர்ந்து ஓ வென்றலரி, என் கருத்துக்குகந்த ரூபவதியே இப்புவியில் உன்னைக் கலியாணஞ் செய்துக் கொள்ள நான் பட்ட பிரயாசைக்கு அளவு கிடையாது. என்னை வஞ்சித்து என்னுடன் ஒரு வார்த்தையு மாடாமல், இவ்விதம் மோசஞ் செய்வா யென்று நான் கினவிலுங் நினைத்தவனல்லவே. மும்முடி வேந்தனது தவத்துக் கிறங்கி யென்னை யீடேற்ற வந்த காதலியே, உன்னை நான் எக்காலத்திற் காண்பேன். என் உயிர்த்துணைவி யாகிய இரத்தினமே! ஒரு நிமிஷத்திற்குள் என்னை விட்டு நீ பிரிந்த தேனே உன்னால் நான் தன்னியனுவே னென்று மகிழ்ந்திருந்தேனே. உன் புன்முருவலைக் காட்டி எனக்குத் துயரத்தை மூட்டி இன்று உயிர் துறந்தாயே. என்னை மறந்தாயே. உனக்கு நான் செய்த வபசாரம் யாது? உன் முத்தான வாய் திறந்து ஒருத்தாரஞ் சொல்லலாகாதா. உன் மனங் கல்லா, இரும்பா, உன்னை மணஞ் செய்து அழைத்துக் கொண்டு வரும்போது பார்த்ததேதவிர பிறகு இன்று இறந்த கோலத்தைக் கண்டேன். ஒரு நாளாகிலு முன்னிடஞ் சந்தோஷமாய் உரவாடினேனில்லையே. கண்ணிற் கருமணியே; உனக்காகப் புதுப்பித்த இம்மாளிகையில் வாசஞ் செய்து நீ தாதியர்களுடன் விளையாடிக் கொண்டிருக்க என் கண்களால் பார்த்தானந்திக்க கொடுத்து வைக்கவில்லையே, என்று புலம்பிக்கொண்டு மூர்ச்சையானான். இதைப்பார்த்த மந்திரி பிரதானிகள் அரசனுக்கு கூறவேண்டிய தைரிய வார்த்தைகளைக் கூறிவிட்டு, இறந்த பிரேதத்தை வந்து பார்க்க, அது பிரேதமாயிராமல் தங்கப் பதுமையா யிருக்கக்கண்டு ஆச்சரியமுங் கோபமு மடைந்து அரசே!

நாம் மோசம் போனோம். இது பெண்ணல்ல. ஆனாற்றங்கப் பதுமை யாகும். இதற்கு மும்முடியர் உயிர்கொடுத்தது மிகுந்த வாச்சரியம். இருந்தாலும் நமக்கு அபகீர்த்தியும் அவமானமுஞ் செய்யலாகாது. ஆகையினாலிப்போதே நமது படைகளை ஆயுதபாணிகளாகத் திரட்டிக் கொண்டு சென்று எதிர்த்து யுத்தத்துக்கு முனைவோமென்றுகூறிப் படைகளை அணிவகுத்து ஏவ, இதையறிந்த உத்தமர்களாகிய சில மனையார்கள் தங்கள் குலதேவியாகிய ஸ்ரீ காமாக்ஷியம்மனை வணங்கிக் கொண்டு, சகல வாயுதங்களையு மேந்தி தமது படைகளைத் திரட்டிக் கொண்டு யுத்தகளத்துக்கு வந்து சோழனது படையுட் புகுந்து கத்தி, ஈட்டி, பாணங்களினாற் சின்ன பின்னப்படுத்திவிட்டு, சோழனுடைய கோட்டையைச் சுற்றி வளைத்துக் காவலிட்டிருந்தார்கள். மூர்ச்சை தெளிந்தெழுந்த சோழன் பலர் முகத்தைப் பார்க்க வெட்க மடைந்து, மும்முடி வேந்தனையும், பில்லிவங்கரவராஜனையும் பார்த்து யான் உங்களுக்கு யாது தீங்குசெய்தேன். உங்களைப் பெண்கேட்டதற்கு, தங்கப்பதுமையை பெண்ணாக யேற்படுத்தி விவாகஞ்செய்து அவமான முறும்படி செய்தது மல்லாமல் எனது கோட்டையையும் முற்றுக்கை போட்டீர்கள். இது உங்கள் குல தெய்வத்துக்கும் ஏற்குமோ? எனக்கூறவும் மும்முடியரசன் தங்கள் மனையார்களைப் பார்த்து நமது குலதெய்வமாகிய ஸ்ரீ காமாக்ஷியம்மையார் சோழனுடைய தேசத்தை முற்றுகையிட்டு கைவசமாக்கிக் கொள்ளும்படி உத்திரவு கொடுக்க வில்லையே. நாம் கடும்போர் புரிவது தருமமல்ல ஆகையால் நமது தேசஞ்செல்லுவோ மென்றுகூறி யாவருந் தங்கள் நகரத்துக்குத் திருப்பிச் செல்லும்போது சோழன் மும்முடிவேந்தே!

மும்முடி யரசனுக்கும் மனையார்களுக்கும் சாபமளித்தல்.

நீங்கள் என் மனம்நோக என்னை பலர் முன்னிலையில் அவமானப் படுத்தினீர்க ளல்லவா இனி உங்கள் குடும்பங்களாகிய விருபத்து நான்கு மனையார்களுக்கு புத்திர மித்திர களத்திர கோத்திராதிகளில் பெண்கள் பிறக்குமேயாகில் இவ்வித அழகும் ஆசாரமு மில்லாது பிறக்கக்கடவது என்று சாபமீந்தனர். இதைக்கேட்டவுடன் மும்முடி யரசனும் மற்றவர்களும் சோழனைப் பாத்து நீர் அரசனாக விருந்தும் மதுபானங்கள் அருந்துவதும் பலதுர்ச் செய்கை செய்வது மல்லாமல் வாய்கூசாது என்னை பெண்கேட்டதினால் உன் குலம் கோத்திராதி புத்திர களத்திராதிகள் யாவுமிந்த பூமண்டலத்திலி டேறுமலழிந்து போகக் கடவதென்று மறுசாபம் தந்து தங்கள் தங்கள் வாகனங்களிலேறி தங்கள் தேசத்துக்குச் சென்று அரசு புரிந்து வந்தார்கள்.

மும்முடியன் ஜண்டி ஜிகிண்டி என்னுங் கைதிகளுக் கபயங் கூறல்.

அவ்விதமாக கச்சியில் நீதி வழுவாதரசு புரிந்து வருங் காலத்தில் பாண்டியனுடைய பொக்கிஷத்தை திருடி மரண பரியந்தம் விலங்கிட்டு சிறையி லடைக்கப்பட் டிருந்த அனேக கள்ளர்களில் ஜண்டி என்னுந் தகப்பனும், ஜிகிண்டி யென்னும் பிள்ளையு மோர் நாளிரவில் தங்கள் கால்களிற் பூட்டப்பட் டிருந்த விலங்குகளை பக்குவமாகக் கழற்றி யெறிந்துவிட்டு சிறைக்கூடத்தின் மதிற் சுவற்றைத் தாண்டிக் குதித்து, தங்களை யாதரிப்பவர் மும்மடி வேந்தரே யென்று தேர்ந்து திருக்கச்சிக்கு வந்து அரசனை வணங்கி, இராஜாதி ராஜனே! கெம்பீர சீலனே! தருமகுண பூபனே! தங்களிட மபயம் புகுந்த எங்களிருவர்களையுங் காப்பாற்றுவது தங்கள் கடமை யென்று காலில் விழுந்தார்கள். தரும குணசீலனுகிய வேந்தன் தமது குலத் தாயாகிய அம்பிகையைத் துதித்து அபயமென்று வந்தவர்கள் யாராயிருந்தாலு மவர்களை ஆதரிப்பது செங்கோன் முறை யென்று தரும நூல்கள் முறை யிடுகின்றன. இவர்களை யாதரித்தால் தருமத்துக்கு யாதும் பழுது வாராது யென்று துணிந்து உங்களிருவர்களையுங் காக்கின்றேன் அஞ்சாதீர்களென்று அபயாஸ்தங் கொடுத்து, அவர்களுடைய விருத்தாந்தங்களைக் கேட்டறிந்து தங்கள் வசமே வைத்துக் கொண் டிருந்தார்கள்.

அயோதன பாண்டியன் மும்முடியரசனுக்குத் திருமுக மனுப்புதல்.

சிறைச் சாலைக்காவலர் களிதை யறிந்து அயோதன பிரவீண பாண்டியனிடம் வந்து முறையிட்டு அரசே! நமது சிறைக் கூடத்தி லிருந்த கள்வர்களாகிய கைதிகளி லிருவரைக் காணோம். அவர்க ளுக் கிட்ட கால் விலங்குகள் கழற்றப்பட் டிருக்கின்றன. அவர்கள் ஜண்டி ஜிகிண்டி களாவார்கள். விசாரித்ததில் அவர்கள் காஞ்சிமா நகருக்குச் சென்று பிரபோதய ராஜ னென்னும் மும்முடி யரச னிடம் அடைக்கலம் புகுந் திருக்கின்றார்கள் என்று தெரிகின்றது யெனக் கூறலும், பாண்டியன் செவியுற்று காவலாளிகளைக் கடிந்து உங்கள் காவல் நன்று யிருக்கின்றது, என்று தூஷித்துவிட்டு கணக் கரை அதட்டி திருமுக மெழுதலானர்.

அகவற்பா.

அளப்பெருந்தவமு மரியதோர் செல்வமு
மளவிலாப்புகழு மமர்ந்தநற் கீர்த்தியும்
பிரதிவீச் சுரனின் பீடுறும் வம்ஸ
முறுதியாய் கச்சியேந்தலாம் தூய
சாதுகா மாகஷி சக்தியின் பலமும்
தீதறப் பெற்ற தீரரே கச்சி
மும்முடியரசே மொழிவேன் கேண்மின்
எனதரன்மனையிலிலங்கு பெரு நிதியை
கன்மனதுடனே களவுற்ற பலரை
இறக்கும் வரையிலெதிர்வரா திருக்க
கடுஞ்சிறைப்பூட்டி காவலமர்த்தினேன்
அன்னோர் பலருளாகுமிருவர்
கால்யாப்பகற்றி கடிந்து நும்மிடம்
அபயமாய் வந்ததை யறிந்தனன் நீரு
மபயந்தந்து ஆதரித்திட்ட
செய்தியைக் கேட்டு செப்பு வேனின்னமும்
நம்முடை நட்பு நயமுடனிருப்பின்
அத்தகைக் கள்வரை யதட்டி தக்ஷணம்
தாமதமுராது சடிதியி லிவ்விடம்
காவல் சேர்த்து கனிவுடனனுப்புவீர்
இல்லையாயி னெதிர்த்து யுத்தம்
புரிவது திண்ணம் பொற்புடனறிவீர்.

என்று நிருபம் எழுதி அரச முத்திரையிட்டு தூதுவரிடங் கொடுத்து கச்சி மும்முடி யரசனிடங் கொடுக்கும்படி அனுப்பினர்கள்.

தூதுவர்கள் அந்த நிருபத்தைப் பெற்றுக்கொண்டு கடிதினிற் கச்சிக்கு வந்து மும்முடி யரசனைப் பார்த்து நமஸ்கரித்து நிருபத்தைக் கொடுத்தார்கள். அரசனும் நிருபத்தைப் பார்த்து மந்திரிகளிடங் கொடுத்து வாசிக்கச்செய்து சபையார்களைப் பார்த்து அபய மென்று வந்தவரை யாதரிக்க வேண்டியது தரும சாஸ்திர விதியானமையால் நாம் அபயாஸ்தங் கொடுத்து ஆதரித்தோம். இது விஷயமாக உங்களபிப்பிராயத்தைக் கூறுங்கள் என்று கூறினர். மந்திரி பிரதானிகள் அரசனை நோக்கி கூறுவதாவது.

பல்லவி.

உத்தேசித்தெதுவுஞ் செய்ய வேண்டும்—செய்தால்
தீங்கொன்றுமிலை நலமுற்றிடுமே.

அனுபல்லவி.

ஊசிமுனை போலுற்ற பேச்சு
அதையோசியா விடிலாகுங்கடலுள் நீச்சு
தூசுசெய்கை செய்தாலாச்சு—அந்த
தூசும்பிரமாண்டமா யோசிக்கலாச்சு
பகைவருரு மாறிவருவார்—வந்து
முகாட்பா யடைக்கல மென்றுரைப்பார்
அகத்தில் வர்மங்கொண்டே திரிவார்—சிலநாள்
இகத்தப்பின் சதி செய்ய யெத்தனிப்பார்
முகக்குறி மொழிக்குறி நோக்கி வந்தவன்
பகத்தோனுறவென்று பழமையைத்தூக்கி
அகக்குறி ஜெயக்குறி வீக்கிமுன்பின்
பகுத்தறிவூகத்தை பண்பாயுண்டாக்கி
செங்கோல் செலுத்தல் தந்திரியுக்தி—அதிற்
கெங்கையும் தடைவராதியற்றலே மிக சீர்த்தி
இங்கடைக்கலங் காத்தலே பத்தி—யெனினும்
பங்கொடா நலஞ் செய்தலன்பான சுத்தி.

திருக்குறள்.

இயற்றலுமீட்டலுங் காத்தலுங்காத்து
வகுத்தலும் வல்லதரசு.
கொடையளி செங்கோல் குடியோம்ப நான்கு
முடையானும் வேந்தற் கொளி.

எனக்கூறியதை யோசித்து நடத்துதல் இராஜ தந்திரமாகும். இதுவே அரசர்களுக்குரிய நீதியாகும். பாண்டியராஜன் வரைந்த நிருபத்துக்குப் பதில் நிருபம் வரைய வேண்டுமல்லவா? அதற்கு அபயாஸ்தங்கொடுத்தவர்களை மறுபடியும் அனுப்புவது தருமவழியாகாது. அபயாஸ்தங்கொடுத்தது கொடுத்ததே. அவர்களை அனுப்ப முடியாதென்று வரையுங்கள் என்றுகூற அவ்வாறே எழுதத்துணிந்தனர்,

பதில் நிருபம்.

ஸ்ரீமதகில குணபூஷண சர்வ வல்லமை பொருந்திய தமிழ் நாட்டுக்கதிபதியாகிய மீனக்கொடியோனே அயோதன பிரவீண பாண்டிய ராஜனே! உமது மித்திரனாகிய கச்சியர்கோன் எழுதும் நிருபம் என்னவெனில், தாங்கள் விடுத்த நிருபங்கண்டு விஷயமறிந்து மிகவும் மனம்வருந்துகின்றேன். உமது நாட்டுக்கள்வரென்று முதலிற்றெரியாமல் என்னிடம் வந்து அபயங்கோறி மன்றாடினார்கள். யானும் நீதி முறைப்பிரகாரம் அவர்களுக்கு அபயாஸ்தங்கொடுத்து விட்டேன். அவர்களும் உள்ளதை பிறகு வுரைத்தார்கள். யானும் அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து ஆதரித்து வருகின்றேன். தாங்கள் வரைந்ததுபோல் அவர்களைத் தங்களிடம் அனுப்புவதென்றால் தரும சாஸ்திரத்திற்கும் அரசாங்க நீதிக்கும் விரோதமாகுமல்லவா? நீங்களும் ஒருவருக்கு அபயாஸ்தங்கொடுத்துவிட்டு பிறகு அவர்களைக்காட்டிக் கொடுப்பீர்களா? அது ராஜாங்கத்துக்கு முழு விரோதமாகாதா? அதைப்போல அபயாஸ்தங் கொடுத்துவிட்டு பிறகு காட்டிக்கொடுப்பது எங்கள் முன்னோர்களுக்குமில்லை. மனசாக்ஷிக்கும் தருமத்துக்கும் அரசுரிமைக்கும் விரோதமாகும். ஆகவே தாங்கள் இது விஷயத்தைப்பற்றி கவனிக்காது விடுவது நலமாகும். அதுவே தரும சாஸ்திரத்துக் குகந்ததாகும். நமது நட்பும் வேறான்றி நிற்குமென்பதுவே எனது கொள்கையுமாகும் என்று வரைந்து முத்திரையிட்டு தூதுவரிடங் கொடுத்தனுப்பினார்கள். தூதுவர்கள் பாண்டிய தேசஞ்சென்று இராஜசபையில் பாண்டிய ராஜனை வணங்கி லிகிதத்தை நீட்டினார். இலிகிதத்திலிருந்த அரசமுத்திரையைப் பார்த்து இது மும்முடியரசனது என்றோர்ந்து தூதர்களை யனுப்பிவிட்டு மந்திரியினிடங் கொடுத்து அரச சபையில் வாசிக்கச் செய்தனர்.

விருத்தம்.

சாது காமாக்ஷியம்மன் வரப்பிரசாதர்
தாமுரைத்த வாக்கியங்கள் தன்னைக்கேட்ட
தூது வராங்காவலர்போய் பாண்டியனுக்குச்
சொல்லவவன் கேட்டெழுந்து துரிதமாக
தீதுபயில் குற்றமுடையவர்க்குக் கச்சி
தீக்ஷண மும்முடியனுபகாரஞ் செய்த
தீததனையறிய வென்றிவ்வரசன் முன்வந்
திருந்திட்டான் சமவாதம் புரிந்திட்டானே.

எனக் கூறியபடி யாவுங் கேட்ட அரசன் மிக்க கோபாவேசங் கொண்டு தமது சபையி லிருக்கும் சபையோர்களைப் பார்த்து, சபையோர்களே! நாம் வரைந்த கடிதத்தை அந்த மும்முடிவேந்தன்

சிறிதுங் கவனியாது அலக்ஷியஞ் செய்து நமக்கு நீதிகள் புகட்ட வந்தனரே. இந்த நீதிகள் நமக்குத் தெரியாது என்று நினைத்தனரோ? நமது மூதோர்களுக் கிவ்வித நீதியினாலன்றோ பொற்கை மாரன் என்று பெயர் வழங்கியது. இப்பவும் நாம் நமது சைனியங்களுடன் சென்று நேரில் வார்த்தை யாடி அக்கள்வர்களை அழைத்துக் கொண்டு வரலாமென்று கூறியதைக் கேட்ட சபையோர்களுமங்கீகரித்தனர். உடனே தமது சைனியங்களைத் தயாரிக்கச் செய்து தன் இரதத்தில் ஆயுதங்களுடன் ஆரோகணித்து ரத, கஜ, துரக, பதாதிகளுடனும், வாத்திய கோஷ்டங்க ளுடனும் காஞ்சிமா நகரடைந்தனர். இதைச் செவியுற்ற பிரபோதய னென்னும் மும்முடிவேந்தன் தமது சேனை சைனியங்களுடன் எதிர் சென்றழைத்து சிம்மாசன மிட்டுபசரித்தனர்.

பாண்டியனுக்கும் மும்முடிராஜனுக்குந் தர்க்கம்.

கண்ணிகள், நாதநாமகிரியை.

சாது காமாக்ஷியம்மன் ஓதும் மும்முடிப்ரசாதா மீதாமறை
ஆதிநெறியைத்தவராத ஞாயாதிபதிப்ரக்யாதா விநோதா
தீதையடைக்கியேதினமும் நடத்தும் நீதா சூதாய் வந்து
ஒதுங்கள்ளர்க்கபயம் எதுதந்தது கச்சிநாதா நீ ஓது.

மும்முடியரசன் விடை.

வேண்டும் புகழ்ப்படைத்த ப்ாண்டியனான மகா சீலா மேலா மதுரை
யாண்டு மீனாக்ஷி பாதம் பூண்ட மனதுடைய தவப்பாலாலோலா
ஈண்டடைந்த பேரை யாண்டார்க் குரைவோ மனுகுலா மேலாகவே
தாண்டிப் பரோபகாரம் வேண்டார் மனிதர் தாமோலீலா கோலா.

கால, வைரவ, பிரிதிவீஸ்வர வம்ஸ சதா சார தர்மமுடைய பிரபோதய மும்முடி வேந்தே! வேந்தர்களுக் குள்ள நீதி, ஐந்து பயந்தீர்த் தரசாளுவதன்றோ? அவ்விதமாகிய ஐந்து பயத்தில் களவு என்பதும் ஒன்றல்லவோ? அம்மாதிரி களவிலும் அரசாங்கத்

தில் களவு செய்த ராஜத்து ரோகிகளை சிக்ஷிப்பது தருமமா? ஆதரிப்பது தருமமா? இதைத் தாங்கள் பெரிதுங் கவனிக்காது ஆதரிப்பதாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்.

தொண்டமண்டல சதகம்

வெங்கொலைக்கஞ்சி யடைக்கலந்தான் புகவேந்தமைந்த
துங்கலையாமலொளித்துவைத்தே தன்னொருமகவை
இங்கிவன்றானவனென்றே யடைக்கலக்கீந்து விட்டான்
மங்கலஞ்சேர்கிடங்கிற் பெருமான்றொண்டை மண்டலமே — எனவும்

வைசிய புராணம்.

துட்டரையு நீக்கிச்சுருதிநெறி நீங்காத
சிட்டரையும் வாழ்வு சிறக்கும்படி தெரிந்திட்
டிட்டமுடன் மண்ணுண்டினி திருக்குமாறிசைந்து
மட்டவிழ்தார் வேந்தை மருமத்தாலே விடுத்தான். — எனவும்,

"க்ஷத்ரஜம் ஸேவதேயஸ்து வெதாத்யயன ஸங்கத
தாதாதா நரதிர்யஸ்துயவைக்ஷத்ரிய உச்யதே" என வியாஸபாரதமும்,

மனுநீதிமுறைமையும் பரராஜர் கொண்டாட
வருமதிகரண வீரமும்
வான்விஜயமொடு சரசசாதன விசேஷமும்
வாசி மதகரியேற்றமும்
கனமாமமைச்சரும் பலமான துர்க்கமும்
கைகண்ட போர்ப்படைகளும்
கஜரதபதாதியுந் துரகப்ரவாகமும்
காலதேசங்களெவையும் — எனவரும் சதகமும்,

"அஞ்சாமையீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற்கியல்பு" எனுஞ்செந்நாப்புலவரின் வாக்கும்,

இறை மகனஞ்சாவென்குடை நன்றாலென்காவ
லறிமலி செங்கோலஞ் சுபயந்தீர்த்தரசாளும்

எனுந் திருவிளையாடற் புராணப் பாசுரமும் நன்குவிளக்குகின்றது, எனக்கூறியதைக்கேட்ட மும்முடி யரசன் பாண்டியனைப் பார்த்து மீனக்கொடியும், வேப்பமாலையும் தரித்த உத்தம புருஷோத்தமரே! நீங்கள் கூறுவது உங்களுக்கு நீதியாக விருந்தாலும், எங்கள் காலவைரவ பிருதிவீச்சுர வம்ஸயாக க்ஷத்திரியகுல இருபத்து நான்கு மனையார்களுக்கு பொருத்தமாகாது. எக்குலத்தானாயினும் அபயம் என்று வந்து அண்டினால், அவர்களை தங்கள் உயிரைக் கொடுத்தாயினு மாதரிப்பது குல தருமமாகக் கொண்டிருக்கிறோம். எங்கள் குல தருமத்துக்கு விரோதமும், துரோகமுஞ் செய்யோமென்று கூறியதைக்கேட்ட அயோதன பிரவீண பாண்டியன் மும்முடி யரசனைப்பார்த்து, சொன்ன சொற்றவராத சற்குணரே! கேளும், எமது பொக்கிஷத்தைத் திருடியதினிமித்தம் சிறைக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்த ஜிண்டி, ஜிகிண்டி என்னுந் தகப்பன் பிள்ளை இருவர்

களுக் திருட்டுத்தனமாய் தப்பி தங்களிடம் வந்து அபயங்கேட்டதற்கு நீங்கள் அபயாஸ்தங்கொடுத்த தாகவும், அவர்கள் உயிருக்குப் பதிலாக தங்களுயிரைத் தருவதாகவுங் கூறினீர். தங்களுயிரையும் வேண்டேன். மற்று மதற்கிணையாகப் பொருள் தரினும் வேண்டேன். ஆனாலவர்களுக் கிணையாகத் தங்கள் ஸ்ரீமந்த புத்திரனும், தங்களுக் குப்பின் அரசாளுந் தகைமையுடயவனுமாகிய விரத வீரியனுடைய சிரங் கொடுத்தாலது போதுமானது என்றனன். மும்முடி யரசன் மிகுந்த சந்தோஷமடைந்து பாண்டியனைப் பார்த்து வேந்தனே! நீர் யாது கேட்பீரோவென்று நினைத்திருந்தேன். இல்லாத வஸ்துவைக் கேட்டா லெவ்விதந்தருவ தென்று நினைத்திருந்தேன். என்னிடமுள்ளதும், எனக்குறியதுமான பொருளைக்கேட்டதற்கு சந்தோஷமடைந்தேன். நீர் கோறியவாறு தருவதற்கு ஒரு சிறிதும் பின்வாங்கேன். நாளையதினம்மாலையில் எங்கள் ஸ்ரீசாதுசொர்னகாமாக்ஷியம்மனுடைய சந்நிதானத்தில் கட்டாயஞ் சிறங்கொடுக்கத் தடையில்லை. தாங்களாங்கே வந்து விஜயஞ் செய்யவேண்டும் என்றதைக்கேட்ட பாண்டியன் சம்மதித்து தங்கள் தங்கள் விடுதிகளுக் கேகினர்கள்.

மும்முடியரசன் மறுநாள் காலையில் தமது காலைக்கடன்களை முடித்து ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மனாகிய குலதெய்வத்தை வணங்கி சபையில் சென்று சிம்மாசனத்தி லமர்ந்து ஒற்றர்களை விளித்து நீங்கள் நமது நகரத்தி லிருக்கும் இருபத்தி நான்கு மனையார்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் இன்றுசூரியாஸ்தமனத்துக்கு ஸ்ரீ சாது காமாக்ஷி யம்மனின் சந்நிதிக்கு வரும்படி கூறுகவென்றுக் ஞாபித்து, சபையை விட்டு தமதரன் மனைக்குச் சென்றனர். அன்று மாலை சந்நிதியிற் கூடிய பிரஜைகளுக்கும் நகரவாசிகளுக்கும் அளவு கிடையாது. சூரியாஸ்தமன சமயத்தில் மும்முடியரசன் தனது புதல்வனான விரத வீரியனுடனும், மந்திரி பிரதானிக ளுடனும், பாண்டியராஜன் தமது சைனியங்களுடனும், அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். மும்முடி வேந்தனாகிய பிரபோதபன் ஆங்கு வந்திருந்த யாவரையும் பார்த்து மகா ஜனங்களே! இவ்விடத்தில் உங்கள் யாவர் களையுந் தருவித்ததற்குக் காரணம் யாதென்றால் நமது குலாசாரப் படியும் குல தருமப்படியும் அபயம் என்று பாண்டிய நாட்டிலிருந்து வந்த இருவருக்கு அபயாஸ்தங் கொடுத்துள்ளேன். இதற்காக பாண்டியன் என்னிடந் தர்க்கித்ததினால் நாங்கள் எங்களுயிரைத் தந்தாலும் தருவோமே யொழிய அபயங் கொடுத்ததை மறுதலிக் கோம் என்று கூறினேன். உடனே பாண்டியன் அப்படியானால் தங்களது புத்திரனாகிய விரத வீரியனுடைய சிரங் கொடுத்தாற் போதுமென் றதனால் நானுஞ் சத்தியத்தை நிலை நாட்ட ஒப்புக் கொண்டு இன்றைய தினத்தையுங் குறித்து சபை கூட்டியது என்று கூறியதைக் கேட்ட பிரஜைகளும், இருபத்தினான்கு மனையார்களும் ஜெயஜய வென் றார்ப்பரித்தார்கள். அச்சமயத்தில் விரதவீரிய

ராஜகுமாரனும் ஸ்நானஞ்செய்து பூசை முடித்து பட்டாடை யுடுத்தி ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் சந்நிதியை மூன்றுதரம் வலம் வந்து பஞ்சாக்ஷரி, பரமேஸ்வரி, பராசக்தி, சங்கரி, சர்வே ஸ்வரி, கள்வர்களாகிய இருவர்களை கார்க்கும் பொருட்டும், பாண்டிய னுக்கு என் தகப்பனராகிய மும்முடியரசர் அளித்த சத்திய வாக்கு நிறவேற்றும் பொருட்டும், இவ்வம்ஸத்துக்கு குறை ஏற்படாமல் இருக்கும் பொருட்டும், என் தந்தையாருடைய உறுதி நிலைக்கும் பொருட்டும், கார்த்து இரக்ஷிப்பீர் என்று தோத்திரித்து இதோ எனது சிரத்தை நினது பாதார விந்தத்துக்கு அர்ப் பணம் செய்கின்றேன் எனக்கூறி உடை வாளினுற் றுண்டித்து வீழ்த்தினன்.

பாண்டியனுக்காக விரதவீரியன் சிரங்கொடுத்தல்.

இதைப்பார்த்த யாவரும் பகவதி! பரமேஸ்வரி! உமாதேவி! உமது திருவடியில் சத்தியந் தவராது சிறுவன் சிரசை அர்ச்சித் தனன்.

நமோ தேவ்யை ஜகத்தார்யை ஷிவாயை ஸததம்நமஃ
தூர்காயை பகவத்யை தேகாமதாயை நமோ நமஃ
நமஸ்ஷிவாயை ஸாந்த்யை தேவித்யாயை மோக்ஷதே நமஃ
விஸ்வவ்யாஸ்தை ஜகந்மாத ஜகத்தார்யைநமஸ்ஷிவே!!

என்று பலவாறு துதிசெய்து நிற்கையில் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாகிய ஸ்ரீ சாது காமாக்ஷியம்மன் தமது தரிசனக் தந்து விரத வீரியனை உயிர்ப்பித்தெழுப்பி மும்முடி யரசனையும் இருபத்திநான்கு மனையார்களையும் பார்த்து, பக்தர்காள்! உங்களது மாராவுறுதியையும் சத்தியத்தையும் வீரத்துவத்தையும் பார்த்து மிக்கமகிழ் வெய்தினேன். அஞ்சாதேயுங்கள். எப்போது முங்களுட னிருந்து காத்திடுவே னென்றுகூறி மறைந்தனள். இதைப்பார்த்த யாவர்களும் மெய்மறந்து அம்மனைத்துதித்து வணங்கினர்கள். அயோதன பிரவீண பாண்டியன் மிகுந்த ஆச்சரியமும் சந்தோஷமு

மடைந்து உங்களுடைய சத்தியத்தையும், சொன்ன சொல் தவராத உத்தம குணத்தையும், முதிர்ந்த நீதியையும், பக்தியையும் பார்த்து பெரிதும் வியந்தேன். மூதறிஞராகிய மும்முடி வேந்தே! உங்களின் மூதோர்களாகிய காலவைரவாம்ஸ பிருதிவீச்சுரனுடையவும், வைடங்கன் முதலிய சந்ததியினுடையவும், கலைக்கோட்டு மாமுனிவரின் யாகோற்பத்தியின் அவிற்பாகத்தின் விசேட பலத்தையும் நன்கு விளக்குகின்றது. இனி நாங்கள் பேசுவதற்கு ஒன்றுமில்லை. நீர் புரிந்த இவ்வரிய காரியமானது மூவுலகும் புகழ்ந்து கீர்த்தி யடையத் தக்கதாகும். எங்களுக்கு விடை யளிப்பீர்களென்றுகூறி விடை பெற்று சைனியங்களுடன் பாண்டிய நாட்டுக்குச் சென்றார்கள்.

தொண்டமண்டல சதகம்.

தேர்கொடுத் தோனும் பரிகொடுத் தோனுந் திருமனையிற்
றூர்கொடுத்தோனு நீநலைகொடுத் தோனுந் தமிழனுக்கா
ஊர்கொடுத் தோனுமுயிர் கொடுத்தோனு முதைகொடுக்க
மார்கொடுத்தோனு மனையோருளார் தொண்ட மண்டலமே

சோழராஜனுக்கும் கூர்ஜரதேச வல்லவராயனுககும் யுத்தம்.

தபோதனர்களே! இன்னுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்—

மும்முடி யரசனுஞ் விசுவசேன னென்னும் சோழனும் பகையா யிருப்பதை யறிந்த கூர்ஜ்ஜர தேசத்தரசனாகிய வல்லவராயன் தனது ரத கஜ துரக பதாதிகளாகிய சைனியங்களுடன் சோழராஜ்ஜியத்தின் மேல் படையெடுத்து வந்து எட்டு நாள் இரவும் பகலும் கடுமையான யுத்தஞ்செய்து அநேக நாடு நகரங்களைக் கைப்பற்றினார்கள். சோழனுக்கு உதவியாகவிருந்த வேற்றரசர்களையும் புறமுதுகிட்டோடும்படி செய்தனர். இந்த யுத்தத்தில் இறந்தவர்கள் பலர். இச்செய்தியை ஒற்றர்கள் மூலமாக வறிந்த சோழன் மிகுந்த கவலையும் வருத்தமும் அடைந்து நமக்குத் துணையாக வரக்கூடியவர் மும்முடிவேந்தனே யல்லது வேறு யாருங்கிடையாது. நமக்குறிய விரோதங்களையும் விகல்பங்களையும் அறவேமறந்து அன்னாருக்கு அபயங்கூறி நமக்குத் துணையாக வரும்படி ஓலைவிடுத்தலே உசிதம். இல்லாவிடில் நாம் சிறைப்பிடிக்கப்படுவோம் என்று யோசித்து ஓலை யெழுதி ஒற்றரிடங்கொடுத்து துரிதமாயனுப்பினார்கள்.

கச்சியில் மும்முடியரசன் கொலுமண்டபத்தில் மந்திரி பிரதானிகள், பிரஜைகள் சூழவீற்றிருந்து நகரவிசாரணை புரியும் போது, ஒருவன் குதிரையைவிட்டிறங்கி நமஸ்கரித்து ஓலையை நீட்டினன். மும்முடி வேந்தனும் அதைவாங்கி மந்திரியினிடங் கொடுத்து வாசிக்கக்கூறினன்.

ஸ்ரீராஜ மகான்ராஜஸ்ரீ யாக க்ஷத்திரிய குலமணியாகிய மும்முடி ராஜசிகாமணிக்கும் தமது குலத்தவர்களுக்கும் அபயம் அபயம். என்மீது எத்தகைய குற்ற மிருந்தபோதிலும் மன்னித்து என்னை ஆதரிக்கும்படி மிகவும் வேண்டுகின்றேன். கூர்ஜ்ஜரதேச வல்லவராயன் என்மீது படையெடுத்து வந்து எனது சைனியங்களை சின்னு பின்னப்படுத்தியதல்லாமல் அநேக நாடுகளையும் அபகரித்துக்கொண்டான். நாம் சும்மா விருக்கும்பக்ஷத்தில் என்னையுஞ் சிறைப்பிடிப்பான். ஆகையால் எனக்கு அபயாஸ்தந் தந்து என்னையும் எனது இராஜ்ஜியத்தையும் காப்பாற்றித் தந்தருளும்படி மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். தாங்களால்லது உற்றதுணை வேறுகிடையாது. உங்களை முழுதும் நம்பி இங்கிருபம் வரைய லாயினேன். வந்தனம் வந்தனம் இப்படித் தங்கள் தாழ்மையுள்ள விசுவசேன் சோழன்!

என்று வாசித்துக் காண்பித்ததும் யாவரும் ஒருவரை யொருவர் பார்த்து மௌனமாக விருந்தார்கள். அச்சமயத்தில் அதிசூக்ம புத்தியுடைய மந்திரி அரசனை வணங்கி, வேந்தே! தாங்களும் மற்றவர்களும் வாளாயிருப்பது நன்றன்று. தங்களது முதியோர்கள் ஆதியிலிருந்து எந்தெந்தவிதமாக குடி படைகளையும், தம்மிட மபயமென்று கூறிய அரசர்களையும், மற்றவர்களையும், கைவிடாது காப்பாற்றினார்களென்பது தங்களுக்கு சொல்லவேண்டியதில்லை. தயவு செய்து பெரிதும் யோசித்து சிறியேன்மீது கோபியாது அபயமென்று வந்தவர்களை காத்தல் கடமை தங்களுடையதே. சமீபத்தில் தங்களிடம் அடைக்கலம் புகுந்த ஜண்டி, ஜிகிண்டி என்னு மிருவர்களைத் தங்கள் புத்திர சிகாமணியாகிய வீரத வீரியனின் சிரங்கொடுத்து காப்பாற்றியதை இவ்வகில மெல்லாம் போற்று கின்றது. நமது குலத்தாயாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மனின் கிருபை கடாக்ஷமும் வரப்பிரசாதமும் உங்கள்முன் நிற்கின்றது. ஆனபடியினால் தாங்கள் அண்டினவர்களைக் காப்பாற்றும் வீரக்கொடியின் உறுதி இதுவே யாகுமென்று கூறியதைக்கேட்ட மும்முடியனும் மற்றுமுள்ள 24 மனையார்களும் ஜெய ஜெய வென்று ஆரவாரித்து ஸ்ரீ சாது காமாக்ஷியம்மனின் சந்நிதியடைந்து தரிசித்து வரப்பிரசாதம் பெற்று தாங்கள் யுத்தசன்னத்தர்களாய் கத்தி ஈட்டி பாணம் கேடயம் முதலிய வாயுதங்களைத் தரித்து ரத கஜ துரகபதாதிகளை வகுத்து எக்காளம் பேரிகை தாரை முரசு முதலிய வாத்தியங்கள் தாம் தாம் என்று முழங்கப் புறப்பட்டு சோழதேசஞ் சென்றார்கள். இவ்வாத்திய ஆரவாரங்களையும் ரத கஜ துரகபதாதிகளின் ஆர்ப்பரிப்பும் கொக்கரிப்பும் அதனால் உண்டாகும் செந்தூள் ஆகாயத்தை அளாவி சூரியனை மறைத்து இருள் சூழ்ந்ததையும் பார்த்த சோழராஜன் மனமயர்ந்து வல்லவராய னிவ்விடம் வந்து விட்டானோ என்னமோவென்று பயந்து தமது மந்திரியைப் பார்த்து வரும்படி உத்திரவிட்டனன். மந்திரியும் தானே சென்றுபார்த்து மும்முடி

ராஜன் என்று அறிந்து சந்தோஷத்துடன் சோழராஜனிடங்கூற விசுவசேன னென்னும் சோழனும் மகிழ்ந்து தனது மந்திரி பிரதானிகளுடன் எதிர் சென்று மும்முடியனை வணங்கி நல் வரவு கூறி அழைத்து வந்து ஆசனமிட்டுபசரித்து தனக்கு கூர்ஜ்ஜரனால் ஏற்பட்ட விபத்துகளையும் எடுத்துக்கூறி தங்களையும் தங்கள் ராஜ்ஜியங்களையும் காப்பாற்றும்படி மன்றாடி கேட்டுக்கொண்டதின் பேரில் மும்முடியன் மனமிரங்கி தன் சேனா சைனியங்களுடன் அப்படியே யுத்தத்திற்கு சென்று கூர்ஜ்ஜர தேசத்தரசனாகிய வல்லவராயனையும் அவன் படைகளையு மெதிர்த்து தாக்கினார்கள். யானைகளுடன் யானைகளும் குதிரைகளுடன் குதிரைகளும் காலாற்படைகளுடன் காலாற்படைகளும் மல்யுத்தக் காரர்களுடன் மல் யுத்தகாரர்களும் எதிர்த்து அகோரமான யுத்தம் புரிந்தார்கள். எதிரிகளின் சைனியங்களிலனேகர் தாங்கள் யுத்தத்திற்கு வரவில்லை யென்று புறமுதுகிட்டோடினார்கள். வல்லவராயனுடைய தேர் முதலியவைகள் முறிந்து வில் வாள் கத்திகேடயம் முதலியவைகள் ஒடிந்ததினால் மிக்க கோபாவேசத்துடன் மும்முடியனுடன் மல்யுத்தம் புரிந்து கடைசியாக வல்லவராயனை மும்முடியன் தமது பாணத்தினால் மடித்தனன். கச்சிக்காவலனாகிய மும்முடியன் தனது சிங்கக்கொடியை நாட்டி சோழனுடைய நாடு நகரங்களை யெல்லாங் கைவசப்படுத்தி சோழனுக்குக் கொடுத்து திரும்புகையில் மும்முடியனைப்பார்த்து சோழன் நமஸ்கரித்து தங்கள் அனுக்கிரகத்தினால் நான் இழந்த நாடு நகரங்களை மீண்டுமடைந்தேன் எங்கள் ஞாபகார்த்தமாக ஜகன்மாதாவாகிய ஸ்ரீ சாது காமாக்ஷியம்மனுடைய கைங்கரிய செலவுக்கு ஓர் ஊர் பரிசளிப்பதாகக் கூறி ஓர் ஊரைக்கொடுக்க அதைப்பெற்று கச்சிநகருக்கு வந்து தங்குலதெய்வமாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மனை வணங்கி துதித்து அரண்மனை வந்து சேர்ந்தார்கள்.

சில நாளில் தனது புத்திரர்களாகிய விரதவீரியனுக்கும், விசாலாவதியை யாளும் சுப்ரதீகரன் குமாரனாகிய உருத்திர ராஜனுக்கும் திருமணஞ்செய்ய வோலை விடுத்து நன்னாள் நியமிதது அங்கார காக்கியன் வம்ஸபரம்பரையில் வந்த ஊர்த்தவாகன் புத்திரியாகிய குமாரலோசினியை விரதவீரியனுக்கும் அதே அங்காரகாக்கியன் பரம்பரை வம்ஸத்தில் வந்த வேத வாகுவின் புத்திரியாகிய மதிமுகியை உருத்திர ராஜனுக்குத் திருமணம் புரிந்து திருமகுடதாரணஞ் சூட்டித்தங்கள் தங்களிருப்பிடஞ் சென்று அரசுபுரியும்போது சுப்ரதீகரனும் பிரபோதய ராஜனும்மற்று முள்ளோர்களும் நிஷ்டைகூட கானகஞ் சென்று இனிது தவம் புரிந்தார்கள்.

விருத்தம்.

சோழமன்னனரசாளு நாளிலத்தேமேல்
துஷ்டவல்லவராயன் வந்
தூழடுத்து லகரைவெருட்டி வெல்லயாராலுமாகா
துமையடியர் வெல்வர்பயமென

நீதிதவறுவந்தவனை மும்முடி வென்றிடசோழன்
நவின்றிடவுமக்கொரு நாடென
சோதிபுகழ் சலநாடு தவவுமையருளாளிருபத்து
நான்கு மனையார்களினிதே வாழ்க.

வல்லவராயன் மகன் குருவிந்தன் அரசாக்ஷி.

இந்தப்படி கூர்ஜர தேசத்தரசனாகிய வல்லவராயன் யுத்தகளத்தில் இறந்தபிறகு, அவன் மகனாகிய குருவிந்தன் என்னு மரசகுமாரனுக்குப் பட்டங்கட்டி அரசாண்டு வருங்காலத்தில், ஓர் நாள் தமது ராஜசபையில் வீற்றிருக்கும் போது அவ்விடத்தி லிருக்கும் முதியோர்களைப் பார்த்து நமஸ்கரித்து பெரியோர்களே எமது தந்தை முதலியவர் அரசுபுரியுங் காலத்தில் நடந்த விஷயங்களும், அவர் புரிந்த யுத்த பராக்கிரமத்தையும் தெரிந்த வரையிற் நான் உணரும்படி உரைக்கவேண்டுமென்றுகூறி யதைக்கேட்ட பெரியோர்கள் கூறுவாராயினர். இளங்கோவே கேளும் தங்கள் தாதையாகிய வல்லவராயன் மிகுந்த பராக்கிரமசாலி. குடிபடைகளிடம் அன்புபூண்டவர். சிலவாண்டுகளுக்கு முன் தமது சேனை சைனியங்களுடன் சோழ தேசஞ் சென்று விசுவசேன னென்னுஞ் சோழனையெதிர்த்து யுத்தஞ்செய்து அவனது நாடு நகரங்களைக் கைப்பற்றி ஜெயக்கொடி நாட்டி வரும் போது கச்சி பிரபோதய னென்னும் மும்முடிராஜன் தமது ரத கஜ துரக பதாதிகளுடன் சோழனுக்கு உதவியாக வந்து உன் தந்தையுடன் பெரும்போர் செய்ததுமல்லாமல் மல்யுத்தமும் புரிந்து வல்லவராயனை சம்மரித்து கைப்பற்றிய நாடுகளை மீட்டு சோழனிடங் கொடுத்துச் சென்றான் என்று கூறிக்கொண்டு வரும்போது குருவிந்தனுக்கு அடங்காக் கோபம் வந்து தமது கண்களினின்றும் தீப்பொறிகள் பறக்க மீசை துடிக்க கர்ஜித்து சிம்மாசனத்தை விட்டுக்கீழிறங்கி

தமது வாளை உரையினின்று முருவி மந்திரி பிரதானிகளைப் பார்த்து மந்திரிகாள் எனது தந்தையை சங்கரித்தவனை யான் வீணே விடுதல் நலமன்று, ஆகையினால் இன்னே அவனிடஞ் சென்று யுத்தஞ்செய்து பழிக்குப் பழி வாங்குதல் இராஜ தருமமாகும். நீங்களும் நமது சைனியங்களைத் தயாரித்து துரிதமாய்ப் புறப்படுங்கள் என்று கூறினன். உடனே அதிரதர், சமரதர், அர்த்தரதர் முதலிய வீரர்கள் யுத்தசன்னத்தராய் சதுரங்க படைகளுடன் வீரகர்ஜனை, வெற்றிச்சங்கு, பூரித்துக்கொண்டு வெற்றி முரசு முதலிய வாத்தியங்களுடன் பொற்றேரேறி பூமிநடுங்கும்படி அதிசீக்கிரத்தில் காஞ்சிமா நகரத்திற்கு பத்துமைல் தூரத்துக்கப் பாலுள்ள வெளியிடத்தில் கூடாரமிட்டுத் தங்கினர்கள்.

விருத்தம்.

சிறந்திடுங் குச்சரதேசத்து குருவிந்தன் மந்திரிகட்கு
சார்ந்தயெல் லோர்கட்கும்
சுரந்து கொளும் தொழிலருக்கு மூர்க்கர் காதகற்கு
சுத்த முளகச்சி நாட்டிற்
பரந்தேகி தாதையைக் கொன்ற பழிக்குப் பழிவாங்க
பதரிகலகஞ் செய்தீரென
பரிவுடனவ் வாரவர் சென்று நெருங்கி கலகமிகப்
பெரிக்கி விட்டாரே.

குருவிந்தன் கொள்ளையிடல்.

இவ்வாறு இவர்கள் கூடாரமிட்டு சேனைகளை அணி அணியாக வகுத்து கடைசியில் வியாபாரஞ் செய்யும் ஆவண வீதியிற்சென்று வியாபாரத்தைத் தடுத்து கலகத்தை யுண்டுபண்ணி கொள்ளையடித்து வருவதைப் பார்த்த குடிகள் பயந்து தமது மன்னனகிய மும்முடி விரத வீரிய மகாராஜனிடஞ் கூறி கண்ணீர் சொரிந்து அஞ்சு பயந் தீர்த்து அரசாளுமெங்கள் கோவே,

பல்லவி.

அபயந்தந் தருளவேண்டும் அரசே நாங்கள்
அனுதினம் சுகமாக வாழவேண்டும்.

சரணங்கள்.

வல்லவராயன் மகன் குருவிந்தன் வெகு
வல்லாண்மைக்கார நிபுணன்—அவன்
ஏவலினுற்றாது வர்கள்வந்தார்—வந்து
காவலில் மிகுந்த துயரம் தந்தார்—தந்த

அல்லல்களை வகுத்து யெல்லா வகையுந் தொடுத்து
சொல்லவென்றால் மிகுந்த யெல்லைக் கடங்காது
பயிரை யழித்ததாரை யாகிற்பாக்கியம்—எங்கள்
உயிர்தப்பிவந்ததுன் கடாக்ஷம் செய்த

துயரத்தை யெண்ணகணக் குண்டோ—அதை
பயில நாவாயிர முண்டோ மிக்க
பயங்கொண்ரோ ரோடினார்நாடு போய்கூடினர்
தைரியங்களை விட்டு மிகபயத் தோடினர்—அபயம்.

எனப்பலவாராகப் புலம்பியதைச் செவியுற்ற மும்முடி விரதவீரியன் குடிகளைப்பார்த்து நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். யான் அவனது அகங்காரத்தை யடக்குவேன் எனத்தைரியங்கூறி தமது குலமாதாவாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மனைத் துதித்து வரையும் நிரூபமாவது.

மும்முடிவிரத வீரியன் குருவிந்தனுக்கு நிரூபமெழுதுவது.

“கூர்ஜ்ஜர தேசாதிபதியாகிய வல்லவராயரின் புத்திர சிகாமணியாய் இளவரசுபுரியும் ஸ்ரீ குருவிந்தராஜனுக்கு கச்சியை யரசுபுரியும் மும்முடிராஜன் குமாரனாகிய இளவரசு விரதவீரிய மகாராஜன் வரையும் லிகிதமாவது நீவிர் நமது நாட்டுக்கப்பால் சைனியங்களுடன் தங்கி எனது நகரத்தின் குடிகளின் வியாபாரம் முதலியவைகளை யழிப்பதாகக் குடிஜனங்கள் முறையிடக் கேட்டோம். நீவிர்மித்துருவாக வந்திருந்தால் எவ்விதம் நடந்துக்கொள்ள வேண்டுமோ அவ்விதம் நடந்து நட்புகொள்ளல் வேண்டும் அல்லது சத்துருவாக வந்திருந்தால் உனது யுத்தமுரசத்தாலும் தூதுவர்களாலு மெனக்கு எச்சரித்து யுத்தம் புரியவேண்டும். இவைகளை விடுத்து மனு நீதிக்கும் யுத்த முறைக்கும் மாறுதல் செய்துவருவது அழகாகுமோ தாங்கள் சிறுபிள்ளைத்தனமாகச் செய்யுங் காரியங்கள் சிலாகிக்கத் தக்கதல்ல யுத்தத்திற்கும் நீர் சமர்த்தரல்லர் என்பது இதனல் நன்கு விளங்குகின்றது” எனவரைந்து முத்திரையிட்டு தூதுவரிடங் கொடுத்து அனுப்பினர். தூதுவரு மிந்நிரூபத்தை எடுத்துச்சென்று குருவிந்தராஜனிடம் கொடுக்க அதைப்பிரித்துப் பார்த்து அடங்காக் கோபங்கொண்டு தமது மந்திரி பிரதானிகளை விளித்து பதில் நிரூபம் வரையலாயினன்.

குருவிந்தனுடைய பதில் நிரூபம்.

“யாக க்ஷத்திரியகுல மும்முடி விரதவீரிய மகாராஜனே நீர் விடுத்த நிரூபத்தைப்பார்த்து நன்கு மதித்தேன். நான் மித்துருவாக

விருந்தால் உன்னூரிலிருக்கும் பயிர் முதலானவைகளை அதஞ்செய்யக் காரணமில்லை. எனது தாதையை நினது தாதை கொன்ற பழிக்குப் பழிவாங்கவே உன்னிடம் வந்திருக்கிறேன். எனது சைனியங்கள் உன் நாட்டை அதஞ்செய்தும் நீர் கவனியாதிருந்தது உமக்கு வல்லாண்மை குறைவென்றே கருத இடம் தருகின்றது. ஆகையி னுல் என்னிட மடைக்கலம் புகுந்து பகுதிகட்டி அடங்கியிருத்தல் வேண்டும். இன்றேல்யுத்தஞ்செய்துவீரசுவர்கம்சேர்ந்திடில் உசிதம்" என்று வரைந்து தமது முத்திரையிட்டு தூதுவரிட மனுப்பினன்.

விருத்தம்.

மும்முடி விரதவீரிய ராஜனிவை கூற மூடன்
குருவிந்தன் தனக்கு புத்தி
சம்மதமாய் கூறிக்கேளா மீண்டுஞ்சமர் புரிவே
னெனத்தானுரைத்தா னுணர்ந்து

இம்மொழி ராஜன் மனையார மச்சருலு மையிடம்
பகர்வோ மென்று
பொம்மை போற்பணிந் தெழுந்தர்ச்சனை செய்ய
போற்றுவாரம் மன்வாக்கு சாற்றுவாளே.

தூதுவர் கொண்டுவந்து கொடுத்த நிரூபத்தைப் பார்த்த மும் முடி விரதவீரியன்நகைத்து கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும்முன் னேயானைவரும் பின்னே அதன் ஓசைவரும் முன்னே என்ற முது மொழிக்கிணங்க குருவிந்தனுக்கு காலங் குறுகியதோ வென்று துணிந்து விசாலாவதி மன்னனுகிய மக்கடவனெனும் சுப்ரதிகர ராஜன் புதல்வனை *ருத்திர ராஜனுக்கும் மற்றுமுள்ள சிற்றரசர்க ளுக்கும் தங்கள் ரத கஜ துரக பதாதிகள் புடைசூழ யுத்த கோலத் துடன் புறப்பட்டு வரும்படியாக நிரூபமனுப்பித் தானுந்தனது சைனியங்களை யுத்த கோலத்துடன் தயாரிக்கும்படி வுத்தரவளித்த னன். இவ்விதமாக வேற்றரசர்களும் தங்கள் சகல சேனைகளுடனும், தண்டு தளவாளங்களுடனும், பேரிகை முரசு எக்காளம் வாத்தியங்க ளுடனும் குதிரைப் படைகளும் யானைப்படைகளும் ஒட்டகைப் படைகளையும் கரிந்தாள் செந்தாள் பரக்க அதிவேகத்துடன் சேனு வீரர்களுடன் மக்கடவராஜனும் மற்றுமுள்ள சிற்றரசர்களும் ஆர வாரத்துடன் கச்சியில் வந்து கூடினர்கள். கச்சி மும்முடியரசன் படைகளை அணி அணியாக வகுத்துக்கொண்டு எதிர்நின்று வேற்றர சர்களையும் சைனியங்களையும் வரவேற்றுகுசலம் உசாவி24-மனையார்க ளுட்பட யாவரும் ஸ்ரீ காது காமாக்ஷி யம்மன் சன்னதியிற் சென்று அம்பனை வணங்கித் துதித்து நிற்கையில் அம்மையார் "எம்மை என்றும் மறவாத பக்தர்காள் நீங்கள் புரியும் யுத்தத்தில் யான்

* இவன் மனைவி அங்காரகாக்கியன் வம்ஸம் வேத வாகுவின் புதவில் மதிமுகி.

முன்னின்று காத்திடுவேன். உங்களுக்கே ஜெயம்பெருகும்" என்னும் வாக்குவிசும்பிடை நின்று மொழிந்தனள். இதைக்கேட்ட யாவரும் சந்தோஷத்துடன் ஆரவாரித்து வணங்கி தங்கள் அரன்மனைக்குச் சென்று பட்டத்தரசிகளைப்பார்த்து தாங்கள் கூர்ஜ்ஜர தேசத்துவல்லவராயன் புத்திரனாகிய குருவிந்தனுடம் யுத்தஞ்செய்து அவனது நாடு நகரங்களைக் கைப்பற்றி நமது சிங்கக்கொடியையும் அநுமந்தக் கொடியையும் நாட்டி ஜெயம்பெற்று மீள்வோம். அதற்கு அறி குறியாக நமது பட்டத்து அஸ்வம் மிக்க வலங்காரத்துடனும் குதூகலத்துடனும் முன்னால் வந்து சேரும். அப்படி ஒருக்கால் அபஜெயப்பட்டு சிறையுண்டாலும், நாங்கள் சங்கரிக்கப்பட்டாலும் நமது பட்டத்து அஸ்வம் அலங்கோலத்துடனும் பரிதாப நிலையுடனும் வந்து சேரும். நீங்கள் மாற்றானிடம் சிறைபுகா வண்ணம் நமது குலதேவி ஸ்ரீ சாது காமாக்ஷி அம்மனின் சன்னிதியில் அக்கினி குண்டம் வளர்த்து தீப்பாய்தல் வேண்டும் என்றுகூறித் தமது சைனியங்களுடன் யுத்த பேரிகை முழக்கத்தோடு மற்றுமுள்ள சேனைகள் புடைசூழ குருவிந்தனையும் அவனது சேனைகளையும் நோக்கிச்சென்று யுத்தசைகைகள் செய்தார்கள். இதைப்பார்த்த குருவிந்தன் அடங்காக் கோபங்கொண்டு மும்முடியனைப் பார்த்து வளைந்து தமது சேனைகளைத்தூண்டினான். உடனே மும்முடி விரத வீரியன் எல்லவரையு மடக்கி சில கேள்விகளைக் கேட்கலாயினான்.

மும்முடி விரதவீரியனுக்கும் குருவிந்தனுக்கும்,

தர்க்கம்.

மு. வி. என்னகாண் குருவிந்தா வுன்னின விலுற்றபடி
எண்ண மலிர்ந்ததப் பிதஞ்செய்ய லுற்றாய்.

குரு. தப்பிதமெவர் மேல்செப்புருய் விரதவீரியா
திட்டமாயென் தந்தை தலைவெட்டினருண் தந்தை.

மு-வி என்தந்தை உன் தாதை தலைவெட்ட மிக அட்டி யென்ன
துஷ்டமாக கலகஞ் செய்தா லுனை வெட்டுவேன்பார்.

குரு என்னைவெட்டு வேனென்று அட்டகாசஞ் செய்கிருய்
பட்டிமகனே வுனை வெட்டுவேன் பாரிதோ.

மு-வி. பட்டிமகனே வெட்டுறேனென்கிருய் குருவிந்தா நீ
கருடனை கண்டநற் பாம்பு வெற்றிகொள்ளுமோ சொல்.

குரு. வெற்றி யாகாதது இன்றே தெரியுஞ் சண்டையில் விரதவீரியா
பின்னடை வீர்கண்டு கொள்.

மு-வி. சண்டையில் பின்னடைவேனென்று வீணுரையுரைக்கிருய்
கச்சியில் கலகம் வைத்திடலாமோ

குரு. கச்சியில் கலகம் வைத்தது விரதவீரியா
என் தாதையின் பழிக்குப்பழி வாங்கத்தானே

மு-வி. பாங்குடனுனக்குத்தீங்கு வந்துவிட்டது குருவிந்தாஉன்
பகைதீர்க்க வந்தேனென்று மிக பேசுகிருய்

குரு. வந்ததில் சந்தேகமென்ன யிக்ஷணந்தன்னிலுன்னையுன்
படைகளையுங் கொல்வேன்பார் விரதவீரியா

மு-வி. அம்மன் சகாயத்தாலுன்னையுங் கொன்று படையோட்டு
வேன் நிலை நாட்டுவேன்

குருவிந்தன் விரதவீரியன் யுத்த ஆரம்பம்.

என்றிவ்வாறு இருதிரத்தவர்களும் தர்க்கித்து தங்கள் பாணங்களை விடுத்தார்கள். யானைப்படையுடன் யானைப்படைகளும் குதிரைப் படைகளுடன் குதிரைப் படைகளும் காலாட்படைகளுடன் காலாட்

படைகளு மெதிர்த்து பெரும்போர் புரிந்து தலையற்றவர்களாகவும் உடலற்றவர்களாகவும் காலற்றவர்களாகவும் இருக்குந் தருணத்தில் சைனியங்களைக் கண்ட குருவிந்தன் மிக்க மனமயர்ந்து மெய்கலங்கி யுத்தஞ் செய்துக்கொண்டே தமது கூர்ஜ்ஜர தேசத்துக்குப் போனான். தனது தேசத்திலுள்ள யாவர்களையும் யுத்த முனைக்கு வரும்படி ஆக்ஞாபிக்க, அவ்வாறே ஈட்டி வாள் கத்தி கேடயம் வில் அம்பு முதலியவைகளை யேந்தி யுத்தத்திற்கு வந்தார்கள். இருதிரத்தார் களும் மிக்க மும்முரமாக யுத்தஞ் செய்வதைப் பார்த்தவர்கள் இது என்ன இராவணசம் மாரத்தில் நடந்த யுத்தம் போன்றிருக்கின்றது என்று பயந்து சிலர் ஓடினார்கள். சிலர் ஒளிந்தார்கள். சிலர் ஓலமிட் டழுது குப்புரவிழுந்து கண்களை மூடிக்கொண்டார்கள்.

குருவிந்தனை விரதவீரியன் சங்கரித்தது.

இதைப்பார்த்த குருவிந்தனுடைய முகம்சிவந்து மீசைதுடித்து கண்களினின்றுங் கோபாக்னி பறக்க தனது வில்லை வளைத்து நாணி யேத்தி பிரம்மாஸ்திரம் நாராயணாஸ்திரம் வருணாஸ்திரம் முதலியவை களை மும்முடி விரதவீரியன் பேரில் விடுத்தனன். இதை யறிந்த மும்முடி விரதவீரியன் அந்தந்த அஸ்திரங்களுக்குத் தகுந்த அஸ்தி ரங்கள் விடுத்து பிர்மாஸ்திரத்தையும் நாராயணாஸ்திரத்தையும் வருணாஸ்திரத்தையும் அறுத்துத்தள்ளி தமது அம்புறாதோணியி லிருந்த சூலாயுதத்தை யெடுத்து தூப தீபங்காட்டி ஸ்ரீ சாது காமா க்ஷியம்மனை வணங்கித்துதித்து மந்திரோற்சாடனஞ்செய்து குருவிந் தன் மார்புக்கு லக்கு பார்த்து விடுத்தனன். மற்றொரு பாணத்தை அவனது ரதத்தின் பேரிலும் சாரதியின் பேரிலும் விடுத்தனன். குருவிந்தனோ தன்னாலியன்ற மட்டும் அவைகளைத் தடுக்க சூலாயுதத் தையும் அஸ்திரங்களையும் விடுத்து பயன்படாமல் வியர்த்தமாகிய தால் மனங்கலங்கி கண்ணீர் சொரிந்து உன் மத்தனாய் நிற்கும்போது சூலாயுதம் குருவிந்தனின் சிறத்தை யறுத்துத்தள்ளி ஆங்குள்ள

நதியிற்றேய்ந்து அம்புருத் தோணியிற் புகுந்தது. சாரதியும் பட்டொழிந்தான். ரதமும் அச்சுவேருக துகள் துகளாயிற்று. இதைப் பார்த்த சைனியங்கள் பரிதாபமான கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்.

தேசாதிபதி நாடகம். A விருத்தம்.

சங்குசிங்கக் கொடிபடைத்த சமையநராதிபர்கள்
சத்துருவை ஜெயித்து வெற்றிகொண்ட பலத்தால்
பங்கையர்மால் பரிவுமுமை தனைமறந்துதற்க்கம்
பண்ணும் கூர்ஜரதேச மங்கையரை சிரைகொண்டழித்து
மங்குல்பொழியதேசங் கொடிதனை நாட்டி வெற்றிமுதல்
வாகை யணிந்தரசு புரிந்தோன்ன லரைஜெயித்துத்
தங்கிருந்தார் சிலநாளதன்மேல் கச்சிதனில் நடந்த
தரிவிப்பே னெனமுனி வரறைகு வாரே.

விரதவீரியன் போஜகனுக்கு கூர்ஜ்ஜர தேசத்தை முடி சூட்டல்.

மும்முடி விரதவீரியன் தமது 24கு மனையார்களுடனும் சேனை சைனியங்களுடனும் உதவியாக வந்தவேற்றரசர்களுடனும் ஜெயசங்கு தாரை எக்காளம் பேரிகை முதலிய வாத்தியங்களுடனும் மிகுந்த ஆரவாரத்துடன்†கூர்ஜர தேசத்துக்குட்புகுந்து சிங்கக்கொடி அநுமந்தக்கொடி நாட்டி அவ்வரச ஸ்ரீகளை சிறைபிடித்து தமது பாட்டன்வகையில்வந்த சித்திரவல்லியின் புத்திரனுகிய போஜகனுக்கு யாவருஞ் சேர்ந்து முடிசூட்டினர்கள். வேற்றரசர்கள் சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் நகரங்களுக்குச் சென்றூர்கள். மும்முடி விரதவீரியனும் 24கு மனையார்கள் தங்கள் மனைவி மக்களையும் ஸ்ரீ சாதுகாமாக்ஷியம்மனையும் மறந்து லீலாவினோதம் புரிந்து அவ்விடத்தில் நான்கு மாதம் தங்கி காலங்கழித்து வந்தார்கள்.

† கூர்ஜ்ஜரம் மேலச்சமுத்திரத்திற் கருகிலுள்ள நாடு.

24கு மனையரசர்களின் குமாரர்கள் தந்தையர்களைப்பற்றி தாய்மார்களை வினவுதல்

இது இவ்வாறிருக்க காஞ்சிமா நகரத்திலிருக்கும் 24 மனை அரச புத்திரர்களெவருந் தங்கள் தாய்களைப் பார்த்து தந்தயர்களை காணாத காரணம் என்னை? அவர்கள் யாங்குற்றனர்கள்? என்று வினவியதாலவர்களின் மனங் கசிந்து வருந்தி குழந்தைகாள்! உங்கள் தந்தையர்கள் கூர்ஜ்ஜர் தேசாதிபதியாகிய குருவிந்தன் என்னுமரசன் தமது சைனியங்களுடன் வந்து யுத்தத்துக்கழைத்ததை முன்னிட்டு சைனியங்களைத் திரட்டிக்கொண்டு போர்புரியச் சென்றார். இதுகாறும் வந்தார்களில்லை. அவர்களின் விருத்தாந்தங்கள் ஒன்றுந் தெரிந்தில எனக்கூறி யதைக்கேட்ட புத்திரர்கள் அவர்களைத் தருவிக்கும் மார்க்கம் எதுவோ அதைக்கூறினால் செய்யத் தடையில்லை என்றார்கள். புத்திரர்களைப்பார்த்து ராஜபத்தினிகள் குழந்தைகளே! நமது குலதேவியாகிய ஸ்ரீ சொர்ன்ன சாது காமாக்ஷியம்மன் நூற்ற நோன்பாகிய கௌரீ விரதத்தை யனுஷ்டித்தால் அவ்வம்மையாரின் அனுகிரகத்தாலவர்கள் துரிதமாய் வந்து சேருவார்கள். அவ்விரதமனுஷ்டிக்க நீங்கள் சிறவர்களாயிருக்கிறீர்கள். ஆயினும் நீங்கள் கம்பாநதிக்கரையில் ஐப்பசிமீ அமாவாசையில் அன்ன பானாதிகளுட்கொள்ளாமல் பச்சைப்பந்தலிட்டு கரும்புகமுகு முதலிய நட்டு பசியமண்ணினாலுமா பிராட்டியாரை யமைத்து கலசமும் ஸ்தாபித்து பட்டாடைகளுடுத்தி பலவித புஷ்பங்களினாலர்ச்சித்து பட்டு நூலினால்நூற்றிருபத்திரண்டு தினங்களுக்கும் இருபத்திரெண்டு முடிகளிட்டு ஷை கலசத்திலிட்டு தினசரி பூசை நைவேத்தியஞ்செய்து அனுஷ்டித்து 22-வது நாள் பூர்த்திசெய்து மறுநாளுதயத்தில் சிற்றுண்டி அருசுவை பதார்த்தத்துடன் அடியவர்களுக்குதவி, புசித்தல் வேண்டுமென்று கூறினார்கள். இதைக்கேட்ட சிறுவர்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்களையும் ஆட்களையும் அழைத்துக்கொண்டு கம்பாநதிக்குக் சென்று பூசை நைவேத்தியங்களைச் செய்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் கூர்ஜர தேசத்திலிருந்த மும்முடி விரதவீரிய மகாராஜனும்மற்றுமுள்ள 24கு மனையார்களும் தங்கள் சேனைகளுடன் 4 மாதங்கள் கழித்து திரும்பி வரும்போது கம்பாநதிக்கரையில் குழுமி யிருக்குங் கூட்டத்தைப்பார்த்து சந்தேகித்து அருகிற்சென்று பார்க்க தங்கள் புத்திரர்கள் என்று அறிந்து சந்தோஷத்துடன் அவர்களோடு தாங்களும் விரதமனுஷ்டித்து நோன்பு நூற்று தரித்துக்கொண்டு உண்டி முதலியவைகளை உண்டு ஆனந்தத்துடன் உலாவி தங்கள் சேனைகளைப் பார்த்து வரும்போது, மும்முடி விரதவீரியனின் பட்டத்து அஸ்வத்தைக் காணாமற் போகவே வருத்த முற்று நாலாபக்கங்களிலுந்தேட ஆரம்பித்தார்கள்.

பட்டத்து குதிரை அலங்கோலமாக கச்சிக்கு வருதல்.

கச்சியிலிருக்கும் 24கு மணியார்களின் பத்தினிகள் தங்கள் புருஷர்கள் குருவிந்தனுடன் யுத்தத்திற்கு கூர்ஜர தேசஞ் சென்று 4 மாதங்களாகியும் வரவில்லையே, என்னவிபத்து நேர்ந்ததோ ஒன்று மறியக்கூடவில்லை. புத்திரர்கள் நோன்புநூற்கப்போய் ஒரு மாதம் ஆகப்போகிறதே அவர்களும் வரவில்லை என்ன செய்வோம் என்று, மனங்கலங்கி வருத்த முற்றிருக்கும்போது பட்டத்து அஸ்வம் மிகுந்த பரிதாபகரத்துடன் வந்துற்றதைப் பார்த்ததும் ஓஎன்ன விபரீதம் நேர்ந்ததோ வென்று மார்பிலடித்து வாய்விட்டு புலம்ப ஆரம்பித்தார்கள்.

புருஷர்களையும் புத்திரர்களையும் ராஜஸ்ரீகள் காணாது புலம்பல்.

சந்தவிருத்தம்.

பிருதிவீச வம்ஸ தீரனு யுதித்து மிககீர்த்தி பெற்ற பெரியோய்
கருமேனி பெற்ற அந்தகா சுரனை கடிதாய்க் கடிந்த புகழோய்
அருளான காஞ்சி திரளாக வந்து அன்பாய் துதித்து மகிழ்ந்தோய்
திருமேனி பெற்ற காமாக்ஷி யருளை திரமாக கொண்ட நிதியோய்.

காமாக்ஷி யம்மன் அருளாஞ்ஞை பெற்று கலைக்கோட்டு முனிவ ரோடு
பாமாலை யேத்தும் பலவாய ரிஷிகள் பண்பாக ஒருங்கு கூடி
தாமாக சிருங்கி தனியாகஞ் செய்த தவத்தா லுதித்த அரசே
ஏமாந்த எங்கள் பரிதாப நிலையை யிசைப்பாரு மியாரு முளரோ.

உலகோர்க்கு துன்பம் விளைவித் தரக்கர் உடல் நடுங்கி யோடி மறைய
பலமா யெதிர்த்து புவியோரைக் காத்த பகர்கீர்த்தி யுற்ற கோவே
நிலமீது அறுநாலு மனைசூழ கச்சியை நீளரசு புரிந்த தூயோன்
கலங்காது கவிக்கு பலதானம் புரியுங் கனிவான மன்ன முறையோ.

புவியோர்க் குதவி புரிமாறு வணிகம் புரிந்திட வந்த தீரா
தவிசாகு சோழ னாட்டிற்கு சென்று தகுபல்ல வனை ஜெயித்து
கவிபோற்ற விருதுகள் பலபெற்ற திண்தோளர் புகழ்ராஜ ஈது முறையோ
புவி பெண்ணைகேட்ட சோழனுக் கிசைந்து பொற்பாவை யீந்த குலத்தோய்.

நன்மக்கள் போற்ற நிலைசத்ய மோங்கி நடுநின்ற யாக க்ஷத்திரிய
கன்மனக் கூர்ஜர வல்லவ ராயனைக் கடிந் திட்ட வீரதீரர்
நன்மலை நாடன் புகழ் சேரனைக் கொன்று மகளாக உள்ளசெல்வி
கன்னி சிரோன் மணிக்கு முடிதானளித்து கனசீர்த்தி யுற்ற வழகோய்.

சிலையேந்துங்கையன்தென்னாடனுக்குத்தெரித்திட்டசிரத்தையுடையோய்
அலைபோல பரி வருமாறி வந்த விபரீத மென்கோ லுணரோம்
கலைவுற்ற மனதைக் கலங்கிடச் செய்தது கனமான முறை யீதோ
நிலையற்ற வாழ்வு யெனவே துணிந்து நீத்தேகல் தரும முறையோ.

என்றிவ்விதமாகப் புலம்பி ஒருவாறு துணிந்து நாம் இனி உயிருட னிருத்தலடாது. ஒருக்கால் மாற்றலர்கள் நம்மைச் சிறை பிடிப்பினும் பிடிப்பார்கள். ஆகையினால் தங்கள் தோழிகளை அழைத்து இக்கணமே நமது ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் சந்நதியில் அக்னிக்குண்டம் வளர்த்தும்படி உத்திரவிட்டார்கள்.



அரச ஸ்ரீகள் அக்கினிப் பிரவேசமாதல்.

தோழியர்கள் எவ்வளவு கூறியும் பயன் படாமையினால் விசன முற்று அக்கினிவளர்த்தார்கள். 24குமனையார்களின் பத்தினிகளும் மற்றவர்களும் பட்டத்தரசியைச் சூழ்ந்துக்கொண்டு சந்நதிக்குச்

சென்று விபூதி முதலியவை தரித்து பட்டுடைகளை யணிந்து ஆலயத்தை மூன்று முறை சுற்றி காமாக்ஷி அம்மனை துதித்துக் கொண்டு தாயே, கானக பூசைக்குச் சென்ற எங்கள் புத்திரர்களைகாண்கிலோம். நாங்கள் எங்கள் நாயகர்களை அடைகின்றோம் என்று கூறிக் கொண்டே ஹக்னியிற் பிரவேசித்தார்கள். இதைக்கண்ட குடிகள் மிகுந்த துக்கத்தி லாழ்ந்தி வருந்தினர்கள்.

விரதவீரியன் முதலானவர்கள் அஸ்வத்தை தேடியுங் காணமையினல் மிக்க வருத்த முற்று நாம் கவனியாம லிருந்ததினல் ஒருக்கால் அலங்கோலமாக அஸ்வம் நமது கச்சிக்குச் சென்றிருத்தல் கூடும். அங்ஙனமாயின் நாம் நம்மனைவி மார்களுக்குக் கூறி வந்த பிரகாரம் என்னநேரிட்டதோ, யாது சம்பவித்ததோ ஒன்றுந் தெரியவில்லையே என்று பலவிதமான எண்ணங்களும் கவலைகளுங் கொண்டு தமது மனையார்களில் ஒருவராகிய சுப்ரதீகரரின் மைந்தரை விளித்து கச்சிக்குச் சென்று ஆங்கு என்ன விசேடமென்பதையும் அஸ்வம் வந்துவிட்ட விபரங்களுமறிந்து வரும்படி ஆக்ஞாபித்தார்கள்.

சுப்ரதீகரன் குமாரன் அஸ்வத்தின்மேலேறி கச்சிக்கு செல்லுதல்.

அவ்விதமே வெகு துரிதமாய்ச் செல்லும் பரியின் பேரிலாரோ கணித்து கச்சி நகர் புகுந்தான் அச்சமயம் கச்சிநகர் அலங்காரமற்று குடிகள் யாவர்களும் துக்கசாகரத்தில் மூழ்கியும் வியாபாரஞ் செய்யும் ஆவண வீதிகளிலிருக்கும் கடைகளெல்லாம் மூடப்பட்டு மிருப்பதைப் பார்த்துக்கொண்டே அரன்மனை புகுந்தனன். இவரைப் பார்த்த தோழிகள் ஓ வென்றலறி ஓலமிட்டழுது ஓ சுப்பரதீகரரே இது யென்ன அனியாயம் நீங்கள் யுத்தத்துக்குச் சென்றது முதலிது துகாரும் தகவல் ஒன்றும் அனுப்பவில்லை. ஆனல் தங்களது பட்

டத்த குதிரையானது தங்களது கட்டளைப் பிரகாரம் அலங்கோல மாக வந்ததைப்பார்த்த பட்டத்தரசிகளும் மற்றவர்களும் அழுது புரண்டு இனி உயிர்தரியோம் என்று ஏகமனதாய் தீர்மானித்து தமது குலதெய்வமாகிய ஸ்ரீ சாது காமாக்ஷியம்மன் சன்னதி முன் னிலையில் ஹக்னி வளர்த்தி ஹக்னியில் பிரவேசித்தார்கள். யாங்கள் எவ்வளவு கூறியும் பயன்படவில்லை எனக் கூறி யதைக் கேட்டு, அவ்விடமிருந்து புறப்பட்டுசென்னதி யடைந்து பார்க்கும் போது அம்மன் முகம் மாருதலடைந் திருப்பதையும் ஹிக்னிகுண்டம் தணிந்திருப்பதையும் மஞ்சள் குங்குமம், விபூதி வேப்பிலை முதலியவைகள் சிதருண்டிருப்பதையும் பார்த்து மனங்கலங்கி வருந்தி அஸ்வத்திலேறி வெகு துரிதமாக வனஞ் சென்று விரதவீரியன் முதலியவர்களைக்கண்டு தான் கச்சிக்கு சென்றதும் அவ்விடத்தில்கண்ட விவரங்களும்விடாமல் கூறிவருத்த முற்ருன். இவைகளைக்கேட்ட 24கு மனையார்கள் வருத்தமடைந்து தங்கள் தங்கள் அஸ்வங்களில் ஏறிக்கொண்டு கச்சி நகருக்கு வந்த னர். ஒவ்வொருவரும் துக்கத்தில் மூழ்கி துயருற்றிருத்தலை யுங்கண்டு தங்கள் அரன்மனைக்குச் சென்ருர்கள். இவர்களை பார்த்த தோழிகளும் பயந்து துக்கசாகரத்தில் மூழ்கி ஒதுங்கி இருத்தலை யும் பார்த்து இவைகள் யாவும் நமது குலத்தாயாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் திருவிளையாடலென்று தேர்ந்து யாவரும் அம் மன் சந்நதியடைந்து நீராடி விபூதி தரித்து ஆலயத்தை மும்முறை வலம்வந்து அம்மணி, மகாதேவி இவைகள் யாவும் தங்களது திருவி ளையாட்டாகவே யிருத்தல் வேண்டும். எங்கள் உயிர்க்குயிராய் யிருந்த பத்தினிகள் இறந்தபின் நாங்கள் ஜீவித்திருப்பது தருமமன்று உற் றதை உறைக்கவும், இல்லையேல் இதோ எங்கள்சிரங்களை தங்கள் திரு வடி பாததாமரைக்கு அர்ப்பணஞ் செய்கின்றோம் என்று உடை வாளைக்கையிலெடுத்தார்கள் இதைப்பார்த்த ஸ்ரீ காமாக்ஷியம்மையார் ஈதேது விபரீதமாய் இருக்கிறது. இவர்களும் அவ்வாறே தங்கள் உயிரைபலியிடுவார்கள் சிறிதும் அஞ்சாதவர்கள். ஆகையால் இவர் களைப் பாதுகார்க்கவேண்டுமெனத் திருவுளங்கொண்டு சிருங்கிமா முனிவனுகிய கலைக்கோட்டு மாரிஷியை வரும்படிநினைத்தார். உடனே கலைக்கோட்டாரும் இவ்விடந் தோன்றி அம்மனை வணங்கி நமஸ்க ரித்து நிற்கையில் அம்மன் அசரீரியாக 64-கலைகளையும் நன்குணர்ந்த கலைக்கோட்டாரே, இதோ உடைவாளை கையிலேந்தி நிற்கும் 24-கு மனையார்களும் எமது உள்ளன்புடைய பக்தர்கள் இவர்களது மனைவி மார்களும் எமது தேவாம்ஸத்திலுதித்தவர்களாவார்கள் இவர்கள் குரு விந்தனை சம்ஹரித்து கூர்ஜ்ஜரதேசத்தை கைபெற்ருர்கள். ஆங்குள்ள ஸ்ரீகளை சிறைப்பிடித்து அவர்களின் கற்பை யழித்து காமநுகர்ச் சியிலீடுபட்டு அறத்தையும் எம்மையும் மறந்து சாமான்ய மானிட வாழ்க்கையிலீடுபட்டார்கள் ஆகையால் இவர்கள் மானிடத்தன்மை

யையுடையவர்களாயிருத்தல் வேண்டுமெனக்கருதி யானேஇவ்விதஞ் செய்தேன். அந்த 24கு மனையார்களின் புத்திரர்கள் கானகம்போய் என்னை பூஜித்தபடியால் அச்சிறுவர்களின் பூஜைக்கு கான மகிழ்ந்து விபூதி கலசநீர் பொற்பிரம்பும் தருகிறேன், எடுத்துக்கொண்டுபோய் அக்னிகுண்டத்திற் புரோக்ஷித்து விபூதியைத்தூவி பொற்பிரம்பால் தட்டினமாத்திரத்தில் யாவரும் உயிர்பெற்று மானுட தன்மையுடன் எழுந்திருப்பார்கள். இவர்கள் பலநாளிருந்து காலவேற்றுமையால் மாறுதலடைந்து எம்மையும் மறந்து ஜீவனோபாயம் பலபுரிந்து கடைசியில் பழையபடி எமது அநுக்கிரகத்தால் மேன்மையான உன்னதபதவியையடைவார்கள் என்று கூறினள்.

கலைக்கோட்டார் எழுப்புவது.

இதைக்கேட்டதும் கலைக்கோட்டார் அங்ஙனமே செய்கிறேனென்று நமஸ்கரித்து நீராடி விபூதி முதலானவைகளை தரித்து தமது பூஜையை முடித்துக்கொண்டு சன்னதியில் விழுந்து நமஸ்கரித்து மும்முறைவலம்வந்து கெங்கையும் விபூதியும் பொற்பிரம்பும் ஏந்தி அக்னிகுண்டத்தருகில்வந்து அம்மனை சிந்தித்து கங்கா ஜலத்தைபுரோக்ஷித்து விபூதியை தெளித்து பொற்பிரம்பாற்றட்டி நின்றனர். உடனே அக்னிகுண்டத்திலிருந்து துயில் நீற்று வந்தவர்கள் போல 24கு மனையார்களின் பத்தினிமார்களும் பெண்மக்களும் எழுந்து கலைக்கோட்டாரை முன்னால் நமஸ்கரித்து தங்கள் தங்கள் நாயகன்மார்களை பின்னால் நமஸ்கரித்து அருகில் நின்றார்கள். நோன்புநோர்க்க கானகஞ் சென்ற மைந்தர்களுமவ்விடம் வந்து தங்கள் தாய் தந்தையர்களை நமஸ்கரித்து நின்றனர், யாவருமொன்றுகூடி அம்மனின் திருவிளையாட்டை வியந்து ஆலயத்தை வலம் வந்து நமஸ்கரித்து துதித்து அரன்மனைக்குச் சென்றார்கள். கலைக்கோட்டாரும் மகிழ்ச்சியுடன் தன் இருப்பிடம் சேர்ந்தார். நகரத்தார்களும், ஆங்கு விஜயம்செய்த வேற்றரசர்களுமிதைப்பார்த்து புளகாங்கிதர்க

ளாகித் தங்கள் தங்களிருப்பிடஞ் சென்று இனிது வாழ்ந்திருந்தார்கள்.

தேண்டமண்டல சதகம்.

சென்னியிற் சென்று துகிலோடு சென்று சிலரழ்ந்தார்
பன்னியிற் சென்றது போலிருந்தார் சிலர் பாங்குடனே
பொன்னியிற் சென்று கரை யேறினாரைப் புணர்ந்தன்று
*வன்னியிற் சென்று கரை யேறினார் தொண்ட மண்டலமே

இப்பால் விரதவீரியனும் அவனுக்குப்பின் அவனது சந்ததிகளும் பந்துவர்க்கங்களும் பரம்பரையாய் அரசாண்டு வந்தார்கள்.

போஜ மகாராஜன்.

பிருதிவீச்சுர போஜகனுடைய வம்ஸத்தில் சாத்துவதன் குமாரனாகப் பிறந்து வளர்ந்து வருங்காலத்தில் தந்தையிறந்தனன். சிறிய தந்தையாகிய முஞ்சன் விதர்ப்ப தேசத்தை அரசாட்சி செய்கையில் சிறிய தந்தையுடன் அரசாட்சியில் கொலுவிருக்கையில் ஒரு ஜோதிடன் இக்குமாரனாகிய போஜனைப் பார்த்து இவன் மகா புகழுடன் அரசாளுவான் என, அதைக்கேட்டு முஞ்சன் சகியாது கொலையாளிகளை யழைத்து அண்ணன் பிள்ளையைக் கொலைபுரிய வுத்திரவிட்டனன். கொலையாளிகள் அவ்வகை கொலைக்களத்திற்குப் பிள்ளையை யழைத்துச் செல்லுகையில் குமரன் “மாந்தாதா சமஹீபதி: கிருதயுகாலங்கார பூதோகத: ஸேதுர்யேன மஹோத தௌவிரசித: க்வா

* குறிப்புரை வன்னியிற் சென்று கரையேறினார் என்பது இருபத்துநான்கு மனையார்களின் மனைவியர்கள் அக்கினியிற்குளிர்த் தெழுந்ததென்க.

ஸௌத சாஸ்யாந்தக அந்யேசாபி யுதிஷ்டிரப்ர புருதயோயா தாதிவம் பூபதே நைகேனுபி ஸமங்கதா வஸுமதீ நூநம்த்வயா யாஸ்யதி') (மாந்தாதா முதல் இதுவரையி லரசாண்ட சக்கரவர்த்திகள் தாமாண்ட பூமியையுடன் கொண்டு போனரில்லை) எனுங் கருத்த டங்கிய மேற்படி செய்யுளை யெழுதி அக்கொலையாளிகளிடம் கொடுத் தனுப்ப, அவ்வகை கொலையாளிகள் அதை அரசனுக்குக் காட்டினர். அரசன் கொலையாளிகளை யழைத்துப் பிள்ளையைக் கொலைபுரியாது கொண்டு வரச்செய்து அவனுக்குப் பட்டம் அளித்துத் தான் துறவு பூண்டான். இப்போஜன் சகல சாம்பிராஜ்யங்களையும் அனுபவித்து, மகா கவியாகிய காளிதாஸனுடன் நண்பு பூண்டிருந்தனன். இவன் பத்தாவது நூற்றூண்டிலிருந்ததாகப் பிரசித்து இவன் தன் சபைக் கண், கவிரத்னங்கள் பலரைப்பெற்று ஆனந்தித்து வந்தானுயினும், அவர்களில் காளிதாசன் பவபூதிதண்டியே சிறந்தவராயினர். இம் மூவருள்ளுங் காளிதாசனே சிறந்தவனுயினன். இக்காளிதாசனை நான்குமுறை இவனுடனிருந்தபுலவர்கள் சூழ்ச்சியால் அரசன் பிரிய நேரிடினுங் கடையில் போஜன் காளிதாசனிருந்த ஊர்க்கண் வேற்று ருக் கொண்டடைந்து போஜனிறந்தன னெனக்கூறக் காளிதாசன் யெண்ணி விசனமடைந்து சரமகவிகூறப் போஜன் மரணமூர்ச்சை யடையக் காளிதாசன் அரசனென வறிந்து கவியை மாற்றிப்பாடி யுயிர்ப்பிக்கக் களித்து நகரமடைந்து சந்தோஷத்துடன் பல நாள் புலவனுடன் இனி திருந்தனன். இவன் 1010—1055 வரையில் அரசாண்டவன். இவன்தான் பிரசித்திப்பெற்ற மகாபோஜன் போஜ வம்ஸதலைவன் மகா தர்மி இந்த ராஜ்ஜியத்தை கில்ஜி மகம்மது கீழ் படுத்தினன்.

பிரதாப ருத்திரன் அரசாக்ஷி.

யாக க்ஷத்திரியகுல சித்திர தேவன் புத்திரனை பிரதாபனு டைய சந்ததியில் வந்த பிரதாபருத்திரன் 1161ம் வருஷத்துக்கு

சிறிது முன்னும் 12வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் தொடங்கி வாரங்கலே ஆந்திர தக்காண ராஜ்ஜியத்துக்குத் தலைநகரமாகக்கொண்டு அரசு புரிந்து வந்தான். இவர் கலிங்கம் ஒரிசா முதலியவைகளே ஜெயித்து பிரபலமாக சில வருஷங்களாக பரிபாலனஞ் செய்து வந்தார்.

இராமாயணம் 6-வது யுத்தகாண்டம் 16-வது கும்பகர்னன் வதைப்படலம்.

குலோத்துங்கன் கி. பி. 1132—முதல் 1162 வரை சோழ நாடு ஆண்டதாகக் கூறுகின்றதாலும் ஷை 1வது பிரதாபருத்திரன் கி. பி. 1162க்குச்சிறிது முன்தொடங்கி 1197க்குச்சிறிது பின்வரையில் ஓரங்கல் நாட்டை பரிபாலித்தானென்று தெரிகிறதாலும் இவ்விரு அரசர்களின் சபைகளிலும் விளங்கிய கம்பர் காலமும் அதுவே என்பர் சரித்திர அறிஞர் என்று கூறுகிறது.

சோழ நாடு-பக்-13-ல்.

கம்பர் சோழனிடம் விரோதங்கொண்டு ஷை 1வது தெலுங்கரசனுகிய பிரதாப ருத்திரனிடம் சென்று சிலகாலம் வசித்திருந்து பின்னர் சடையப்ப முதலியாரின் ஆதரவில் வளர்ந்து கவி வன்மையடைந்திருந்தார். அப்பொழுது அவருக்கு வயது 15க்கு மேலில்லை இவர்ஒட்டக்கூத்தருக்கு இளையவர். இவரதுகல்வியின் சிறப்பை பிறரால் கேள்விப்பட்ட குமார குலோத்துங்கன் தன் ஆஸ்தான பண்டிதர்களில் அவரை ஒருவராகச் சேர்த்துக்கொண்டான். கம்பரோ அச்சபை புலவர்கள் யாவரிலும் மிகவும் பெருமையோடு விளங்கினர் என்று கூறுகிறது.

ருத்திரம்மா அரசாக்ஷி.

இவருக்குப் பிறகு இவரது புத்திரியாகிய ருத்திரம்மா என்னும் பெண், குடிகளிடத்தில் மிகுந்த தயை, தாக்ஷண்யம், காருண்யம் முதலியவை களுடன் 40 வருஷங்கள் அரசு புரிந்தாள். இந்திய ஸ்ரீகளில் இந்த ருத்திரம்மா யாவராலும் போற்றப் பட்டு பிரசித்தியுற்றிருந்தாள். இவள் தன்னுடைய பேரனை இரண்டாவது பிரதாப ருத்திரன் பொருட்டாக அரசாட்சியை விட்டு நீங்கினாள். இரண்டாவது பிரதாப ருத்திரன் ஆளுகையில் அலாவுதீனுடைய தளகர்த்தா வாகிய மலிகாபூர் வாரங்கலை கைப்பற்றி டில்லி நவாப்புக்கு ஐக்கிய மாக்கினான். கல்ஜி பரம்பரை போய் துக்கல் பரம்பரை வந்ததும் ௸ 2-வது பிரதாப ருத்திரன் தக்காணத்திலுள்ளவர்களைக் கூட்டிக்கொண்டு டில்லி சுல்தானுக்கு விரோதமாக கலகம் செய்தார்கள். சுல்தான் பலாஷ்டிகமான சேனைத் திரள்களை 1197ஹூ அனுப்பி வாரங்கலை கைப்பற்றிய தல்லாமல் பிரதாப ருத்திரனையும் சிறை பிடித்தார்கள். இது விஷயங்கள் நமது இந்து சரித்திர மூலமாகக் காணலாம்.

இது நடந்த சில வருஷங்களுக்குப் பிறகு மக்கடவ சுப்ரதிகரன் பரம்பரையில் வந்த ஹரிஹர ராயர், புக்கா ராயர் என்னு மிரு சகோதர்கள் வாரங்கலைக் கைப்பற்றி ஆந்திர ராஜ்ஜியத்தின் தலை நகரமாகக் கொண்டு அரசு புரிந்து வந்தார்கள். இதை யறிந்த முகம்மது துக்ளக் 1323 வருஷத்தில் வாரங்கலை கைப்பற்றினான். உடனே ஹரிஹர ராயரும் புக்கா ராயரும் மறைந்து துவார சமுத்திரஞ் சென்று கன்னட அரசனிடஞ் சேர்ந்தார்கள். சிறிது நாட்களுக்குப் பின் துக்ளக் சேனையுடன் சென்று துவார சமுத்திரத்தைக் கொள்ளை யடித்தான்.

ஹரிஹரராயர் புக்காராயர்.

இப்பால ஹரிஹர ராயர், புக்கா ராயர் துங்க பத்திரையின் வடகரையிலுள்ள ஆன குந்தி என்னும் கோட்டையில் நிலைத்து

சேனைகளைச் சேர்த்து முகம்மதியர் களைத் தென்னிந்தியாவில் நுழையாதபடி தடுக்க முயன்றார்கள். 1343-ம் வருஷத்தில் துங்கபத்திரை நதியின் தென்கரையில் ஒரு பெரிய நகரத்தைக் கட்டி முடித்தார். அதுவே விஜயநகரம். ஆந்திர ராஜ்ஜியத்துக்கு இதுவே தலை நகரமாய் விளங்கிற்று. விஜயநகரம் எப்பொழுதும் ஜெயம் பெறும் நகரமாயிற்று.

இவர்கள் விஜயநகரத்தை யரசாண்டு வருங்காலத்தில் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய தாகவும் தெரிகிறது. "இந்த பாண்டியர்கள் நெடுங்காலம் மதுரையை யரசு புரிந்தார்கள். சுமார் 600 வருஷங்களுக்கு முன், கி.பி. 1311-ல் பராக்கிரம பாண்டியன் ஆண்டிருந்தான். மூலிக்பார் என்னும் முகம்மதியர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினர். இவர்கள் நெடுங்காலமு மாளவில்லை.

விஜயநகர ராஜ்ஜியத்தை ஸ்தாபித்த ஹரிஹர ராயர் புக்கா ராயர் என்ற இரண்டு சகோதரர்கள் வெகு சீக்கிரத்தில் ராஜியத்தைப் பெருக்கினர். 200 வருஷம் நிலை நின்றது. இவர்கள் பாண்டிய நாட்டின் தலை நகரமான மதுரையை ஆண்டுக் கொண் டிருந்த மகம்மதியரை ஜெயித்து துரத்தினர்கள். பாண்டிய தேசம் சோழ தேச முழுவது மிவர்களுடைய ஆளுகையில் வந்தன. கல்வியில் அதிக தேர்ச்சியுள்ள வரும் ஈஸ்வர பக்தியுள்ள வருமான மாதவ வித்யாரண்யரும், சயனசாரும் விஜயநகரத்தில் பிரபல மந்திரியாக இருந்தார்கள். பாண்டிய ராஜாக்களுக்கும் இலங்கை ராஜாக்களுக்கும் அடிக்கடி யுத்தங்கள நடப்பதுண்டு. கி-பி, 1166-ல் இலங்கை யரசனுகிய பராக்கிரமபாகு என்பவன் பாண்டியன் மீது படை யெடுத்து வந்தான். பிந்திய பாண்டியர்களில் கி. பி. 1251ல் இருந்து 1271 வரையில் ஆண்ட ஜடாவர்மன், சந்திர பாண்டியன் என்பவர் காலத்தில் பாண்டிய ராஜ்ஜியம் நெல்லூரி லிருந்து † கன்னியாகுமரி பரியந்தம் பரவி யிருந்தது. சில வருஷங்களுக்குப் பிறகு பாண்டியராஜ்ஜியம் விஜய நகரத்துடன் சேர்ந்தது.

தென்னுட்டின் கலகம்.

விஜயநகர சமஸ்தானத்தில் தளவாய் - அரியநாத முதலியார் மந்திரியாக இருந்த காலத்தில் தென்னுட்டில் சோழ பாண்டியர்களுக்குள் கலகம் ஏற்பட்டது. அவர்கள் விவாதத்தைத் தீர்க்க தளகர்த்தர் விசுவநாத நாயக்கரோடு மந்திரி அரியநாத முதலியாரையும் விஜயநகர மகா ராஜா அனுப்பி வைத்தார். அரியநாத

† பரசுராமர்மலையாள க்ஷேத்திரம் உண்டு பண்ணும்பொழுது அவர் சிவ சத்தியைதாபித்துப் பூசித்தனர் அந்த சத்தி சிவமூர்த்தியை திருமணஞ் செய்துகொள்ள தவம் புரிந்தனள். அவர் சத்தியை மணந்துக் கொள்ளாததால என்றுங் கன்னியாகவே யெழுந்தருளியிருக்குந்தல மென்று அபிதான சிந்தாமணி கூறுகிறது.

முதலியார் சோழ பாண்டியர்க்குள் ஏற்பட்ட விவாதங்களைத் தீர்த்து பாண்டிய நாட்டாரின் வேண்டுகோளின்படி விசுவநாதநாய்க்கரையும் பாண்டிய நாட்டுக்கு அரச ராக்கினர்.

அப்போது சேனவீரர்கள் சிலரும் கலகக்காரர் பலரும் சேர்ந்து ஜனங்களுக்குப் பலவித துன்பங்கள் செய்துவந்தனர். அச்சமயம் அக்கலகக்காரர்களை அடக்கிப் பாண்டியநாட்டை 72 பாகங்களாகப் பிறித்து, அவைகளுக்குப் பாளையப் பட்டு என்று பெயரிட்டார் ஒவ்வொரு கலகத்தலைவனுக்கும் பாளையக்காரன் என்னும் பட்டமளித்து அவனை அப்பாளையப்பட்டுக்குத் தலைவனக்கினன். அந்த 72 பாளையக்காரர்களும் பாண்டிய நாட்டிற்குச் சிற்றரசர்களாய் மதுரையில் வசிக்கும் விஸ்வநாத நாயகருக்கு அடங்கி நடக்க வேண்டிய தென்று ஏற்பாடு செய்தார். இதனல் நாட்டில் கலகம் ஒழிந்துக்ஷேமம் உண்டாயிற்று. பாளையக்காரர்களெல்லாரும் அரியநாத முதலியாரைத் தங்கள் குலதெய்வமாக அன்று முதல் பூசித்து வந்தார்கள் என்று இந்து சரித்திர கதையும், பாலர் இந்து தேச சரித்திரமுங் கூறுகின்றது.

பிரபுட தேவராயர்.

சில நூற்றுண்டுகளுக்குப் பிறகு சித்திர வாகனன் புதல்வனை போஜகனுடைய சந்ததியில் வந்த பிரபுடதேவ ராயன் விஜய நகரத்தை யாண்டுவந்தான். இவன் முதிர்ந்த சிவபக்தன் சில முதியோர்கள் திருக்காளத்தியைப் பற்றிக் கூறியதைக் கேட்டதும் மனம் லகித்து திருக்காளத்தியை யடைந்து சிவமூர்த்தியை சேவித்து நூறுகால் மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்வித்தான். சிவமூர்த்தி இவருக்கு சொப்பனஞ் சாதித்தபடி திருவண்ணமலை சென்று அருணகிரிநாதரைக்கண்டு பணிந்து அவரால் கந்த மூர்த்தியைப் பிரத்தியக்ஷமாய் சேவித்து திவ்விய வொளியால் கண்மயக்கடைந்து, அருணகிரியாரால் கண் பெற்றவன் இவருக்கு பிறகு இவன் சந்ததியில் வந்த பலர் ஆண்டு வந்தார்கள். பிறகு நரசுராஜு ஆண்டுவந்தார். இவருக்கு பிறகு மூத்த மகனகிய வீரநரசிம்மராஜு அரசு புரிந்து வந்தார். இவர் கிருஷ்ணதேவராயருடைய அண்ணன். இவர் அரசு புரியுங்காலத்தில் தனக்கு பின் தன் பிள்ளையாகிய திம்மராஜுபட்டத்துக்கு வரவேண்டுமென்று ஆசைபிறந்து, தன் தம்பி கிருஷ்ணதேவராயரை கொன்றுவிட எண்ணி, மந்திரி திம்மரசை யழைத்து; என் தம்பியின் கண்ணைப்பிடுங்கிவிடுமென்று உத்திரவிட்டான். திம்மரசு புத்திமானனபடியால் ஓர் ஆட்டின் கண்ணைப்பிடுங்கி அதோ உன் தம்பியின் கண்ணை பிடுங்கி விட்டேன் என்றுன். அரசன் அதை நம்பினன்.

கிருஷ்ண தேவராயர் பாரி சின்னாதேவி.

கிருஷண தேவராயர் உயிர்தப்பி அண்ணன் சாகும் வரையில் மறைவாக விருந்து, அண்ணனுக்குப்பின் இவர்களின் பிரதிநிதியாக யிருந்து சந்திரகிரியையாண்ட நரசிம்மராயர் உதவியாலும், திம்மரசின் உதவியாலும் சிம்மாசனமேறினார். ஆபத்தில் உதவிய திம்மமரசை அவர் மறக்கவில்லை. திம்மரசின் சொர்ப்படி அவர் நடப்பது வழக்கம். நகமுஞ்ச தையும்போ லிருந்தார்கள். திம்மரசை அவர் அப்பாஜி என்று கூப்பிடுவது வழக்கம். இவ்விருவருமே ராயர் அப்பாஜீ. இவர் விஜயநகரத்தின் இரண்டாவதுவமிசத்திலேபெருங்கியாதிபடைத்தவர். இவர் 1509ஸு முதல் இருபது வருஷங்கள் ஆண்டார். அப்போது பாமினி ராஜ்ஜியம் 5 பிரிவாக விருந்தது. அந்த ஐந்து முகம்மதிய வரசர்களும் ஒன்று சேர்ந்து அடிக்கடி விஜய நகரத் தரசருடன் போர் புரிவார்கள். கிருஷ்ண தேவராயர் அவர்களை வென்று தமது இராஜ்ஜியத்தைப் பரப்பி அதிகாரத்தைப் பெருக்கினார். அரசாங்க கடமைகளையும் வெற்றிக்கு ஏற்ற முறைகளையும் அவர் ஒன்னரை வருஷங்கள் ஆலோசித்து நெல்லூர் ஜில்லாவிலுள்ள உதயகிரி முதலிய ஊர்களை எளிதில் கைப்பற்றினார். இஸ்மேல் ஆதில் ஷாவிட மிருந்து ராயச்சூர் முதுகல் கோட்டையை மீட்க அவர் செய்த யுத்தம் மிக பிரசித்தி பெற்றது. பீஜப் பூரும் சிலது காலம் அவர் வச மிருந்தது. குல்பர்கா கோட்டையையும் அவர் கைப்பற்றி இடித்துத் தள்ளினார். அவரது இராச்சியத்தில் இப்பொழுது சென்னை இராஜதானியா யுள்ள பாகமும் தக்ஷிணத்திலுள்ள மைசூர் முதலிய சுதேச ராச்சியங்களும் அடங்கி யிருந்தன.

கல்வி கேள்விகளில் சிறந்து பக்தியில் மேம்பட்டு குடிகளின் நலனைக் கோரி அவர்களை நீதியோடு ஆண்டு வீரம் நிறைந்து விளங்கிய அவ்வெற்றி வேந்தர் தென்னிந்திய அரசர்களுக் கிடையில்

ஒப்புயர் வற்ற மாணிக்கம் போல் விளங்கினர். அவருக்கு இரா ஜாதி இராஜர். இந்திய மன்னர். முக்கடல் களுக்கும் பூமிக்கும் முதல்வர் என்னும் பல பட்டங்களுண்டு. அவர் காலத்தில் விஜய நகர இராச்சியம் பரப்பிற் பெருகி செல்வத்திற் சிறந்து மிக உன்னத நிலையடைந்து புகழோடு திகழ்ந்தது.

காந்தவராயன்-சார்ந்தவராயன்.

செங்கல்பட்டுக்குத் தென் கிழக்கு சுமார் 4 மைல் தூரத்தில் ஒரு பாழான கோட்டையும், திருஞான சம்பந்த ஸ்வாமிகளின் பாடலால் சிறப்புற்ற சிவாலயமுங் கொண்ட திருவிடை யீச்சுர மென்னு மோர் ஊர் இருக்கின்றது. கி. பி. 1509ஹு விஜய நகரத்தின் அரசனாகிய கிருஷ்ண ராயர் காலத்திலே காந்தவராயன், சார்ந்தவராயன் என்னு மிரு அரசர்கள் ஆண்டு வந்தார்கள்.

இவர்கள் வருஷா வருஷம் யாக க்ஷத்திரியஆந்திர கன்னிக்கு கப்பங் கட்டி வந்ததுபோல் கட்டாமல் நிறுத்தவே, ஆந்திர கன்னி யுத்தஞ் செய்து ஜெயித்து கோட்டை முதலானது களை தன் வசப் படுத்திக் கொண்டு ஆண்டு வந்தா ரென்றுந் தெரிய வருகிறது.

விஜய நகரத்தின் வீழ்ச்சி.

கிருஷ்ணதேவராயருக்குபின் விஜயநகர இராச்சியத்தின் மேன்மை குறைந்தது. அவருக்குபின் அரசரான அவர் சகோதரர் வீரமற்றவர். கிருஷ்ணதேவராயர் பாடுபட்டுக்கைப்பற்றிய சில கோட்டைகள் அச்சுதராயர் காலத்தில் முகமத்தியர் கைக்குச்சென்றன. அவருக்குப்பிறகு சதாசிவராயர் என்பவர் ஒப்புக்கு அரசராயிருந்தார். அரசாங்க காரியங்களெல்லாம் இராமராயரென்னும் அவர் மந்திரி கையிலேயே இருந்தன. அவர் திம்மராஜாவின் குமாரர். இராமராயர் பெரிதும் முகம்மதியர்களை வெறுத்தார். அவர்களை அலக்ஷியம் செய்தார். அவமதித்தார். சில முகமத்திய சுல்தான்களுக்கும் அவருக்கும் நடந்த யுத்தங்களில் முகம்மத்தியர்களை மிகவும் கொடுமையாகவும் தாழ்வாகவும் நடத்தினர். அதனல் பாமினி சுல்தான்களெல்லாரும் தாங்கள் ஒன்று சேரவேண்டிய தன் அவசியத்தை உணர்ந்தார்கள் 1565-ல் பீஜபூர், கோல்கொண்டா, ஆமது நகரம், பீதர், இந்நான்கு ராஜ்ஜியங்களின் சுல்தான்களும் ஒன்று சேர்ந்து கிருஷ்ணா நதிக்கு வடக்கே பீஜபூர் இராஜ்ஜியத்திலுள்ள தாலிக் கோட்டை என்னுந் தலைகோட்டையில் சேனைகளைத் திரட்டினர்கள். அவ்விடத்திற்கு சில மைல்களுக்கப்பால் ஒரு கடுமையான போர் நடந்தது. இராமராயரது சேனை மிகப்பெரியது. சுமார் பத்துலக்ஷம் மனிதர்களோடு பலயானைகளும் பீரங்கிகளும் கொண்டது. சுல்தான்கள் அனைவரது சேனைகளும்சேர்ந்து விஜயநகர சேனையில் பாதியே இருந்தன. ஆமதுநகர் சுல்

தான் 600 பீரங்கிகளைக் கொண்டு வந்தார். யுத்தம் கடூரமாக நடந்தது. முதலில் விஜயநகரத்து சேனை வெற்றிபெறும்போல் இருந்தது. ஆனால் ஆமதுநகரத்து சேனாவீரர்கள் பீரங்கிகளில் செப்பு நாணயங்களை பைபையாகப் போட்டுக் கெட்டித்துச் சுட்டுக்கொண்டே யிருந்தார்கள். முகம்மதிய குதிரைவீரர்களும் மிகுந்த பராக்கிரமத்தோடு எதிரிகளைத் தாக்கினார்கள். ஆகவே இந்து சேனைகள் முடிவில் பின்னடைந்தன.

இதன் நடுவில் இராமராயருக்கும் ஆபத்துவந்தது. கிழவராயினும் அவர் சேனையை வெகுசாமர்த்தியமாகச் செலுத்தினர். ஆனால் அவரைப் பல்லக்கில் தூக்கிச்சென்ற ஆட்கள் வெறிபிடித்து வந்த யானை ஒன்றுக்கு அஞ்சிப் பல்லக்கைக் கீழேவைத்துவிட்டு ஓடி விட்டார்கள். இராமராயர் ஆமது நகரத்து சுல்தான் கையில் அகப்பட்டுக் கொண்டார். சுல்தான் உடனே அவர் தலையை வாளால்வெட்டி மேலே உயர்த்திக்காட்டினர். அதைக்கண்ட விஜயநகரத்துச் சேனைகள் பீதியுற்றுச் சிதருண்டு ஓடின. இப்போரில் சுமார் இலக்ஷம் ஹிந்துக்கள் மாண்டனர். விஜயநகரத்து அரச வம்சத்தாரும் ஏராளமான சொத்துக்களை எடுத்துக்கொண்டு நகரை விட்டோடினர்.

விஜயநகரம் முகம்மதியர் கைவசப்பட்டது. விஜய நகரத்தையும் அதிலிருந்த குடிகளையும் காப்பாரிலர். குடிகள் தப்பியோடவும் வண்டிகள் ஊரிலில்லை. எல்லாம் சேனைகளோடு சென்றிருந்தன. சண்டைக்கு மறுநாள் சுற்றுப்பக்கத்துக் காடுகளிலிருந்த குறும்பர் லம்பாடியர் முதலியவர்கள் நகரத்தைக் கொள்ளையிட்டனர். மூன்றும் நாள் முகம்மதியர்கள் நகருக்குள் புகுந்து அதைக் கொள்ளையிட்டு அழிக்கத் தலையிட்டுச் சிறிதும் பரிதாபமின்றி ஜனங்களை வெட்டி வீழ்த்தினார்கள். மாளிகைகளையும், மண்டபங்களையும், ஆலயங்களையும், அரண்மனை முதலியவைகளையும் கோடாரி முதலியவற்றைக் கொண்டு இடித்து வீழ்த்தினார்கள். இக்கொள்ளையில் முகம்மதிய வீரருக்கெல்லாம் திரண்ட செல்வம் கிடைத்தது. விஜயநகரம் அபஜய நகரமாயிற்று. அதன் அழகு அழிந்தது. சிறப்பு சிதைந்தது. அது மீண்டும் மேன்மை அடையவேயில்லை.

அதன் பிறகு சதாசிவராயர் பெனு கொண்டாவில் சில வருஷங்களும் சந்திரகிரியில் சில வருஷங்களும் ஆண்டனர். சந்திரகிரியில் சதாசிவ ராயர் வம்ஸத்தில் ஆண்ட ஸ்ரீரங்கராயர் என்பவரிடமிருந்தே 1639-ல் இங்கிலீஷ் காரர் சென்னையை விலைக்குப் பெற்றனர். விஜய நகர இராஜ்ஜியத்தில் அடங்கியிருந்த நாடுகளுள் வடக்கிலிருந்தவை, பிஜபூர் கோல்கொண்டா சுல்தான் வசமாயின. தெற்கில் மதுரை நாயக்கர்களின் கீழ் ஒரு தனிப்பட்ட ராஜ்ஜியமாய் ஏற்பட்டது.

இப்பொழுது விஜயநகரம் இருந்த இடத்தில் ஹம்பி என்னும் குக்கிராமமிருக்கிறது. அங்கே அழகிய கட்டடங்களிருந்த இடங்

களில் சிதைந்த கற்குவியல்கள் இருக்கின்றன. செல்வம் நிறைந்த செழுங்குடிகள் வாழ்ந்த இடங்களில் துஷ்ட ஜந்துக்கள் வாசஞ் செய்கின்றன.

திம்மராஜன்.

திம்மராஜன் இவன் கி. பி. 1515ல் விஜயநகர சமஸ்தானத்தில் மந்திரியாகயிருந்தவன். விஜயநகரத்தரசன் கட்டளைப்படி செங்கற்பட்டை அரசாண்டவன். இவன் தன் பெயரால் செங்கற்பட்டில் ஒரு குளம் தோண்டுவித்தான். அதற்குத் திம்மராஜா குளம் என்று இன்றும் வழங்கி வருகின்றது.

விஸ்வகர்ம நூலில் ஜெயவீர ராஜுகாரு.

காளிங்கராயன் அரசாண்ட காலத்தில் ஜனங்களை அக்கிரமமாகக் கொள்ளையடித்து அராக்கிரமமாக பட்டங் கட்டிக்கொண்டு அரசாண்டு பிரஜைகளை ஹிம்ஸிப்பதை சாரணர் மூலமாகவும், மற்றவர்கள் மூலமாகவுமறிந்த ஜெயவீர ராஜுகாரு தன்குலத்தவர்களாகிய 24 மனையார்களுடனும், மந்திரி, பிரதானிகளுடனும் அந்தரங்க மந்திராலோசனை புரிந்து தனது ரத கஜ துரக பதாதிகளாகிய சேனை சைனியங்களுடன் போர் கோலங்கொண்டு தன் குலமாதாவாகிய ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மனின் சந்நிதானஞ் சென்று துதித்து நல்வரம் பெற்று வெள்ளோடு சாத்தந்தை குலத்தவனும், ஊற்றுக்குழி ஜமீன்தாரரின் சந்ததியிற் றோன்றியவனுமாகிய காளிங்கராயனுடைய சேனைகளை யதமாக்கி, காளிங்கராயனை கைப்பிடியாகப் பிடித்து, நீ அந்த துர்மார்க்கனான வியாசன் சொற்படி உன் சிறிய தந்தையையுங் கொலைபுரிந்தாய். இதுவுமல்லாமல் அக்கிரமமாக கொள்ளையடித்து பிரஜைகளை ஹிம்ஸித்தாய். ஆனமையின் இராஜ தருமப்படி உன்னைக் கண்டிக்கவேண்டி யிருப்பதினாலிதோ உன் சிரத்தை துண்டிக் கின்றேனென்றுகூறி உடைவாளினால் சிரத்தை துண்டித்தனன். பின்பு பண்புரிச்சோழன் மகளாகிய பால சோழனுக்கு மங்கள வாத்தியத்துட னவ்வூரைப் பட்டங்கட்டி தனக்கு கப்பங்கட்டும்படி யாக்ஞாபித்து தன் குலத்தவர்களுடனும் சைனியங்களுடனும் ஆரவாரத்துடன் கச்சிநகர் வந்து சுகத்துட னரசாண்டு வந்தார்களென்றும்,

பெத்தண்ண ராஜுகாரு.

மற்றோர் காலத்தில் விஸ்வகர்மர்கள் தங்கள் பஞ்ச கிருத்தியஞ் செய்யும் சாமான்களைபெடுத்துக்கொண்டு போவதை யோர்ந்த தரணி மகாராஜன் அவர்களைத் தங்கள் சாமான்களுடன் சிறையில் வைத்தனன். இதை யறிந்த யாக க்ஷத்திரிய குலத்தவரான பெத்தண்ண ராஜுகாரு தமது குலத்தார்களுடனும் மந்திரி பிரதானிகளுடனு மாலோசித்து ரத கஜ துரக பதாதி களாகிய சைனியங்களைத்

திரட்டிக்கொண்டு சென்று தரணி மகாராஜனுடன் கடும்போர் புரிந்தான். யானைகள் யானைகளுடனும், குதிரைகள் குதிரைகளுடனும், ஒட்டைகள் ஒட்டைகளுடனும், காலாட்படை காலாட்படைகளுடனும் யுத்தஞ்செய்து கடைசியாக தரணி மகாராஜன் பேரில் பாணப்பிரயோகஞ் செய்ய அது அவன் மார்பிற்பாய்ந்து வீழ்த்தியது. அவ்வூரை தன் ராஜ்யத்துடன் அணைத்துக்கொண்டு சேனு சைனியங்களுடன் மங்கள வாத்தியங்களும் வாழ்த்தொலிகளும் முழங்கிக்கொண்டு தன் இராஜ்ஜியமாகிய கச்சிநகருக்கு வந்து குதாகுலத்துடனரசு புரிந்துக் கொண்டிருந்தார்கள் என்றும், விஸ்வகர்ம குலத்தவர்களியற்றிய நூல் கூறுகின்றது.

காசிமகாராஜனும், விஜயநகரத்தரசனும் நமது யாகக்ஷத்திரியர்கள். கலெக்டர் கார்மேக்துரையவர்கள் செய்த விஜயநகர மான்யூலில் (விஜயநகர மகாராஜன் சூரிய குலத்தா ரென்றும், ராஜபரம்பரையில் †பசுபதிவம்ஸம் என்றுங்) கூறியிருக்கிறது.

விஜய நகரத்தரசர்களில் ஒருவராகிய ராமாசரஜா பேரில் செய்த நரபதி விஜயமென்னுங் கிரந்தத்திலும் மற்ற கிரந்தங்களிலும், சந்திரகுல வம்ஸமென்றும், சளுக்கிய வம்ஸமென்றும், யாகவம்ஸமென்றும், சூரியகுல வம்ஸ மென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. உல்லியம் டெய்லர் துரை யவர்கள் செய்த மதராஸ் ஜர்னல் என்னுங் கிரந்தத்தில் இந்தியா தேசத்தின் தக்ஷணபாகமாகிய டெக்கான் பாகத்திலும், வட இந்தியாவிலுமிருக்கும் சாஸனத்திற் சொல்லி இருக்கிறபடி ரசபுத்திர குலத்திற் சேர்ந்தவர்களாக விருந்தார்க ளென்று தெரியவருகிறது. சளுக்கிய ரென்கிற பட்டத்தையுடைய 36 ராஜபரம்பரையில் வந்த பட்டயத்தில் அவர்கள் பேர் வந்திருப்பதினுல் ஷெ அரசர்கள் வம்ஸத்தில் சேர்ந்திருந்தார்களோ இல்லையோ வென்ற சந்தேகம்.

ஆனல் (கர்னல் டாட்) என்பவர் அவர்களை (சோலாங்கிஸ்) என்பவர்களோடே குஜிலாத்தியிலிருக்கிற (அனல்வாரா) பட்டணத்தை யாண்டார்களென்று சொல்லுகிறார். ஒரு பிரிவாரென்றும் சொன்னுர். ஆனல் சளுக்கியராஜவம்சமும் மேற்படி சோலாங்கிஸ் வம்சத்தில் சேர்ந்தவர்களா யிருந்தும் தாங்கள் சந்திர குல வரசரென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனல் (கர்னல் டாட்) துரையவர்கள் இவர்கள் அக்கினியிலுதித்த யாக க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்க ளென்றே அபிப்பிராயப் படுகிறார்களென்றும், இன்னும் பலவாருகவும் சொல்லுகின்றார்கள்.

† பசுபதி வம்ஸம் என்பது நமதுகுலத்தின் 24-வது பாரத்துவாச ரிஷியால் பிரதாப ராஜனுக்கு கொடுக்கப்பட்ட கோத்திரம். இதை பசுபதியென்றும் பசுபதியவாரென்றும், பச்சைய கோட்டவார் என்றுங் கூறுவர்.

இந்த சரித்திரங்களைச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்தில் விஜய நகரத்தரசன் சந்ததி சூரியகுல மென்றும் சளுக்கிய வம்சத்தாராகிய சந்திரகுல மென்றும் கூறுகிறது.

இன்னும் ஹிந்து சரித்திரங்களில் ஷை தெலுங்கர்களின் வம்ஸம் இன்னது யென்று நூலாசிரியர்களாகிய பெரியோர்களும், தெரிய வில்லை யென்றும் கூறியுள்ளார். ஷை யார்களை *பசுபதி வம்ஸம் என்று கூறியதினாலும் மற்றுமுள்ள விஷயங்களிலும் பிருதிவீச்சுர வம்ஸம் யாக க்ஷத்திரியகுலம் 24 மனையார்களாகிய தேசாதிபதி தெலுங்கர்கள் என்றும் அறியக்கிடக்கின்றது.

சல்லமாதேவி, வல்லாள மகாராஜன், மல்லமாதேவி.

இப்பெயர் கொண்டவர்கள் மூவர். 1-வது †கொங்கணதேசத் தரசன். 2-வது விஜய நகரத்தாசாராகிய யாக க்ஷத்திரிய குலம் பரம்பரையில் வந்த தெலுங்கரசன். 3-வது பல்லி என்னும் நகரத்து வணிக வைசிய ஆயிரவர்களி லொருவராகிய கல்யாணனுக்கும் இந்து மதிக்கும் பிறந்தவன்.

வல்லாள மகா ராஜன் விஜய நகரத்தரச பரம்பரையில் தெலுங்கு யாக க்ஷத்திரிய குலத்தில் வந்தவன். விஜயநகரத்தரசனின் உத்

---

* இந்த பசுபதி வம்ஸம் என்பதுநமது யாக க்ஷத்திரிய குலத்தின் 24-வது பாரத்துவாச ரிஷியால் பிரதாப ராஜனுக்கு கொடுக்கப் பட்ட கோத்திரம். இதை பசுபதி யென்றும் பசுபதியவா ரென்றும் பச்சையவரென்றும் பச்சைய கோட்டவார் என்றுங் கூறுவர்.

தமிழ் மொழியகராதி - அபிதான சிந்தாமணி.

† கொங்கணம் தேசம் 56-ல் ஒன்று. இது மேலைச் சமுத்திரத்திலே கேரளதேசததுக்கு உத்திரத்திலே யுள்ளது. பதினெண் பாடையில் ஒன்று.
கொங்கர் - கொங்க தேசத்தார்.
கொங்கன் - சேரன்.
கொங்கு - கருஞ்சுரைகள் - சருக்கரை - தேன் - பூந்தாது - மலையாளக் கரையில் சேரராசனுண்ட தேசம் - வாசனை

திரவுக்குக் கீழ்ப்படிந்து திருவண்ணாமலையை அரசு புரிந்து வந்தவன்.
அவன் புத்திரப்பேறு வேண்டிச் சிவனடியருக்குத் தானஞ் செய்து
வருகையில் சிவமூர்த்திசிவகணங்களை சிவனடியவர்களாகவும் தாமும்
ஒரு சங்கமராகவும் திருவண்ணாமலைக்கு வந்து, ஆங்குள்ளபரத்தையர்
கள் ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு அடியவர்களை விடுத்து, தாம்
அரசனிடம் வந்து பெண்போகம் விரும்பினர். அரசன் சங்கமர்க்கு
அவ்வாறு செய்விக்கக் கருதி தன் ஊர் முழுவதும் தாசிகளைத் தேடி
அழைத்துவர மந்திரி முதலியவர்களை ஏவினர். மந்திரி முதலியவர்
கள் அவ்வாக்ஞையைச் சிரமேற்கொண்டு பரத்தையர் வாழும்
வீதியில் வந்து,

"மையுலாம் விழிநேர் மாதர்கணெருங்கி வாழு மிவ்வீதியி லொருத்தி
மெய்யுலா மரசை நாடிய பெரியோர் விரகதைத் தணித்திடு வாரேல்
கையுலாங் கடகப்பணி மணிவடமுங் கலித்திடு சதங்கையு மணிந்து
நெய்யுலாந் தயிர்பாலறு சுவை யன்ன நிரந்தர முண்டு வாழ்குவரே.

யாரானாலும் ஒருமாது உண்மை விளங்கும் எங்களிறைவனை நாடி
வந்த சங்கமர் வெவ்விய காம நோயைத் தணிப்பாரே யானால் அவர்கள்
இரு கரங்களுக்கும் கடகமும் நவமணிகளாலமைந்த ஆபரணங்களும்
முத்து மாலைகளும் ஓசையைக் கொடுக்கும் பாதச் சதங்கை முதலிய
நூபுரங்களை அணிவதல்லாமலும் நெய்பால் தயிர் அறுசுவை பதார்த்
தங்களோடும் அமுதுண்டு சதாகாலமும் யாதுங் குறைவின்றி வாழ்
வார்கள் என்று கூவியழைத்தனர். இதைக்கேட்ட கணிகை மாதர்கள்,

" இன்னவாற மைச்ச ருரைக்கவும் மின்னாரிறைஞ்சியேயாங்க ளெல்லோரும்
முன்னுபு வடியாரிடம் பொருளிரவு முழுமையு மிருந்திடப் பெற்றோம்
தன்னு மிவ்விரவு கழிந்தபின் நீவிர் சொற்றது போலவாமமைச்சர்
தன்னகஞ் சலித்து மன்னனுக் கதனைச் சாற்றவு மாங்கவன் மொழிவான்.

எதிர்வந்து பலவாராகத் துதித்துப் பணிந்து சுவாமி? நாங்கள்
யாவரும் இன்று பகற்பொழுதே நம்மை யாட்கொள்ளும் ஸ்ரீ
அருணாசலேஸ்வாருடைய மெய்யடியார்களிட மின்றிரவு விடியுமள
வும் சுகலீலைகளுக் கிணங்கி நடப்பதாய்ப் பொன்பெற்றோ மாதலால்
இந்நாள் சென்றபின் தேவரீர் சொல்லியபடி நடக்கலாமென்று கூறி
யதைக்கேட்ட வமைச்சர்கள் மனஞ்சலித்து அரசனிடஞ்சென்று
மொழிந்தார்கள். இதைக்கேட்ட வரசன் மிகுந்த சினமும் ஏக்கமுங்
கொண்டு பரமசிவன் திருவிளையாட லெனத்தேர்ந்து விலைமாதர்கள்
வாழும் வீதியில் வந்து நம்பதியை நாடி வந்தவர்கள் எந்தப்பொரு
ளைக் கேட்டபோதிலுங் கொடுக்கிறோ மென்று தவச முயர்த்தி
நடத்திவரு மின்னாள் விரக வேதனையால் மெலிந்து நம்மை நாடிவந்த
சங்கமருக்கு வாக்களித்த வண்ணம் மாறாது, ஆசையோடுங் காப்பாற்
றுங் கணிகைக்கு இப்பதியை யளிப்பதல்லாமல்,

“ கரிபரியுடனும் வேண்டுங் கனகமுந் தருவேன் முத்துச்
சொரிகிய சிவிகையீ வேன்றொல்லுலகாள் வதற்கிங்
கரிய செங்கோலு நல்கியவர்க்கி யான் பணியுஞ் செய்வேன்
பெரியவர் விரகந்தீர்த்தாற் பெற்றதா யெனக்காமென்றான் ”

யானை குதிரைகளோடு வேண்டும் பொன்னுந் தருவேன். முத்துப் பல்லக்கும், என் செங்கோலுங் கொடுத்து யானுமவர்கட்குப் பணியும் புரிவேன். அவரது விரக நோயைத் தவிர்த்தால் என்னைப்பெற்ற அன்னையுமாவார்கள் என்று கூறியதைக்கேட்ட விலைமாதர்கள் ஓடோடியும் வந்து அரசனை வணங்கி,

“ ஆதர வாகத்தங்களாணை யின்படி யேயாங்கள்
ஏதமிலடியர்தம் மோடின் புறப்பொருளும் பெற்றோம்
நாதவென் செய்வோ மென்று நங்கையர் பணிந்துரைக்கப்
பூதல மன்னன் வெட்கிப் புகழ் மனை வந்து சார்ந்தான் ”

அரசே! தேவரீர் ஆக்கினையின்படி நடந்துவரும் நாங்கள் இன்று பரம சிவத்தின் அடியார்களிடத்தில் கலவித் தொழில் புரியும் பொருட்டு பொருள் பெற்றுக் கொண்டோம். ஆதலால் எங்களை ஆட் கொள்ளும் இறைவனே யாங்களென் செய்வோமென்று அடி பணிந்துரைத்த மொழியைக்கேட்ட வரசன் நாணமுற்றவனுய் தன் அரன்மனையைச் சேர்ந்த வேந்தனுடைய முகாரவிந்தம் சலனத்தால் வேறுபட்டிருப்பதைக் கண்ட தேவிமார்களாகிய மல்லமாதேவியும் சல்லமா தேவியும் நெருங்கி வந்து பணிந்து கேட்க, அரசன் நடந்த வைகளைக் கூறக்கேட்ட மனைவியார்,

“ விரகமுற்றவடிய வர்க்கு வாக்களித்த
வேந்தே நின் மனம் யாதோவறிகி லோம்யாம்
இருவர்களிற் சிறியவளா மென்னையன் னேற்
கிசைத்திட வுங்கருத்துள தேலிசை வேனென்றாள்
திருவளரு மன்னன கமகிழ்ந்து நோக்கிச்
சேயிழையேயடியவரோ டரையிற் சேர்ந்து
உருவிலியாற் படுந்துயர மொழிப்பா யென்று
உத்தமனும் பெரியவருக் குரைத் திட்டானல் ”

எங்களரசே! தங்கள் கருத்து எத்தன்மைத்தோ யறியோம். எங்களிருவர்களின் சிறியவளாகிய என்னை அவ்வடியவர்க் கிசையச் செய்யும்படியான கருத்திருக்குமானல் தேவரீர் எண்ணங் குறைவு படாமலவ்விதமே நடக்கிறேன் எனச் சொற்றபோது, வல்லாளன் மனமகிழ்ந்து இளையா ளாகிய சல்லமா தேவிக்குக் கட்டளை யிட்டனன். இளையாளும் மஞ்சனமாடி ஆடை யாபரண மணிந்து சுகந்த பரிமளங்களை யணிந்து பஞ்ச கச்சாய வர்க்கங்களேந்தி வீணையுடன் பள்ளியறையுட் பிரவேசித்து ஹம்ஸதூளிகா சயனத்தின் மீதாரோகணித்திருக்கும அடியவர் பக்கலினின்று நாணி இன்னேசைத் தரும் வீணையை மீட்டிக்கீதம் பாடியபிறகு பெரியவரைப் பார்க்கும் போது, பெரியார் யோக நித்திரையி லிருப்பதாகத் தேர்ந்து பனிநீர்

முதலியவைகளைக் கொண்டு தெளித்து மெழுந்திராததைப் பார்த்து மனம் நொந்து கடவுளைத் தொழுது ஆலிங்கனஞ் செய்கையில் சிவபெருமான் ஏந்தும் குழந்தை வடிவமாகி அழவாரம்பித்தனர். இதைச் செவியுற்ற வரயன் இது திருவிளையாட லென்று உணர்ந்து மிகத்தீவிரமா யங்கு சேர்ந்து தமதிருகரங்களா லெடுத் தணைத்து முத்தமிட்டு உச்சிமோந்து பேரானந்தங் கொண்டிருக்கையில் 'விரகுடனிருக்கும் போதவ்விமலனு மறைந்திட்டானல்" மாயமாய் மறைந்தனர். அரசனும் தேவியுடன் வருந்தும்போது சிவபெருமான் ரிஷபாரூடராய்த் தோன்றி, மன்னவ! நமக்குப் புத்திரப் பேரில்லா திருந்த கலியைத் தவிர்க்கயாமே புத்திரனைத் தோன்றி நினது கருமங்களைப் புரிவோம் என்று கூறிமறைந்தனர்.

சோழநாடு.

ஆ தொண்டைச் சோழன் செல்வத்தின்மேல் பொருமை கொண்ட வட புல மன்னனாகிய பிருதிவீச்சுர வம்ஸம் க்ஷத்திரிய குலம் விஸ்வாஸ ராஜுகாரு யென்பவன் படை யெடுத்து வந்து, இருவரும் கடும்போர் புரிந்தார்கள். தொண்டை மண்டலம் பூராவுங் க்ஷீணித்து கிராமங்க ளெல்லாம் மனிதர் சஞ்சார மில்லாமல் போய் விட்டது. பஞ்சம் பரந்து பாலை மிகுந்த பாசரையிலிருந்த ஆ தொண்டைச் சோழனும் பகைவனுடன் எதிர்த்து சண்டை செய்ய முடியாமல் புறங்கொடுத்து ஓடி விட்டானென்றும், அதன் பிறகு விஸ்வாஸ ராஜுகாரு தொண்டைமண்டலம் முழுவதும் தன் கீழ் படுத்திக் கொண்டான். அன்று முதல் 7-வருஷகாலம் வரையில் ஆளப்பட்டுவந்தது. அக்காலத்தில் தான் தெலுங்கு தேசத்து தெலுங்கர்கள் தொண்டை மண்டலத்தில் வந்து குடியேறினர்கள் என்றும், அவ்விஸ்வாஸ மன்னனே தன் குடிகளுக் காங்காங்கு பல கலாசாலைகள் வைத்து கல்வியை வற்புறுத்தி யூட்டி பாது காத்து வந்தான். இவன் காலத் தில் கல்வி யுணர்ச்சி யில்லாத மனிதர்களகப் படுவது கஷ்டம்.

இந்து தேச சரித்திரம்,

அசோகனுடைய காலத்துக்குப் பிறகு ஆந்திரர்களாகிய தெலுங்கர்கள் தங்கள் சுவாதீனத்தைக் கைக்கொண்டார்கள். அவர்களுடைய உற்பத்தியைப்பற்றி கல்விமான் களுக்குள்ளேயே அபிப்பிராய பேதமிருக்கிறது யென்றும் சிலர் அவர்களை ஆரியர்களுடைய பரம்பரையின ரென்றும், வேறு சிலர் திராவிடர்களுடைய சந்ததியார்களென்றும் மற்றுஞ்சிலர் பிருதிவீச்சுர வம்ஸத்தின ரென்றும் சொல்லுகிறார்கள்.

ஆந்திரர்களாகிய தெலுங்கர்கள் சிலகாலம் மகத தேசத்தையும் ஆண்டு வந்தார்கள். அக்காலத்தில் ஆந்திர வரசன் ஒருவன் அவர்களுக்கு தக்ஷிணத்தில் சொந்தமாயிருந்த ராஜ்ஜியத்தையும் வசப்

படுத்திக் கொண்டான். ஆந்திரர் காலத்துக்குப்பிறகு பல்லவர்கள் பிரபலத்தை யடைந்தார்கள் என்று கூறுகிறது.

நெல்சன் துரை எழுதிய மதுரை சரித்திரம்.

ஆ தொண்டைச் சக்கிரவர்த்தி வேள்ளாளரை கானரா தேசத்தி லிருந்து தொண்ட மண்டலத்தில் குடியேறின சரித்திரத்தைப்பற்றி தெரிந்ததாவது பாண்டிய தேசத்தில் வேளாளர்கள் குடியேறின காலம் கி. பி. 900ம் வருஷமென்றும் ஷை வேளாளர்கள் மற்ற ஜாதி யார்களுடன்கூட சமமாக ஏற்பட்ட காலம் சுமார் ஏறக்குறைய 1060ம் வருஷமென்றும், அதன் பிறகு பாண்டிய வரசானது க்ஷீணித்த காலத்தில் விளும்பர், கள்ளர்களாலே துரத்தப்பட்டார்க ளென்றும், அக்காலத்தில் வடக்கே யிருந்து வந்த தெலுங்கர்களால் பிடிக்கப் பட்டார்க ளென்றுங்கூறுகிறது.

யாக க்ஷத்திரிய குலப் பிரகாசிகை.

சிறப்புற்ற தொண்டை நாடென்னும் காஞ்சி, சந்திரகிரி, விஜய நகரம், மைசூர், தஞ்சாவூர், மதுரை முதலானதுகளை பிருதிவீச்சுர வம்ஸம் 24-மனையார்களாகிய யாக க்ஷத்திரிய குலம் தெலுங்கர்களில் சிலர் இவைகளை இராஜதானியாகக் கொண்டு அரசு புரிந்தார்களென் றும் இவர்கள் அரசாளுங் காலத்தில் சம்புகுல * பல்லவர்களும், வன் னியகுல சோழர்களும், சிற்றரசர்களாக இருந்தார்களென்றும் சோழ தேசத்தைப் படிப்படியாய் ஜெயித்தார்களென்றும் பல்லவ தேசத்தை ஜெயித்து அரசு புரிந்தார்களென்றும் தெற்கே தாம்பிரபரணி வரை தமது வெற்றிக் கொடியை நாட்டினரென்றும் காஞ்சியிலும் மற்ற நாடுகளிலும் ஆலய விமானங்களும் நீரோடைகளும் மண்டபங்களும் இஸ்தம்பங்களும் புதிப்பித்தார்களென்றும் செப்பேடு சிலாசாஸனங்க ளாலும் பல சரித்திரப் பிரமாணங்களாலும் தெரிகிறது என்று கூறுகிறது.

தஞ்சாவூர் நாய்க்க ராஜ வம்ஸ சரித்திரச் சுருக்கம்.

தஞ்சாவூர் இராஜ்ஜியம் சோழ ராஜாக்களால் நெடு நாளாக ஆளப்பட்டது. நாளடைவில் விஜய நகர ராஜ்ஜியம் முனைந்து செழுத்தோங்கி வளரத்தலைப்பட்டது. தலைப்படவே தஞ்சாவூர் ராஜ்ஜியம் அதின் அதிகாரத்தின் கீழ் ஆயிற்று.

அபிதான சிந்தாமணி.

* பல்லவன், வில்லவன் என்பவர்கள் பூர்வம் விஷ்ணு, துவார பாலக ராகிய ஜய விஜயர். இவர்கள் அரசராகப் பிறந்து விஷ்ணு பூசா பலத்தால் அப்பத மடைந்தனர்.

தெலுங்குராஜ பக்காராயன் அரசாக்ஷி பட்டயங்கள்.

1-வது தெலுங்கு ராஜவம்ஸத்தனாகிய பக்காராயன் கி. பி. 1332 முதல் கி. பி. 1354 வரையில் கச்சியை இராஜதானியாக்கி அரசாண்டா னென்றும் இவருக்குப்பின் வந்த இக்குல புஜபல தேவ மகாராயர், வீரஹரிராயர் அரசுபுரிந்து வரும்நாளில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தை படிப்படியாய் ஜெயித்து ஆண்டார்க ளென்றும் இவர்களின் ஆளுகையில் பல்லவர்கள் சிற்றரசர்களாக யிருந்தார்க ளென்றும் இவ்வரசர்களின் பட்டயங்களால் தெரிகின்றது.

மதுரையிலிருக்கும் 24-கு மனையார்களாகிய தெலுங்கர்களின் செப்பேடு பட்டயம்.

24கு மனையார்களாகிய யாக க்ஷத்திரிய குல தெலுங்கு செட்டிகளுக்கு சித்திரைமீ சித்திரா பௌர்ணமியில் ஸ்ரீ மீனாக்ஷி யம்மன் சுந்தரேசப் பெருமாள் அழகர் சுவாமி இவர்கள் மதுரை வைகையாற்றி லிறங்கும்போது ஷை 24கு மனையார்கள் பெரிய ஹனுமந்தக்கொடி விருது முதலானதுகளுடன் ஆற்றில் சென்று வைத்திருக்குங் காலத்தில் ஷை அழகர் கோயில் குருக்கள் ஷை மனையாரிடஞ் சென்று இச்செப்பேட்டு பட்டயம் படித்து புஷ்ப மாலை போர்வை கட்டாரி சந்தனம் தாம்பூலம் சொர்ணம் முதலியவைகளை வரிசையாகத் தந்து அழைத்துக்கொண்டு போகவேண்டும். இது இன்றும் நடைபெற்று வருகின்றது.

சதாசிவ தேவ மகா ராயர் செப்பேடு சிலா சாஸனம்,

சதாசிவ தேவ மகாராயர் அரசாளுங் காலம் விஷ்ணு காஞ்சி வரதராலயத்தில் ஏற்பட்ட சாஸனத்தால் தெரிகிறது. இவர் ஆளுகையின்கீழ் அரசு புரியுங் குமார பங்க சோழ மகாராஜனை ஷை கோவில் விஷ்ணு ஆலயத்தில் ஆறு உற்சவங்களை நடத்தும்படி ஆலய கைங்கிரிய நிருவாகிகளுக்கு தெரிவிக்க உத்திரவு அனுப்பினாரென்று தெரிகிறது.

வைதீஸ்வரன் கோயில் சிலா சாஸனம்.

சுபஸ்ரீமன் மகா மண்டலேஸ்பரன் கட்டாரி வல்லவன் பூலோக தேசாதிபதிகள், யாக க்ஷத்திரிய குலத்தவர்களான, சிவ, விஷ்ணு சமய பரிபாலரான புஜபலதேவ மகாராயர், அச்சுத தேவ மகாராயர், கிருஷ்ண தேவ மகாராயர். இவர்கள் பிருதிவி ராஜ்ஜிய பரிபாலனம் பண்ணியருளா நின்ற கலியுகாதி சகாப்தம் 1517. இதன்மேல் செல்லாநின்ற துர்முகி ௵ என்று கூறுகிறது.

விருதுகள் 32ன் விபரம்.

சாது காமாக்ஷியம்மன் கொடுத்த 10 காணி, தேவேந்திரன் கொடுத்த வெள்ளை யானை, கொன்றைமாலை, வாடாதமாலை, அக்கினி

குதிரை, சாம்பிராணி கலசம், பகல் தீவட்டி, சங்கு, சக்கரம், அறு கால் பீடம், மகுட தோரணம், பாகளாஞ்சியம், ஹனுமந்தக்கொடி, சிம்மக்கொடி, தவளச் சங்கு,புள்ளாங்குழல், வாணத்தடுக்கு, முத்துக் குடை, வெள்ளைக்கொடி, படைவாணக்கழி, சவளக்கழி, சாமரை, ஈயோட்டி, வெள்ளை பாவாடை, கத்தி பட்டா, சமதாடு, வளைதடி, லாந்தர், கேடயம், அம்பு, வில், அம்புறுத்தோணி, டங்கா, வெங்கலக் கொம்பு, நகரா, காகள மென்று சொல்லப்பட்ட பஞ்சவர்ணத்தாரை 2. லவண்டை ஜெயபேரி துடி, முட்டி, வேட்டை நாய் ஆக விருது கள் 32.

வைதீஸ்பரன் கோவில் மடாலய சாஸனம் புஜபல தேவ மகாராயர்.

கி. பி. 1350. முதல் கி. பி. 1378 வரையில் அரசாண்ட தாகத் தெரிகிறது.

வீரஹரி ராயர் பட்டயம்.

பக்காராயனுக்குப்பின் அரசாண்ட வீரஹரிராயன் கி. பி. 1379 முதல் அரசாளத்தொடங்கினன். கி பி.1393ம்-ஹு தங்கள் குலதேவி ஸ்ரீ சாது காமாக்ஷியம்மன் ஆலயத்தில் விமானங் கட்டி வைத்தா ரென்றும் ஷ ஆலயத்திலுள்ள பட்டயத்தால் தெரிகிறது.

பிரதாப ருத்திர மகா ராயர் சிலாசாஸனம்.

தஞ்சாவூர் சுற்றுகளி லிருக்கும் கோவில்களில் முதலாவது விஜய நகரத்து ராஜவம்ஸத்து அரசனன பிரதாப தேவ மகாராயர் ஆளுகை கி. பி. 1345 என்று தெரிகிறது.

பிரவிடதேவ மகா ராயர்.

பிரவிட தேவ மகாராயர் கி. பி. 1300 முதல் 1316 வரையில் அரசாண்டதாகத் தெரிகிறது.

மல்லிகார்ஜுன தேவ மகாராயர் மடாலய சாஸனம்.

மல்லிகார்ஜுன தேவமகாராயர் ஆக்ஷிபெற்ற காலம் சகாப்தம் 1563. கி. பி. 1472 வரையில் அரசாண்டதாக சாஸனத்தால் தெரிகிறது.

வீரசிங்க தேவ மகா ராயர் தாம்பரசாஸனம்.

வீரசிங்கதேவமகாராயர் 1-வது ராஜவம்ஸம் கலியுகாதி 1519. கி.பி. 1428 வரையில் தொண்டைநாட்டை ஆண்டதாகத் தெரிகிறது.

அச்சுத தேவ மகா ராயர் சிலாசாஸனம்.

தஞ்சாவூர் அனகேசவ பிள்ளையார் கோவில் கோபுரத்து சுவரில் வரைந்திருக்கும் சாஸனத்தாலும் மதனகோபால் சுவாமி கோவில்

மூலஸ்தானத்து வெளிச்சுவரில் எழுதியிருக்கும் சாஸனத்தாலுந் தெரிகிறது. கி. பி. 1530 முதல் 1541 வரையில் அரசு புரிந்தா ரென்று மெழுதி யுள்ளது.

வெங்கட்ட தேவ மகா ராயர் சிலாசாஸனம்.

வெங்கட்ட தேவ மகாராயர் அரசாக்ஷி செய்ய ஏற்பட்ட காலம். தஞ்சாவூர் பெரிய கோயில் தெற்குப் பிரகாரத்தில் இரண்டாவது விஜய நகரத்து ராஜ வம்ஸத்தின் மூல புருஷனை திருமலை தேவ மகாராயருடைய சிலாசாஸனம் சகாப்தம் 1377, கி. பி. 1455ல் வரையப்பட்டது.

ஷை தஞ்சாவூர் சுத்துப் பக்கங்களிலிருக்குங் கோயில்களில் முதலாவது விஜய நகர ராஜ வம்ஸத்தின் அரசனாகிய பிரதாப தேவ மகா ராயடைய ஆளுகையில் சகாப்தம் 1365. கி. பி. 1443 உள்ள சிலா சாஸனங்களும் வரையப் பட்டிருப்பதினால் தஞ்சாவூர் ராஜ்ஜியம் அந்த காலத்தில் விஜய நகர ராஜ்யத்துக்கு உட்பட்டு இருந்த தென்பது பளிங்குபோல் தெரிகிறது.

தலைக்கோட்டை யெனும் தாலிக்கோட்டை யுத்தம் கி. பி. 1565ல் நடந்து விஜய நகர ராஜ்ஜியம் சீர்குலைந்து கலவரப்படவே அதுவரையில் அதில் உத்தியோகஞ் செய்திருந்த மேலதிகாரிகள் அதைக்கைப்பற்றியிருக்க வேண்டு மென்றும், தஞ்சாவூர் நாய்க்க ராஜ வம்சம் சுவாதீன மடைந்தவித மிதுவே யென்றுங் கூறுகிறது.

சிலா சாஸனம்.

சகாப்தம் 1377. கி. பி. 1455க்கு செல்லா நின்ற பவ வருஷத்துக்கு செல்லும் யுவஸு சித்திரைமீ 17உ பிருதிவீச்சுர வம்ஸம் திருமலை தேவ மகாராயர் தஞ்சாவூர் சிற்றரசராக விருந்தார்.

சாஸனங்கள்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த நமது பிருதிவீச்சுர வம்ஸத்தினர்களாகிய யாக க்ஷத்திரியர்கள் வடநாடாகிய விசாலாவதி பட்டணத்திலிருந்தும் தொண்டை நாடாகிய காஞ்சிமா நகரத்திலிருந்தும் பல நாடுகளிற் புகுந்து அரசு செலுத்தி ஆட்சி புரிந்து வந்த விபரங்களாவன.

அறுபத்து நான்கு கலைஞானங்களி லொன்றாகிய சிற்ப சாஸ்திரத்தில் வல்ல சிற்பி யொருவர் தஞ்சை நகரத்திலுள்ள சிவங்கி கோட்டை பிரிடீஸ்வரர் தேவாலயத்தை நிருமானிக்கும்போது நந்தி தேவருக் கெதிரில் பிற்காலத்து நம் குலத்தரசர்களின்னா ரென்று யாவரு முணரும்படி,

"வலிசை பதினாலு வல்லவடு மூன்று
சிலை யொன்று சென்ற பின்பு
அலைகுலைந்து தலைகவிழ்ந்து வந்தவனுக் காளாகி
அந்தண மே யாளு மரசு."

யென வரையப்பட் டிருக்கின்றது. இதை யாராயுங் காலத்தில், தஞ்சைமாநகரத்தில் சிம்மாசனுதிபதியாக யிருந்து செங்கோல் நடாற்றி வலிசை வம்ஸத்தில் 14 அரசர்களும், வடுக ரென்னுந் தெலுங்கர் வம்ஸத்தில் 3 அரசர்களும், சிலேயென்னும் பெண் சந்ததி யில் ஒரு அரசியும் அரசாண்டதாக செதுக்கி யிருப்பது இன்றும் நாளையுங் காணலாம்.

பாரததேச சரித்திரக் கதைகள் இரண்டாம் புத்தகம்,

ஆங்கிலேயர் 600 வருஷங்களுக்கு முன் வியாபாரஞ்செய்ய இந்தியாவின் மேற்கு கரையில் வந்து ஷாஜஹானிடம் அனுமதி பெற்று வியாபாரஞ்செய்ய ஆரம்பித்தார்கள். சூரத் நகரத்தில் பண்டகசாலே கட்டிக்கொண்டார்கள். கிழக்குக் கடற்கரையிலே மசூலிப்பட்டணம் எனும் நகரம் இருக்கிறது. இங்கு அவர்களுக்கு ஒரு பண்டகசாலே ஏற்பட்டது. சூரத் நகரிலே கவலேயில்லாமல் வியாபாரஞ்செய்ய முடியவில்லே. மகாராஷ்டரர்களால் அவர்களுக்குத் துன்பம் உண்டாயிற்று. மசூலிப்பட்டணத்திலே டச்சுக்காரர் தொல்லே கொடுத்தார்கள். தென் இந்தியாவுக்கு வந்துவிட ஆங்கிலேயர் நினைத்து தாமஸ் டே என்பவரை அனுப்பினுர்கள். சென்னப் பட்டணம் தகுதியான இடமென்று அவர் சொன்னுர். சென்னேயோ அப்போது ஸ்ரீரங்கராயருக்குச் சொந்தம்.

ஸ்ரீரங்கராயரிடம் தாமஸ் டே சென்று சென்னேயை விலேபேசி 1639ல் 46-ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய பொழுது சென்னே ஒரு சிறிய கிராமமாகவே இருந்தது. மிகுந்த பணம் சிலவுசெய்து ஆங்கிலேயர் ஒரு கோட்டை கட்டினுர்கள். அக்கோட்டைக்கு ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை என்னும் பெயர்சூட்டினுர்கள். நகருக்கு என்ன பெயரிடுவது என்று யோசித்து சென்னே யென்று பெயரிட்டனர்,

சென்னே நகரைப்பற்றி பச்சையப்பன் கலாசாலேயில் பிரதம
சரித்திராசிரியராக யிருக்கும்

ஸி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் M. A. அவர்களால் எழுதப்பட்டது.

சென்னே திருவல்லிக்கேணிக்கும் மயிலாப்பூருக்கும் இடையிலுள்ள பார்த்தசாரதி பெருமாள் கோவில் என்று சொல்லும் தமிழ் நாட்டை யாண்டுவந்த பல்லவர், சோழர், பாண்டியர் முதலிய அரசர்களும் தென் இந்தியா முழுவதையும் ஆண்ட விஜய நகரத்தரசர்களும் ஷெ ஆலயத்தை பூஜித்து வந்தார்களென்றும், ஆலயம் 1200 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டதென்றும், மகமதியர் காலத்தில் ஷெ கோவிலுக்கு அநேக துன்பங்கள் ஏற்பட்ட தென்றும் பிறகு நமது இங்கிலீஷ் ஆளுகைக்குட்பட்ட தென்றும் பக்கம் 35ல், சென்னேயும் அதைச்சுற்றிருந்த பிரதேசமும், சந்திரகிரி அரசனுக்குட் பட்

டிருந்தன. அவ்வரசனுடைய முன்னோர்கள் விஜயநகரம் என்ற ஒரு சாம்ராச்சியத்தை வெகு காலம் சிறப்புடன் ஆண்டு வந்தனர். இவ்வரசனுடைய அதிகாரத்தின் கீழ் ஒரு தலைவன் சென்னையின் பக்கத்திலுள்ள பூந்தமல்லி என்னு மிடத்தில் ஆக்ஷி செய்தான். டே இத்தலைவனுடன் சிநேகம் பாராட்டி அவனிடமிருந்து ஆங்கிலேயர் வசிப்பதற்கும் ஒருகோட்டையைக்கட்டிக்கொள்வதற்கும் அனுமதியும் பெற்றான். கி. பி. 1639ல் சென்னபட்டணம் ஸ்தாபிக்கப்பட்டது என்றும் பக்கம் 52ல் ஆங்கிலேயர் முதலில் சந்திரகிரி அரசனாகிய ஸ்ரீரங்கராயரிடமிருந்து பெற்ற மானியம். பழைய பட்டணம், கோட்டை, முத்தியால்பேட்டை, இராயபுரம், ஆகிய இந் நான்கும் அடங்கியுள்ளது. எழும்பூர், நுங்கம்பாக்கம், வேப்பேரி, பெத்து நாய்க்கன்பேட்டை திருவொற்றியூர் ஆகிய கிராமங்கள் இம்மானியத்தில் சேரவில்லை யென்றும், பக்கம் 53ல் சென்னை நகரம் ஏற்பட்ட பொழுது சுற்றுப்பக்கங்களிலுள்ள நாடெல்லாம் சந்திரகிரி அரசன் கீழ் இருந்தது. சில காலத்துக்குள் பீஜப்பூர் என்ற தக்காண மகம்மதிய ராச்சியத்தின் சுல்தான் தன் வசப்படுத்திக் கொண்டான் என்றுங் கூறுகிறது.

யாகத்தின் பிரபாவம்-

யாக க்ஷத்திரியர்களே!

"எச்சமே கிரது வேள்வி யிட்டியே யசனமோமம்
மெச்சிய மகமேயூபம் விதியுளியாக மாகும்"

எனச் சூடாமணியார் கூறியவாறு யாகத்துக்கு எச்சம், கிரது, வேள்வி, யசனம், ஓமம், மகம், யூபம் விதியுளி எனப்பல வாராய நாமங்க ளிருந்தும் அக்கினி பிரதானமாய் விளங்குகின்றது. அக்கினி யல்லாது யாகம் வளர்த்தல் முடியாது ஆகவே யாகத்துக்கு அக்கினி அபேதப்பட்டுள்ளது. அந்த அக்கினிக்கு அரி, வசு, தகனன், அங்கி, அனல், அயவாகனன். தீ, எரி, சுசி, சிகி, ஆரல், காற்றின் சகாயன், கருநெறி, கனிலி, அங்காரகன், சித்திரபானு, தழல், உதாசனன், தனஞ்சயன், சாதவேதா, முளரி, தென் கீழ்த்திசையிறை, சேர்ந்தோர்க் கொல்லி, எழுநா, வன்னி, பாவகன், தேயு, அழல், சுடர், ஞெகிழி முதலிய பல பெயருள. அத்தகைய வன்னியைக் கொண்டு வளர்க்கும் யாகத்திற்றோன்றி துஷ்டர்களை ஹதஞ்செய்த நமது ஆதிபுருடனுக்கு யாக க்ஷத்திரியரென்றும், மகக்ஷத்திரிய ரென்று மழைக்கப்பட்டது. நூல் வாயிலாக காரணச்சிறப்புறு பெயரென வறியலாம். இவ்வாறுய பல நாமங்களுடன் விளங்கும் யாகத்தைச் செய்யும்போது, அவ் யாகத்தின் கருத்தாவாகிய பதியை சிந்தித்து நடத்துதல் முக்கியக் கடமை. அக்கருத்தா யாவரென வாராயுங் காலத்தில் "காதபதிம், மேதபதிம், ருத்ரம, ஜலாஷ, பேஷஜம்" என ருக்வேதமும், "ஆவோராஜநா, மத்வரஸ்ய ருத்ரம்" என எஜுஸ் ஸம்ஹிதா வாக்கியமும்,

" அயம் ஸோமஃ கபர்த்தி நேக்ருதம் நவபதே மதுத்ரிஸ்பதயத்துஹ்யா
நித்வேயித் பதாவிதம் நிஹி தோயஜ்ஞீயாஸஃ

எனுஞ் சுருதி வாக்கியமும்,

" இமம் பசும் பசுபதே தே அத்யபத் நாம், யக்நேஸீக்ருதஸ்யமத்யே "
" ருத்ரோவாயேஷயதக்ரி: "

" அஹம் ஹிஸர்வஹவிஷாம் போக்தாசைவ பலப்ரத:
ஸர்வதேவ தநூர்ப்பூத்வா ஸர்வாத்மாஸம்ஸ்தித: "

எனக்கூர்ம புராண வாக்கியமும், உருத்திர மூர்த்தியை மேத பதி யென்றும், யஜ்ஞபதி யென்றும், இருபத்தொரு யஜ்ஞங்களுக்குத் தலைவரென்றும், அக்னிஸ்வரூப ரென்றும் பிரதிபாலிக்கின்றன. இன்னும் அகண்ட விரிந்திருக்கு மிவ்வுலகமே அக்கினி ஸ்வரூபம் அந்த அக்னிஸ்வரூபமே சாக்ஷாத் பரம்பொருள். அவனது வலம், இடம், நெற்றியாகிய முப்பாகங்களிலிருக்குங் கண்களே சோம சூர்ய அக்னியாகும்.

" ஓங்கார ஸ்வரூபிணம் மகாதேவ
மமார்த்தக்ருத சேகரம்
ஸோமசூர்யாக்னி நயனம் "

எனதைத் திரியோப நடதமும்,

" ஆதலாலுலகமழலினல் வடிவேயவ்வழலெ மதுருவா மாற்
கோதறுசோமன் தேவி நல்வடிவாம் "

என இலிங்க புராணமும்

" காளத்தீ கண்டத்தே காளத்தி நெற்றியிலே
காளத்தி யுன்றன் கரத்திலே—காளத்தி
அங்கமெங்கும் வெவ்வழலே யாற்றிஞன் ஞானப் பூங்
கங்கை யென்னும் பெண்ணொருத்தி கண்டு"

எனக்கூறியுள்ளது போதரும். ஆகவே யூகமே அக்னி. அக்னியே யாகம். யாகத்தையும் அக்னியையும் வேருகக் கொள்ளுவதற்கில லாது. மூன்று கண்களையுடையவன் முக்கண்ணன், பொன்னை யுடையவன் பொன்னன் என்ருற் போல யாகத்திலுற்பவித்த க்ஷத் திரியர் யாக க்ஷத்திரியர் அல்லது யாகத்தவர். மகத்திலுற்பவித்த க்ஷத்திரியர் மக க்ஷத்திரியர், மகத்தவர். வன்னியிலுற்பவித்த க்ஷத் திரியர் வன்னி க்ஷத்திரியர் அல்லது வன்னியர் என வழங்குதல் காரணச் சிறப்பிலக்கண மாகும். இந்திரன், பிரமன், திருமால் முத லியவர்கள் தாங்களே ஒவ்வொரு காரணத்தின் பொருட்டு யாகங்கள் செய்து அதன் வழி புத்திரோற்பவஞ் செய்து துஷடர்களை நிக்ர ஹித்தனர். ஆகவே சூரியன், சந்திரன், அக்கினி, யாகம் முதலிய வைகள் முறையே க்ஷத்திரியர்களின் வம்ஸங்களாகக் கொள்ளப் பட் டது. இவர்களே 56 தேசங்களை ஆண்டு வந்தக்ஷத்திரியர்கள்.

" அத்ரேஸ் சாப்யக்வ வயே ஜாதா ப்ரம்மணோ மானஸாஃ பிரஜாஃ
அத்ரேஃ புத்ரான் ஸ்ரஷ்டு காமான் ஸ்தானே வாத்மஃ யதாரயத் "

எனும் அநுசானிகபர்வமும் மற்ற நூல்களுமுறை யிடுகின்றன.

சூரிய குலத்தரசர், சந்திர குலத்தரசர், அக்னி குலத்தரசர், யாக குலத்தரசர் அல்லது யாக க்ஷத்திரியர் எனப் பலவகைப் பெயர்கள் வந்தாலும், ஓர் பொருளே யாகும். தும்பி, மாதங்கம், தூங்கல், கறையடி, தோல், எறும்பி, உம்பல், வாரணம், புழைக்கை, ஒருத்தல், வல்விலங்கு, நாகம், கும்பி, நால்வாய், பூட்கை, குஞ்சரம், கரேணு, அத்தி, வேழம் உவா, கரி, கபம், களிறு கைம்மா எனப் பலவகையாகக் கூறினும்,யானையையே குறிக்குமாறு போல் சூரியகுலத்தரசன், சந்திர குலத்தரசன், அக்னி குலத்தரசன், யாக குலத்தரசன் என் பலவைகள் ஈஸ்வராக்னியையே குறிக்கும். யாங்ஙனமென வாராயுங் காலத்தில் உலகம் அழலினல்வடிவு, அவ்வழல் சிவ பெருமானின் உருவு, சோமன், சூரியன் அக்னிவடிவு, எனவும் "சோம சூர்யாக்னி நயனம்!" எனக்கூறியதாலும், யாகாக்கினிக்கு காரணபூதர் சிவபெருமானுகை விருத்தலாலு மென்க. பிரமன், விஷ்ணு, உருத்திரன், இந்திரன் முதலியவர்கள் அரசர்களாக உலகத்திற்றோன்றி பல நன்மைகளைப் புரிந்தது சாத்திர சம்மதமாகும். பிரமனின் யாகத்திற் பிறந்த புத்திரன் பிருகு. இவரை வருணன் புத்திரனுகக் கொண்டனன். இந்த வருணனாற் செய்யப்பட்ட யாகத்தில் பிருகு, அங்கிரஸ், கவி, எனும் மூவருதித்தனர். இன்னும் யாக சேனன் புரிந்த யாகத்தில் திருஷ்ணத்துய்மன், திரௌபதை யுதித்தார்கள். தசரதர் கலைக்கோட்டு மகரிஷியைக் கொண்டு செய்த யாகத்திற் றோன்றிய அவிற்பாகத்தின் மூலமாக ஸ்ரீராமர், இலக்குமணர், பரதர், சத்துருக்கர் முதலியவர்கள் பிறந்தார்கள். இவர்கள் அக்னியிற் றோன்றியவர்களாயினும் சூரிய குலத்தவர்க ளென்று வழங்கப்பட்டு வருகின்றனர். மலையத்துவஜ பாண்டியனின் யாகத்திற்றோன்றிய தடாதகை பிராட்டியாரை சந்திர குலத்தவ ரென்றும் வழங்கப்படுகின்றது யாவருமுணர்வர்.

வைவஸ்வத மனுவின் யாகத்தில் சுத்யுமனன் என்பவனை உற்பவித்தனன். சீதை, அனலரசன் முதலியோர்களும் யாகத்தில் பல காரணங்களின் பொருட்டு உற்பத்தியானுர்கள். இவ்விதமாய யாகங்கள் எங்கு புரிந்தார்களென நோக்கின் கைலாய மலைக்கு அருகிலுள்ள ஓர் அழகிய மலையிலென்க. இதற்கருகில் கங்கை பிரவாகித்து ஓடும். இதைப் பலர் பலவிதமாகிய பெயரிட்டழைப்பார்கள். ஆகவே யாகம், அக்னி, சூரியன், சந்திரன் முதலியவைகள் ஒருவரையே குறிக்கும். காலவேற்றுமையினுல் பலவித நாமங்களையும் பட்டங்களையு மடைந்தார்கள். தலைவர் என்னும் பொருள் பட நாயகர் எனும் பட்டங்களும் ராயர் என்னும் பட்டங்களும், உருத்திர மூர்த்தியின் ஆக்ஞையாற் றோன்றியதினுல் உருத்திரர் எனக்கூறும் பட்டங்களும் பிருதிவி வல்லபன், வல்லபேந்திரன், புகழேசன், காமா க்ஷிசகாயன் இருபத்தினன்கு மனேயார் எனக்கூறும் பிருதிவீச்சுர வம்ஸத்தினர்களாகிய யாக க்ஷத்திரியர்களுக்கே உறியது.

க்ஷத்திரியர்களுக்கு நால்வகைச் சேனைகளும் அடங்கி நடக்கும் குடிகளும், நல்ல பயிர் வளப்பமும், தந்திரமறிந்த மந்திரிகளும், சாதுக்கள் நேசமும், கோட்டையும், அவ்வாறங்கமு முடைமையும், யுத்தத்திலஞ்சாமை, கொடை, அறிவு, உற்சாகம் முதலியவைகளியல் பாகும், புரவலன், கொற்றவன், பெருமான், காவலன், அரையன், ஏந்தல், கோ, குரிசில், தலைவன், மன்னவன், வேந்தன், முதல்வன், நிருபன், பூபாலன், நரபதி, பார்த்திபன், இறைவன், அண்ணல் முதலியவைகள் க்ஷத்திரியருக்குறிய பெபராகும். இவர்களின் தொழில் வேள்விசெய்தல், வேதமோதல், ஈதல், உலகோம்பல், படைக்கலம் பயிலுதல் யுத்தஞ் செய்தல் முதலிய வறு தொழில் களாகும்.

பிருகஸ்பதி ஸ்மிருதி.

இஜ்யாத்ய யனதானே கப்ர பரிபாலநம்
சஸ்ராஸ்ங்ர தாரணம் சேதிகர்மாணி க்ஷீத்ரியஸ்ய து.

பன்னிரு பாட்டியல்.

இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னருஞ் சிறப்பின் மன்னவர் ஜாதி
இந்திர ஞிரவி சோமனிம் மூவர்
தந்த வெழுத் தேயரசர் ஜாதி.

பகவத்கீதை 18-வத் அத்தியாயம் 43-வது சுலோகம்.

சௌர்யங்தே ஜோதிருதின் தாக்ஷ்யம் - யுத்தே சாப்ய பலாயநம:
தான மீஸ்வர பாவஸ்ஸ க்ஷாத்ரம் காமஸ்வ பாவஜம்.

இ-ள்.

சௌரியம்—பராக்கிரமம், வீரத்தன்மை அஞ்சாமை, தேஜः—பிரதாபம், கீர்த்தி, பிறரால் தான் அபஜயப் படாம லிருத்தல்
தார்க்ஷியம்—சர்வ காரியங்களையும் தாமே நிருவகிக் கிறசாமர்த்தியம்
யுத்தே—யுத்தத்தில் புறங் கொடுத் தோடாமை. தானம்—கொடுத்தல்.
ஈஸ்வர பாவஸ்ஸ—செங்கோல் செலுத்தி யாளுகிறது
சக்தி—தம்மை யாதரிக்கும் உபாசனு தேவிக்கு பூஜை முதலியவளித்தில்
சுவாபா—முற் கூறிய யாவும் சுபாவமாக விருத்தல் கடமை
க்ஷாத்திரம்—க்ஷாத்திரத்துடன் கூடி யிருத்தல்.

இவைகள் யாவும் க்ஷத்திரியர்களுக் குள்ள தர்ம நீதிகள்.

வியாச பாரதம்.

க்ஷத்ரஜம் ஸேவதே யஸ்து வேதாத்ய யனஸங்கத
தாநா தாகரதிர் யஸ்து யவை க்ஷத்ரிய உச்யதே.

திருக்கைவளம்.

ஓதலுடன் வேட்டலுல கோம்பல் படைபயிற்றல்
ஈதலுடன் போர் செய்திட்டுகை,

திருக்குறள்.

படை குடி கூழமைச்சு நட்பரணாறு, முடை யானரசரு ளேறு.
அஞ்சாமை யீகை யறிவூக்க மிந் நான்கு, மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

இவ்விதத் தன்மையுடைய க்ஷத்திரியர்களுக்கு அறுதொழிலாளர் என்று மற்றொரு பெயருமுண்டு. பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகிய இம்மூவர்களுக்கும் இருபிறப்பாளர். இரண்டு பிறப்பினை உடையவர்கள் முப்புரிநூல்மார்பர், துவிஜாள் என்று கூறுவார்கள். பிறக்குங்கால் சூத்திரராகவும் பிறந்த பிறகு பிராமணன் 8-வயதிலும், க்ஷத்திரியன் 11-வது வயதிலும், வைசியன் 11, 12-வது வயதிலும் உபநயனஞ் செய்யவேண்டும். அங்ஙனஞ் செய்தபிறகுதான் பிராமணரை துவிஜாளென்றும், க்ஷத்திரியனையும், வைசியனையும், க்ஷத்திரியன், வைசிய னென்று மழைக்கப்படுவார்க ளென்று ஸ்மிருதி முதலியவைகள்கூறும்.

நெல்சன் துரையவர்கள் எழுதிய மதுரை சரித்திரம்.

பூணூல் விஷயம்.

தெலுங்கர்கள் பூணூல் தரித்து அனுஷ்டித்து வந்தது வழக்கம். இவர்களின் அரசாக்ஷியைக் காலகெதியால் இழந்த காரணத்தினால் தெலுங்கர்களின் மகிமையற்று ஈனப்பட்டுபோனது நிமித்தம் பூணூல் தரிக்காமலிருக்கிறார்களென்று தெரிந்துகொண்டேன் என்றும், தெலுங்கு பிராமணர்களும் தெலுங்கு வைசியகுலசெட்டிகளும் பூணூல்தரித்துவர இந்த தெலுங்கு அரசர்கள் மாத்திரம் பகைவரது துன்பமேற்பட்டதிலிருந்து பூணூல் தரிக்காமல் குலாசார முதலானவைகளைக் கைவிட்டு ஒழுக நேரிட்ட தென்றும் கூறுகின்றது.

இதனால் நமது தெலுங்கர்களாகிய யாக க்ஷத்திரிய குலத்தவர்களுக்கு பூணூல் உண்டு என்றும் காலகதியால் தரிக்காமற் போயினரென்றும் தெரிகிறது.

யாகக்ஷத்திரியர்கள் செய்யவேண்டிய அநுஷ்டானம்.

ஆசமனம்.

ஆசமனம் என்றால் வலது உள்ளங்கையில் உளுந்து பிரமாணம் ஜலத்தை விட்டு அடியிற் குறித்த மந்திரத்தைச் சொல்லி மூன்று தரம் உட் கொள்ளுதல்.

முதலாவது—ஓம் கேசவாயநமஃ என்று சொல்லி ஜலத்தை மேலேவிடுதல்.

இரண்டாவது—ஓம் யாகாக்னியாயநமஃ என்று சொல்லி முதலாவது ஜலத்தை உட்கொள்ளுதல்.

மூன்றாவது—ஓம் நாராயணாயநம: என்று சொல்லி இரண்டாவது உட்கொள்ளுதல்.

நான்காவது—ஓம் அச்சுதாயநம: என்று சொல்லி மூன்றாவது ஜலத்தை உட்கொள்ளுதல்.

ஐந்தாவது—ஓம் பிருதிவீச்சுராயநம: என்று சொல்லி ஜலத்தை பூமியில் விடுத்தல். பிறகு பிராணாயாமம் செய்தல் அதாவது இடது கையினால் வலது முழங்கையைப்பற்றி வலது கையின் முதல் மூன்று விரல்களால் வலது நாசி, இடது நாசி, சுழிமுனை (சூரிய கலை, சந்திரகலை, பிங்கலை) ஆகியவைகளைப் பற்றி சுவாஸத்தைப் பூரித்தும் கும்பித்தும்

"அங்குள்யகரே: நாசிகாக்ரம் சம்ப்ரேட்யம், பாபநாசனம், பிராணாயாமம், ஹிதம்புரோக்தம் ரிஷிபஹிபரிகல்பிதம் பூம்யாதி ஊர்த்லோகஸ்யஉபரியஸ்து திவாகர: திசப்ரணவஸம் யுக்தம் திரா வர்த்திய: புனற் புன:.

என்றுகூறி சுவாஸத்தை விடுத்து தமது இருகரங்களை ஒன்றோடொன்று பொத்தி வலது துடையின்மீது வைத்து,

சிவ சிவ சம்போராக்ஞா ப்ரவர்த்தமான ஸ்யாத்யப் ரஹ்ம மணோத்விதிய பரார்த்தே ஸ்வேதவராஹகல்பே வைவஸ்வதமன்வந்த்ரே, கலியுகே, ப்ரதம பாதே, ஜம்புத்வீபே பாரதவர்ஷே, பரதகண்டே மேரோர், தக்ஷிணதிக் பாஹே, பாஸ்கரயாகாக்னிக்ஷேத்ரே, ஸமஸ்ததேவதாப்ராம்ணஸ்ஸந்நிதௌ, அஸ்மின், வர்த்தமான, விவகாரிகசாந்த்ரமாசேந,......ஸம்வத்ஸரே...... அயநே......ருதௌ......மாஸே.......பக்ஷே......திதௌ......வாஸரே...... சிவநக்ஷத்ரே......சிவயோகே......சிவகரணே ... ... ஏவங்குண விசேஷண, விஜிஷ்டாயாம், சுபதிதௌ ஸ்ரீ பரமேஸ்வர முத்திச்ய மமோ பிருதிவீச்சர பிரீதி யர்த்தம் ஸந்தியா முபாசிஷ்யே"

என்று சொல்லிவிட்டு மறுபடியும் மூன்றும் தரம் ஜலத்தை வலது உள்ளங்கையிலிட்டு முன் கூறிய மந்திரங்களைச்சொல்லி ஆசமனஞ் செய்து பிறகு பூணூலின் மூன்றுமுடிகளை வலது கரத்தினாற்பிடித்து மேல் வேட்டியை அதன்மேல் மூடி,

"மமோபர்தஸ்மஸ் யக்னி யோர்ப் பவத்வாரா:
ஸ்ரீ பரமேஸ்வர ப் ரீதியர்த்தம் பிராதுர் மத்யான
சந்த்யாஹ மனுஷ்டானம் கர்ஷியே நம:"

என்று மூன்று தரமாகிலும் 54 தரமாகிலும், 108, 1008 தரமாகிலு முச்சரித்தல் வேண்டும். பிறகு ஆசமனஞ்செய்து விட்டு நம்முடைய காரியங்களிற் பிரவேசித்தால் நமது வேலைகளும் எண்ணங்களும் பூர்த்தியாகி ஜெயமடைவோ மென்பது நிச்சயம். ஜலத்தை சிரசில் தெளித்துக்கொள்ளும்போது,

"கங்கே, யமுனே சரஸ்வதி கோதாவரி
நர்மதா சிந்து காவேரி யே நம:"

என்று உச்சரித்தல் வேண்டும். இவ்விதமாகிய அநுஷ்டானம் பிராமணன் முதல் சூத்திரர் ஈறுகவுள்ள ஒவ்வொரு குலத்தார்களுக்கு முள்ளது. அவ்விதம் நம்மால் முடியாவிடில் முதலுங் கடையும் நீக்கி பூணூல் மந்திரத்தை மாத்திர முச்சரித்தல்கூடும். இதுவே காயத்திரியாகும்.

கல்வி.

இன்னும் நமது குலத்தவர்கள் முன்னேற்ற மடைவதற்கும், உன்னதபதவி யிலிருப்பதற்கும் முக்கியமானது கல்வி. கல்வி யற்றவன் கசடனேயாவான். ஒருவன் உயர் குடிப்பிறந்தானே யாயினுங் கல்வியற்றிருப்பானே யாயின் அவன் யாவராலு மிகழப்படுவானே யல்லது போற்றப்படான்.

நீதி நெறி விளக்கம்.

அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங் கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூஉங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. எனவும்

ஏலாதி.

வெள்ளத்தா லழியாது வெந்தணலால் வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலு நிறை வன்றிக் குறை வுறாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு மிகவெளிது கல்வி யென்னு
முள்ளபொரு ளுள்ளிருக்கப் புறம்பாகப் பொருள்தேடி யுழல்கின் றாரே.
எனவும்.

ஔவை.

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப் புடையன்—மன்னனுக்குத்
தன்தேய மல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. எனவும்.

திருக்குறள்.

கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர், எனவும்.

நீதிவாக்கியம்.

அள்ளிச் கொடுக்கு மாடையுஞ் செம்பொன்னு மாதரவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் யென்னை குரித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்திலே யெந் தன் றுடுக்கடக்கி
பள்ளிக்கு வைத்திலையே யெனைப் பெற்ற தந்தை யாகிய பாதகனே.
எனவும்.

குறள்.

கண் உடையர் என்பவர் கற்ேறோர் முகத் (து) இரண்டு
புண் உடையர் கல்லாதவர்
கற்க கச (டு) அறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

எனக்கூறிய சாக்ஷியங்களினுல் கல்வி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத முக்கிய கலனுகும். கல்வி, அறிவை வளர்க்கும். சீரைத் தேடும், உயர் நிலையை யுண்டு பண்ணிவைக்கும். கல்வியினுல் நன்மை தீமை யென்று பகுத்தறியக்கூடும். ஆகவே கல்வி ஆண், பெண் இருவர்களுக்கு மிருத்தல் அத்தியாவசிய மாகிறது. இதை யனுசரித்தே "விறல் மந்திரிமதியும் பேசிலிவையுடையாள் பெண்" என்றுர்.

பெண் கல்வி.

பெண்கள் கல்வி கற்பதனுல் விளையும் பயன் எவ்வளவென்று உங்களுக்குத் தெரியும். மனிதர்கள் எவ்வித சுகங்களையும்தேடி அடைவதற்குக் காரணமாயுள்ளது அறிவொன்றே யாம். அவ்வறிவு கல்வி யினுற்பெறப்படுவது. அது ஆண்கள் பெண்கள் என்னும் இருபாலர்களுக்கும் இருக்கவேண்டியது அவசியமாதலின் கல்வியை ஆண்கள் எவ்வளவாய் விரும்பிக் கற்றல் வேண்டுமோ, அவ்வளவாய்ப் பெண்களும் விரும்பி கற்றல்வேண்டும். பெண்கள் தமக்குறிய கற்பொழுக்கம் தவருது நடப்பதற்கு இன்றியமையாதது கல்வி. தங்கள் குழந்தைகளைத் தீநெறியிற் செல்லவிடாது நல்ல பழக்கம் பழக்குவதற்கும் அவர்களுக்கு உதவியா யிருப்பது கல்வி. தமது நாயகர்களுக்கு மந்திரிபோலிருந்து அவர்களுக்கு இடர்நேர்ந்த காலத்தில் ஏற்ற உபாயம் சொல்வதும், அவர்கள் தீ நெறிப்பட்டு ஒழுகுவாராயின் அவர்களை நன்னெறியிற் செலுத்துவதற்குத் துணையாயிருப்பதும் கல்வி. வீட்டுக்குறிய வரவு செலவு கணக்குகளைச் சரியாய் வைப்பதற்கும் தங்கள் கணவருடைய வரவுக்குத்தக்க செலவு செய்வதற்கும் கற்ற தம்கணவரோடு ஒற்றுமையாய் வாழ்வதற்கும் துணைசெய்வது கல்வி. தூரதேசத்திலிருக்கும் தன் நாயகனுடைய க்ஷேமத்தை மனைவியானவள் கடிதம் மூலமாகத்தானே தெரிந்துக் கொள்ளக்கூடும். கல்வி கல்லாதவள் எவ்வாறு தெரிந்துக் கொள்ளுவாள்.

சிறுபிள்ளைகள் எப்பொழுதும் தாய்க்குச் சமீபத்திலேயே இருக்கவேண்டியவர்கள். தந்தையைப் பார்க்கிலும் தாயினிடத்திலே அவர்கள் அதிகப்பிரீதி வைப்பது இயல்பு. அவர்கள் மனம்போனவாறு நடந்து கெட்டுப்போக விடாது, அவர்களை சன்மார்க்க நெறியில் வளர்ப்பதும் சிறுபருவத்திற் கற்பிக்க வேண்டிய கல்வியை அவர்களுக்குக் கற்பிப்பதும் தேகாரோக்கியத்திற்குத் தகுந்த உணவைக் கொடுப்பதும் தாயினுடைய கடமைகளாதும். கல்வி இல்லாத

ஒருபெண் என்ன செய்வாள். ஆதலால் நீங்கள் பெண் கல்வியை விருத்திசெய்வதுக்கு உங்களாலாகும் பிரயத்தனங்கள் யாவும் செய்தல் வேண்டும்.

> "தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய் யெனப் பெய்யு மழை"

எனத்திருக்குறள் கூறியதறிக.

ஒழுக்கம்.

ஒழுக்கம் என்றால் முறையாக நடத்தல் என்று பொருள். ஒருவன் எவ்வளவு கற்றிருந்தாலும், அறிவில் மேம்பட்டிருந்தாலும், பயனில்லை. கல்வியினால் அறிவினைப் பெற்று, அவ்வறிவினால் நல்லொழுக்கங்களைத் தெரிந்துக் கொண்டு அவற்றில் பழகிவரவேண்டும். ஒருவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவு கவலை எடுத்துக் கொள்ளு வானோ, அவ்வளவு கவலையுடன் ஒழுக்கத்தைப் பாதுகார்த்துக் கொள்ளவேண்டியது. கல்வி யுடையவ ரைக் காட்டிலும் ஒழுக்க முடைய வருக்குச் சிறப்பதிகம். ஒழுக்கத்தைக் கைவிட்டவன் மேன்மையைக் கைவிட்டவ னாவான். இது விஷயங்களை 94-வது பக்கத்தில் விரித்துள்ளேன்.

எக்குலத்திற் பிறந்தானே யாயினுமக் குலத்துக் குறிய ஒழுக்கத்துடன் திகழு வானேல் அவன் யாவராலும் போற்றப் படுவான். ஒழுக்கமே யுயர் குலம். அஃதில்லாமையே தாழ்ந்த குலம். பொருளின்மை ஒழிக்கத்துக்குத் தடையாக மாட்டாது. ஒழுக்கம் தனவந்தனுக்கும் ஏழைக்கும் ஒருபடித்தாகும்.

ஆன்றோர் வாக்கியம்.

தன் மானங் குலமானம் தன்னை வந்தடைந்த உயிர்த்தங்கண் மானம்
என்மானமாகி லென்ன வெல்லவருஞ் சரியெனவே யெண்ணம் போந்து
நன் மானம் வைத்தென் னாளும வர்தங்களுக்கு நன்மை செய் வோர்
மன்மானியடைந் தோரைக் காக்கின்ற வள்ளலென வழுத்தலாமே

தனக்கு வந்த மானம், தன் குலத்தவர்க்கு வந்த மானம் என்று பாவித்து சீர்தூக்கி நடைப்பவர்களே நற் குலதிலகர்கள்.

விவேக சிந்தாமணி.

> அறிவு ளோர் தமக்கு நாளுமரசரும் தொழுது வாழ்வார்
> நிறை யொடு புவியிலுள் ளோர் நேசமுடன் வணக்கஞ் செய்வார்.

என்றதினாலும் விளங்கும். நமது ஆக்கை யோ,

உடற் கூற்று வண்ணம்.

வளர் பிறைபோல வயிருமு ரோமமுஞ் சடையுஞ் சிறுகுஞ் சியுவிஞ்சமு
மனது மிரண்ட வடிவுமிலங்க மாமலை போல் யமதூதர்கள் வந்து
வலைகொடு வீசிவுயிர் கொடு போக வந்தின மைந்தர் குனிந்தழ நொந்து
மடியில்விழுந்து மனைவி புலம்பமாழ்கினரே இவர் கால மறிந்து.

பழையவர் காணு மெனுமை யலார்கள் பஞ்சு பரந்திட நின்றவர் பந்த
ரிடுமென வென்று பறையிட முந்தவே பிணம் வேகவிசாரியு மென்று
பலரையுமேவி முதியவர் தாமிருந்த சவங்கழுவுஞ் சிலரென்று
பணிதுயில் தொங்கல் களபமணிந்து பாவகமே செய்து நாருமுடம்பை
வரிசை கொடாம விடுமென ஓடிவந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடிகி நடந்து சுடலை யடைந்து மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விரகிடை மூடி அழல் கொடுபோட வெந்து விரிந்து முறிந்து நிணங்க
ளுருகி எலும்பு கரிகியடங்கிஓர் பிடி நீருமிலாத உடம்பை நம்புமடியேனை
யினியாளுமே.

இருதியோடரிது என உறவின் முறைகதறியழ
ஏழை மாதரால் மோதி மேல் விழ
எனதடிமை எனுமரிவு சிறிதுமற
ஈமுலோ வென வாயை ஆவென
விடுருபறை சிருபறைகள்தி மிலையொடு தவிலரைய
வீமதேசமே பேய்கள் சூழ்தர எரிதனிலிடும் வாழ்வே.

இந்த தேகம் நிலையற்று ஒரு பிடி சாதம்பலுக்குக் கூட வழியற்றது. ஆகையினால்,

நாலடியார்.

தோற்றஞ்சால் ஞாயிறு நாழியாவை கலுங்
கூற்ற மளந்து நுன்னுணுண்ணும்—ஆற்ற
அறஞ் செய்தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதாரில்.

என்பதை உற்று நோக்குங்கள்.

பஞ்சமா பாதகங்கள்.

இதை யாராயுங்கால் ஆணுகவும், பெண்ணுகவு முதித்த ஒவ்வொரு வகுப்பினர்களுக்கு மெடுத்துப் பொதுவாகக் கூறியுள்ளார். பஞ்சம் + மா + பாதகங்கள் = ஐந்து பெரிய பாதகங்கள். அதாவது கொலை, களவு, கள், காமம், பொய் என்னுமைந்துமாம்.

கொலை - திருக்குறள்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

திருமந்திரம்.

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிக்கயிற் றுற்கட்டி
செல்லிடு நில்லென்று தீவாய் நர கிடை
நில்லிடு வென்று நிறுத்துவர் தாமே.

களவு

முன் கூறிய கொலைக்குக் காரணமானது களவு அல்லது திருடு பிரபோதயராஜரான மும் முடியன், ஜண்டி, ஜிகிண்டி இருவர்களுக்கும் அபயாஸ்தம் கொடுத்ததர்க்குப் பதிலாக தமது மைந்தனுகிய விரத வீரியன் சிரங் கொடுத்த விஷயங்கள் உங்களுக்குத் தெரியும்.

விநாயக புராணம். கள்.

அறிவையழிக்குஞ் செயலழிக்கு மழியாமானந் தனை யழிக்கும்
செறியும றிஞர் மதியாசெறுக் கை விளக்கு மீன்றாலும்
முறியும் வெறுப்பு மிக விளக்கும் முனிவு விளைக்கும் பகையஞ்சா
குறிகள் விளக்கும் நகை விளக்குங் கொல்லேல் கள்ளுண்டலை மைந்தர்

கூர்மபுராணம்.

கள்விலைபகர் வோர்கள்ளினை நுகர் வோர்
கள்ளருந்து தற்குடன் படுவோர்
விள்ளருங் கொடியரௌரவ நரகில் மீட்டு மீட்டு மூன்று
நான் கழிப்பரே.

காமம்.

இதுகாறும் கொலை, களவு, கள் ஆகிய மூன்றுவித தீச்செயல் களினால் வருந்தீங்குகளைக் கூறினோம். இனி காமத்தைப்பற்றி நாம் சொல்லவேண்டியதே யில்லை. நமக்கு நாமே சாக்ஷியாக விருக்கின் றோம்.

பொய்.

பொய்யினால் வருங்கெடுதிக ளித்தகைத்தென்று யாவருமறிவர். இதற்கு ஹரிச்சந்திரனே சாட்சி.

ஆகவே, இந்த பஞ்சமாபாதகங்கள் கொடியதிலுங் கொடிய செயல் என்று வெள்ளிடைமலைபோல் தெள்ளிதினுணரக் கிடக் கின்றன.

இனி நாம் அனுஷ்டிக்க வேண்டிய முக்கிய விரதங்களானவை: ஏகாதசி விரதம் ஒன்று, பிதுர்க்களின் பொருட்டு செய்யவேண்டிய அமாவாசை விரதம் 2, சிவராத்திரி விரதம் 3, இன்னும் நம் குலத்தவர்களின் புத்திரர்கள் பூஜித்து மேன்மையுற்ற கேதாரீஸ்வரி விரதம்4, இது நம்மவர்களுக்கு முக்கியத்திலும் முக்கியமாகும். 24கு மனையார்களின் மைந்தர்கள் இந்த விரதத்தை நூற்ற விபரங்கள் 160-வது பக்கத்தில் பரக்கக்காணலாம்.

கைத் தொழில்.

நமது குலத்திலிருக்கும் பெருந் தனவந்தர்களும் பெருத்த வியாபாரிகளும் குல நன்மையைக் கருதியும், குலச் சிறுவர்களின் அபிவிருத்தியைக் கருதியும் வஸ்திராலயம், இயந்திராலயம், நெசவுத் தொழில், சிம்னி உற்பத்திசாலை முதலியவைகளையும் பாட சாலை களையு முண்டாக்கி வைத்தால் எவ்வளவு பரோபகாரமாகவும், குலாபி மேன்மையாகவு மிருக்கும்.

மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரார்யவ மதிப்புங் கொள்ளார்
கருமமேகண் ணாயினர்.

நேயர்களே! ஒரு தேசமோ சமூகமோ முன்னேற்ற மடைய வேண்டுமோனல் அத்தேச சமூக வாலிபர்களின் ஒப்பற்ற சேவையினு லாகுமேயன்றி மற்றவர்களால் ஒருக்காலமும் முடியாது என்பது சரித்திர பிரசித்தமாகும்.

ஆயினும் பண்டைய காலத்திலே சுதந்திரமும், சுகவாழ்வும் பெற்றிருந்த நம்குலமானது இன்று அடிமை வாழ்வில் சிக்கி அவஸ்தைப் படுவதைக்கண்டு 24கு மனைபார்களாகிய - யாக க்ஷத்திரிய குலம் தெலுங்கர்கள் வருந்தாமல் இருக்கமுடியாது. இத்தகைய நிலைமைக்குக் காரணம் சமூகத்தின் கண்ணுள்ள ஒற்றுமையே. நம்சமூகத்திலுள்ள வாலிபர்கள் அறிவிலும் ஆற்றலிலும் ஊக்கத்திலும் உச்சாகத்திலும் சேவையிலும் சிறப்பிலுங் சிறிது குன்றினவர்களாக யிருக்கிறார்கள். இதற்கு வாலிபர்களே யன்றி பெற்றோர்களும் முக்கிய காரண கர்த்தர்களாவார்கள். இளமையிற்கல் யென்னும் அமுத வாக்கியத்தின் படி தத்தம் பிள்ளைகளுக்கு இளமைப்பருவத்திலே கல்வியைப் போதித்து நல்ல பழக்க வழக்கங்களை அளிக்காமல் வயறு வளர்ப்பதே பெரிய காரியமாக மதித்து பிள்ளைகளே அவர்களின் இஷ்டப்படி விட்டுவிடுகிறார்கள் அதனல் சிறுவர்கள் இளம்பிராயத்திலே கல்வி கற்பதற்கு வழியில்லாமல் தன் மனம்போன போக்கெல்லாஞ்சென்று துஷ்ட சாவகாசத்துக்காளாகி அறிவையும் ஆற்றலையும் இழந்து கட்டுக்கடங்காமலும் பெரியோர்களுக்குக் கீழ்படியாமலும் போய்விடுகிறார்கள். தொட்டிற் பழக்கம் சுடுகாடு போகும் வரை என்பதுபோல் இளம்பிராயத்தில் ஏற்பட்ட பழக்க வழக்கங்களே மரணகாலம் வரை தொடர்ந்து அவர்களது வாழ்க்கையைப் பாழாக்கி விடுகிறதுமன்றி சமூகத்தையே அழித்து விடுகின்றது. ஆகையால் சமூகத்திற்கு ஒரு பொக்கிஷம் போன்ற பிள்ளைகள் விஷயத்தில் மிக்க சிரத்தைக்கொண்டு அவர்களுக்கு இளம் பிராயத்திலே கல்வியைப் போதித்து அறிவாளிகளாகச் செய்விக்க வேண்டியது பெற்றோர்களின் முக்கியக் கடமையாகும்.

நாம் நபருக்கு 2 ரூபா விகிதஞ் பங்கு சேர்த்து ஒரு பெரியகைத்தொழில் சாலை நியமித்து அதில் நம் குலத்து ஏழை மக்களைக் காப்பாற்றி னலவர்களும் மேன்மை யடைவார்கள் பங்கு வைத்தவர்களும் வருஷம் முடிவில் கணக்கிட்டு வரும் லாபத்தைப் பகிர்ந்துக் கொள்ளலாம். இவ்விதஞ் செய்வதே குலாபி விருத்திக்கு ஹேது வாகும். நாம் முன்னேற்ற படையும் பொருட்டு இவ்விஷயத்தி லூக்கமும் முயற்சியு மெடுத்துக் கொள்ள வேண்டியது.

முயற்சி யுடையாரி கழ்ச்சி யடையார் என்றும், ஊக்கமது கை விடேல் என்றும் சுற்றத்தார் சுத்தப்பட வொழுகல் செல்வத்தாற் பெற்ற பயன் என்றும் கூறினர்கள். க்ஷத்திரிய குலம் 24-கு மனையார்களில் வாஜ்ஜியவார் கோத்திரம் அரங்கய்ய செட்டியார் குமாரர்

ஞான பண்டிதர் திருமூர்த்திக் கவிராயரால் நங்குல உற்பத்தி முதலானதும் நாமறிந்துக் கொள்ளும்படி 1865-ல் தேசாதிபதி நாடகமாக யியற்றி யுள்ளார். இவர் குமாரர் ரங்கசாமி கவிராயரும் நம் குலாபி விருதிக்கு வேண்டிய உதவி புரிந்தார்.

கோயம்பத்தூர் மகா-ா-ா-ஸ்ரீ வெ. ப. வெங்கட்ராமஞ் செட்டியார் 1914-ல் யாக க்ஷத்திரிய குலப் பிரகாசிகையும், சென்னை வண்ணையம் பதி செ. க. அங்குசாமி செட்டியார் மஹா மஹ க்ஷத்திரிய குல புராணமும்,

சென்னை சிங்காரத் தோட்டம் க. வெள்ளைச் சாமிக் கவிராயர் கிள்ளை விடு தூதும், சென்னை கல்மண்டபம் வி. ராமசாமி செட்டியார் தாம்பிர சாஸனமும் கோயம்பத்தூர் பழனி சாமி செட்டியார் 24-கு மனையார் சரித்திரமும், உடுமலை கன்னிசாபம், அ. முத்துசாமி கவிராயர் அவர்களும், கவிராயர் மாரியப்ப செட்டியார் அவர்களும் தஞ்சாவூர் ரங்கசாமி செட்டியார் அவர்களும் நம்வர்களுக்கு பல உதவி புரிந்தனர். கலியுக வர்த்தவமானி பத்திராதிபர் T. முத்துசாமி செட்டியார் அவர்களும் நம் குலாபி விருத்திக்காக பல அரிய தொண்டுகளாற்றியுள்ளார்.

செய்யவேண்டிய கடமைகள் பல அவற்றுள்.

நாம் நமது புத்திரர்களையும் புத்திரிகளையும் 5, 6 வயதிலிருந்து தெலுங்கு, தமிழ், இங்கிலீஷ் கூடிய வரையில் கற்பிக்க முயல வேண்டியது கடமையாகும். பிள்ளைகளும் கஷ்டப்பட்டு தர்ட் பாரம் வரைவில் படித்தால் அவர்களுக்கும் கல்வியில் ஊக்கம் உண்டாகும். இன்னும் S.S.L.C. B.A., B.L., M.A., I.C.S. முதலிய உயர்தரப் படிப்பு படிக்கப் பிரிய மிருப்பவர்களுக்கு நம்மாற் கூடுமான வரையில் சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிட தூண்டுகோலொன்று வேண்டும் என்பதுபோல் தூண்டவேண்டியது. இவர்களும் அவ்விதம் தேறினல் உயர்தரப் பதவி யடைவதல்லாமல் உன்னத நிலைமையில் வருவார்கள் என்பது திண்ணம். இவைகளை நம் குலத்தவர்கள் கவனித்து அந்தந்த ஊர்களில் சங்கங்கள் பல ஸ்தாபித்து, தலைக்கட்டு வரிப்பணம் வசூலித்து, நன் கொடைகளையும் வசூலித்து மூலதனமாக்கி, அதில் வரும் வட்டிப் பணத்தை ஏழை மக்களுக்கு உதவி, மேன்மைக்குக் கொண்டு வரவேண்டியது நாம் பிள்ளைகளுக்கு வைக்கும் நிதியாகும்.

1. விடியற் காலை 4 மணிக்குள் துயில் நீத்து எழுந்து வீடு வாசல் களையும் சாமான்களையும் சுத்தஞ் செய்தல்,

2. ஆண்களும் பெண்களும் ஸ்நானம் செய்து விபூதி திருமணி குங்குமம் சிரசிலும் நெற்றிலும் இருகை மார்பு முதலான விடங்களிலும் சிவ சிவ வென்று பூசி கிழக்கு அல்லது வடக்குமுகமாக நின்று

சிரமே லிரு கரங்களையுக் கூப்பி சிவய நம வென்று 108-தரம் சொல்லி பூஜிக்கவும்.

3. அன்னத்தை கடவுளுக்கு பிரீதி செய்து உண்ண வேண்டும்.

4. ஜீவ வதை இல்லாத தொழிலும் வர்த்தகமும் செய்து ஜிவிக்க வேண்டும்.

5. பிரதிதினமும் கிரமப்படி நைவேத்தியஞ் செய்து சுத்தமுடன் சுசிகரமான உணவுகளை சமைத்து அதிதிகளுக்கு அளித்து சாப்பிடவேண்டும்.

6. நமக்கு மேம்பட்ட பிராமணர் வீட்டிலும் நங் குலத்தவர்கள் வீட்டிலும் புகிக்கக் கூடும்.

7. இழிவான தொழிலையும் சினேகிதத்தையும் அறவேயொழிக்க வேண்டும்.

8. நமது ஆங்கிலேய துரைத்தனத்தார் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

9. நமது யாகக்ஷத்திரிய குலம் தெலுங்கர்களின் ஆசாரங்களை கையாண்டு வரவேண்டும்.

10. நங் குலத்தவர்கள் நம் ஜாதி சட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

11. சுபா சுபக் காரியங்களுக்கும் ஜாதி பஞ்சாயத்து கூட்டங்கள் முதலானதர்க்கு வீட்டுக்கு ஒருவர்வந்து ஷை காரியங்களை நடத்த வேண்டும். நாட்டாண்மை களால் தீர்ப்பு நடத்த வேண்டும். நாட்டாண்மை தர்மகர்த்தா முதல் மரியாதைகள் பெறவேண்டும்.

12. இப்போது சில கிராமத்தில் இருக்கும் நங்குலத்தவர் நாட்டாண்மை களில்லாமலும் விசாரணை முதலான துகளில்லாமலும் அவரவர்களே நடத்தி வருகிறார்கள். இவ்விஷயத்தை கவனித்து ஒவ்வொரு ஊரிலும் நங்குலத்தவர்களை நாட்டாண்மைகளாக ஒருவரை நியமிக்க வேண்டும்.

13. நமது ஜாதி பஞ்சாயத்து கூட்டங்களில் அன்னியரை சேர்க்கக் கூடாது.

14. நங் குலத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஜாதி அபிமானம் தேசாபிமானம் பாஷாபிமானம் முதலியதும் இருக்கவேண்டியது.

15. இனத்து ரோகம், செய்யும்படி யானவர்களை ஜாதியார் சரிவர விசாரித்து சபையோர்களின் அபிப்பிராயப்படி நடத்தவேண்டும்.

16. ஷை 13-வது பாராவில் கூறியபடி நாட்டாண்மைகள் ஏற்படுத்தினால் ஒவ்வொரு கிராமங்களில் நாட்டாண்மைக் காரர்கள் வாசித்தவ ராகவும் பெருந்தன்மை யுடையவ ராகவும் இருக்கவேண்டும். அவருக்கு மதிநலம் வாய்ந்த மந்திரிகள் நூற்றுக்கு ஐந்து நபர்களை காரியஸ்தர்களாக நியமித்து காரியங்களை முன்னின்று நடத்துதலும் நம் குலத்தவர்களை சீர்த்திருத்தஞ் செய்தலும்,

கொயில்களின் தூப தீப நைவேத்தியம் முதலாதும் உட்சவங்களையும் சரிவர நடத்துதலும் வேண்டும்.

1865ஹு ஜனவரிமீ த்தில் வாஜவார் கோத்திரம் அரங்கற் செட்டியார் குமாரர் ஞானப்பண்டிதர் திருமூர்த்திக் கவிராயர் இயற்றிய தேசாதிபதி நாடகத்தில் தேசாதிபதிகளின் கோத்திர பேத நிவர்த்தி கூறுகிறது.

இவ்வம்ஸத்தவர்கள் சில விடங்களில் 64 கோத்திரங்களுண்டென்பதாய் வழக்கஞ் செய்திருக்கின்றனர். அதை யாலோசிக்குமிடத்து காரணம் குறிப்பு தொழில் இடம் பண்பு முதலியவற்றால் வரும் வீட்டுப் பெயர்களைக் கோத்திரப் பெயர்களாக வைத்துக் கொள்வன கொடுப்பனசெய்துவருவதாகத்தெரிய வருகின்றதாதலால் 24கு கோத்திரங்களே வாஸ்தவமாம். அக்காரண முதலியவற்றால் வரும் பெயர்களுக்குத் திருஷ்டாந்தம் யாதெனில் மும்முடி கோத்திரத்தவர்களுக்கு காரணத்தால் தோட்டக் காரரென்றும் குறிப்பால் எர்ரபோகுலா ரென்றும் தொழிலால் பிள்ளையாரு ரென்றும் இடத்தால் வந்தவாசியா ரென்றும் பண்பால் சூரக்கார ரென்றும் வழங்குகின்றதும் கோல கோத்திரத்தவற்கு காரணத்தால் துப்பாக்கியா ரென்றும் குறிப்பால் ஜடக்கவா ரென்னும் தொழிலால் தண்டுக்கார ரென்றும் இடத்தால் இராமகிரியா ரென்றும் பண்பால் முனிமூத்தா ரென்றும் வழங்குகின்றதுமே திருஷ்டாந்தங்களேயாம். இது போன்ற இன்னும் அநேக பெயர்கள் இருக்கின்றதால் 64ஹு யென்று எவ்வாறு அளவிடக்கூடும். அனாதியாயுள்ளது சாஸ்திர சாதன சம்மதக்கிரமமான இருபத்தி நாலுமே எத்தேசத்தவர்களும் கைக்கொள்ள வேண்டுமே யன்றி பேத வழக்கத்தை கைவிட்டு நல்லொழுக்கம் நற்கீர்த்தி நன்னடக்கை கல்வி கேள்வி பக்தி அறிவு கியான முதலியவற்றிற் குறியவர்களாகி சாக்ஷாத் பரமேஸ்வரிகஞ்சி ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மை திருவடிகளுக்கு அன்புள்ளவர்களாவீர்களாக என்று கூறுகிறது.

பூரணகாமிகசாத்திரப்பாயுக்கிலாக்கடர்

மகாசாத்தா.

மகாவிஷ்ணு ஜெகன்மோகினி அவதாரம் எடுத்த காலத்தில் இவர் சிவாம்ஸத்திலுதித்தவர். இவரை ஹரி ஹரப்புத்திரர் என்றும், மகாசாத்தா என்றும் ஐயனரென்றும் ஐயனென்றும் கூறுவார்கள். இவருக்கு மகாகாளர் என்னும் †வீரமாகாளர் சேநாதிபதியாகவிருந்தார்.

சூரபத்மனுலிடை யூரடைந்த இந்திரன், தன் தேவி இந்திராணியைக் காக்கும்படி மகாசாத்தாவை வேண்டும்போது, அவர் மகாகாளரால் காவல் செய்வித்தவர். மகா சாத்தாவுக்கு ஆயுதம், செண்டு, வாகனம், யானை, தேவிமார், பூரணை, புட்கலை. இவரை ஒரு சோழன் செண்டு வேண்டிப் பெற்று மேருவின்மீது எறிந்து தனம் பெற்றுப் புலிக்குறி வைத்தனன் என்று சிலப்பதிகாரமும்,

வீரமாகாளர் காவல் புரிவது.

துன்முகி.

வீரமாகாளர்.

இந்திராணி. அசமுகி.

இந்திரன்.

இந்திராணி தனித்திருக்கையில் ஹரி ஹர புத்திராகிய மகா சாத்தா ஏவலால் வீரமாகாளர் காவல் பூண்டிருந்தார். அப்போது அசமுகியும், துன்முகியும் இந்திராணியை வலுவில் தூக்கிச் செல்லும் போது அவர்களின் கரங்களை வாளால் வெட்டி இந்திராணியைக் கார்த்தவர் என்று, கந்தபுராணம், அபிதான சிந்தாமணி முதலிய நூல்கள் கூறும். இந்த ஹரி ஹர புத்திரனாகிய மகா சாத்தாவையே ஸ்ரீ சொர்ன சாது காமாக்ஷியம்மன் பிரபோதய ராஜனாகிய மும்முடியனுக்கு முடி சூட்டியபோது பாதுகாக்கும் படி உத்திரவிட்டது. இதை 107-வது பக்கத்தில் காணலாம்.

காளிதேவியிடம் பிறந்தவர். ஷை வீரமாகாளர்.

† இவருக்கு வேண்டியது பால் பொங்கல் சர்க்கரை பொங்கலே மற்
ஆடு கோழி முதலிய பலிகள் ஆகாது.

பிழைத் திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
19	30	ிரிதிவீச்சுரன்	பிருதிவீச்சுரன்
,,	33	மங்கைகரை	மங்கையை
,,	34	இன்னயர்	இன்னரர்
25	3	பிரிதிவீச்சுரன்	பிருதிவீச்சுரன்
,,	6	மாதிய	மாகிய
27	18	தேவபந்தியையு	தேவபக்தியையும்
28	2	அண்டசஞ்சசுவேதம்	அண்டஞ்சுவேதசம்
,,	3	டெண்டெரு	டெண்டரு
,,	4	யுண்டு	லுண்டு
31	2	இராமவ	இராமாவ
34	5	புத்யத்	புத்யத
,,	18	காலை	கலை
37	15	மிடைந்ததிந்திதக்	மிடைந்ததிந்தக்
,,	20	கைலாயத்தில்	மந்தரகிரியில்
,,	21	கசபன்	கசிபன்
42	40	அந்	அந்த
45	33	ளென்றுணர்ந்து	னென்றுணர்ந்து
46	11	யிறல்	யினில்
47	5	அம்முனிவ	அம்முனிவனை
48	11	யொர்	யோர்
62	14	எந்தன்	எத்தன்
71	19	தளங்	தலங்
72	8	துன்பமூ	துன்பமு
,,	15	பெறக்கிடக்கும்	பெறக்கிடைக்கும்
74	36	நலைகள்	கிலைகள்
,,	37	கிவ	நவ
76	23	கலைக்கோட்டுகால முனிவரை	காலவ்ரிஷியை
,,	28	இருசிகசிங்க	இருசிகசிருங்க
77	10	அந்தரீக்ஷ	அந்தரிக்ஷ
78	27	இன்னர்	இன்னரர்
81	19	முதலியவர்	முதலியவரை
85	2	தந்தை, மனைவி	மனைவி, தந்தை
88	12	உபரிடதங்களை	உபரிடதங்களையும்
92	25	தர்மாத்த	தர்மார்த்த
93	15	களெ	களே
98	30	நீதே	நீறே
99	6	களெ	களே
160	4	ளைவருந்	ளனைவருந்

பிரபுட தேவராஜன், வல்லாளமகாராஜன் விடய அபிதான சிந்தமணி, அருணாசல புராணம், விநாயக புராணம் முதலியவைகள் கூறும்

தொழிற்குழிய பெயர்பிரப்பைத் தொட்டுவரும் நம்மினத்தார் தூ தேசம்
ழிக்கெல்லாஞ் சுங்கமிட்ட வர்த்தகத்தார் சிறந்தமுடி மன்னற் போற்றும்
ிற்றிருக்கச் சித்தலத்தா ரிருபத்துநாலுமனை இன்பலோலர்
க்கருணை காமாக்ஷி வரபாலர் மரபோங்க வேண்டு வோமே.

மகாமகோபாத்தியாய முற்றிற்று.

ர். உ. வே. சாமிநாதையர்